
# நீலமாகி வரும் கடல்




முல்லை யேசுதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முல்லை யேசுதாசனின்

பன்னிரண்டு சிறுகதைகள்

# நீலமாகி வரும் கடல்

நிதர்சனம் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நீலமாகி வரும் கடல NEELAMAKI VARUM KADAL


முல்லை யேசுதாசனின் சிறுகதைகள்

| | |
|---|---|
| நீலமாகி வரும் கடல | **NEELAMAAKI VARUM KADAL** |
| (சிறுகதைகள்) | A Colection of Short stories by |
| முல்லை யேசுதாசன | Mullai Jesuthasan |
| ஓவியங்கள் | **Ellustrations** |
| முல்லைக்கோணேஸ | Mullaikkones |
| முதற்பதிப்பு | **First Edition** |
| ஒக்ரோபர் - 2003 | October - 2003 |
| அச்சுப்பதிப்பு | **Printed At** |
| அந்திவானம் பதிப்பகம், | Anthyvanam Pathippakam, |
| புதுக்குடியிருப்பு. | Puthukkudiyiruppu. |
| வெளியீடு | **Puplished by** |
| நிதர்சனம், | Nitharsanam, |
| தமிழீழம். | Tamileelam. |

விலை / Price } 150/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள் கடலில்
காத்தலராகவும்
எங்கள் தேச விடுதலைப்போர்
வீரராகவும்
வாழ்ந்திருக்கும்
கடற்புலிகளுக்கும்
கடற்கரும்புலிகளுக்கும்

*நீலமாகி வரும் கடல்*
— முல்லை யேசுதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை



எந்தக் கவிஞனும் அல்லது கலைஞனும் தனக்குள்ளே சிறந்த ஆற்றல்களைப் பெற்றிருக்கின்றபோதும் அவற்றை வெளிக்கொண்டுவரும் வரையில் அவை குடத்து விளக்குகளே. ஆயினும் அந்த வேளையிலும் அவர்கள் அனுபவிப்பது கொஞ்ச நஞ்சமல்ல. சாமி அண்ணனும் (முல்லையேசுதாசன்)அந்த வகையைச் சார்ந்தவரே.

'தமிழன்னை' திரைப்பட வீடியோ உருவாக்கற் பிரிவின் செயற்பாட்டிற்கு இத்துறை சார்ந்தவர்களைத் தேடிக் கொண்டிருந்தோம். அப்போதுதான் முல்லைத்தீவில் சாமியண்ணர் படகு செம்மைப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ளார் என்ற தகவல் எட்டியது.

சாமியண்ணர் கடலோரத்தில் பிறந்திருந்தாலும் கடலுக்குள்ளேயே மூழ்கிக்கிடந்த நன்முத்து - தன் சமூகம் சார்ந்த, தான் அனுபவித்த, தான் பார்த்த அனைத்தையும் எழுத்தில் வடிப்பதில் திறமை பெற்றவர். எனது உருவாக்கம் அனைத்தும் கூட அவரது பேனாவிற்குள் அச்சேறும்

'செவ்வரத்தம்பூ', 'எதிர்காலம் கனவல்ல',

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மனிதர்கள்' ஆகிய குறும்படங்கள் இத்துறையில் இவருக்குள்ள ஆளுமைக்கு நல்ல உதாரணங்களாகும். இன்று தமிழீழத்தில் வெளிவந்துள்ள பெரும் குறுந்திரைப்படங்களைப் பார்க்கின்றபோது அவற்றில் சாமியண்ணை நடித்துள்ள பாத்திரங்கள் நன்முத்திரை பதித்தவையாக இருப்பதைக் காணலாம்.

இவரின் சிறுகதைகள் ஒவ்வொன்றும் படிக்கின்றவர் மனங்களில் ஒருவிதமான காட்சியோட்டத்தை தோன்றச் செய்யும். ஏனெனில் அவர் அவற்றை ஒரு இயக்குனராகவும் படைப்பாளியாகவும் இருந்து படைத்ததினால் ஏற்பட்டவை என்று சொல்லலாம்.

அந்தவகையில் 'வெளிச்சம்' இதழில் வெளிவந்த அவரது சிறுகதைகள் இன்று நூல் வடிவில் வருவதையிட்டு நாம் அகமகிழ்வு கொள்கிறோம்.

எமது 'நிதர்சன' நிறுவனப் படைப்பாளி ஒருவரின் ஆக்கங்கள் நூல் வடிவில் வருவதையிட்டு நாம் பெருமகிழ்வடைவதுடன் மேலும் பல நூல்கள் வருவதற்கும் உறுதுணையாய் நிற்போம். மூழ்கிக் கிடந்த முத்து ஒன்று வெளிவருவதையிட்டு பெருமகிழ்வடைகிறோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

சி. சேரலாதன்,
பொறுப்பாளர்,
நிதர்சனம்,
10 - 09 - 2003. அரசியல்துறை, தமிழீழம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்



கடல், ஒரு ஆபத்துக்கள் நிறைந்த அழகு. பேரழகு.
அதன் அமைதியின் மீதேறி அலைவது சுகமானது.
பேரானந்தமானது.

கரையில் நின்று ரசிக்கும் கடலின் அலையைவிட
கடலேறி அதன் மடிதவழ்ந்து கரைகாண்பது மகிழ்வானது.

கடலை, கடலோடு பழகும் அனுபவத்தைச்
சொன்னவர் குறைவு. அவற்றை அறியாதவரே அநேகம்.

நான் ஒரு கடலோடி.

கடலோடிய அநுபவங்களை, அவற்றின் சிறு
சிதறல்களை, கடல் அலைச்சலை சொல்ல முயன்றுள்ளேன்.

இந்தத் தேசத்திற்கான விடுதலைப்போரும்
விடுதலைக்காகச் செய்யப்பட்ட தியாகங்களும் கொஞ்சமல்ல.
சிந்தப்பட்ட குருதியும், இழக்கப்பட்ட உயிரும்
சாதாரணமானதல்ல.

அப்பாவிகளாகவிருந்து அழிந்துபோன மக்களும்,
காடுமேடாய்ப் போன ஊர்களும் சுதந்திரமிழந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பட்டுப்போயிருந்த கடலும் நான் எழுதுவதற்கு ஏதோ வகையிலெல்லாம் காரணமாக இருக்கின்றன என நம்புகிறேன்.

என்னை எழுதத் தூண்டிய என் நண்பர்கள் கருணாகரனும் முல்லைக்கோணேசும். இதில் தொகுதியைக் கொண்டுவருவதற்கான முதற் தூண்டுதலைத் தந்தவர் கருணாகரன். கதைகளைப்பற்றிக் கருத்துக்களைச் சொல்லி, கதைகளைச் செம்மைப்படுத்தி, மேலும் என்னை எழுதத் தூண்டி, எழுதிய கதைகளை வெளிச்சத்தில் பிரசுரித்து, பின்னர் அவை நூலாக வெளிவரவேண்டுமென்று கேட்டு, இப்போது அதைக் கொண்டுவருவதற்காக வடிவமைப்பையும் செய்து புத்தகமாக்கியிருக்கிறார் கருணாகரன். இந்தக்கதைகளுக்குரிய ஓவியங்களைத் தந்திருக்கிறார் முல்லைக்கோணேஸ்.தோழமையாகவும், சக படைப்பாளியாகவும் என்றும் என்னோடு இணைந்திருக்கும் முல்லைக்கோணேஸ் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பிற்கு நிறைய உதவியிருக்கிறார். கருணாகரனுக்கும், முல்லைக்கோணேசுக்கும் எனது நன்றிகள்.

என்னுடைய எழுத்துக்களைப் பிரசுரித்து ஊக்கப்படுத்திய 'வெளிச்சம்' 'ஈழநாதம்' ஆகியவற்றை இங்கு நன்றியுடன் மனங்கொள்கிறேன்.

இன்று இக்கதைத் தொகுப்பு நூலாக ஊக்கம் தந்து வெளிவரக் காரணமாயிருக்கும் தம்பி சேரலாதனுக்கும் கூட நின்று முயன்ற தவாவிற்கும் தமிழீழத் தேசியத்தலைவரின் வழியில் ஆசிகளோடு முழுமையான ஒத்துழைப்புத் தந்த அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.பதமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் என்னை ஊக்கப்படுத்திய கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களுக்கும் நன்றிகள்.

இந்தக் கதைப்பிரதிகளைப் பிரதிசெய்த தட்சாவுக்கும், நல்லமுறையில் அச்சமைத்துதவிய அந்திவானம் பதிப்பகத்திற்கும், கி சங்கீதன், நா. சுபாவிற்கும் நன்றிகள்.

கள்ளப்பாடு, முல்லைத்தீவு — முல்லையேசுதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை யேசுதாசனின்
பன்னிரண்டு சிறுகதைகளும்



| | | |
|---|---|---|
| 01 | ஒரு அகதியின் நாள் | 11 |
| 02 | பாலன் பிறப்பு | 22 |
| 03 | புதிய பதிவுகள் | 34 |
| 04 | கடல் எப்பவும் இருக்கும் | 42 |
| 05 | அமலி | 48 |
| 06 | நினைவோடு செல்லல் | 65 |
| 07 | கடல் கொண்ட தீ | 75 |
| 08 | கடலும் நிகழ்காலமும் | 86 |
| 09 | வெள்ளக் கோயில் | 99 |
| 10 | சிதம்பரம் சொன்ன சேதி | 117 |
| 11 | மௌனத்தின் கண்கள் | 128 |
| 12 | தேசம் தந்த சொந்தம் | 142 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு அகதியின் நாள்



'எப்படியாவது இவர்களிடமிருந்து தப்பிப்போயே ஆகவேண்டும். இல்லாவிட்டால் வேலூரோ ஒரிசாவோ, இல்லையென்றால் சேலத்திலையாவது அடைபட்டுக் கிடக்கவேண்டி வரும். இந்த ஜென்மத்தில் விடுதலை என்பது கடைசி வரைக்கும் கிடைக்காது.

நாதன் சட்டைப் பையில் எவ்வளவு காசு இருக்கும் என்று யோசித்துப் பார்த்தான். ஒரு இரண்டாயிரத்துக்கு கொஞ்சம் குறைவாக இருக்கலாம். இவங்களுக்கு லஞ்சம் கொடுத்து தப்பிப் போறதென்றால் அதுபோதாது. ஆகக்குறைந்தது ஐயாயிரம் ரூபாவாவது வேணும். பெண்சாதி பிள்ளைகள் ஒருமுறை மனதுக்குள் வந்து போனார்கள். 'தப்ப வேணும் தப்ப வேணும், எப்படியாவது தப்பவேணும்.' மண்டையைப் போட்டு உடைத்து ஒரு முடிவுக்கு வந்தான்.

"சார் ஒண்ணுக்குப் போகணும் சார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“திருட்டுத்தனம் பண்ணும்போது யோசிக்கிறதில்லை. அப்புறம் என்னடா பயத்திலை ஒண்ணுக்கு வருதா? தே இவனை ஒண்ணுக்குக் கூட்டிப்போ”

தனக்குக் கீழ் பணிசெய்யும் பணியாளருக்கு உத்தரவிட்டான் அந்த கஸ்டம்ஸ் அதிகாரி. இன்னும் நாதனை காவல்துறையிடம் கையளிக்கவில்லை. அதற்கு முன்னர் நாதன் தப்பியே ஆகவேணும். ராமேசுவரத்தில் இருக்கும் அந்தப் பெரிய கஸ்டம்ஸ் குடோனுக்கு நான்கு ஐந்து தடவைகள் நாதன் போய் வந்தவன். ராமேஸ்வரம் ஏரியா முழுவதும் அவனுக்கு நல்ல பழக்கம். அவனைப் பார்க்கும் எந்த இந்தியனும் அவனை ஒரு இலங்கைக்காரன் என்று சொல்லமுடியாது. பெரியார் மாவட்டப் பாணி உடை, கேரளமும் கர்நாடகமும் கலந்திருக்கும் கோயம்புத்தூர் பேச்சு. வேட்டியைத் தூக்கி மடிச்சுக்கட்டி, வெளியில தெரியும் அண்டர்வெயர், எந்தப் பொது இடத்திலும் பெண்களின் முன்னாலும் நாகரீகமின்றி வேட்டியைத் தூக்கி அண்டர்வெயரில் காசுக்கு கைவிடும் பழக்கம். எங்கோ ஒரு கோயம்புத்தூர் பக்கத்துக் கிராமத்தான் மாதிரித் தோற்றம். என்றாலும் அவன் அவர்களிடம் மாட்டிவிட்டிருந்தான்.

“ ஏம்பா அந்தச் சுவத்துப்பக்கம் ஒண்ணுக்கடிச்சிட்டு சீக்கரம் வாப்பா” வெருட்டினான் அந்தக் கஸ்டம்ஸ் பணியாளர். நாதன் அவனைத் திரும்பிப் பார்த்தான். நின்று நிதானமாய் வேட்டியைத்தூக்கி அண்டர்வெயரில் கைவிட்டு பர்சை எடுத்து அதனுள் இருந்த காசை எடுத்தான். அவனிடம் நீட்டினான்.

“ எதுக்கப்பா ” என்றான் அந்தக் கஸ்டம்ஸ் பணியாள்.

“நான் ஓடப்போறன் சார். நீங்கள் பாக்காம இருக்க” துணிவாய்ச் சொன்னான் நாதன்.

“ஏய்யா, என்னை நீ லஞ்சம் வாங்கச் சொல்றியா?” கோபமாய்க் கேட்டான் பணியாளர்.

அவர்கள் அவனைப் பிடிச்சு வைச்சு இன்னும் காவல்துறையிடம் பாரம் கொடுக்காமல் வைத்திருப்பதற்குக் காரணமே இதற்குத்தான் என்பது நாதனுக்குத் தெரியும்.

“சார் நான் என்ன கொலையா பண்ணிப்புட்டன், எங்கிட்ட பணமிருந்தா பிளைட்டிலையே போயிருப்பேன் சார், இந்தா சார், என்கிட்ட ஆயிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபாதான் இருக்கு, வச்சுக்கோ சார்'' நாதன் காசை நீட்டினான்.

நாதனிடம் வேறு காசு இல்லை என்பதை பணியாளன் நம்பி னார். அந்த ஆயிரமாவது வரட்டும் என்று கையை நீட்டினான். நாதனுக்கு தான் தப்பிவிட்டேன் என்ற சந்தோசம். இருந்தாலும் ஆயிரம் ரூபா அநியாயமாக போகுதே என்ற கவலை.

"சார் ஒரு ஐம்பது பைசா கொடுங்க. ரீ சாப்பிட கூட காசில்லை"

பணியாள் அவனுக்கு ஒரு ரூபா கொடுத்துவிட்டு "சீக்கிரம் வாய்யா" என்று வந்தவழியே போய்விட்டான்.

நாதனுக்குத் தெரியும், இனி அவனைத்தேடி அந்தப் பணியாள் வரமாட்டான் என்று.

இராமேசுவரத்தில் இரவு ரயிலேறி விடியற்காலையில் கோயம்புத்தூரில் சத்தியமங்கலம் போவதற்கான 'ஜீவா பஸ்'சில் இருந்தான் நாதன்.

"ஏம்பா, சத்தியமங்கலமா?

"ஆமா" என்றபடியே எழுந்துநின்று "அண்டர்வெயரில் கைவிட்டு காசெடுத்துக் கொடுத்தான். இவனைப் பார்த்தவுடனேயே உண்மையில் மேட்டுப்பாளையமோ, பவானிசாகரோ, ஏதோ ஒரு கிராமத்தவனைப் போலத்தான் தோன்றும்.

நிச்சயமா அவன் இப்போது ஒரு தமிழ்நாட்டுக் கிராமத்தவன்தான், கேரளாவும் கர்நாடகாவும் தமிழ்நாடும் சேர்ந்த கலப்புப் பேச்சுவாசனை.

ஊட்டியின் மலையடிவாரத்தில் மேட்டுப்பாளையம் முகாமில்தான் முதலில் நாதன் இருந்தான். ஒவ்வொரு அரசியற் பிரச்சினைக்கும் ஆங்காங்கு அகதி முகாம்களை மாற்றுவார்கள். தொண்ணூறில் அவன் இந்தியாவுக்குப் போகும்போது தமிழக ஆட்சியில் கருணாநிதி. அதுக்குப் பிறகு ஜெயலலிதா வந்ததோடதான் கஸ்ரங்களே ஆரம்பித்தது. சின்ன எசகுபிசகென்றாலும் வேலூர் அல்லது சேலம் தம்பம்பட்டி போனா வெளியே வாறது இயலவே இயலாது. அடிக்கடி 'செக்கிங்' என்று அகதி முகாம்கள் அல்லற்படும். வாற பொலிஸ்காரனுக்கு எவர் என்றாலும் பத்துப் பேரை பிடிச்சுக்கொண்டு போனாச்சரி. நாதனும் கொஞ்சக்காலம் கோயம்புத்தூர் சின்ன ஜெயில்ல இருந்தான். லஞ்சம் லஞ்சமாக் கொடுத்துத்தான் வெளியில வந்தான். அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக அதுவும் இல்லாமல் போய்விடும்.

அந்த நேரம்தான் இலங்கைக்குப் போகிற முடிவை மனுசிக்கு சொன்னான் அவன். அவளுக்கு விருப்பமில்லை, அதைவிட கடன்காரர்.

"ஏங்க நீங்க புறப்பட்டுப் போறது சரி. கடன்காரங்க உங்களை வுட்ருவாங்களா?" மனுசி கேட்டாள். "அதான் உன்னையும் உம்புள்ளங்களையும் வுட்டுட்டு நான் தனிய போறன்" நாதனுக்கு அதைச் சொல்ல மனமில்லாமல் சொன்னான்.

"ஏங்க இங்க எங்களை கூட்டிட்டு வந்தீங்க?"

"வந்தது பிழை தாண்டீ"

"அங்க போய்த்தான் என்ன செஞ்சுக்கப்போறீங்க?"

"உழைச்சுப் பணம் அனுப்புறன். கடனைக் கொடுத்திட்டு புள்ளங்களை கூட்டிட்டுவா"

"பிழை செய்துபோட்டீங்கள் நீங்கள்"

"ஆமாடி பிழைதாண்டி செஞ்சுபோட்டன். பயமில்லாம இருக்கலாமண்ணுதாண்டி இங்க வந்தன். பயமே இங்கதாண்டி இருக்கு. இங்க உழைச்சு சாப்பிடலாமென்று வந்தோம். அதுவும் முடியல, நம்ம நாட்டுக்கு எப்படிப் போகப்போறோம். இங்கேயே கிடந்து ஒவ்வொருநாளும் ஏங்கி, ஏங்கி, பயந்து பட்டினியாகக் கிடந்து "லாஸ்டில செத்துப் போமிடுவமடி" அழுதான் நாதன். அவளும் சேர்ந்து அழுதாள்.

'நீங்கள் எப்படிங்க போகப்போறீங்க?'

"ராமேஸ்வரம் போனா ரோலர் வள்ளங்கள் தொழிலுக்குப் போகும். அதில போமிரலாம். ஆனா நிறையப் பணம் வேணுமடி. ரோலர் வள்ளங்கள் இலங்கைக் கரைதெரிய வுட்டுட்டா நான் நீந்தியே போமிருவன்"

"அப்படிப் போகும்போது இலங்கை நேவி வந்திட்டா"

"எப்படி பண்றது இங்க யாரு எங்கள மதிக்கிறான். எச்சக்ல நாய்களே! கம்மனாட்டி, கேணத்தி என்று எதுக்கெடுத்தாலும் திட்டுறான். ஏச்சு வாங்கிக்கொண்டே கிடக்கச்சொல்றியா? போனாப் போவுது உசிரு. நான் போய்ச் சேந்திட்டா எங்கட பிள்ளைகளை காப்பாத்திடாலாமில்லே"

"நீங்கள் போகத்தான் போறிங்களா?"

"ஆமா" கடையில் சேர்ந்த காசையும்... மீண்டும் கொஞ்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்வாங்கிக் கொண்டும், ஒரு ஐயாயிரம் சேர்த்துக்கொண்டு புறப்பட்டான்.

மண்டபத்துக்கு வந்து ஒரு சினேகிதனோட ராமேஸ்வரம் வந்து, ரோலருக்குப் போகிற வள்ளக்காரரை விசாரித்து, எல்லோரும் அவனை ஏற்றிக்கொண்டு போக மறுத்து விட்டார்கள். பெரிய கஸ்ரப்பட்டு கெஞ்சி மன்றாடித்தான் ஒரு ரோலர்காரன் இலங்கைக்கரை தெரியக் கொண்டுபோய் விடுறதுக்கு ஒத்துக்கொண்டான்.

மூவாயிரம் ரூபா காசு வாங்கி விடியற்காலையிலே அவனை வள்ளத்தில் ஏற்றி மறைத்து வைக்க யாரோ கஸ்ரம்ஸ்காரருக்குச் சொல்லிவிட்டார்கள் –கஸ்டம்ஸ்காரன்–வந்துவிட்டான். காசு கொடுத்து சமாளிக்கவும் காசு இல்லை. வள்ளக்காரனிடம் கொடுத்த மூவாயிரத்தையும் பறித்துவிட்டு அவனை விட்டுவிட்டான், கஸ்ரம்ஸ்காரன். நாதனுக்குத் தெரியும் விசாரணை, விளக்கம் என்று தன்னைக் கொண்டு போகமாட்டான் என்று. அப்படிக் கொண்டுபோனால் வள்ளக்காரனிடம் வாங்கிய காசுப்பிரச்சினையும் வெளிவரும். தனக்கு வரும் காசை கஸ்டம்ஸ்காரன் இழக்க விரும்பமாட்டான். தன்னிடமும் ஏதாவது லஞ்சம் வாங்கலாம் என்று எதிர்பார்ப்பான் என்று அவர்கள் தனியே நின்று மெதுவாய் பேசும்போதே புரிந்துவிட்டது நாதனுக்கு. கஸ்டம்ஸ் கட்டிடத்துக்குக் கொண்டு போக முன்னமே தப்பிவிடவேணும். கஸ்டம்ஸ்காரனிடம் சென்றான்.

“சார் ஒண்ணுக்குப் போகணும்”

மேட்டுப்பாளையமோ, பவானிசாகரோ போகக்கூடாது. முகாமில் சொல்லாமல் புறப்பட்டது. கட்டாயம் தேடியிருப்பார்கள். அவர்களிடம் பிடிபட்டால் விசாரணை, விளக்கம் ஏச்சு பேச்சென்று..... கடைசியில் இந்தப் பயணம் நின்றுபோய்விடும்.

சத்தியமங்கலத்திலிருந்து பதினைந்து கிலோமீற்றர் தூரமுள்ள பவானிசாகருக்கு நடந்தே போனான். ஒருமுறை கோயம்புத்தூர் ஜெயில்ல அடைச்சு வச்சிருந்து ஓடிவந்த கோணேஸ்வரன், அவனின் சினேகிதப் பெடியள் எல்லாரையும் சீ.ஐ.டி எப்படிப் பிடிச்சவன் என்று தெரியும்.

இடையில் கொட்டம்பாளையத்தில் ஒரு இந்தியாக்காரப் பெடியனின் வீட்டில நின்றுகொண்டு மனைவியிடம் ஆளனுப்பினான். ‘எப்படியாவது சங்கிலியை வித்தாவது ஒரு ஐயாயிரம் அனுப்பு. அனுப்பினால் போகிறேன். இல்லாவிட்டால் திரும்பி வருகிறேன்’ என்று. அவள் காசு அனுப்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு போனகாசில் அரைவாசிக்கு மேல் தமிழ் நாட்டுப் பொலிசுக்கு லஞ்சம் கொடுத்திருப்பான். இப்ப கொஞ்சக் காலம் பவானிசாகர் முகாமுக்கு மாற்றப்பட்டபிறகுதான் நிம்மதியா வேலைக்குப் போகிறான்.

நாதன் இந்தியாவுக்கு வந்து பத்து வருசமாச்சு. வரும்போது மூத்த மகளுக்கு எட்டு வயசு. அதுகளுக்கு இலங்கைத் தமிழ் அறவே தெரியாது. தொண்ணூறுக்கு முந்தி நாதனும் பெரிய சம்மாட்டியாத்தான் இருந்தவன். அவனுடைய மூன்று சகோதரர்களும் மச்சானும் சேர்ந்து ஒன்றாகத் தொழில் செய்தார்கள்.

நாதன்தான் எல்லாவற்றிற்கும் பொறுப்பு. சகோதரர்கள் அவனில நல்ல நேசம். கடலுக்குப் போவது அவன்தான். கரையில ஐஸ்வாடி வேலைகள் செய்து கொழும்புக்கு மீன் அனுப்புவதும் அவன்தான். ஐந்து வள்ளங்கள், ஐஸ்வாடி என்று ஓரளவு வசதியாயிருந்தவன். ஒவ்வொருவராய் கல்யாணம் முடித்து பிரிந்து போனாலும் தொழிலை அவன் பிரிக்கவில்லை. கடலுக்கு நாதன் பயந்தவனில்லை. எந்தக் காற்றுக்கடலுக்கும் தொழிலுக்குப் போவான். கடலடி வந்தால் வள்ளம் கரைக்குவிட நீந்திப்போய் வள்ளம் விடுவதும் அவன்தான். எந்தக் கடலடியிலும் கவுக்காமல் வள்ளம் விடுவான். எதற்கும் பயப்படாதவன். ஆனால் ஆமிக்கு மட்டும் சரியான பயம். இந்தியன் ஆமிப்பிரச்சினை வந்தபோது இவனோடு கடலுக்குப்போனவன் ஹெலியடிச்சு செத்துப்போனபோது நன்றாகப் பயந்து விட்டான்.

அதுக்குப் பிறகு ஹெலிச்சத்தம் கேட்டாலே ஓரிடத்தில் நிற்கான். ஓடித்திரிவான். எத்தனை தரம் ஆமியிடமும், நேவியிடமும் அடிவாங்கிப்போட்டான். அதுதான் அவனை இந்தியாவுக்குப் போக வைத்தது. தம்பி மாரும் தங்கச்சியும் தாங்கள் இந்தியாவுக்கு வரமாட்டோம் என்று சொல்ல; தொழிலைப் பிரிச்சு தன்னுடைய பங்கையும் அதுகளுக்கே விற்றுப் போட்டு என்ர பிள்ளைகளை காப்பாத் தோணும் என்றுதான் இந்தியாவுக்குப் போனான்.

இருந்த காசெல்லாம் இந்தியாவில்கரைச்சு, பிள்ளைகள் வளர வளர செலவு கூடி சித்தாள் வேலைக்குப் போய், லாரிக்கு மண்ணடிச்சு, செய்யாத வேலையெல்லாம் செய்து ஜெயில்ல மாசக் கணக்காக கிடந்து, லொறியில அடிபட்டு கொஞ்சக் காலம் இயலாமல் கிடந்து, இருந்த நகையையெல்லாம் அழிச்சு அப்பவும் கடனில் இருந்து மீள முடியவில்லை. ஒரு பெட்டிக் கடையும் இரண்டு சங்கிலியும் தான் மிச்சம். அதை வச்சுத்தான் கடன்காரர் எல்லாரையும் சமாளித்தான். இன்னும் கொஞ்சநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தமுறை நாதன் கவனமாயிருந்தான். "ஆரையும் இனி நம்பிறதில்லை" என்று முடிவெடுத்தான். இரவிரவாக இராமேஸ்வரம் வந்தான். இரண்டு எண்ணைக் 'கான்'கள் வாங்கினான். இடைவிட்டு சிறுகயிற்றில் இரண்டையும் கட்டினான். இரண்டு பன், ஒரு தீப்பெட்டி, ஒரு சிறுகத்தி, வாங்கிக்கொண்டு இராமேசுவரம் கடற்கரைக்கு வந்தான். விடிவெள்ளி வரும்வரை இருட்டில் சிறிது நேரம் தூங்கினான்.

விடியும் நேரம் கொணர்ந்த பொருட்களை தலையில் தலைப்பாகையில் கட்டினான். கடலில் இறங்கி நீந்தத் தொடங்கினான். அவனுக்கு இதைவிட வேறு வழி தெரியவில்லை. திரும்பவும் அகப்பட்டு பெண்சாதி பிள்ளைகளின் முகம் பார்க்கமுடியாமல் அடைபடுவதைவிட இப்படியே நீந்திப் போய்விடலாம். தன்னை இரையாக்கப்போகும் கடற்சுறாக்களையும், உடம்பை அரித்துச் சீரழிக்கப்போகும் கடற்சொறியையும், குளிர், பசி எல்லாவற்றையும் மறந்துவிட்டான். 'என்ன ஒரு பதினெட்டு மைல் தூரத்தில் ஊர். அல்லது சாவு. இரண்டில் ஒன்று. இந்தியாவிலே கிடந்து பிள்ளைகளையும் நல்ல முறையில் வளர்க்க முடியாமல், சீரழிந்து நொந்து நோய்வாய்ப்பட்டு சாவதைவிட கடலிலே காணாமல் போவது மேல். கரையை போமிட்டா...... என்ர சகோதரங்கள்... அள்ளித்தந்த கடல்...... ஒருவருசம் மெத்த, என்ர பெண்சாதி பிள்ளையளை எடுத்திடுவன்.'

சாதாரணமாக விடியற்காலையில் தொழிலுக்கு வரும் ரோலர்களை எதிர்பார்த்து நீந்திக்கொண்டிருந்தான் நாதன்.

விடிந்து சூரியன் சற்று மேலே வந்துவிட்டான். குளிர் குறைந்து விட்டது. தூரத்தில் இராமேசுவரக் கரையிலிருந்து ரோலர்கள் தொழிலுக்கு வரத் தொடங்கி விட்டன. நாதன் இடுப்பில் கட்டியிருந்த மிதப்புக்கானோடு நீந்திக்கொண்டிருந்தான். கானுக்குக் கட்டியிருந்த கயிறு உடம்பைத் தேய்க்க உடம்பு எரியத் தொடங்கி விட்டது. அருகே வந்த ஒரு ரோலர்க்காரனுக்கு கைகாட்டினான். நாதன் கிட்ட வந்த ரோலர்க்காரன் ஆச்சரியப்பட்டான். "ஏன்யா என்னைக் கொண்டுபோய் இலங்கைக் கரைக்குப் பக்கமாய் வுடுவியா? பணம் கொடுக்கிறேன்"

ரோலர்க்காரன் கொஞ்சநேரம் 'நியூட்டறி'ல் நின்று நாதனையே பார்த்துக் கொண்டு நின்றான். அவனை இலங்கைக்காரன் என்று அடையாளம் கண்டுகொண்டான்.

"உங்க ஊருக்கு நீந்திப்போக முடியுமாப்பா உன்னால" ஆச்சரியமாகக் கேட்டான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதெல்லாம் வேணாப்பா. உன்னால முடியுமா முடியாதாய்யா" பேச்சைவெட்டினான் நாதன். ரோலர்க்காரன் ஏத்தவே மறுத்துவிட்டான்.

"நாம் புள்ளகுட்டிகாரன்யா. ஜெயிலெல்லாம் என்னால பாக்க முடியாதய்யா" எட்டிக் காலால் 'கியரை'த் தள்ளினான் ரோலர்க்காரன். வள்ளம் ஓடத்தொடங்கியது. அடுத்த ரோலருக்காக நாதன் காத்திருக்க அதுவும் வந்தது. வந்தவனும் அவனை ஏற்ற மறுத்துப் போய்விட்டான். பின்னால் வந்தவன் ஏறச்சொன்னான். தம்பிக்காரன் ஏற்றவேண்டாம் என்று சொல்லியும் அவன் ஏற்றினான் நாதனை.

"உன்னையக் கொண்டுபோய் விட்டா எவ்வளவு பணம்பா கொடுப்பே என்றான்". "ஒரு மூவாயிரம் தர்றேன்" என்றான் நாதன்.

ரோலர் முதல்பாடு மடிவைக்கு முன்னமே ரோலர்க்காரனும் நாதனும் சிநேகிதமாகிவிட்டனர்.

"ஏன்பா இப்படி நீந்தியே போக நினைச்சே. ரொம்பக் கஸ்ரமா? இடையிலே உனக்கேதும் ஆயுடுச்சென்றா என்ன செய்வே. எத்தனை புள்ளைகள்".

கேள்விமேல் கேள்வி கேட்டான் ரோலர்க்காரன். எல்லாவற்றிற்கும் பதில் சொன்னான் நாதன். ரோலர்காரனுக்கு அவனைப் பார்க்கப் பாவமாகப்பட்டது. தனது நாட்டையும் நினைத்துத் துக்கப்பட்டான். முதல்பாடு மடியிழுக்க நாதனும் உதவிசெய்தான். முதல்பாடே பரவாயில்லை. அடுத்தபாடு வலைவைச்சு எழும்ப மதியமாச்சு, பட்ட மீனில் பெரிய சூவாப்பாரையாய் தெரிந்தெடுத்து சைலஞ்சரில் சுட்டு, சோறும் கொடுத்தார்கள். நாதனும் சாப்பிட்டான். கொஞ்சநேரம் கழித்து நாதன் இறங்கி நீந்திப்போகக் கேட்டான். ரோலர்க்காரன் விடவில்லை.

"கொஞ்சம் பொறுத்துக்கோ நாதண்ணை, நெடுந்தீவுப் பக்கம் உன்னால நீந்த முடியாது, நீர் அதிகம்"

மூன்றாம் பாடு தலைமன்னார் கரைபார்த்து மடியிறக்கி, பின்னேரம் தலைமன்னார் கரை தெரிய நாதனை இறக்கிவிட்டான். அவனுக்கும் கவலையாப் போச்சு. நாதனிடம் இருந்த சிறிய கான்களை வாங்கிக் கொண்டு இருபது லீற்றர் டீசல் கான் ஒன்றைக் கொடுத்தான். இது நாதனுக்கும் வசதியாய்ப்போனது. காற்றோடும் நீரோடும் பேசாலையை நோக்கி நீந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினான். இந்திய ரோலரும் கண்ணுக்கு மறைந்துகொண்டிருந்தது.

இருளிலே தலைமன்னார் 'பியர்' வெளிச்சம் தாண்டி பேசாலைப் பக்கமாய் நீந்திக்கொண்டிருந்தான் நாதன். அவனுடைய நல்லகாலம். சொறிக்கூட்டம் தண்ணீரில் தட்டுப்படவில்லை. சுறாவோ பெருமீனோ தட்டுப்படவில்லை. பேசாலைப் பக்கமிருந்து ரோந்து நேவிக்கப்பல்கள் தலைமன்னார்ப் பக்கம் போய்க்கொண்டிருந்தன. நடுச்சாமமளவில் கரைபிடித்தான். கடற்கரையில் இருந்து சிறிது தூரத்தில் காட்டுப் பற்றைகளாயிருந்தன. 'கடவுளே ஆமிக்காரனின் கண்ணில் தட்டுப்படவே கூடாது'. கடவுளை ஒருமுறை வேண்டிக்கொண்டான். கொஞ்சநேரம் மணலில் படுத்து ஓய்வெடுத்தான். கொண்டுவந்த 'பன்'னைச் சாப்பிட்டான். திரும்பவும் கடற்கரை மணலிலே பேசாலை நோக்கி நடக்கத் தொடங்கினான். விடிகிற நேரம் மீண்டும் கடலில் இறங்கினான். இன்னும் கொஞ்சத் தூரம், ஒரு பத்து மைல் இருக்கலாம் .இந்தியக் கடற்கரையிலிருந்து இறங்கிய உற்சாகம். இன்னும் ஆபத்துக்களிலும் பிடிபாடுகளுக்குள்ளிருந்தும் வெளியேறவில்லை என்பது அவனுக்குத் தெரியும். என்னுடைய நாடுதான். எதிரியின் ஆக்கிரமிப்பில் அகப்பட்டு கிடக்கிற ஊர். கரையைவிடக் கடல் எவ்வளவு பாதுகாப்பு? நீச்சல் அவனுக்கு தரையில் நடப்பது போல, நீந்தினான்.

விடிகிற நேரம் தண்ணீரோடு அது என்ன தொழில் செய்கிற படகா? இல்லை ரோந்துப்படகா? இல்லை இல்லை புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட இலங்கையின் ரோந்துப்படகா? கிட்டவர அது நன்கு புலப்பட்டது. அது தண்ணீரில் தாண்டுபோய் கிடக்கும் ஒரு நேவிப்படகு. கொஞ்சநேரம் காலாற, கையாற, ஆசுவாசப்படுத்த ஒரு அருமையான இடம். பக்கத்தில் போய் அதில் தாவி ஏறினான். நன்றாக விடியும் வரை அதில் தண்ணீர் படாத மேல் தட்டில் படுத்துறங்கினான்.

விடியும் நேரம் படகொன்றின் இயந்திரச் சத்தம் அவனை எழுப்பி விட்டது. ஒளிந்திருந்து உன்னிப்பாய்ப் பார்த்தான். அது தொழிலுக்குச் செல்லும் ஒரு 'வைபர்க்கிளாஸ்' படகு. வெளியில் வந்து கையசைத்துக் கூப்பிட்டான். அவர்களும் அருகில் வந்தார்கள். தன்னுடைய கதை முழுவதையும் அவர்களுக்குச் சொன்னான். பரிதாபப்பட்டார்கள்..

"அண்ணா நாங்கள் கரைக்குப் போகமுடியாது. ஆமி பிடிப்பான், ஆனா நாங்கள் இரணைதீவுக்குக் கொஞ்சம் கிழக்காலதான் தொழிலுக்குப் போறம். புலிகளின் பக்கத்திற்கு நாங்கள் போகமுடியாது. நீங்கள் விரும்பினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில் கொண்டு போய் விடுகிறம்''

ஒத்துக்கொண்டான் நாதன்.

''அண்ணா இடையில் நேவி வந்தால் தண்ணியில இறக்கிவிட்டிடுவம்.'' அதற்கும் ஒத்துக்கொண்டான் நாதன்.

அவனை அவர்கள் இடையில் இறக்கவில்லை. தொழில் செய்யும்வரை அவனையும் வைத்திருந்தார்கள். மதியமளவில் வலையிழுத்து வலைப்பாட்டை மதியம் வைத்து ஓடினார்கள். நாதனுக்கும் நல்ல காலம், கரை தண்ணீரில் ஆடும் தூரத்தில் அவனை இறக்கிவிட்டார்கள். நாதனும் நன்றிசொல்லி இறங்கினான். இன்னும் கொஞ்சதூரம், தன்னுடைய தேசத்துக்கென்று வேகமெடுத்தான்.

இவ்வளவு தூரம் நீந்திவந்து இந்தக் கொஞ்சத் தூரத்தைக் கடக்க முடியாமல் போய்விடுவேனோ என்று கலங்கத் தொடங்கிவிட்டான் நாதன். ஏனென்றால் கடல்முழுவதும் காக்கா சொறியோ? அல்லது நெருப்புச் சொறியோ? எதுவென்று தெரியவில்லை.

எட்டி நீந்தும்போது முகத்தில் அடிக்கும் தண்ணீரோடு அதுவும் சேர்ந்து பட்டு, கடிக்கத் தொடங்கி முகம் முழுவதும் நெருப்பாய்க் காந்தத் தொடங்கிவிட்டது. இது எவ்வளவு தூரக் கடல்வரை இருக்குமோ! நனைந்தும் காய்ந்தும் உப்பேறிப்போன முகத்தில் நெருப்பு வெப்பம். கையைத் தூக்கி முகத்தை வளித்துவிட்டால்....

இன்னமும் எரியும், பகையாளிகளுக்குப் பயந்து பயந்து கடலில் பயணித்து அவனுக்குக் கிட்டக்கூட நேவியொன்றும் வரவில்லை. அதிஸ்டம் என்று நினைத்திருந்தவன், இப்போ இயற்கையால் இறப்பு அவனுக்கு அருகில் வந்து கொண்டிருந்தது. நன்றாக முழுமையாக கரை கண்ணுக்குத் தெரியும் தூரத்தில் சாவும் கண்ணுக்குள் வருகிறது. நான் சாவதை விட, இந்தியாவின் அரசியல் அடக்குமுறைக்கும், லஞ்சம், ஊழல், அடிமை வாழ்வு அதோடு இலங்கை அரசின் இன அழிப்புக்குள்ளும் அடங்கிப்போய் தோற்றுவிடுவேனோ என்ற பயம்தான் இன்னும் அதிகமாயிருந்தது அவனிடம்.

கொஞ்சத் தூரம் நீந்தியதும் தெரிந்தது அது நாவற்காய்ச்சொறி என்பது. அது கூட்டம் கூட்டமாய் வந்து அவனை நீந்தவிடாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடித்துப்போனது. இப்பொழுதுதான் கடவுளை நினைத்தான் நாதன். தன்னால் இயலாமல் போகும்போது கடவுளை நினைக்கும் மனிதஇயல்பு அவனுக்கும் இருந்தது. மனைவி, பிள்ளைகள் கண்ணுக்குள் வந்து போனார்கள். தோற்றுவிட்டேன் என்றிருக்க அவனுக்கு முன்னால், வலைப்பாட்டுக் கடலில் களங்கட்டி பாயவரும் ஒரு பாய்வள்ளம்.

தன் பெலம் முழுவதையும் சேர்த்துக் கத்தினான். அவர்கள் அதற்கு முன்னரே அவனைக் கண்டுவிட்டார்கள் போல, வள்ளம் அவனை நோக்கியே வந்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலன் பிறப்பு



அருளர் கள்ளுக்குபோய்ட்டு வாறாரெண்டால், வளிச்சலில நல்ல மீன்பட்டிருக்கும். அதில்லெயெண்டால் அண்டைக்கு நேவியடிச்சு வளிச்சல் தொழிலாளர் ஆரும் வலையை வெட்டிப்போட்டு வந்திருப்பாங்கள். இவர் தேடிப்போய் வலைகளைக்கொண்டுவந்திருப்பார். அதுவுமில்லையெண்டால் கடலில நல்லசண்டை நடந்திருக்க வேணும். இயக்கம் நல்ல அடிகுடுத்திருக்க வேணும்.

கடலைப்பற்றியோ? அல்லது கடல் தொழிலைப் பற்றியோ ஏதேனும் கேக்க வேணும் எண்டால் அந்தாளைக்கேட்டா அச்சொட்டா பதில் சொல்லும். காலமை விடிய மூண்டு மூண்டரைக்கு எழும்பி, மண்டானுக்க நிண்டு, சூடவலை, அறக்கொட்டியான் போகிற குல்லாக்களை இறக்கிக்குடுத்து, வளிச்சல் வள்ளங்கள் வந்தால், மீன் வெட்டிக்குடுத்து கருவாடு போட்டு....

இப்ப அதுதான் அவரின்ர தொழில். எப்படியும் நூறுரூபா உழைச்சுப் போடுவார், சில நாள் கறிமீனோட காலம் போகும். அண்டைக்கு ஆரோடையும் கதைக்க மாட்டார். “ ஏனப்பா, இண்டைக்கொண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்க்கேல்ல ஏதேனும் பாரன்'' எண்டு மனிசியிட்டை சரணடைஞ்சு போடுவார். அன்றைக்கு மனிசி என்னபேசினாலும் கேட்பார். "ஏனப்பா உந்த குடிக்கிற காசுக்கு ஏதேனும் நல்ல சாப்பாட்டை சாப்பிடலாம் தானே'' என்று மனிசி கேட்டால் " எனக்கு கள்ளுத்தான் சத்தான சாப்பாடு, எப்பாலும் குடிச்சிட்டு வந்து உன்னட்டை சாப்பாடு கேட்கிறனே? கதையை'' விடு என்பார்.

குடிக்காத நாளில் பசிக்குதெண்டு கொஞ்சம் கூட சாப்பாடு கேட்கார். மனிசி குடுக்காது, ஒருபார்வை பாப்பா. "இப்ப பசியெண்டால் என்னண்டு விளங்குதல்லோ'' அவ இளகிக்கதைப்பா. அவர் கணக்கெடுக்கார். சிலவேளை வெறியோடவந்தா பாவம் எண்டு பாப்பா. "குடிச்சுப்போட்டு வந்தா கொஞ்சம் சாப்பிடுங்கோ, சாப்பிடாமக் கிடந்து சாகப்போறீங்களே?'' என்று சொன்னால், "நான் பசிக்குதெண்டு கெஞ்சிக் கேட்டும்; நீ அண்டைக்கு தரேல்ல நீ சொல்லி நான் சாப்பிடோணுமா? நான் தான் புருசன் எண்ட ஞாபகம் இருந்தாச்சரி'' என்பார். இப்படியே நாள் போகும் ரெண்டு பேருக்கும்.

அண்டைக்கு குட்டிச்சம்மாட்டீன்ர வள்ளம் தொழிலுக்கு வெளிக்கிட்டுது, தொழிலுக்குப்போக தொழிலாளி ஒருத்தன் வரேல்ல. சம்மாட்டி அவனைத் தேடிக்கொண்டு திரிய, அருளரும் பார்த்தார், கையில காசும் இல்லை; தற்சேலா மீன்பட்டுதெண்டா ஆயிரம், ரெண்டாயிரம் வரும். 'நான் கடலுக்கு வரட்டோ' என்று கேட்டு தொழிலுக்கு ஏறிட்டார். இயக்கத்தின்ர போட்டுகள் கடலில் நிக்கிறது அவருக்குச் சாடையான துணிவு.

வளிச்சல் தொழிலுக்கு வள்ளங்கள் போகுதெண்டால், கரும்புலி போட்டு போகுதெண்டு கடற்கரையில சொல்லுங்கள். நேவி வந்திட்டா கடலில பாஞ்சு நீந்தினாலும் 'போக்கஸ்' அடிச்சுப் பார்த்துச் சுடுவாங்கள். தப்பவே ஏலாது. தப்பினாலும் நீர்பாடு வாடை நேராய் ஓடினால் எப்பிடி நீந்தினாலும் புல்மோட்டை, திருகோணமலை எண்டுதான் கரையேறலாம். அப்பவும் சாவுதான்.

சோளகநீர் உரம் என்றால் காங்கேசன்துறை, பருத்தித்துறைப் பக்கம்தான். உலர்ந்த நீர் (உயர இழுத்தநீர்) என்றால் உயிரில்லை. ஆரும் வந்து காப்பாத்தினாச் சரி. ஆர் வருவாங்கள் உந்த நேவியுக்கை? நல்ல காலம் இருக்குதெண்டால் கடற்புலி போட்டுத்தான் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓயாத அலை' ஒண்டுக்குப்பிறகு இந்த ஊரில குடியேறி இந்தக்கடலில தொழில் செய்ய வெளிக்கிட்டபிறகு, கடலில காணாமல் போனவரை காத்திருந்த நாளுகள் எத்தினை? கைகால் இல்லாம கரையில ஒதுங்கின பிரேதங்கள் எத்தினை?. எத்தின உயிர் போட்டுது? எவ்வளத்தை அள்ளிக் கொட்டின கடல்? கடல் அடிச்சாலும் கரைய நீண்டு வீசினால் எத்தினை மடவை மீன் அறுக்கும். எவ்வளவு றால் பிடிச்சு கொட்டின இடம். தைப் பூசத்திற்கு பனி விழுந்த கையோட கடல் சீர்போட்டுதெண்டால் அலைச்சத்தமே கேக்காது. காலமை தொடங்கி இரவுவரை ஒரே 'இஞ்சின் சத்தம்தான். 'இஞ்சின்' வேகம் காணாதெண்டு இருபத்தைந்து முப்பது கோசிலயும் (hp) ரெண்டு இஞ்சின் பூட்டித் தொழில் போகும்.

தை மாசி மாதமெண்டால் "உந்த றாலை ஆர் சாப்பிடுறது இறைச்சிவேணும்" சாவாளையும் காரலும் பன்னாவும் சோளாக்கட்டா சின்னட்டியும் கருவாடு வெட்டிப்போட நேரமில்லாமல் கடலில கொட்டுற மீன்.

முன்பு வலைதெரிக்கவாற பெண்டுகள் ஒளிச்சுக்கொண்டு போகிற றால், ரெண்டு நாள் சீவியம் போக்காட்டும். முற்பணமா காசுதந்து றால் எடுக்க எத்தினை வியாபாரிகள்? காசை மதிக்காத கணக்குப்பாக்காத வாழ்க்கை. எது தரம் எண்டு பாக்காம எது விலை எண்டு பாக்கிற சனம். றாலில உழைச்ச நகை நட்டைத்தேடி, கடலடிவர வித்து.. உழைக்கிறதும் செலவழிக்கிறதும் சேத்து வைக்க நினைப்பில்லாத ஊர்.

கடைசி காலத்துக்கு.... கடைசிகாலம்வரை கடலிருக்கும்தானே! வலைபடுக்கிறதுதான் ஒருவேலை. கையிலகாசு.

ஆர்நினைச்சது, இப்ப காஞ்சு கருவாடுமாதிரி, உடைஞ்ச ஐஸ்வாடியும், கடலரிச்ச ரோட்டும், கறள்கட்டின கம்பிவலையும், செல்துண்டு வெட்டின கிடங்குமாய் எருக்கலை பரவிக்கிடந்தது. கடற்கரை ரோட்டெல்லாம் காடுபத்தி தொழிலுக்கு வள்ளம் இல்லாமல் குளத்தில தொழில் செய்யிற குலாக்களோட வலிச்சு மாஞ்சுபோய் ....... நேவியட்டை அடிவாங்கி செத்து......... கைம்பெண்கள் ஊரில கனத்து காஞ்சுபோய்க்கிடக்குது ஊர். இப்ப கடற்தொழிலும் மறந்துபோய், கடலுக்குப்போற வள்ளங்களை நம்பி, கரைய காவல் கிடந்து, வலை தெரிஞ்சு சீவியம் போக்காட்டுற காலம்.

அண்டைக்குக் குட்டிச்சம்மாட்டிக்கு நல்ல புழுகம். ஐநூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலோவுக்குமேல மீன் பட்டுப்போச்சு. அருளர் வளிச்சலுக்கு ஏறிப்போனா தொழில்தான். அந்தாளோட ஆர் மீன்பிடிக்கிறது.குட்டிச்சம்மாட்டி சொல்லச் சொல்ல அருளருக்கு நல்ல ஏத்தம். ஆனால் இண்டைக்கும் தொழிலுக்குப் போகச்சொல்லி குட்டிச்சம்மாட்டி சொல்லிட்டா. அவருக்கு இனி தொழிலுக்குப் போக விருப்பமில்லை. பயந்தபடியே குட்டிச்சம்மாட்டி கேட்டிட்டான்.

"அருளண்ண பட்டதோட பட்டதா இன்னும் ரெண்டு மூண்டு கடல் ஓடினா உழைச்சுப்போடுவியள்".

"எதுக்கும் வீட்ட போனாத்தான் சொல்லலாம். வழமையாப்போற தொழிலாளியை விட்டுட்டு என்னை ஏத்திறதும் சரியில்லை" என்று சொல்லிப்போட்டார். குட்டிச்சம்மாட்டிக்கு முகம் சரியில்லை.

அருளருக்குத் தெரியும், ஆரும் இப்ப வீட்ட போய் மங்களாவிட்டைச் சொல்லிப் போடுவாங்கள் என்று. வீட்ட போக ஒரு பிரளயம் இருக்கும். மங்களாவைச் சமாளிக்க இப்பவே திட்டம் போட்டிட்டார்.

குட்டிச்சம்மாட்டியிட்ட பங்குக்காசில ஆயிரம் ரூபாவும் வாங்கிக் கொண்டு மங்களா மாட்டிறைச்சி தின்ன மாட்டாள் எண்டு ரெண்டு கிலோ ஆட்டிறைச்சியும் வாங்கி கோப்பிறேசனையும் மறக்காமல் வீட்ட போக மங்களா கதைக்கேல்ல. சமாதானப்படுத்திப்பார்த்தார். சரியே வரவில்லை.

"உயிரைக்குடுத்து உந்த வளிச்சல் தொழில் செய்யத்தேவையில்ல. நாங்கள் பட்டினி கிடந்தா கிடக்கிறம். நானோ பிள்ளையளோ அதைக்கொண்டாங்கோ, இதைக்கொண்டாங்கோ எண்டு கேட்டதே? நாலுநாள் நல்லா சாப்பிடோணும். எண்டதுக்காக காலம் பூராவும் கண்ணீரோட கிடக்கோணுமே. சத்தியம் பண்ணுங்கோ இனிப்போகனெண்டு."

"அதடி கடலில இயக்கத்தின்ர போட்டுகள் இறங்கிநிண்டது. நேவிவ ரான், பயமில்லை எண்டுதான்....."

எப்பிடிச்சமாளிச்சும் சரிவரேல்ல. அருளர் கொண்டுவந்த சாமானெல்லாம் தூக்கியெறிஞ்சு சத்தம்போட்டு ஊரைக் கூட்டிப்போட்டுது மங்களா. தொழிலுக்கு கூட்டிக்கொண்டு போகவந்த குட்டிச் சம்மாட்டிக்கும் நல்லபேச்சு. அண்டையோட அருளர் வளிச்சல்தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்டார். பழையபடி வேதாளம் மரமேறிய கதைதான். மண்டான், மீன்வெட்டு, அரைப்பட்டினி, காப்பட்டினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களாவிற்கு அருளர் பயந்தான். நல்லாக் கதைக்கத்தெரிஞ்ச ஆள். "நாட்டின்ர பொருளாதாரம் வீழ்ச்சிஅடைஞ்சு போட்டுதெண்டு இவளுக்கு என்னண்டடா விளங்கப்படுத்திறது" அவர்சொல்லேக்க சிரிப்புத்தான்வரும்.

அந்தாள் படிச்சதென்றால் எட்டாம் வகுப்புத்தான். ஆனால் உலகப்புதினமெல்லாம் அந்தாளின்ர கையுக்குள்ள. ஆரும் படிக்கிற பெடியள் கூட்டாயிருந்து அவரிட்டை கதைகேட்பாங்கள். வால்வுரேடியோவில் இருந்து கம்பியூட்டர் என்றுபோய் நெற்வேக்குக்கு தமிழ் சொல்லி மூலகம் எண்டு தொடங்கி ஐதரசன், ஒட்சிசன்துகள்கள், இலத்திரன்கள், மின்காந்தம் எண்டு அணுவாயுதம் வரைக்கும் போய், குரோசோம்கள் டீ.என். ஏ, ஏனிப்படி இதுதானென்று கீறிக்காட்டி......... நம்பமாட்டாமலும் பெடியள் இருப்பாங்கள். இப்படியிருந்து கதைக்கிறது மங்களாவுக்கு கொஞ்சமும் பிடிக்கிறதேயில்லை.

"உப்பிடியே கதைச்சு காலம் போக்காட்டுற நேரம் நாலு தென்னைய நட்டிருந்தாலும் இந்த நாலுவருசத்தில காச்சிருக்கும். ஆளுக்காள் தென்னைநட தேங்காய்விலையும் குறையுமல்லே. இப்பியே எல்லாத்திலையும் எல்லாரும் கஸ்ரப்பட எல்லாச்சாமான்களும் விலைகுறைய பட்டினி ஏன்வருகுது?" ஒரு லெக்சரே வைப்பா. ஞாயமாய்த்தான்படும் எல்லோருக்கும்.

"இப்பத்தான் பொருளாதாரப் பிரச்சனையின்ர அரைவாசிக்கு வந்திருக்கிறாய். சரி, நீ சொல்லிறமாதிரியும் செய்வம்" என்பார். அண்டைக்கு காசிருந்தாலும் அருளர் பட்டினிதான்.

அருளர் ஒண்டும் கஸ்ரப்படாத ஆளில்லை. வாழ்க்கையில நல்லா அடிபட்ட ஆள்தான். சின்ன வயசில இருந்தே வீச்சுவலையடிச்சு உழைச்சு சகோதரங்களை கரைசேர்த்து காதலிலதோத்து வயசுபோய், கலியாணம்கட்டி இப்ப மூத்தவளுக்கு பதினாலு வயது. 'போட்எஞ்சின்', வளிச்சல்வலை அறைக்கொட்டியான், சூடவலை நகைநட்டெண்டு, மனிசி பிள்ளையள நல்லாத்தான் வச்சிருந்தவர். தொண்ணூறோடதான் எல்லாம் துலைஞ்சுபோனது. அகதிவாழ்க்கையை சமாளிச்சு முல்லைத்தீவில தாட்டு வச்ச வலைகளும் போட்டும் அந்த தென்னந்தோட்டமும் இருந்தாக்காணும் எண்டு நினைச்சு முல்லைத்தீவு பெடியளிட்ட பிடிபட்ட பிறகு வந்து பாத்தா.... ஆமி அடுக்கிவைச்ச தென்னங்குத்திகளும் அதுக்குக்கீழ உடைஞ்சு போய்க்கிடந்த அவரின்ர போட்டும். கடற்கரைக் காணியெல்லாம் அடம்பனும் எருக்கலையுமாய்... மனம் விட்டேபோச்சு. பழையபடி மிச்சமாய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்த கிணத்தை இறைச்சு சுத்திவர வேலியடைச்சு பத்துத் தென்னையும் மரவள்ளியும் வச்சு தொட்டுத் தொட்டுப் பார்த்துத் தண்ணியூத்துவார்.

மங்களா சொன்னது போல ஒரு நாலுவருசக் கஸ்ரம் தேங்காய் மலியும்தான். மீன் விலையும் குறையும். அரிசியும் மலியும். எல்லாரும் வடிவாய் சாப்பிடலாம் தான். ஆனால் எல்லாரும் சேர்ந்து கஸ்ரப்பட வேணுமெல்லோ.

இந்தமுறை காலத்துக்கு முன்னமே கடலடிக்கத் தொடங்கினதால இடைக்கிட கடல் சீராப்போகுது. கல்லுவலை படுகிறதாலையும் வளிச்சல் தொழில் போறதாலயும் பங்குக் கரவலை வளைக்கிறதாலையும் மாரிச் சீவியம் பரவாயில்லாமல்போகும். கடலில இயக்கம் போட்டு இறக்கினா வளிச்சல் தொழில் பயமில்லாமல் ஓடும். அருளர் கரவலையும் வளிச்சலும் மாறிமாறிப் பாக்கிறதால அவரின்ர பாடும் பரவாயில்லை.

காலமை விடிய அருளர் மங்களாவிட்ட தேத்தண்ணி கேக்கப்போக 'சீனி இல்லை' எண்டுதொடங்கி, 'இந்தமுறை நத்தார் கொண்டாடுறதில்லையோ?' என்று கேட்டு, குடிக்கக் கூடாதென்று சத்தியம் வாங்கி, 'இந்தமுறை பிள்ளையளுக்கு உடுப்பெடுக்கோணும், இந்தமுறை பெரிசா நத்தார் கொண்டாடோணும்' எண்டு முடிச்சிட்டா.

"எத்தனைவருசம் நத்தார் பட்டினியோடபோச்சுது" மற்ற நாளில பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை. நத்தாருக்காவது நல்ல கறிசோறுசமைக்கோணும் அப்பா, இந்தமுறை ராப்பூசை கள்ளப்பாடு அந்தோனியார் கோவிலிலயாம்."

அருளர் வருசப்பிறப்பை பெரிசாக் கொண்டாடுறதில்லை. நத்தார்தான் கொண்டாட்டம். கடைசியில தொண்ணூறில நத்தார் கொண்டாடினத நினைச்சுப்பார்த்தார். எத்தினை கிலோ 'கேக்'கு! இரவு பாலப்பம் சுட்டு ராப்பூசைக்கு மழையில நனைஞ்சு...

அந்த வருசம் நத்தாருக்கும் கடல் சீர் போட்டுட்டுது. றாலும் பட்டது. தொழிலாளிகள் தொழிலுக்கு வெளிக்கிட பிளக்சுங்கானுக்க கடதாசி.. அடைஞ்சு எஞ்சின் இஸ்ராட் வராமல் செய்து, தொழிலை நிப்பாட்டி எத்தினை பி.எஸ்.ஓ.ஏ (B.S.O.A) எத்தின பியர் போத்தல், கொக்கோகோலா எண்டு தொழிலாளியளை தவழவைச்சது? ஆட்டுக்காரனுக்கு ஆடு, மாட்டுக்காரனுக்கு மாடு, கோழியும் பிறம்பா. இரவு வீடியோப்படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்தமுறை கடவுள் மனம் வச்சாரெண்டா நத்தார் கொண்டாடுறது தான்'. ரெண்டு பேரும் சேர்ந்து திட்டம் தீட்டியாச்சு.

"நாலு சாவல் நிக்குதெல்லோ ரெண்டை வித்துவிடு. ரெண்டு நத்தார்க் கறிக்கு. மூன்று கிலோ அரிசி வேண்டோணும். பக்கத்தில இருக்கிற சின்னப்பிள்ளைகளுக்கு சாப்பாடு குடுக்கோணும்."

"பெரிய திட்டங்கள் போடாதைங்கோ. இவ்வளவுக்கும் காசு எங்க இருக்கு. முதல்ல நீங்க குடிக்கமாட்டன் எண்டு சத்தியம் பண்ணுங்கோ"

"நத்தார்மட்டும் குடிக்கமாட்டன்" சத்தியம் பண்ணியாச்சு. கதைச்சுக்கொண்டிருக்க குஞ்சுக்கிளி சம்மாட்டியின்ர பெடியன் ஒருத்தன் ஓடிவாறான்.

"அருளண்ண கரவலைச் சல்வாய்மடி கட்டைமில விழுந்து கிழிஞ்சு போச்சு. சம்மாட்டியார் உங்களை ஒருக்கா வந்திட்டுப் போகட்டாம்"

முந்தி அருளருக்குத் தெரிஞ்சதெல்லாம் கோரிக்கு நேர ஆறுபாகத்தில ஒரு கப்பல் தட்டு. அதுதான் ஒரு கொழுவல். அதுலதான் வலைகள் விழுந்து கிழிஞ்சு போறது. அது சோழர் காலத்தில கொள்ளைக்காரர் மாத்தளனில குதிரைகளைகொள்ளையடிச்சுக் கொண்டு போகேக்க சண்டை நடந்து தாண்டு போன கப்பல் எண்டு பொன்னியின் செல்வன் புத்தகத்தில படிச்சஞாபகம். அதைவிட களத்தில ஒருகட்டை.

இப்ப ஆமியின்ர டோராக்களும், கப்பல்களும் சனம் விட்டுட்டுப்போய் ஆமி கடலில தள்ளிவிட்ட சனத்தின்ர போட்டுகளும் கடல் முழுக்க கட்டைதான். இப்ப அந்தக் கட்டையள வச்சுத்தான்

"நத்தாருக்கு காசுவரப்போகுது மாதா தருவாவா மங்களா." மனிசியைப்பார்த்து கண்சிமிட்டினார் அருளர்.

அருளர் வலையடிக்குப் போயிட்டார். இன்றைக்கு இருநூறை முந்நூறைக்கொண்டு வருவார் எண்டு பக்கத்து வீட்டில அரிசியும் கடன்வாங்கிப்போட்டு கருவாடும் எடுத்து முருங்கையிலையும் சுண்டிக்கொண்டிருக்க அருளற்ற சத்தம் கேட்டுப் பதறிப்போனாள் மங்களா.

"சரி எல்லாம் சரி, குடிக்கிறேல்ல எண்டமனிசன் இப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிச்சுப்போட்டு வந்திருக்குது. காசெல்லாம் முடிஞ்சுதோ தெரியாது, கடவுளே நல்ல புளுகத்தில் வாறவர் போறவர் எல்லாருக்கும் கதை சொல்லிக்கொண்டு வாறார்; வரட்டும் இண்டைக்கு" வாசலுக்க வரேக்க "யேய் மங்களா பெடியள் டோரா ஒண்டை அடிச்சுப் போட்டாங்களாம்." நல்லா பேசவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்த மங்களாவுக்கு இப்ப எல்லாமே விளங்கிவிட்டது.

எண்டாலும் இன்னும் எவ்வளவு மிச்சம் வச்சிருக்கிறார் என்று பொக்கற்றைத் தேடிப்பாக்க... இருநூறு ரூபா அகப்பட்டுது. எவ்வளவு எடுத்தவர் என்று கணக்குப்பார்க்க 'சம்மாட்டியார் எவ்வளவப்பா தந்தவர்' கனதரம் திருப்பித் திருப்பிக் கேட்டாச்சு. அவருக்கு அதைப்பற்றி கவலையே இல்லை. டோரா அடிச்சதும் தாட்டதும் தான் கதை. ஒரே புளுகம்.

பழையபடி அருளர் குடிவிடுறதுக்கு சத்தியம் பண்ணியாச்சு. பிள்ளையளுக்கு உடுப்புகள் தேடியாச்சு. ரெண்டு கோழியும் வித்து அரிசி மூன்று கிலோ, அப்பத்துக்கும் மாவிடிச்சு இறைச்சிக்கும் பிரச்சனையில்லை. கோழி ரெண்டும் நிற்குது. நூறுகிராம் – நூறு கிராமா சில்லறைச்சாமானும் வேண்டி தூள் இடிச்சாச்சு. இரவு பாலன் பிறப்பு. பகல் சோத்துக்கு என்ன செய்யிறதெண்டு மங்களா யோசித்துக்கொண்டிருக்க அருளர் பத்து நண்டு கொண்டுவந்தார். ஐடியா வந்திட்டுது, இரவுக்கு அப்பம் சுடுகிறதுதானே. அப்ப மத்தியானம் கூழ். இருந்த பனியவரை கொஞ்சம் பிடுங்கியாச்சு. அப்பதான் கிழங்குவச்ச மரவள்ளி ஒன்றை இழுத்தாச்சு. பழைய காரல் கருவாடு, கொஞ்சம் முசுட்டைஇலை, கொஞ்சம் முருங்கை இலை, புளிக்கொரு மாங்காய், காசில்லாத கூழ், ரொட்டி.

"கையை நீட்டடி வலக்கையை நீட்டடியாத்தை" அருளர் மனிசியின்ர கையைப்பிடிச்சுக் குலுக்க அவ ஆச்சரியமாய் பார்க்கப் போய்....

"உலகமே வந்து எங்களுக்கு பொருளாதாரத்தடை போட்டாலும் கடைசிவரைக்கும் ஒன்றும் செய்யேலாது".

"பொருளாதாரத்தடை எண்டால் என்னப்பா?"

அருளர் ஓடியே விட்டார் கூழோடை.

இரவு நத்தார்; ராப்பூசை கள்ளப்பாடு அந்தோனியார் கோவிலில ஆரவாரத்தோட தொடங்கிட்டுது. தொண்ணூறுக்குப்பிறகு அந்தோனியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலில நடக்கிற ராப்பூசை. சனம் குறைவெண்டாலும் சந்தோசம் கூட. பாலன் பிறக்க முந்தியே அரியதுரை "பப்பா" ஆடத்தொடங்கிட்டார். பக்கத்து கடற்புலிப் பெடியளும் பூசைக்கு வந்து வேட்டுத் தீர்த்து 'ரேசர் ரவுண்சு'ம் அடிச்சு சிறப்பித்தார்கள். பாலன் பிறந்திட்டார். அருளர் வீட்டிலையும் நத்தார். நித்திரை எண்டாலும் அருளர் வெள்ளனவே அருண்டுட்டார்.

"மங்களா என்னடி பெடியள் இன்னமும் நத்தார் வெடிகொளுத்திறாங்களோ."

"இல்லையப்பா கடலிலதான் சத்தம். ஆரும் வளிச்சலுக்குப் போனவங்களோ"

"இல்லை ரெண்டு மூண்டு வள்ளம்தான் போனது"

"அவங்கள் இவ்வளவு நேரமும் கடலில கிடக்கிறாங்களோ."

"அப்ப சண்டைநடக்குதோ விடியத்தெரியும்தானே! தேத்தண்ணி வையன். நானொருக்கா கடற்கரைக்குப் போட்டு வாறன்."

அண்டைக்குச் சீனியிருந்தது. அவளழும்பி தேத்தண்ணிபோட குடிச்சிட்டு கடற்கரைக்கு வெளிக்கிட்டார். 'கிபிர்' சத்தம் கேட்கவே மங்களா சொல்லிட்டுது. அவன் எங்களைத்தாண்டிப் போட்டான் எண்டு.

"கடலுக்க ஏதோநடக்குது போல அவன் நேர கடலுக்குப்போறான்" மங்களா அதையெல்லாம் கணக்கெடுக்காமல் நத்தார் மத்தியானச் சாப்பாடு செய்ய வந்திட்டா.

மூத்தவளை கோழியை உரிக்கச் சொல்லிவிட்டா, அவள்தான் உரிப்பாள். பிள்ளையளுக்கு காலமைச்சாப்பாடு குடுத்தாச்சு. அதுகள் நத்தார் கொண்டாட சினேகிதப்பிள்ளைகள் வீட்ட போட்டுதுகள். கறியும் மணக்க இறக்கியாச்சு. ரோட்டால போறவையும் "என்ன மங்களாக்கா நத்தார் விசேசமோ?" சந்தோசமாயிருந்தது அவவுக்கு.

கோழியெண்டா கிழவர் மூண்டுதரம் சாப்பிடுவார். சந்தோசம் வந்தா மங்களா அருளரை கிழவர் எண்டுதான் சொல்லுவா. 'இண்டைக்கு கேக்கக்கேக்க சாப்பாடு போட்டுக் கொடுக்கோணும். பக்கத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுப்பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு இவரோடவைச்சு சாப்பாடு கொடுக்கோணும்.'

ரெண்டு மணியாச்சு. படலேல நிண்டுபார்த்தா. நின்று பார்த்தும் அந்தாள் இன்னும் வரேல்ல.

"எங்கபோட்டுது உந்தமனுசன்".

வேலி ஒழுங்கையால கள்ளுப்பையோடவந்த மாசிலாமணியண்ண "என்னடி மங்களா, மனிசனைப்பார்த்துக்கொண்டு நிக்கிறியே? புதினம் தெரியுமே? பெடியள் கடலில டோராவை அடிச்சு தாட்டுப்போட்டாங்களாம். இழப்பு ஒண்டுமே இல்லையாம். காயம்மட்டும்தானாம். கரையுக்குள்ள 'வாட்டஜெற்' எல்லாம் கொணந்து கட்டிப்போட்டு நிக்கிறாங்கள். அவங்கள்தான் 'டோறா' தாட்டதைச்சொன்னது." என்றார்.

"அப்ப அவர் அங்கேயே நிக்கிறார்"

"ஓமடி, 'நந்தசேனமல்லி வந்ததேனோ துள்ளி' எண்டு பெரல்ல அடிச்சு ஆட்டமும் பாட்டமும் நடக்குது. கொண்டாட்டம்தான்."

'அப்ப அங்க அந்தாள் நத்தார் கொண்டாடுது. அவருக்கு இண்டைக்கு ரெண்டு நத்தார். என்னை இண்டைக்கு மறந்து போடும். என்னோட நத்தாரைக் கொண்டாட ஆக்களில்லை. உந்த சின்னப்பெடியனை சாப்பிடக்கூப்பிடுவம். அதுகளோடையாவது சந்தோசமாக் கொண்டாடுவம்.' எண்டு மனதுக்க நினைச்சுக் கொண்டு திரும்ப,

"மங்களாக்கா"

அவவுக்கு தெரிஞ்ச கடற்புலிப் பெட்டை.

'கடலில பொம்பிளையளும் நீந்தலாமோ?' எண்டு ஆச்சரியப்படேக்க சந்திச்ச சிநேகிதம்.

"எங்கயடி காத்திகா வந்தனி"

"அது கடலில இரவு சண்டை. இப்ப கரைக்குள்ள வண்டியைக்கொணர்ந்து கட்டிப்போட்டு நிக்கிறம். என்ன நத்தார் விசேசமில்லையோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னவிட அவருக்குத்தான் விசேசம் அது சரி, நீங்கள் கடலில போரா தாட்டுப் போட்டீங்களாம். உண்மையோ?" சந்தோசத்தோட கேட்டா.

"அது நாங்கள் அடிக்கேல்ல, அண்ணையாக்கள்தான் அடிச்சவங்கள். எங்கடபோட் சப்போட்தான். அதிருக்கட்டும், எங்க அருளண்ண கோப்பிறேசனுக்கே?"

"அவர் வரார்; அவருக்கு இண்டைக்கு பாலன் பிறப்பும் நத்தாரும். நீங்கள் வாருங்கோ உள்ளுக்குள்ள, சாப்பிட்டுப்போங்கோ" கார்த்திகாவோட வந்த பிள்ளைகளையும் உள்ளுக்குள்ள கூட்டிக்கொண்டு போனா, அவவுக்கு நத்தார் கொண்டாட ஆக்கள் வந்திட்டுது என்ற சந்தோசம்.

"இருந்து சாப்பிடேலாதக்கா நாங்கள் போகோணும் சாப்பாட்டைக்கட்டித்தாங்கோ" சாப்பாடுகட்ட மங்களாக்கா குசினிக்குள்ள போட்டா. அவவுக்கு இயக்கப்பிள்ளையள் தன்ர வீட்டிலிருந்து சாப்பிடாம போகப்போகுதுகள் எண்ட கவலை.

"சாப்பாட்டை இஞ்சவச்சு சாப்பிடுங்கோவன் கட்டித்தர ஒன்றும் இல்லை"

"சொப்பிங் பாக்கில கட்டக்கா"

மற்றப்பிள்ளையளுக்கு பலகாரம் தேத்தண்ணியும் குடுத்திட்டு கார்த்திகாவை 'சொப்பிங் பாக்'கைப்பிடிக்க சொல்லிவிட்டு பானைச்சோறு முழுவதையும் 'சொப்பிங்பாக்'கில் கொட்டி, போதாம இன்னொரு 'சொப்பிங் பாக்'கிலயும் போட்டு மற்ற 'சொப்பிங்பாக்'கில் கறிமுழுவதையும் ஊத்திக்கட்டத்தான் கார்த்திகா கேட்டுது,

"என்ன மங்களாக்கா கறியெல்லாம் ஒண்டும் மிச்சமில்லாமல் ஊத்திறீங்கள். அப்ப உங்களுக்கு வேண்டாமோ?"

மங்களாக்கா ஒண்டும் கதைக்கேல்ல. எல்லாம் கட்டி எடுத்துக்கொண்டுவந்து கட்டில வச்சிட்டு வீட்டுத்தட்டிக் கதவெல்லாம் இறுக்கிக் கட்டினா. அவவுக்குத்தெரியும். கடலில சண்டைநடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெடியளுக்குத்தான் வெற்றி. அப்ப அவருக்கு இண்டைக்கு பாலன்பிறந்த சந்தோசம். அவர் இனி வீட்ட வரமாட்டார். என்னையும் விட்டிட்டு கோப்பிறேசனில தனிய நிண்டு, இல்ல தன்ர சினேகிதரோட நிண்டு நத்தார் கொண்டாடுவார். இனி அவருக்கு சாப்பாடும் தேவையில்லை.

நாளைக்கு குடிக்கமாட்டன் என்று இன்னொருக்கா சத்தியம் பண்ணுவார். நாளையிண்டைக்கு கடலில ஒரு சண்டை நடக்கும். பெடியள் வெண்டுவருவாங்கள். பேந்து இனி புதுவருசம், அல்லாட்டி ஒருபொங்கல், ஒரு உமிர்த்த ஞாயிறு, தீபாவளி எண்டு கொண்டாடிக்கொண்டே இருப்பார். அது அவவுக்கும் சந்தோசம்தான். கார்த்திகாகேட்டாள் "எங்க மங்களாக்கா வீடெல்லாம் கட்டி வெளிக்கிடுறியள்?"

"வேற எங்க, உங்களோட வரத்தான்" கார்த்திகா ஆச்சரியமாய் பார்க்க

"என்னோட நத்தார் கொண்டாட ஒருத்தரும் இல்லை, இண்டைக்கு உங்களோடதான் நத்தார் கொண்டாடப் போறன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பதிவுகள்



"என்ன மறந்து போட்டியோ" என்று கேட்டவரை, நிமிர்ந்து பார்த்த யோசேப் அண்ணனுக்கு அவரை அடையாளங்காண முடியவில்லை. இந்த ஐம்பது வயது அலைச்சல்களுக்கும், அல்லோல கல்லோலத்துக்குமிடையில், இடறுப்பட்ட எத்தனை புதுமுகங்கள், எத்தினை புதுச்சினேகிதங்கள்? எல்லாரையும் எல்லாவற்றையும் எப்படி ஞாபகம் வைத்திருக்க முடியும்? என்றாலும் இவ்வளவு உரிமையோடு 'டேய்' போட்டுக் கதைக்கும் இவன் ஆர்? என்று மனசைப்போட்டுக் குழப்பிக் கொண்டிருக்க அவர் மெல்லத் தனது சாரத்தை உயர்த்தி காலின் தொடைப்பகுதியில் இருந்த காயத்தைக் காட்டி, "நீயும் அந்தக் கங்காணியாரும் இல்லையெண்டா நான் இப்ப இருக்கமாட்டன் மச்சான்" என்றார். 'அட இது அவன் தவம்'.

யோசேப் அண்ணனுக்கு ஞாபகங்கள் உடைத்துக்கொண்டு வந்தது. இரண்டு பேரும் ஆடு மேய்த்த சின்னவயசு ஞாபகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடு பிடிக்கவந்த நாயொன்று, தவத்தின்ர தொடையில கவ்விக்கடிச்சுக்குதற, ஒரு சனமும் இல்லை, யோசப் அண்ணதான், தான் வைச்சிருந்த கத்தியாலையே அதை அடிச்சுக் கொண்டுட்டு அவனையும் தூக்கிக் கொண்டு வந்தவர். சின்னவயசுச் சினேகிதம். கோவிலுக்கும், பள்ளிக்கும், கடற்கரைக்கும் கூடியே திரிஞ்சவை ரண்டுபேரும்.

"எங்கடாப்பா இருக்கிறார் எங்கட கங்காணியார்" என்று கேட்டார் தவம் அண்ணை.

"அந்தாள் றாங்கி பிடிச்ச ஆள் எண்டு உனக்குத் தெரியும்தானே? சனமெல்லாம் ஊரைவிட்டு ஓட இந்த ஊரிலதான், கிடந்து தான் சாவனெண்டு அந்தாள் அப்படியே இருந்திட்டுது. பிள்ளையள் கெஞ்சிக்கேட்டும் அந்தாள் இறங்கேல்ல. அதுக்குப்பிறகு ஆருமே காணேல்லையாம். இருக்கும்மட்டும் நான் அந்தாளுக்கு செய்யமுடிஞ்சதைச் செய்திட்டன். இன்னும் எனக்கு கடன் இருக்கடாப்பா." கவலைப்பட்டார் அவர்.

தவம் அண்ணைப் பொறுத்தவரைக்கும் அவருக்கு கங்காணியார்தான் கடவுள். ஏனெண்டா அவருக்கு நாய் கடிச்சுக் கிடக்கேக்க மருந்துகட்டி மாத்தினவர் அவர்தான். அன்பா, ஆதரவா ஊர்க்கதையெல்லாம் கதைச்சு, கதையை மாத்தி புண்ணை ஒரு அமத்து அமத்தி, அவ்வளவு ஊனத்தையும் அரிகண்டம் இல்லாமல் துடைச்செடுத்து, மருந்து கட்டி, புண் மாறினாப் பிறகும் தவம் அண்ணை நடக்கேலாமல்த்தான் இருந்தவர். காலை மடக்கவோ நிமிர்த்தவோ முடியாமல் படுத்த படுக்கையாய் கிடக்கேக்க கங்காணியார் ஒரு நாள் அவரைப் பார்க்க வந்தார்.

"ஏன் இப்பிடி படுத்த படுக்கையாய் கிடக்கிறாய் மோனை? எழும்பி நட பாப்பம்" எண்டு அன்பாகக் கதைச்சு "காலை ஒருக்கா நீட்டு" எண்டு கேட்டு, அவர் காலை நீட்ட அப்பிடியே அவரின்ர காலுக்கு மேல ஏறி இருந்திட்டார். அவர் கத்திக் கத்தி ஏலாமப்போன பிறகு "நீ எனி நடப்பாய் எண்டிட்டு" போய்ட்டார்.

கேட்டதற்கு "எல்லாத்துக்கும் மனந்தான்ரா, இதுகளுக்கெல்லாம் இதுதான்ரா மருந்து இதோட நடப்பார்" என்றார். அதுமாதிரி அவர் எழும்பி விட்டார் தவம் அண்ணை.

தவம் அண்ணை மட்டுமில்லை ஊரில கனபேர் கங்காணியாருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைப் பட்டவை. ஊரில எவரெண்டாலும் வருத்தமெண்டு போய், அவர் அலரி விதையை அரைச்சுக் குடுத்தாலும் குடிப்பினம். ஒரு நம்பிக்கை அந்தாளில. அவரின்ர உத்தியோகம் கங்காணிதான். ஆனா ஊர்ப்பரியாரி, டாக்குத்தர், பூசாரி எல்லாம் அவர்தான்.

காலில் திருக்கை முள்ளடிச்சா ஆரும் ஆஸ்பத்திரிப் பக்கம் போகான். கங்காணியார் காயத்தில ஒரு கரித்துண்டு வைக்க எந்தக் கடுப்பும் உடனே நிக்கும். இல்லாட்டி ஒரு புளிக்கொட்டைப் பாதி போதும். வேப்பங்குச்சியில வெள்ளை பூசி உள் கண்டல் எடுத்திட்டு, அம்மிச்செழும்பு வைச்சுக் கட்டினா ஒரு ஆறு நாள் அவன் தண்ணியில நனைஞ்சாலும் ஒரு கண்டலும் வைக்காது. கடலுக்குப்போய் கடல் புழுப்பட்டு ஆசுப்பத்திரி எண்டு போகேலாது. டாக்குத்தர் கேள்வி கேட்டே துளைச்சுப்போடுவார். "அந்தப் புழுவைக் கொண்டு வர ஏலாதோ" என்று கேட்பார். கண்டா எல்லோ அதைக் கொண்டு வாறதுக்கு. அதுக்கெல்லாம் கங்காணியார்தான் டாக்குத்தர். கரைச்ச புளியும், பழைய கள்ளும் சேர்த்து "முழுக்கலையும் குடி" என்பார். அவ்வளவுதான். அடுத்தநாள் அவன் தொழிலுக்குப் போவான்.

காய்ச்சல் எண்டு மாறாதவன், பேய் எண்டு இவரட்டை வருவான். வேப்பிலை அடித்து திருநீறு போட்டு கையில நாலஞ்சு குளிசையும் குடுத்துவிடுவார். அது சுகம் வந்திடும். "பேய் கீய் ஏதும் உண்மையாய் இருக்கோ?" எண்டு கேட்டால் 'நீதான்ரா பேய்' என்பார். "நான் வேதக்காரனண்ணை, திருநீறு போட மாட்டன்" எண்டால் "பாவிலு கிழவனிட்டைப் போய் தண்ணி ஓதி எறிஞ்சிட்டுப்போ" என்பார். ஆனால் குளிசை தராமல் விடமாட்டார்.

யோசேப் அண்ணனுக்கு சின்னக் காய்ச்சல் எண்டாலும் செத்துப்போடுவோமோ எண்டு சரியான பயம். அவர்ர சின்னக் காலத்தில அவர்ர ஊரில ஒரு பெரிய ஆசுப்பத்திரி கிடையாது. சின்ன 'ஒப்றேசன்' எண்டாலும் யாழ்ப்பாணம்தான் போகோணும். ஏதேனும் வருத்தம் கொஞ்சம் கடுமை எண்டால்தான் ஆசுபத்திரிப்பக்கம் போவார். முந்தி காய்ச்சல் எண்டு போனாலும் நாலஞ்சு போத்தல் கொண்டு போகோணும். இல்லாட்டி ஓடலி கத்துவான். வேண்டாமெண்டாலும் விடான். அந்தக் கலக்கித்தாற மருந்தைக் குடிக்கிறதெண்டால்... காலில முள்ளுக்குத்தினாலும் கத்திதான் வைப்பாங்கள். அஞ்சாறு நாள் வாட்டில், அவசரம் எண்டு வீட்ட கீட்ட போனால் அடுத்த நாள் பொலிசு வரும். ஆர் டாக்குத்தரிட்ட பேச்சு வேண்டுறது. அந்த நேரம் ஊரில ஒரு பெரிய மனுசன் எண்டா டாக்குத்தர்தான். எந்தளவு மரியாதை அவருக்கு. லோங்சும் சேட்டும் போட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரை கட்டி, காலில் சப்பாத்து, கையில ஒரு வெள்ளைக்கோட்டு, காதில வைச்சுப் பாக்கிறது... நடந்து வந்தா எவனும் ஒதுங்கித்தான் போவான். கடவுளுக்குச் சமம். 'வாட்டுப் பாக்க டாக்குத்தர் வாறார்' எண்டா நேஸ்மார் படுற பாடு; பயம். நோயாளியைப்பாக்க வாற எவனும் நிக்கவே ஏலாது. யோசேப் அண்ணனும் ஒருக்கா அவர்ர தகப்பனுக்கு சாப்பாடு குடுக்க நேரந்தப்பிப் போய் கங்காணி அடிச்சு கலைச்சுவிட்ட ஞாபகம் இன்னும் இருக்கு. அவருக்கும் தானும் டாக்குத்தரா வந்தா எவ்வளவு பேர் பயப்படுவினம் எண்டொரு பெரிய கற்பனை. அவர்ர அப்பாட்டை ஒருக்காச் சொன்னார் அவரின்ர ஆசையை. அவர் பார்த்த ஒரு பார்வையிலேயே அந்த ஆசையை கைவிட்டுட்டார்.

பின்னுக்கு அவரின்ர ஊரிலயும் கொஞ்சப் பெடி பெட்டையள் படிச்சு டாக்குத்தராய் போட்டுதுகள் எண்டு துள்ளிக்குதிச்சவர். ஆனா, ஒருதரும் இப்ப ஊரில இல்ல. அதில ஒரு பெடியன் சூசைநாதர் எண்டு. கழுத்துக்கு மேல வைத்தியம் பாக்கிறதில உலகத்திலேயே முதல் ஆளாம். லண்டனில இருக்கிறானாம். இன்னொரு பெடியன் இத்தாலியில. இந்தியாவில, கொழும்பில எண்டு எல்லாம் வெளியிலதான். இவரின்ர பக்கத்து வீட்டுப்பெட்டை ஒண்டு டாக்குத்தருக்குப் படிச்சவள்.

"யோசேப் அண்ணன் நான்மட்டும் டொக்ரரா வந்தா இந்த ஊருக்கதான் வேலை செய்வன்." எண்டு கனபேருக்கு முன்னால வைச்சு சொன்னவள். அவளும் இப்ப வன்னிக்கு வெளியிலதான். ஊர்ப்பிள்ளையள் டாக்குத்தருக்குப் படிச்சிட்டாங்கள் எண்டு, அதுகளில எவ்வளவு மரியாதை வைச்சிருந்தவர். ஊர் பெருமைப்பட ஒருதரும் இல்லையெண்ட கவலைதான் அவருக்கு. "எப்பிடி இருந்தாலும் அவயள் இஞ்ச வரத்தானே வேணும்" தன்னைத்தானே சமாளிப்பார்.

தன்ர பெடியளையும் 'டாக்டருக்குப் படிக்க வைக்கோணும்' எண்டொரு எண்ணமிருந்தது அவருக்கு. ஆனா மூத்தவன் இதைவிட எனக்குப் பெரிய கடமை இருக்கெண்டு ஒரு விசுப்பு விசுப்பிக்கொண்டு போட்டான். கவலைப் படேல்ல; அவர். கடைசி இருக்குது, கண்ணில காட்டேலாது அவருக்கு.

"உங்களுக்கு ஒண்டும் சொல்லி விளங்காதப்பா, உதைவிடப் பெரியபடிப்பெல்லாம் இருக்கப்பா" என்பான். இவர் மனிசியைத்தான் ஒரு பார்வை பார்ப்பார். அவ்வளவுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தியெல்லாம் ஒரு செத்தவீடெண்டா எவ்வளவு பெரிய விசயம், எவ்வளவு சனம் கூடியிருக்கும். ஒரு சின்ன ஒப்பிறேசன் எண்டாலும் ஓராளுக்கொராள் ஒத்தாசையா உதவிசெய்து, ஊர் கவலைப்படும். இப்பெல்லாம் ஊரைவிட்டு ஓடினதும், சண்டை எண்டும், குண்டு வீச்செண்டும் எத்தினை சனம் செத்தது? காயப்பட்டு அங்கவீனமாப்போய்.... எல்லாம் சின்ன விசயமாப் போச்சுது. கொஞ்ச டாக்குத்தர்மார் இருந்து என்ன செய்யிறது? அவங்களும் தங்களுக்கு ஏலுமானதைச் செய்யிறாங்கள். அவங்களும் இல்லாட்டி இன்னும் எவ்வளவு சனம் செத்திருக்கும்.

எத்தினையோ வருசத்துக்குப் பிறகு மூத்தவனை ஒருநாள் கடற்கரையில கண்டுட்டார்.

“எங்கயடா நிக்கிறாய், உதில இருக்கிற வீட்ட ஒருக்கா வந்திட்டுப் போகலாந்தானே, கொம்மா நெடுக உன்னை நினைச்சு அழுகிறாவடா” எண்டு சொல்ல, “இப்ப கடற்புலியிலதானப்பா நிக்கிறன். அம்மாட்டை சொல்லுங்கோ, லீவு கிடைக்கேக்க வீட்ட வாறனெண்டு. இப்ப எனக்குக் கதைக்க நேரமில்லை” எண்டிட்டுப் போட்டான்.

கன நாளைக்குப் பிறகு கால்துடையில வெடிபட்டு,மெடிசினில எண்டு கேள்விப்பட்டு எல்லா மெடிசின்களுக்கும் அலைஞ்சு கடைசிவரையும் அவன் தட்டுப்படேல்ல. அவருக்குத்தெரிஞ்ச எந்த இயக்கப் பெடியனையும் அவர் விசாரிக்காம விடேல்ல. சின்னக் காயமெண்டு சில பெடியளும், ‘உதுக்கெல்லாம் ஏன் கவலைப் படுறியள்’ எண்டு இன்னுமொருத்தனும், ‘துடை எலும்பு முறிஞ்சிட்டா கால் கழட்டிப்போடுவாங்கள் இப்பெல்லாம் “டம்மிக்”’ காலோடையும் சண்டைக்கெல்லாம் போறாங்கள் என்று மற்றவனும் சொல்ல

கடைசியா அவருக்கு நல்லாத்தெரிஞ்ச பெடியன் ஒருத்தன்தான் உண்மையைச் சொன்னான். “நாங்கள் போன போட்டில உங்கட மகனுக்கு மட்டும் தானப்பா காயம். ரெண்டு ‘பிப்ரி ரவுண்ஸ்’ சரியாத் துடை எலும்பில அடிச்சுப்போட்டுது. அடியோட எலும்புத்துண்டு பறந்துபோய் அவனுக்குப் பக்கத்தில கிடந்திச்சுது. என்ன கால் கொஞ்சம் கட்டையாத்தான் வரும். சுகப்படுத்திப் போடுவாங்கள். உதெல்லாம் அவங்களுக்கு சிம்பிள் பிரச்சினை” எண்டுட்டு போய்ட்டான்.

அவர்ர மனம் ஒரு இடத்தில இல்லை. மனிசி கேட்டதுக்கு மழுப்பிப்போட்டு, தனக்குள்ள எல்லாத்தையும் போட்டு மறைச்சிட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றாக்களில எரிஞ்சுவிழுந்து, அந்தோனியார் கோவிலுக்குப்போய் நேத்தி வைச்சு, மெழுகுதிரி கொழுத்தி 'பெடியனுக்கேதுமெண்டா உன்னக் கடலில கொண்டுபோய் போட்டுடுவன்' எண்டு பேசி......

நண்பன் தவமும் கங்காணியாரும் மனசுக்க வந்து போச்சினம். எங்கேயோ தூரத்தில இருந்து ஆமியடிச்ச ரவுண்ஸ் முழங்காலுக்குக் கீழ் பின்சதையில பட்டதுக்கு செபஸ்தியானின்ர காலை மந்திகை ஆசுப்பத்திரியில கழட்டி எடுத்த ஞாபகம் வந்திச்சுது. சிலாவத்தைக் கடற்கரையில 'கிபிர'டிச்சு சின்ன பீஸ் பட்டு சிவனேந்திரம் தடியூண்டி நடக்கிறது ஞாபகம் வந்திச்சுது. எங்கேயோ எப்பவோ ஒரு பேப்பரில தொடை எலும்பு முறிவு சம்மந்தமான கட்டுரை படிச்சது ஞாபகத்துக்கு வந்தது.தொடை எலும்பு தசைப் பிடிப்பான இடம். பெரிய நீளமான எலும்பு. எட்டு வயசுப்பிள்ளையெண்டா எலும்பு வளர வாய்ப்பிருக்குது. இல்லையெண்டா அதை வெட்டி விடுறது நல்லம். தொடை எலும்பு சிகிச்சை எண்டால், நாலு ஸ்பெசலிஸ்டுகள் தேவை. எலும்புக்கு ஒரு ஸ்பெசலிஸ்ட், நரம்புக்கு ஒராள், பிளாஸ்ரிக் சர்ஜரி, மற்ற விசயங்கள் எண்டு நாலு பிரிவு இருக்கும். அதுவும் எதாவது அடிபட்டு முறிஞ்சால்தான்.

இவனுக்கு எலும்பில துண்டு இல்லை. வயது இருபத்திரண்டுக்கு மேல, யோசிச்சு யோசிச்சு தலையெல்லாம் கிறுகிறுத்துப்போச்சு அவருக்கு. அந்தப்பெரிய டாக்குத்தர்மாரே செய்யேலாத வேலையை, A/L லும் O/L லும் படிச்சிட்டு இயக்கத்துக்குப்போன பெடியள் எப்பிடிச் செய்வாங்கள்?

திரும்பவும் ஒருக்கா அந்தோனியாரைக் கூப்பிட்டார்.

கங்காணியார் இருந்தாலும் ஆறுதலாய் இருக்கும். கடல் சண்டையெண்டா ஏதாவது கவர் இருக்கே? வெட்டவெளியில நிண்டு பிடிக்கிற சண்டை. எத்தினை பெடியள் இந்த விடுதலைக்கெண்டு உயிரையே விட்டுட்டுதுகள். இது கால்தானே!

கவலைக்கெல்லாம் ஒரு முடிவெடுத்திட்டார் யோசேப் அண்ணர்.

அண்டைக்குக் காலமை பெடியன் ஒருத்தன் கடிதம் குடுத்துட்டுப் போனான். மூத்தவன்தான் எழுதியிருந்தான். என்னைப் பார்க்கோணும் எண்டு ஏன் அலையிறியள். வருவன் எண்டு அம்மாட்டைச் சொல்லுங்கோ. காணுற பெடியளையெல்லாம் மறிச்சுக் கேள்வியள் கேக்கிறியளாம்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறிவிட்டுது யோசேப் அண்ணனுக்கு. நான் வருவன் எண்டா? என்னெண்டாம் வருவார். நான் என்னவோ கவலைப்பட உவனுக்குக் கொழுப்பெல்லே. திரும்பவும் மனுசியோட ஒரு ஏத்தம்.

வீட்டு வாசலில மோட்டார் சைக்கிள் வந்து நிக்குது எண்டு எட்டிப்பாத்தா மூத்தவன்தான். அவனோட இன்னுமொரு மெல்லிய கறுவல், தோழில துவக்கு, கோல்சரோட 'மகனும் இயக்கத்தில பெரிய ஆள்போல' மனசுக்குள்ள நினைச்சுக்கொண்டார் யோசேப் அண்ணர். ஆனாலும் வாசலுக்க போய் வரச்சொல்லி கூப்பிடேல்ல. மூத்தவன் தாண்டித்தாண்டித்தான் நடந்து வந்தான். டம்மிக் காலோ எண்டு உன்னிப்பாய் காலைப் பார்த்தார் இல்லை, அப்ப சுகப்படுத்திப் போட்டாங்கள். அப்பிடியெண்டால் இயக்கத்திலயும் பெரிய பெரிய ஸ்பெசலிஸ்டுகள் இருக்கிறாங்கள்.

"என்னப்பா யோசிச்சுக்கொண்டு நிக்கிறியள்" மனிசி கேட்டபிறகுதான் நிசத்துக்கு வந்தார்.

அண்டைக்கு வீடு அமளிதுமளிதான். ரவுண் கடைக்கு போட்டு வந்த யோசேப் அண்ணர் நாலு சின்னப் பாசலோட வந்தார். "என்னப்பா இது" என்று பெடியன் கேட்டதுக்கு "மணிக்கூடு"என்றார். "எனக்கேன் நாலு மணிக்கூடு."

"உனக்கில்லையடா அது, தொடையில ஒரு ஒப்பிறேசனெண்டா அதை சரிப்படுத்துறதுக்கு நாலு ஸ்பெசலிஸ்டுகள் இருப்பாங்கள். அது தான் நாலு மணிக்கூடு" பெடியள் இருவருக்கும் சிரிப்பு வந்துட்டுது.

"அப்பா அப்பிடியெண்டா நாலு மணிக்கூட்டையும் இவனுக்கே குடுங்கோ. அந்த நாலு ஸ்பெசலிஸ்டும் இவர்தான்." என்றான் மூத்தவன்,

அவருக்குச் சிரிப்புதான் வந்தது. தோளில் துவக்கு, கோல்சர், பச்சை உடுப்பு, காலில ஒரு செருப்பு. "இவரோ டாக்குத்தர்." பேந்தும் சிரித்தார். நம்பவே இல்லை அவர்.

வெள்ளைக்கோட்டு, ரை, சப்பாத்து, தெதஸ்கோப்புடன் அவருடைய மரியாதைக்குரிய டாக்குத்தர் கண்ணுக்குள் வந்துபோனார் ஒருமுறை.

"அப்பா தோளில துவக்கும் மருந்துப்பையும் கட்டி, சண்டை நடக்கிற இடத்தில, சண்டை பிடிச்சு, மருந்து கட்டுற இடத்துல மருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி, ஒப்பிரேசன் தியேட்டரில ஒப்பிரேசன் செய்து.... நாங்கள் சம்பளத்து டொக்டர் இல்லையப்பா, விடுதலைக்காய் வேலை செய்யிற டொக்டர்மார் நாங்கள்"


மெல்லியவன் மெதுவாய்ச் சிரித்தான்.

அவன் பேசப்பேச அவருடைய மரியாதைக்குரிய டாக்குத்தர் மெல்ல மெல்ல அவர் மனசை விட்டு மறைந்துபோக இந்தப்புதிய மெல்லிய, கருப்பான, துவக்கோட, செருப்போட, வெள்ளைக்கோட் இல்லாத,இந்த டாக்குத்தர் அவர் மனதில் புதிதாகப் பதியத் தொடங்கினார்.

இப்ப அவரின்ர ஊரில நிறையக் கங்காணிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் எப்பவும் இருக்கும்



அந்த நெருப்பு வெளிச்சத்தில் அவனுடைய முகம் நன்றாகத் தெரிந்தது. நெருப்பு எரிகிறதை அவன் கொஞ்ச நேரம் நின்று பார்த்துக் கொண்டுதான் நின்றான். எதற்கும் பயப்படாதவன் போல நெருப்பு வெக்கை என்மீது தாவிய பிறகுதான் நான் எழும்பிப் பார்த்தனான். நான் படுத்திருந்த பக்கம்தான் முதலில் நெருப்பு எரியத் தொடங்கினது. அவன் அடுத்த பக்கத்துக் கூரைக்கு நெருப்பு வைக்கிறான் என்ற பிறகுதான் பயந்து கத்தினான். என்னைக் கண்ட பிறகு கூட அவன் பயப்படேல்ல. நான் கத்தின சத்தம் கேட்டு வீட்டுக்குள்ள படுத்திருந்த ஐயா 'என்னடா' என்று கேட்ட பிறகுதான் அவன் விட்டுவிட்டு வீட்டுப் படலையடிக்குப் போனவன். வாசலில் 'லைற்' இல்லாமல் இருட்டில நின்ற ஜீப்பில ஏறி அவன் போயிட்டான். நான் சின்னப் பெடியன். அவனைத் தடுக்கிறதுக்கு என்னால இயலவில்லை.

அவனை எனக்கு நல்லாத் தெரியும், எனக்கு எவ்வளவு நாள் பழக்கம். நான் ஊரில பாக்கிற ஆட்களில் அவன் வித்தியாசமானவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல கட்டையன்; 'பொலிஸ்குறோப்' வெட்டின தலைமயிர். எதையும் அலட்சியமாய் பார்க்கிற அவனுடைய கண்கள், நெருப்புவைக்கும் போதும் அவனின்ர கண்கள் நெருப்பு வெளிச்சத்தில் அப்படித்தான் தெரிந்தன. எனக்கு அருகிலதான் நின்றவன். துவக்குக்கூட வச்சிருந்தவன். அவன் என்னை ஒன்றும் செய்யவில்லைத்தான். ஆனால் ஏன் என்னுடைய வீட்டைக் கொழுத்தினான் என்று தெரியேல்ல.

ஐயா நெடுகச் சொல்லுறவர் 'டேய் நீ உவங்களோட சிநேகிதம் வைக்கிறாய்; உவங்களப்பற்றி உனக்கு விளங்கேல்ல, நான் நல்லா அறிஞ்சனான்' என்று. நான் அவருடைய கதையைக் கேட்கிறதேயில்லை.

என்னப் பொறுத்தவரையில் காசு, இப்ப காசுதான் முக்கியம். எவ்வளவு காசைச்சேர்க்கமுடியுமோ சேர்க்கவேண்டும். ஏனென்றால் நான் இந்தத்தொழிலை எடுக்கிறதிற்கு, எவ்வளவு கஸ்ரப்பட்டிருப்பன் என்று எனக்குத்தான் தெரியும். அந்தநேரம் ஒரு எஞ்சின், கட்டுமரம், சூடவலை, அறக்கொட்டியன் வலை எடுக்க நாலாயிரம் ரூபா போதும். ஊர் எங்களை நம்பாத காலம், சாதிப்பிரச்சினைகள், கட்சிப்பிரச்சினைகள், ஊர்ப்பிரச்சினைகள் என்று எல்லாம் இருந்த நேரம். எங்கட ஐயா ஒரு கொழுப்புப்பிடிச்ச ஆள். எல்லாரோடையும் பகை, ஊருக்க நாங்கள் மட்டும்தான் ஒரு வேதக்காரக் குடும்பம். அதால பிரச்சனை. இவர் தமிழரசு கட்சிக்காரன்; அதால பிரச்சனை. சம்மாட்டிமாரையோ, பொலிசையோ, உத்தியோகக்காரர்களையோ மதிக்காத ஆள். கொஞ்சம் சண்டியன்; படிக்காத ஆள்தான். ஆனால் பாசையும் மூன்று தெரியும். சின்னவயசிலேயே கொழும்பில் ஒரு வீட்டுக்காரரோட வேலைக்கு நின்றவர். நீர்கொழும்பிலையும் கொஞ்சக்காலம் கடற்தொழில் செய்தவர். அதால எல்லாப்பாசையும் எழுதபடிக்க தெரியாட்டிலும் ஏசுவார். அந்தத்திமிர். அரைவாசி அதாலதான் நாங்கள் இப்படிகஸ்ரப்படுறம் என்று அம்மா அடிக்கடி சொல்லுவார்.

ஒருமுறை சேமன் லெக்ஸனில் அந்த சம்மாட்டியார் சாராயப் போத்தல், உடுப்பு, காசுகள் எல்லாம் கொண்டுவந்து "டேய் கபிரியேல் நீ வெளியில் ஆருக்கும் என்னண்டாலும் சொல்லு, போட்டை எனக்கு போடு" கலைச்சே போட்டார்.

ஐயா ஒரு கள்ளவேலை செய்யத்தெரியாத ஆள். இல்லாட்டி நாங்கள் எவ்வளவு நல்லா இருந்திருப்பம். ஆனா எனக்கு அவரில பிடிச்ச விசயம் எங்கட வீட்டு றோட்டில நின்று எந்த இளந்தாரிப் பொடியளும் கதைக்கிறதோ, இல்லாட்டி என்ர தங்கச்சிமாரை ஆரும் பகிடி பண்ணிறதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. ஏனென்றால் ஐயாவிற்கு ஒருபயம் இருந்தது ஊருக்கு. ஆனா காசு வேணும், எல்லாத்துக்கும் காசுவேணும்.

ஒரு கலனுக்கு மூன்று ரூபாப்படி பார்த்தால் மூன்று கலனுக்கும் ஒன்பது ரூபா. அப்ப ஒன்பது ரூபா என்றால் பதினெட்டு றாத்தல் சூடைக்காசு, ஒன்பது கொத்து அரிசிக்காசு, அதுபெரிசுதானே? அவன் பதின்மூன்று ரூபா பெற்றோலை எனக்கு பத்துரூபாவுக்கு தருவான். நானாகப்போய் அவனிட்ட பெற்றோல் கேட்கவில்லை. அவனாத்தான் தந்தவன். கடற்கரைக்கு ஆரையும் கூட்டிக்கொண்டு கட்டாக் கருவாடு வாங்க அடிக்கடி வருகிறவன். என்னிடமும் ஒருமுறை கேம்புக்கு மீன் வேணுமெண்டு கேட்டு, சந்தையில அவனுக்கு மலிவாக மீன் எடுத்துக் கொடுத்து பழக்கம் வந்தது. ஒருநாள் கடற்கரைக்கு வந்தவன் 'மலிவாக பெற்றோல் தாறன்' என்று கேட்டு எனக்கும் ஒருகலனுக்கு மூன்று ரூபா இலாபம் என்று வாங்கப்போய் வீட்டுக்கும் வந்து ஜீப்பில வயர் வைத்து பெற்றோல் எடுத்துத்தருவான். சிலவேளை கட்டாக்கருவாடு, இறால் என்று வாங்கிக் கொண்டுபோவான். எனக்கு அவனால இலாபம்தான். அந்தப் பழக்கம் தான் 'ஆமிக்காம்ப்' வரைக்கும் போகவச்சது. அப்பெல்லாம் அந்த 'ஆமிக்காம்பி'ல இருபது இருபத்தைந்து பேர்தான் இருப்பார்கள். எனக்குத் தெரிய சாலையில ஒரு 'காம்ப்', முல்லைத்தீவில ஒரு 'காம்ப்' என்று வன்னிக்கடற்கரையில இரண்டே இரண்டு ஆமிக்காம்ப்தான். கள்ளக்கடத்தல் காரரைப் பிடிக்க கடற்கரைவழியே திரிவதுதான் அவர்கள் வேலை. விடியற்காலை வேளையிலே இரண்டுபேர் துவக்கோட கடற்கரையில நடந்து போவாங்கள். இவனும் சிலவேளைகளில் போவான்.

ட்ரான்ஸ்சிஸ்ரர் ரேடியோ புதுசா வந்தநேரம் அது. அதுக்குமுந்தி வால்வு ரேடியோதான். ரோச்லைற் எல்லாம் புதுசா வந்தநேரம், சினிமாப்படம் எங்கட ஊரிலயும் பார்க்கலாம். இரண்டு தியட்டர், ஒன்று கல்லால் கட்டின தியட்டர், மற்றது ரென்ற்கொட்டகை, ஆக சின்ன வயசிலேயே எனக்கு சினிமாப்படம் பார்க்கிறது பிடிக்கும். அப்புவினுடைய தோளிலேயே ஏறிப்போய் சிவஜோதித் தியட்டரில ரஞ்சன் நடித்த சவுக்கடி, 'சந்திரகாந்தா' படம் பார்த்த ஞாபகம் இன்னமும் இருக்குது. அந்ததியட்டர்களில தமிழ்ப் படங்கள்தான் ஓடும். அந்தக்காலம் எம்.ஜி.ஆர், சிவாஜி காலம். எனக்கு தமிழ்ப் படங்களை விட இங்கிலீஸ் படங்கள் பார்க்க விருப்பம். இருந்திருந்து ஆமிக்காம்பிலயும் படங்கள் ஓடுறது. அது ஆமிக்காரருக்கு மட்டும்தான். ஆனா அவங்கள் தெரிஞ்சசனங்களையும் கூப்பிடுவாங்கள். அங்க இங்லீஸ் படங்களும் சிங்களப்படங்களும் ஓடும். அவன் படங்கள் ஓடினால் எனக்கும் வந்து சொல்லுவான். நானும் போவன். ஆரைமறிச்சாலும் அவன் என்னை மறிக்கான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலீஸ் படங்கள் எல்லாம் பெரிய யுத்தப்படங்களாய்த்தான் இருக்கும். அந்தப்படங்களில் வெள்ளைக்காரர்கள் வெற்றியாளராய்த்தான் வருவாங்கள். அவங்களுடைய சண்டைகள் வெற்றியில்தான் முடியும். ஆனால் நான் பார்த்த சிங்களப்படங்கள் அப்படியில்லை. கதாநாயகன் கடைசியில தோற்றுப்போயும் நிற்பான். அந்தப் படங்களில உண்மை இருக்கிறதாத்தான் எனக்குப்பட்டது.

அப்ப காமினிபொன்சேகாதான் எனக்குப்பிடிச்ச சிங்கள நடிகர். அதற்குப்பிறகு வியஜகுமாரதுங்க. அந்தக் கதாநாயகர்களை பார்க்கும் போது பாவமாக இருக்கும். சிலபடங்களைப் பார்த்துப்போட்டு அழுதுகொண்டும் வந்திருக்கிறன். அந்தவிடயங்கள் எல்லாம்தான் இந்த ஆமிக்காரனோடையும் சினேகிதம் வைக்க காரணமாயும் இருந்தது. ஏனென்றால் அவனைப்பார்க்க எனக்குப் பாவமாய்த்தான் இருந்தது. காசுக்கஸ்ரத்திலதானே அவன் எனக்கு கள்ளமாய் பெற்றோல் விக்கிறான். என்னைப்பொறுத்தவரைக்கும் சிங்கள ஆக்கள் என்றால் நல்லவங்கள் என்றுதான் நினைக்கிறனான். ஊரில இப்பவும் கடைவைச்சிருக்கிற குணபாலா என்ற சிங்கள கடைக்காறறை ஐம்பத்தெட்டாம் ஆண்டு கலவரத்துக்குள்ள ஒரு பிரச்சனையும் வராம ஊராக்கள் காப்பாற்றி வச்சவியள் என்று ஊருக்கை சொல்லுவினம்.

சிங்கள ஆக்களைவிட தமிழர் எல்லாத்திலையும் கெட்டிக்காரர் என்றுதான் நான் நினைக்கிறனான். ‘ஓசிக்கொரியா’ என்ற சிங்களவரைப் பற்றி முன்பு ‘மித்திரன்’ பேப்பரில் தொடர் ஒன்று வரும். அதில அவர்தான் இலங்கையில பெரிய கொள்ளைக்காரர், கொலைகாரர் என்று. ஆனால் அந்தாளை கடைசியாப் பிடித்தது ஒரு தமிழ்ப்பொலிஸ் தானாம். எனக்குத்தெரிய மணியண்ணை ஒருக்கா கள்ளுத்தவறணையில ஒரு ஆமிக்காரருக்கு ஓடஓட அடிச்சவர். அதுமாதிரித்தான் றைவர் கணபதிப்பிள்ளைஅண்ணை பஸ்ஸில் பெட்டையளோட சேட்டை விட்டதுக்கு ஆளை இறக்கி வச்சு வெளு வெளு என்று வெளுத்தவர்.

ஆனா எங்கட ஐயா சொல்லுற கதையைக்கேட்டா அது வேறமாதிரி இருக்கும்; ஏனென்றால் அவர் ஐம்பத்தெட்டு கலவரத்துக்கு கொழும்பில அகப்பட்ட ஆள். நீர்கொழும்பில ஒரு சிங்களப் பொம்பிளையை விரும்பியும் இருந்தவராம். சிலவேளை ஐயாவுக்கும் அம்மாவுக்கும் சண்டை வந்தா அந்தக் கதையும் பிரச்சனைக்கு வரும். ‘சிங்களவனிட்டை அடி வாங்கின ஆள்தானே நீங்கள்’ என்று ஒரு குத்தல் கதை அம்மாட்டை இருந்து வரும். அதோடை அடங்கிப் போவார் ஐயா. அவர் அந்தக் கலவரத்தில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பி வந்த கதையைச் சொல்லேக்க ஐயாவை பாவமென்று நினைக்கத்தோன்றும். இப்பவும் முறிஞ்ச கையால பெரிய வேலை செய்ய மாட்டார். ஒரே வருத்தம் அவருக்கு. உழைப்பில அரைவாசிக்கு மேல அம்மாதான், எட்டாம் வகுப்புக்கு மேல் என்னாலும் படிக்கேலாமல் போச்சு. இந்தக் கஸ்ரங்களில இருந்து மீளுதலுக்கு எல்லாருமே கஸ்ரப் பட்டனாங்கள், தங்கச்சிக்கு லோனில ஒரு தையல் மிசின் எடுத்து அவளும் சாப்பாட்டு பிரச்சனைகளுக்கு உதவுவாள். நான் உழைக்கிறது கொஞ்சம் மிச்சமா வரும், அம்மாவும் தன்னுடைய பங்குக்கு உடுப்பு, துணி என்று தரும்.

ஊர் பஞ்சப் படாமல் இருக்க எப்பவும் நாயாறும், நந்திக் கடலும், கொக்கிளாய் ஆறும்தான் உதவும். ஆறுகளில வீச்சுவலை அடிச்சுத்தான் கடலுக்கென்று தொழிலை நான் தேடினது. எத்தினை வருசம் கஸ்ரப்பட்டு ஒவ்வொரு வலையாத்தேடி.... ஒரு வருசம் அம்மாளாச்சி கோயில் பொங்கல் அன்றைக்கு நந்திக்கடல் பாடுகளில ஒருதரும் இல்லை. அன்றைக்கு கறுப்பு இறால் இரைப்பா வந்து நான் தனிய நின்று வீச்சு வலை வீசி... ஒருநாள் காசு மட்டும் நாலாயிரம் ரூபா. அதிலும் ஒரு 'வோக்கஸ் போட்' எடுத்தது; சூடை வலையும் அறக்கொட்டியானும் தேடி முதல் வருசம் கடலுக்குப் போய் ஆயிரம் இறாத்தல் இறால், அப்பெல்லாம் இறால் ஆறு ரூபாதான். தொழில் எல்லாம், தொழில் செய்யிற ஆக்களெல்லாம் மிக மிகக்குறைவு. அதால கடற்கரையில தொழில் வைக்கிறதில்லை, நங்கூரம் வலையெல்லாம் வீட்ட கொண்டுவந்து விடுவம்.

அன்றைக்கென்று வலைகள் முழுக்க வீட்டுக்குள்ள. தையல் மெசின் உடுப்புகள் என்று எல்லாம் வீட்டுக்குள்ள. நெருப்பு பெரிசா எரியத்தொடங்க எல்லாரும் வீட்டுக்குள்ள இருந்து வெளியேவந்திட்டம். நான் உள்ள போய் வலைகளை எடுப்பம் என்று வெளிக்கிட ஐயா மறிச்சுப் போட்டார். "ஐயா வலைஇருக்கிற இடத்தில நெருப்பு எரியேல்ல. வலைகளை எடுப்பம் வாங்கோய்யா" என்று கூப்பிட "அது எரிஞ்சா எரியட்டும்" என்று பேசாமலே நிற்கிறார். அம்மாமட்டும் பெரிசா கத்துகிறா. மற்றாக்கள் சத்தமே போடவில்லை பக்கத்து வீட்டு சனம்கூட உள்ளே வரயில்லை. அன்றைக்கு ஊரடங்குச்சட்டம் என்றதால ஆருமே எட்டிப்பார்க்கேல்ல. சனத்துக்கு எப்பவும் சரியானபயம். தங்கச்சி ஒருமாதிரி மெசினை மட்டும் வெளியில எடுத்திட்டாள். கயிறு கட்டி மேஞ்சவீடு. கடற்கரையில அப்படித்தான் மேய்வினம். கொஞ்சம் மேலே ஏறி கயிற்றை அறுத்து கிடுகைத்தள்ளி விட்டா எல்லாப்பக்கமும் எரியாது அதை செய்யக்கூட ஐயா விடேல்லை. சத்தம் போட்ட அம்மாவுக்கும் ஒரு அடி. உடுப்பு சாமான்களை உள்ளேபோய் எடுக்கப்போன தம்பிக்கும் ஒரு அடி. நெருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிசா மூண்டுபோட்டுது. கடைசியா நான் ஓடிப்போய் ஒரு கட்டுவலையை மட்டும் இழுத்தெடுத்திட்டன். திரும்பவும் உள்ள போகவெளிக்கிட்ட என்ன ஐயா சேட்டில எட்டிப்பிடிச்சு ஆறுதலாகச் சொன்னார், "எரியட்டுமடா தம்பி" என்று.

வீடுமுழுவதுமாய் எரிஞ்சு போச்சு; வீட்டோட கிடந்த எல்லாச் சாமான்களும் எரிஞ்சு போச்சு. எல்லாருமா ஒரு இடத்தில உடுத்த உடுப்போடு குந்தியபடி இருக்கிறம். தூரத்திலையும் கடற்கரை 'ஐஸ்' வாடிகள் பெரிசா எரிகிற வெளிச்சம். வேற வேற வீடுகளுக்கும் அவங்கள் நெருப்பு வச்சிருக்கிறாங்கள் போல.

நான் மெல்ல ஐயாவுக்கு அருகில் போய் "ஐயா வீட்டோட அவ்வளவு சாமான்களும் எரிஞ்சுமுடிஞ்சு போச்சு; ஒன்றைக்கூட எடுக்க விடாம மறிச்சுப் போட்டீங்கள். ஏனையா அப்படிச்செய்தீங்கள்?" என்று கேட்டேன். இருட்டுக்குள்ள அவருடைய முகம் தெரியவில்லை. மெதுவாய்

என்னுடைய தலையைத் தடவியபடி "டேய் பெரியவா அவங்களப்பற்றி எனக்கு நல்லாதெரியுமடா. அந்த ஐம்பத்தெட்டுக் கலவரத்தில அவங்கள் ஆடின ஆட்டத்தை நான் கண்ணால பார்த்தனான் அதைவிட இது பெரிசில்லையடா, கோபத்தில் வீட்டை கொளுத்திப்போட்டு போனவங்கள் அது எரியாமல் போனபிறகு அவங்களுக்கு எவ்வளவு கோபம்வரும், திரும்பவந்து உங்களுக்கு ஏதும் செய்திட்டாங்கள் எண்டால்" அவரின் தொண்டையில் குரல் கம்மியது.

"சரியய்யா போனாப் போகுது. நான் திரும்ப உழைச்சு எல்லாத்தையும் எடுத்திடுவன்." ஐயாவுக்கு ஆறுதல் சொன்னேன்.

இப்ப என்னைப் பொறுத்தவரை சிங்கள ஆமிக்காரன் இரக்கமில்லாத அரக்கர்கள், இவங்கள்அழிகிறநாள் எப்பவரும்; அதுவரைக்கும் எல்லாம் அழியட்டும். கடல் எப்பவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமலி



அந்தக் குழந்தையை நினைக்க நினைக்க அவளுக்கு வெறுப்பு வெறுப்பாக வந்தது. அதை அவள் ஒரு அருவருப்பான ஜந்துவாகவே நினைத்தாள். இருந்துவிட்டு அது வயிற்றுக்குள் இருந்து உதைக்கும் போது அதைக் கொன்றுவிடத் தோன்றும். தன்னுடைய வயிற்றுக்குள் இருந்து புலிமயிர்ச்சிலந்தியொன்று கெம்பிக் கூத்தாடுவதாய் ஆத்திரம் அருவருப்பு. அது எப்போது இந்தப் பூமியில் வந்து விழும் என்ற தவிப்பு. அது வெளிவந்த உடனேயே தூக்கி தூர எறிந்து விட்டுப்போக வேண்டும் என்ற கோபம்.

தாய்மையடைந்த பெண்கள் கர்ப்பகாலத்தில் வரும் வழமையான வாந்தியெடுத்தலுக்குள்ளாவது போலத்தான் அவளுக்கும் இருந்தது. ஒவ்வொரு முறையும் வாந்தியெடுத்த போதும் அது தன்னைக் கொல்வதாகவே நினைத்தாள். "என் வயிற்றை விட்டு வெளியே போய்விடு" என்பதுபோல, தன் வயிற்றிலேயே ஓங்கி அறைய வேண்டும் எனத்தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மையடைந்தவள், வயிற்றில் வளர்ந்துவிட்ட குழந்தை வயிற்றை உதைக்கும் போது, தன்கணவனிடம் ஓடிச்சென்று அவனின் கையைப்பிடித்து இது தலை இது கால் என்று தன் வயிற்றில் தொட்டுக்காட்டி சந்தோசப்படும் இயல்பு அவளுக்கும் இருந்திருக்கும். அவனுக்கு எப்படித் தொட்டுக்காட்டுவது? இது அவனுடையது அல்லவே. அப்போது யாருக்குத் தொட்டுக்காட்டுவது? அந்தப் பச்சைப் பழுப்புத்தோல் போத்திய புலிமயிர்ச் சிலந்திக்கா! அவனை.......

"அவன் நாசமாகிப் போகட்டும். அவனைக் கொன்று புதைக்க வேண்டும். இந்தக் குழந்தைக்கு உருவம் தந்தவனைக் கொல்லவேண்டும்." திட்டித் தீப்பாள் ஒவ்வொரு நாளும், அவள்.

"என்னை நாசமாக்கிய, என்னைத் துயருறவைத்த, இந்தக் குழந்தை செத்தே போகவேண்டும்." ஒவ்வொரு முறையும் அவள் வயிற்றினுள் இருந்து அது உதைக்கும் போதும் அடிக்க நினைப்பாள். அந்த இடத்தில் கத்துவாள், மயங்குவாள்.

கொஞ்ச நாட்களாக இது நடந்துகொண்டேதான் இருந்தது. "செத்தே பிறக்க வேண்டும். செத்தே பிறந்துவிடவேண்டும் கடவுளே" ஒவ்வொரு நாளிலும் அவள் வைக்கும் ஒப்பாரி இது. யார் வந்து ஆறுதல் சொன்னாலும் அலறுவாள்; ஆத்திரப்படுவாள். பைத்தியமாகவே ஆகிவிட்டாள்.

அன்றைய நாள் அந்தக் கிராமத்திற்கும் அடுத்த கிராமத்திற்கும் ஒரு கெட்டநாளாய்த் தான் போய்விட்டது. அன்றைய அதிகாலையிலேயே இந்திய இராணுவத்தின் ஆட்லறிகள் குலைக்கத் தொடங்கிவிட்டன. இந்திய இராணுவத்தின் முகாமிற்கு அருகில் இருந்த ஆஸ்பத்திரியில், நேற்று முன்தினம் ஆட்லறிக் குண்டுகளில் காயப்பட்டவர்க்கும் சேர்த்து ஒரு இந்தியத் தமிழாமி சொல்லிவிட்டுப் போனான் "ஆரும் பயப்பட வேண்டாம் நாங்கள் L.T.T.Eக்கு ஆட்லறி அடிக்கிறம்" என்று.

அவனும் சொல்லிவிட்டுப் போக, ஆஸ்பத்திரி மெயின் ரோட்டில் கிராமப் பக்கமாயும் இராணுவம் போவது தெரிந்தது. போகிறார்கள்; போய்க்கொண்டே இருக்கிறார்கள். இடுப்பில் கட்டியிருந்த சங்கிலியில் கோர்த்த S.L.R துப்பாக்கிகளுடன் L.M.G துப்பாக்கிகள் 81 மோட்டார்களுடனும் இன்னும் போய்க்கொண்டே இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரோ சொன்னார்கள். "நேற்று இயக்கம் மூன்றாம் கட்டையில் ஒரு ராங்கை பிரட்டிப் போட்டுதென்று அதை எடுக்கப்போகிறார்கள்" என்று. இன்னும் அவர்கள் போய்க்கொண்டே இருக்கிறார்கள்.

இராணுவம் அந்த ஊருக்கு வந்து கொஞ்சநாள்தான். இந்திய ஆமிவந்து 'ஹெலி'யில இறங்கேக்க எல்லோருக்கும் சந்தோசம். எங்களைக் காப்பாற்றுறதுக்கென்று இந்திய ஆமி வருகுதென்று. முதன் முதலில் நான்கு 'ஹெலி'யில்தான் இராணுவம் வந்து இந்த ஊரில் இறங்கியது. ஊர்ச்சனம் முழுக்க அவர்களைப் போய்ப் பார்த்துச் சந்தோசப்பட்டது. பெட்டையள் பெடியள் பெரியாக்கள் சின்னாக்கள் என்று எல்லோரும்.

இந்திய இராணுவம் வந்து இறங்கின இடத்துக்குப் போகிறதென்றால் இலங்கை இராணுவத்தினுடைய முகாமைத் தாண்டித்தான் போகவேணும். சனமும் பயப்படாம இலங்கை இராணுவத்தின் முகாமிற்கு இடையாலதான் போனதுகள். கொஞ்சப் பெட்டையள் அந்த வழியால் போகும் போது ஒரு இளம் வயதுக்கார இலங்கை ஆமி பெட்டைகளை 'நங்கி' என்று கூப்பிட்டு "இந்திய ஆமி பாக்கப் போறதா"

"கட்டைப்பாவாடை சட்டை போட்டுப் போறது"

"அது நல்லா இல்லே"

"அவங்களை உங்களுக்குத் தெரியாது நங்கீ" என்றான். அவன் சொல்லுறதை எரிச்சல்ல சொல்லுறான் என்றுதான் எல்லோரும் நினைச்சது. சிலவேளை தங்களுக்குக் கிடைக்காததை அவங்கள் கொண்டுபோகப் போறாங்க என்ற ஆத்திரமுமாயிருக்கலாம் என்று நினைக்கவும் தோன்றியது.

அந்தக் கடற்கரைக் கிராமம் வழக்கம் போல தங்களுடைய காலை நடவடிக்கைகளை செய்ய வெளிக்கிட்ட நேரம்தான் இராணுவம் அந்தக் கிராமத்தை சுற்றி வளைச்சது. ஒரு பக்கம் கடலும் மறுபக்கம் சிறு குளமுமாய் ஒரு கீற்றாக அந்தக்கிராமம் அமைந்திருந்ததால் ஒருபக்கம் இராணுவம் வந்தால் மறுபக்கத்தால் ஓடித்தப்ப வசதியிருந்தது.

அந்தக்கிராமத்தில் எல்லோரும் நினைத்திருந்தது ஆமி பொம்பிளையளை ஒன்றும் செய்யமாட்டான் என்று. இளம் பெடியள் மட்டும் இராணுவம் வந்தால் அந்தக்கிராமத்தில் இருக்கமாட்டார்கள். கிராமத்து மறுபக்க பொட்டல் காட்டிற்கு ஓடிவிடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமலதாசும் அப்படித்தான் ஓடித்திரிஞ்சவன். அமலதாசின் வீட்டில் இருந்து கொஞ்சத்தூரம் போனால் அவனின் மாமனுடைய வீடு. ஆமி வந்தால் அங்கதான் போய் நிற்பான். அங்கையும் ஆமி வந்தால் அதற்கடுத்ததாய் இருக்கும் பொட்டல் காட்டிற்கு ஓடிவிடுவான்.

அன்றைக்கும் ஆமி வர; மாமா வீட்டதான் ஓடினவன். ஆனா, மாமா வீட்டிற்கு எப்பவும் அலுவல் இல்லாமல் போகமாட்டான். இப்பெல்லாம் அடிக்கடி அங்கபோக எண்ணம் வரும். ஆமி கலைக்கிறதும் சிலவேளை அவனுக்கு வசதியென்று நினைப்பான். ஏன் என்றால் அமலியைப் பார்க்கலாம்.

முந்தியெல்லாம் அமலியைப் பள்ளிக்கூடம் ஏத்திக்கொண்டு போகிறதிலயிருந்து சாமான்கள் வாங்கிக் கொடுக்கிறதிலயிருந்து, ஞாயிற்றுக்கிழமை பூசைக்கு கூட்டிக்கொண்டு போறதிலயிருந்து, கடல் குளிக்கப் போகிறதென்றாலும் அவன்தான் கூட்டிக்கொண்டு போகவேணும். அவளுக்கும் அவன்தான் வேணும். அவன் கூட்டிக்கொண்டு போகாவிட்டால் பள்ளிக்குடம் போகாமலும் நிற்பாள்.

அவள் ஏதும் பெரிதாக கதைத்தால் காதைப்பிடித்து திருகுவான். பிடரி பிடரியாய் அடிப்பான். அவளுடைய அம்மா சுகிர்தம் பேசுவா. "எட அமலதாசு அவள் ஒரேயொரு பொம்பிளப்பிள்ளையடா. அவளுக்குச் சகோதரங்கள் இருந்தா நீயேடா பள்ளிக்கூடம் கூட்டிக்கொண்டு போகவேணும். பிடரி பிடரியாய் அடிக்கிறாய். மூளை கலங்கப்போகுது அவளுக்கு" என்று.

அவன் அவளுக்கு அடிப்பான், பேசுவான். ஆனா அவளை வேற ஆரும் ஏதும் சொன்னா அவ்வளவுதான். ஏழாம் வகுப்புப் படிக்கும்போது அமலதாசினுடைய நண்பன் ஒருவன் அமலியை "நீ உன்ர மச்சான் அமலதாசைத் தான் கலியாணம் கட்டப்போறியாம்" என்று பகிடிபண்ணினான், பள்ளிக்கூடக் கிணத்தடியில் அவள்நின்று அழுகிறாள் என்று கேள்விப்பட்டு, 'அழாதையடி' என்று கண்ணைத்துடைத்து, விபரம் கேட்டு, பகிடிபண்ணினதுக்காக நண்பனுக்கே சாத்து சாத்தென்று சாத்தி, தலைமை சேரிட்டை அடிவாங்கி மத்தியான வெய்யிலுக்குள்ள நெத்தியில கல்லுவைச்சுக்கொண்டு இரண்டுமணித்தியாலம் வரை இருந்தவன்.

அவள் பெரிய பிள்ளையாகி, கொஞ்சநாள் வீட்டுக்க அடஞ்சுகிடக்க அவன் அவளைப் பார்க்க முடியாமலிருந்தது. "இனி நீ அவளைப் பள்ளிக்கூடத்திற்கு ஏத்திக்கொண்டு போகேலாது" என்று, மாமன் சொன்னபோது, அது அவனுக்குப் பெரிய இழப்பாகத் தெரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமலியுடைய சாமத்தியச் சடங்கு பெரிசாத்தான் செய்தது. அவன் தான் மணவறைக்குள்ள நிண்டு வருகிறவர்களை வரவேற்று, சிறப்பாகச் செய்தவன். இருந்திட்டு குழுக்குணம் வந்திடும். ஒருக்கா மணவறைக்குள்ளேயே வைத்து பிடரியில் அடித்து விட்டான். அமலியின் இன்னொரு மாமி அவனைக் கண்டபடி பேசிப்போட்டா. அவனுடைய தாயையும் பேசிப்போட்டா. "பிள்ளையை வளத்து வச்சிருக்கிறாய் ஒரு டீசன்ற் தெரியாத மூதேவி மாதிரி" என்று. அவ படிப்பிக்கிறவ. இங்கிலீஸ் ரீச்சர்.

அமலதாசும் விடவில்லை. "நான் உனக்கே அடிச்சனான். அமலிக்குத்தானே. அவளே கோபிக்கேல்ல, உனக்கென்ன. உனக்கடிச்சமாதிரி கத்திறாய்" என்று. எல்லாமே குழம்பிப்போனது அன்று.

ஆர் பேசினாலும் அமலதாஸ் கவலைப்படுவதில்லை. எல்லோரும் பேச, அமலி மட்டும் தனக்காக கதைக்காது நின்றதுதான் அவனுக்குக் கவலை. அவளோட கதைக்காமல் போய்விட்டான். கடிதம் ஒன்று கொடுத்துவிட்டிருந்தாள் அமலி. "உங்களுக்கு எனக்கு அடிக்கிறதுக்கு உரிமையிருக்"கென்று. முதல் முதல் கடிதம் அது. சந்தோசப்பட்டான்.

அவள் திரும்பவும் பள்ளிக்கூடம் வெளிக்கிடும் போது தன்னோடு சயிக்கிளில் வருவாள் என்று காத்திருந்தான். மாமா சைக்கிளில் பள்ளிக்குக் கூட்டிக்கொண்டு போனது என்று கேள்விப்பட்டான்.

ஒருநாள் நடந்து வந்தவளை மறித்தான். "ஏறடி சைக்கிளில" அமலி பயத்தால் தயங்கினாள். "அப்பா பேசுவார்"

"ஏறடி சைக்கிளில" பள்ளிக்கூடம் போய் திரும்பவும் வரும்போது ஏற்றிவந்து மாமன் வீட்டு வாசலில் விட்டு விட்டுப் போனான்.

அவளை இறக்கிவிட்டுப் போகப் புறப்பட்டவனை மாமன் கூப்பிட்டார். "மருமகன் நீங்கள் இன்னும் அவளைச் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போறது அவ்வளவு சரியில்லை. ஊரில ஏதும் கதைப்பினம்"

நின்று அவரைக் கொஞ்சநேரம் பார்த்தான்.
"சரி சத்தியமா அவளை இனி ஏத்திக்கொண்டு போக மாட்டன். கதைக்கவும் மாட்டன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை மருமகன் நீங்கள்.... கதையுங்கோ" அவர் சொல்லி முடிப்பதற்கு முன்னமே அவன் கேட்காத தூரத்திற்குப் போய்விட்டிருந்தான்.

"ஏனடா பள்ளிக்கூடம் போக மாட்டன் என்று அம்மாட்டச் சொன்னியாம்" அப்பா சற்றுக் கோபமாய்த்தான் கேட்டார்.

"இல்ல ஐயா நீங்கள் தொழிலோட நின்று கஸ்ரப்படுறியள். நான் மூத்தபிள்ள. தம்பி தங்கச்சியாக்களும் படிக்கவேணும்தானே. நான் O/L படிச்சது காணும். நானும் உங்களோட தொழிலுக்கு வாறன்"

"ஏனடா உங்கள் எல்லாரையும் படிக்க வைக்கக் காசில்லை எண்டு நினைச்சனியோ! அல்லாட்டில் நான் இன்னும் உழைக்க மாட்டன் என்று நினைச்சனியோ, இல்லாட்டில்"

"என்னெண்டாலும் வச்சுக்கொள்ளுங்கோ நான் பள்ளிக்கூடம் போகமாட்டன்"

அமலதாசின் அப்பா தீயோகுப்பிள்ளையாருக்கு எல்லாம் விளங்கும். அவர் ஒன்றும் கதைக்கவில்லை. அவன் அவரோட தொழிலுக்கு வந்தால் இன்னொரு போட்டும் எடுத்து தொழில் செய்யலாம். உழைப்பும் கூடும். அவனும் தொழில் பழகிவிடுவான். தொழிலை பழகிறதும் ஒரு படிப்புத்தானே. அவன் தகப்பனுடன் தொழிலுக்குப் போகத் தொடங்கி விட்டான். அமலி மட்டும் பள்ளிக்கூடம் போய்வந்து கொண்டிருந்தாள்.

ஒருநாள் அமலியின் தகப்பன் சந்தியாப்பிள்ளையர் தீயோகுப்பிள்ளைமிடம் வந்தார். " ஏன் மச்சான் பொடியனை தொழிலுக்கு கூட்டிக்கொண்டு போறியள்"

"அவன் தொழில் பழக ஆசைப்படுகிறான் அதுதான்." இழுத்தார் தீயோகுப்பிள்ளைர்.

"பள்ளிக்கூடத்தை விட்டுட்டானாம்."

"ஏன் நாங்களே அவனை மறிச்சனாங்கள்" இடையில் புகுந்து தம்பி சந்தியாப்பிள்ளையின் பேச்சை வெட்டினாள் சுகிர்தம்.

"இல்ல மச்சான் நாங்கள் வேதக்காரர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சரி அவனுக்குத்தான் அவள் எண்டா நான் என்ன செய்யிறது. மருமகனைச் சொல்லு பள்ளிக்கூடத்திற்கு அவளை ஏத்திக்கொண்டு போகச்சொல்லி.” நீயோகுப்பிள்ளையருக்கு இப்பதான் கோபம் வந்தது. “இதை முதலில நீ யோசிச்சிருக்கலாம் தானே?”

“அவனைக் கீழ்த்தரமா நினைச்சுத்தானே நீ பேசினனி.” சுகிர்தமும் தன்னுடைய பங்குக்குப் பேசினாள். “இஞ்ச வா சந்தியாப்பிள்ள, இனிமேல் உன்ர உறவு எங்களுக்கு வேண்டாம். நாங்களும் இனி வரம். அவனுக்கு வேற பொம்பிளை இருக்கு” இப்படித்தான் அந்தக் குடும்பங்களுக்குள் முகச்சுழிப்பு ஏற்பட்டுப்போனது.

கொஞ்சநாட்களாக அமலி பள்ளிக்கூடம் விட்டு வரும்போது, தன்னுடைய தொழில் நண்பர்களுடன் பனங்குத்தியில் இருந்து கவனிப்பான் அமலதாஸ். கொஞ்சநாளில் அவளும் பள்ளிக்கூடம் போவது நின்றுபோக அந்த ராசியில்லாத பனங்குத்திக்கும் நெருப்பு வைத்துவிட்டான் அவன்.

இப்பொழுதெல்லாம் காச்சட்டை போடுவதை விட்டுவிட்டான் அமலதாஸ். கள்ளக்கடத்தலில் வரும் மாப்பிள்ளைக் கோடு இந்தியச்சறம்; பற்றிக் சேட் என்று மாறிவிட்டான் அவன். ஞாயிற்றுக்கிழமைகளில் வேட்டி கட்டி, ‘எயிற்றி ருவன்ரி சேட்’ போட்டு கோயிலுக்குப் போவான். அன்றைக்கு மட்டும்தானே அமலியைப் பார்க்கலாம். மற்றபடி அவள் வீட்டிற்கு வெளியில் வராள். வந்தாலும் நிமிர்ந்தவனைப் பார்க்கமாட்டாள்.

ஒருநாள் பூசைபீடத்திற்கு அவன் தேவநற்கருணை எடுக்கச்செல்ல, தேவநற்கருணை எடுத்துக்கொண்டு திரும்பிய அவள் எதேச்சையாய் அவனைப் பார்த்த பார்வைக்காக, சலிம் காக்கா கடையில் சினேகிதர்களுக்கு ஒரு கொத்துரொட்டிப் பாட்டியே வைத்தான். ஒவ்வொரு நாளும் அவளைப் பார்த்து வந்து தகவல் சொல்பவனுக்கு ‘சிவஜோதி’ தியேட்டரில் படத்திற்கு ‘ரிக்கற்’ எடுத்துக் கொடுப்பான்.

சிலவேளை அவளது வீட்டுச்சந்தியில் தூரநின்று அவள் வெளியில வரமாட்டாளா என்று தேடுவான். வரவே மாட்டாள். ஒருமுறை அவனது மாமி – அமலியின் தாய் இவனைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போனா.

அவன் அமலிவீட்டிற்கு போக தடையில்லை என்பது தெரியும். ஆனால் கோபக்கார வீடு; அப்பா கோவிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தினரின் ஒவ்வொரு தேடுதல் வேட்டைக்கும் அந்தக் கிராமத்து இளைஞருக்கு ஒரு ஓட்டம் இருக்கும். ஆமி வரும்போது வீட்டை விட்டு ஓடுவதும் ஆமி போனபின் திரும்பிவருவதும் ஒரு வாடிக்கையான விசயமாய் போய்விட்டது.

ஒரு வகையில் அது அமலதாசுக்கு சாதகமாய்த்தானாகி விட்டது. ஆமி வரும்போது ஓடிப்போய் அமலி வீட்டருகில் நிற்பதும், திரும்புவதுமாய்... ஒரு நாள் அமலிவீட்டருகில் நிற்கும்போதுதான் அமலியின் தாய் கூப்பிட்டா. "வீட்ட வாங்கோ மருமகன்" என்று. அவன் போகவில்லைத்தான். ஆனால் அவ கொண்டுவந்த தேனீரை எப்படிக் குடிக்காமல் விடுவது? சிலவேளை தேனீரை அமலியே கொடுத்துவிட்டிருக்கலாம். அப்படி அப்படித்தான் அமலதாஸ் அமலி வீட்டிற்கு திரும்பவும் போகத் தொடங்கினது. ஆமி ஊருக்குள் வரும்போது அமலி வீட்டுக்குள் போய்விடுவான். அங்கும் ஆமி வந்தால் அடுத்த பொட்டல் காட்டுக்குள் போய்விடுவான்.

அமலி மறந்தும்கூட அவனைப் பார்ப்பதில்லை. 'மறந்துவிட்டாளோ' என்றும் நினைப்பான்.

அன்றைக்கும் அப்படித்தான். அவளுடைய வீட்டிற்குப் போனான். அன்று அமலி மட்டுமே அங்கிருந்தாள். ஆனால், வெளியில் வாசல் படியிலேயே இருந்துவிட்டான். ஒரு தட்டில் மாம்பழங்களையும் கத்தியையும் கொணர்ந்து வைத்துவிட்டு உள்ளே போய்விட்டாள் அமலி.

போனவளை திரும்பக் கூப்பிட்டான் அமலதாஸ். "ஏய் அமலி" கோபத்தை தெரிந்து கொண்டு திரும்பினாள் அமலி.

"ஏன்ரி என்னை வெறுக்கிறாய்" மெல்ல மெல்ல அவளின் கண்கள் குளமாகி வந்தன.

அவனை நேருக்கு நேராகப் பார்த்தாள் அமலி. அவனால் அவளைப் பார்க்கமுடியவில்லை. ஒரு மாம்பழத்தை எடுத்து வெட்டினான். கவலையீனம், கத்தி அவன் கைப்பெருவிரலை அறுத்துவிட்டது. அவனிடம் ஓடிவந்தாள் அமலி. அவனின் பெருவிரலை அழுத்திப்பிடித்து அவனை இழுத்துக்கொண்டு உள்ளே ஓடினாள். அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் அவனும் ஓடினான். ஒட்டறை பிய்த்து கோப்பியை குழைத்து சுண்ணாம்பும் சேர்த்து ஒரு கையாலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேலைத்தலைப்பொன்றை பல்லில் வைத்து பிரித்து காயத்தைக் கட்டினாள். பார்த்துக்கொண்டு நின்றான் அமலதாஸ். மெல்ல அமல்ல கவலை தொற்றிக்கொள்ள விம்மினான்.

"அமலி"

நிமிர்ந்தாள், கண்ணீர் ததும்ப. "என்னில உனக்கு அவளவு நேசமே!" அவனுடைய இடுப்பைக் கட்டிக்கொண்டு அழுதாள் கொஞ்சநேரம். அவனும் தடுக்கவில்லை.

அன்றைக்கும் ஆமி வரும்போது அமலிவீட்டிற்குத்தான் வந்தான் அமலதாஸ். அன்றைக்கும் அமலி தனியத்தான் இருந்தாள். 'அம்மாவும் அப்பாவும் கடற்கரைக்குப் போய்விட்டார்கள்' என்றாள். தேனீர் வைத்துக்கொடுத்தாள். அன்றைக்கு அமலதாசுக்கு கொஞ்சம் பயமாத்தான் இருந்தது. விடியற்காலையிலேயே ஆட்லறியடிக்கத் தொடங்கியதும் நேற்று இயக்கம் புரட்டிப் போட்ட 'ராங்கை' எடுப்பதற்கு ஆமி போய்க்கொண்டிருப்பதும் போதாமல் கிராமத்துக்குள்ளும் ஆமி வந்ததும்.... சிலவேளை மூன்றாம் கட்டையால் குறுக்கறுத்து ஆமி கடற்கரைக்கு இறங்கினால் அகப்படவேண்டிவரும். கடற்கரைக்குப் போனால் ஒரு 'வேட்'டை இறக்கி கடலுக்கென்று போய்விட்டால் தப்பலாம். யோசிச்சுக் கொண்டிருக்கும்போதே இன்னும் சில பெடியன்கள் ஓடிவந்தார்கள்.

"அமலதாஸ் மச்சாள் வீட்டை இருந்து காயாய் தேத்தண்ணி குடிக்கிறியே, இஞ்சேயும் ஆமி வாறான்றா" சொல்லிக்கொண்டே அவர்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். குடித்துக்கொண்டிருந்த தேனீரையும் பாதியில் வைத்துவிட்டு எழுந்துவிட்டான் அமலதாஸ். "நானும் தனிய இருக்கிறன். பயமாயிருக்கு." என்றாள் அமலி.

"சீ பொம்பிளைப்பிள்ளைகளை ஒன்றும் செய்யமாட்டான் ஆமி. நீ பயப்படாதே. நான் போறன்" என்று வெளிக்கிட அவனின் கையைப்பிடித்துக் கொண்டுவிட்டாள் அமலி.

"நீங்கள் என்னைக் கடற்கரையில் அம்மாவிட்டை கூட்டிக்கொண்டுபோய் விட்டுட்டுப் போங்கோ" என்று அழுதாள்.

"பேச்சி, ஏனிப்ப பயப்படுகிறாய்? உனக்கென்ன பயம், ஆமி வந்திட்டா பேந்து என்னை நீ வாழ்க்கையில் காணமாட்டாய்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் கையைப்பறித்துவிட்டு ஓடிவிட்டான்.

அன்றைக்கு என்னவோ அமலி பயந்துதான் போனாள். பக்கத்தில் மயிலண்ணர் வீட்டிலும் ஒருவரும் இல்லை. அவர்களும் கடற்கரைக்குப் போய்விட்டார்கள். அமலியின் வீடு அந்தக் கிராமத்தில் சந்தியொன்றில் இருந்த கடைசிவீடு. அதற்கப்பால் சிறிய நாவல் மரங்களும் விராலி அலம்பல் மரங்களையும் கொண்ட பொட்டல்காடு. 'காட்டுப்பக்கம் ஓடிவிடுவமோ' என்று நினைத்தாள். பின்பு ஒரு தைரியத்தில் நின்று விட்டாள்.

அமலி வீட்டின் சந்தியில் நின்றுகொண்டுதான் அந்த இராணுவத்தின் பெரியவன் சிப்பாய்களை ஏவினான். ஊரில் இருந்த அத்தனை குழந்தைகள் பெரியவர்கள் அனைவரையும் வீட்டுக்கு வெளியே வரச்சொல்லி குளத்தின் மேற்காக இருந்த பிரதான வீதிக்கு அனைவரையும் போகச்சொன்னார்கள்.

அமலி வீட்டிற்கும் அந்த இராணுவப் பெரியவன் வந்து அப்பா அம்மாவை விசாரித்தான். அவள் தனிய இருக்கிறாள் என்று தெரிந்து "நீங்கள் இருங்கோ" என்று சொல்லிவிட்டுப் போனான். நன்றாக தமிழ் பேசினான். தமிழ்நாட்டுக்காரன்போல; ஆமிக்குள்ளும் நல்லவர்கள் இருக்கிறார்கள் என்று நினைத்தாள் அமலி. மூன்றாம் கட்டைக்கு இராணுவம் போய்விட்டது. சாய்த்துக் கொண்டுபோன மக்களை வீதியில் இருமருங்கிலும் நீளமாக இருத்தியிருந்தார்கள். இயக்கம் புரட்டி விட்டிருந்த 'ராங்கை' நிமிர்த்தி விட்டு பின்னேரமளவில் திரும்பியது ராணுவம். அதுவரையும் உண்ண உணவின்றி, குடிக்க நீரின்றி அங்கலாய்த்துக்கொண்டிருந்தார்கள் ஊர்மக்கள். ராணுவம் திரும்பிவரும்போது பிடித்துவைத்திருந்த சனங்களுக்குள் தெரிவு செய்து இளைஞர்கள் பலரை கூட்டிவந்தது. இராணுவத்தினருக்குப் பின்னால் தாய்மார், மனைவிகள் என்று கதறிக்கொண்டு வர அவர்களை கலைத்துக் கலைத்து வந்தது இராணுவம்.

கடைசியாக எல்லாவகையிலும் தெரிவு செய்யப்பட்ட 40 இளைஞர்களை ஆஸ்பத்திரியடிக்கு கொண்டுபோனது. அதன்பிறகுதான் சனங்களை வீடுகளுக்கு போக விட்டார்கள்.

நேரம் ஐந்துமணி ஆகிவிட்டது. இன்னும் கிராமத்திற்கு வந்த ஆமி திரும்பிப் போகவில்லை.

அந்தநேரம் தான் அந்தத் தமிழ் ஆமி அமலி வீட்டிற்கு வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமலியைக் கூப்பிட்டான்.

'என்ன பெயர்' என்றான்.

'அமலி' என்றாள் அவள்.

'என்னுடைய பெயர் சுகுமார்' என்றான்.

'நீ எல்.ரீ.ரீ தானே' என்று மிரட்டினான்.

இப்போதுதான் அமலி பயந்தாள்.

வீட்டுக்குள் வந்தான். இடுப்பில் இருந்த 'ரிவால்வர்' பட்டியைக் கழற்றி மேசையில் வைத்தான். சேட்பட்டின்களைக் கழட்டினான். இன்னும் வெளியில் இரண்டு ஆமிக்காரர் காவலாய் நின்றார்கள்.

திகைத்து நின்ற அமலியை துரத்தினான். அந்த அறைக்குள் திரும்பித் திரும்பி அவள் ஓட, அவளை விரட்டிப்பிடித்து மேல் சட்டையை முதுகுத்தோலாய் உரித்து, கையை மடக்கி முறித்து கால்தடம் போட்டு வீழ்த்தி, இடையுடையை உருவி நெஞ்சின் இடையில் கத்தியால் குத்தப்போவதாய் பயமுறுத்தி, மார்புக்கச்சையைப் பிளந்து அவளை வெறுமையாக்கி, கெஞ்சக் கெஞ்சக் கதறக் கதற கடித்து துப்பி; கன்னத்தில் அறைந்து அவளை காயப்படுத்தி....

'டாட்டா'. எண்ணை நாற்றமும் வியர்வைச் சகதியும் சேர்ந்த தடிப்பான பற்சோந்தி தோலணிந்து கைகால் மிதித்து புலிமயிர்சிலந்தியாய் அவள் மேல் படர்ந்து அவளில் தன்னுடைய தாகம் தணித்துவிட்டுப் போனான்; அந்த உயிர்கொல்லி.

சனங்கள் கிராமத்திற்கு வந்துகொண்டிருந்தார்கள். இராணுவம் போய்க்கொண்டிருந்தது. இராணுவம் போன கையோடு அமலதாசும் அமலி வீட்டிற்கு வந்துவிட்டான். சந்தியில் நிறைய சப்பாத்துக் கால் அடையாளங்கள். அமலி வீட்டிற்குள்ளும் அது போயிருந்தது. சனங்களை இராணுவம் சாய்த்துக்கொண்டு போனது அவனுக்குத் தெரியும். அமலியும் போய்விட்டாளா? பக்கத்து வீட்டு மணியண்ணனைக் கூப்பிட்டுப் பார்த்தான். அவர்களும் இல்லை, அமலி வீட்டுக்கதவு திறந்துதான் கிடந்தது. உள்ளே போனால் ஏதாவது சாப்பிடலாம் என்று உள்ளே போனான்.

அமலி சுவரில் சாய்ந்தபடி தலையை முழங்கால்களுக்குள் மறைத்தபடி குந்தியிருந்தாள். வீட்டு வளையில் ஒரு சேலை தூக்குப்போடுவதற்கான முடிச்சுப் போட்டபடி இருந்தது. ஏதோ நடந்துவிட்டது. உறுத்தியது அவனுக்கு. 'அமலி' என்றபடி அருகில் போய் தலையை உயர்த்தினான். அவள் பார்த்த பார்வைக்குள் பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பு. அழுதழுது முகம் வீங்கியிருந்தது. அவளின் சிவந்த முகத்தில் அடித்த விரல் அடையாளங்கள். திரும்பவும் 'அமலி' என்று பரிவாக அழைத்தான். அவள் நிமிர்ந்து பார்த்தாள் அவனை. கோபமாக முகம் இருந்தது. காறித்துப்பினாள் அவன் முகத்தில்; அவன் அதை எதிர்பார்க்கவில்லை. எச்சிலை வழித்துப்போட்டான். 'என்ன அமலி' என்றான் மீண்டும்.

"என்னத்துக்கடா வந்தனீ இஞ்ச" என்றாள். அவனை அவள் இதுவரை அப்படிப்பேசியதில்லை.

"போடா" "............."

"நீ எல்லாம் ஒரு ஆம்பிளை' ஆமிக்கு பயந்தவன் தானேயடா நீ ஆமி வந்தா என்னை விட்டுட்டு ஓடுவாய் என்ன! ஓடு"

அவனால் எதுவும் பேசமுடியவில்லை. மெல்ல மெல்ல மனதுக்குள் அது புரியத்தொடங்கியது. "நான் உன்னை விட்டுட்டு போனது பிழைதான் அமலி"

"சரி காணும் போ. எனி, எனக்கு ஆமிக்குப் பயமில்லை"

"என்னை மன்னிச்சுக்கொள் அமலி"
அவனுக்கு இதயம் படபடத்தது. அழுகை வந்தது

"உன்னைக் கைவிடமாட்டன் அமலி" அழுதான்.

"நான் கெஞ்சக் கெஞ்ச கதறக்கதற அவன் என்னை அடிச்சு பயமுறுத்தி அலங்கோலப்படுத்தேக்க உன்னால காப்பாத்த முடியேல–இனி என்னத்துக்கடா நீ" கத்தினாள்.

எழுந்தான் அமலதாஸ். அறையில் அலங்கோலமாய்க் கிடந்த பொருட்களை எல்லாம் எடுத்து அடுக்கி வைத்தான். கிழிந்துபோய்க் கிடந்த அவளின் சட்டையை எடுத்து ஒளித்தான். ஒரு துவாயைத் தண்ணீரில் நனைத்து "விடடா விடடா" என்று அவள் கத்தக் கத்த அவளின் முகத்தை துடைத்தான். சிறிது நேரம் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"அமலி இஞ்ச நடந்ததை அம்மாவுக்கோ அப்பாவுக்கோ ஆருக்குமே சொல்லாதே. இதோட அதை மறந்துவிடு. இனிமேல் அப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிலை உனக்கு வரவிடமாட்டன்."

திரும்பி ஒரு முறைப்பு முறைத்தாள் அமலி.

"நான் உன்னைக் கட்டாயம் கலியாணம் கட்டுவன் அமலி" கெஞ்சிச் சொன்னான்.

"நீ போ வெளியில" மீண்டும் கத்தினாள் அமலி

என்ன அமலி இப்படிக் கத்திறாள் என்று உள்ளே வந்த தாய்க்கு முதலில் ஒன்றுமே விளங்கவில்லை. மாமியைக் கண்டதும் அமலதாஸ் வெளியே போய்விட்டான். 'அப்படி ஏதாவது நடந்திருக்குமோ' என்று அருகில் வந்த தாய்; 'என்ன அமலி' என்று கேட்டு தாடையை தூக்கினாள்.

"தொடாதே என்னை" என்று பலமாகக் கத்தினாள் அமலி. மகளுக்கு விருப்பமில்லாத ஒன்றை மருமகன் செய்துவிட்டானோ இல்லா விட்டால் அப்படி அவரைப் பேசமாட்டாளே அமலி.

கொஞ்ச நாளைக்குப்பிறகு அமலியின் தாயும் தகப்பனும் அமலதாஸ் வீட்டிற்கு வந்தார்கள்.

"மச்சான் நான் உன்ர பெடியனைக் குறைவாக சொல்ல விரும்பேல. அண்டைக்கு ஊருக்கு ஆமி வந்து சனத்தை ரோட்டுக்கு கொண்டு போன அண்டைக்குத்தான் அது நடந்திருக்க வேணும். உன்ர பெடியன் ஆமி வந்தால் என்னுடைய வீட்டதான் வந்துநிக்கிறவன். அண்டைக்கு அமலி தனியத்தான் நின்றவள்......... பெடியன் ஏதோ அவசரப்பட்டிட்டான் போல.... என்ர முகத்திற்கு முன்னால கதைக்க பயந்து என்ர மனிசிற்ற எல்லாம் சொல்லிப் போட்டான்........ இப்ப அமலிக்கு மூன்று மாசமாய் போச்சுது. "சிறிது நேரம் மௌனத்திற்குப் பின் அவர் தொடர்ந்தார்." நீயும் தங்கச்சியும் சரியென்றால் ரெசிற்றரையாவது செய்துவிடுவம்."

அமலதாசின் தாய் சுகிர்தத்திற்கு சந்தோசம்தான். என்றாலும் "டேய் பேந்தேனடா அவனை உன்ர பெட்டையை சைக்கிளில ஏத்தவேண்டாம் என்று பேசினனி" என்றாள்.

"இல்லையக்கா நான் பொம்பிளப்பிள்ளையைப் பெத்தவன்."

வீட்டில் பெரியவர்கள் கதைத்துக்கொண்டிருக்க அமலதாஸ் உள்ளேயிருந்து எல்லாத்தையும் கேட்டுக்கொண்டுதான் இருந்தான். அமலி எப்பவும் தனக்குத்தான் என்று நினைத்திருந்தவன். ஆனால் இப்படி ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை வருமென்று கனவிலையும் நினைக்கவில்லை.

மனசுக்குள்ள ஒரு நெருடல் இருந்துகொண்டுதான் இருந்தது. ‘ஆரோ ஒருத்தன் கெடுத்தவன்’ என்று. ஆனால் அமலி அண்டைக்கு ‘வெளியில போடா’ என்று சொன்ன வேகம், கலியாணத்திற்கு சம்மதிப்பாளோ, என்ற பயம், அவள் அவனை வெறுத்தே விட்டாள்தானே என்று சந்தேகப்பட்டுக்கொண்டு இருந்தான்....

அமலதாசினுடைய தகப்பன் தீயோகுப்பிள்ளையருக்கு சரியான கோபம். “ஏன் சந்தியாப்பிள்ளை, ஏனிதுகளை எனக்கு முதலில சொல்லேல்ல?” “டேய் அமலதாஸ். வாடா இஞ்ச. நீ போன ஞாயிற்றுக்கிழமையும் சற்பிரசாதம் எடுத்த நீ! சுவாமியிட்டை கொம்பிசத்தில சொன்னனீயாடா? இவளவு நாளாச்சு எனக்குத்தான் சொல்லவேண்டாம், கொம்மாட்டையாவது ஒரு வார்த்தை” அமலதாஸ் தலையைக் கவிழ்ந்தபடியே நின்றுகொண்டிருந்தான்.

அன்றைக்கு ரெசிற்றாருக்கு முன்னாலேயே அமலதாசை நான் கல்யாணம் கட்டமாட்டன் என்று சொல்லிப் போட்டாள் அமலி. குழப்பமாய் முடிந்துபோனது ரெசிற்றர் எழுதிறது. ரெசிற்றாரும் கோபித்துக்கொண்டு போய்விட்டார். அமலதாஸ் அமலியை கனதடைவை தனியச்சந்தித்து காலில விழாத குறையாக “என்னைக் கட்டமாட்டியோ?” என்று கேட்டும் அவள் சம்மதிக்கவில்லை. “கல்யாணம் கட்டின பிறகு உன்ன ஆமிக்காரன் கெடுத்தவன் தானேயடி என்று குத்திக்காட்ட மாட்டியோ” என்றுவிட்டுப் போய்விட்டாள்.

அமலிக்கும் தன்னில வெறுப்பில்லையென்று அவனுக்கும் தெரியும். அதுபோலதான் தன்னில வெறுப்பில்லையென்று அமலிக்கும் தெரியும். ஆனா எனக்கு இப்படி நடந்தாப்பிறகு நான் ஒருதனிட்டை கெட்ட பிறகும் அமலதாசை கட்டுவது சரியில்லையென்று யோசிப்பாள். அதுவும் முடியவில்லை அவளால். அமலதாசுக்காகத்தான், அவனாலதான் சாகிற எண்ணத்தையும் விட்டவள்.

இப்போதெல்லாம் இந்தக் குழந்தை தன்னுடைய வயிற்றை விட்டு வெளியெ வராதா? என்பதுதான் அவளுடைய பிரச்சினை. அமலி ஞாயிற்றுக்கிழமை பூசைக்குப்போய் பத்துமாதங்கள் ஆகிவிட்டது. வீட்டைவிட்டு வெளியில் வருவதே இல்லை. ஊருக்குள் அமலதாஸ் அவளை கெடுத்துப்போட்டு விட்டு விட்டான் என்ற கதையே பரவியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் என்றால் அவள் ஏன் கவலைப்படுகிறாள். உண்மையைச் சொல்லி விடுவோமோ என்று கூட யோசிப்பாள். அமலதாஸ் நினைவில் வந்து மறிப்பான். வாய்திறக்கவே இல்லை.

இப்போதெல்லாம் ஆமி வந்தால் அவளும் பொடியளோடு அந்தப் பொட்டல் காட்டுக்குப் போய்விடுவாள்.

அமலதாஸ் தீர்க்கமாக முடிவெடுத்துவிட்டான். தான்தான் அந்தப்பிள்ளைக்கு தகப்பனென்று; அமலி அந்தப் பிள்ளையை வேண்டாம் என்றால் தான்தான் வளர்ப்பதென்று ஒருநாள் அவளிடம் போய்க்கேட்டான். "நீ வெறுக்கிற அந்தப்பிள்ளையை வேண்டாம் என்றால் தா, நான் வளக்கிறன்." என்று.

"ஓ கொண்டு போ, பிறந்தவுடனேயே கொண்டுபோ. அதைப் பார்ப்பதற்கு விருப்பமில்லை. அதை கண்டாலே, கொண்டுபோடுவன்" என்றாள். மனதுக்குள் அவளவு வெறுப்பு இருந்தது அவளுக்கு. சற்றுநேரம் நின்று கதைத்து அவளை சமாதானப்படுத்தலாம் என்று அமலதாஸ் நின்று கதைப்பான். 'போ போ என்னை நிம்மதியாய் இருக்கவிடு" என்று கத்துவாள்.

வயிற்றுவலி வந்து அமலியை ஆஸ்பத்திரியில் சேர்த்தாயிற்று ஆஸ்பத்திரியிலும் அமலி ஒரே சத்தம்தான். வலியில் பெரிதாகக் கத்துவாள், தாதிமார் பேசுவார்கள். வயிற்றினுள் ஒரு புலிமயிர்சிலந்தி ஊர்வதாய்த்தான் அவள் கற்பனை இருக்கும். "என்ர வாழ்க்கையையும் அவமானமாக்கிப்போட்டு வெளியில வாறதுக்கும் என்னை சாகவைக்குது சனியன்" என்றாள். அரைப்பைத்தியமாகவே ஆகிவிட்டாள்.

அமலதாஸ் ஆஸ்பத்திரியிலேயே நின்றான். குழந்தை பிறந்தவுடன் அதை பிரித்து விடுவதற்காய், சிலவேளை குழந்தையைக் கண்டு கோபம் வந்து அதற்கேதும் அவள் செய்யப்போய்... தாதிமார்களுக்கும் வைத்தியர்களுக்கும் அவன் ஏதும் சொல்லவில்லை.

"நீங்கள்தானே அந்தப்பெட்டையின்ர புருசன்" தாதி கேட்டாள். "ஓம்" என்றான் அமலதாஸ்.

என்ன மனிசி அவ 'பேய்பிடித்தவள் மாதிரி பைத்தியமோ" அவனுக்குப் பேசிப்போட்டுப் போனாள் தாதி.

இன்னொரு தாதி வந்து சொன்னாள் "உங்கட மனிசிக்கு குழந்தை பிறந்திருக்கு." என்று சொன்னதற்கு சந்தோசமா இருநூறு ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தான். "பார்க்கலாமா" என்று கேட்டான். தலையாட்டிவிட்டு போனார் தாதி.

போய்ப் பார்த்தான். குழந்தை பிறந்த அசதியில் தூங்கிக் கொண்டிருந்தாள் அமலி. பக்கத்தில் தொட்டிலில் குழந்தை தூங்கிக்கொண்டிருந்தது.

அமலியைப் போலவே வட்டவடிவான முகம். செக்கச்செவேலென்று கொஞ்சம் ஒல்லியாக அவளைப்போல்.

கொஞ்சம் தூங்கட்டும் என்று வெளியில் வந்தான். தாதி ஒரு பிறப்புப் பத்திரத்தை கொண்டுவந்து அவனிடம் கொடுத்துவிட்டுப் போனாள்; நிரப்பி கையெழுத்து போடும்படி. நிரப்பினான். தாய் தந்தை விவாகம் ஆனவர்களா? அந்த இடத்தை மட்டும் கீறினான். பெயர் என்ற இடத்தில் என்ன வைக்கலாம் "மாசில்லா" யோசித்துக் கொண்டிருந்தான்.

ஆஸ்பத்திரி முழுக்க ஒரே பரபரப்பு. ரவுனுக்க 'சிங்கர்' கொம்பனிக்கு பக்கத்தில சர்வத்துக்கடைமில ஆரோ ஆமிச் சீ.ஐ.டீ சுகுமாராம். அவனை யாரோ சாரங்கட்டின சின்னப்பொடியன் ஒருதனாம். சர்பத்து கடைக்குள்ள இருந்து வெளிய வந்து பிஸ்ரலால சுட்டுப்போட்டு ஓடிப் போட்டானாம். நெத்திமில ஒரு வெடி, இருதயத்தில ஒரு வெடியாம். ஆஸ்பத்திரிக்கு ஆள கொண்டந்திருக்கிறாங்கள். ஆள் முடிஞ்சுதாம்.... கேட்டுக்கொண்டே பத்திரத்தை நிரப்பி முடித்தான் அமலதாஸ். பெயர் என்ற இடத்தில் "மாசில்லா" எழுதிமுடித்தான். குழந்தையைப் பார்த்ததில் இருந்து அப்படித்தான் அமலோப்பவமாதாவின் பெயரை வைக்கவேண்டும் என்று நினைத்திருந்தான். அமலி கண்விழித்தாள். தன்னுடைய வயிற்றிலிருந்து அந்த புலிமயிர்சிலந்தி வெளியேறிவிட்டது. தன்னை பிடித்திருந்த சனியன் ஒளிந்துவிட்டது. அப்படியே எழுந்து வீட்டுக்குப் போய்விடவேணும். அது வேண்டாம். அதைப்பார்க்க வேண்டாம். எழும்பினாள்.

அருகில், தொட்டிலில் சேலையால் மூடி அரைகுறையாய் தெரிந்தது குழந்தை. அவள் மனதில் நினைத்திருந்த புலிமயிரச் சிலந்திபோல கருப்பாய் அல்ல, நல்ல சிவப்பாய் மொழு மொழுவென்று. அதைப்பார்க்க வேண்டும்போல் தோன்றியது அவளுக்கு. இப்போது இருந்தபடியே தொட்டிலை தன்னருகில் இழுத்தாள்.

தன்னைக் குழந்தையில் பார்த்த படம்போல, தன்னைப்போல் அச்சாகயிருந்தது. அமலியின் மூக்கு. அவளின் கன்னங்கள். அவளின் காது. விரல்கள் கூட அமலியைப்போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ நினைத்தவளாய் அவசரமாய் குழந்தையை மூடியிருந்த சேலையை விலக்கினாள்.

பெண்குழந்தை.

அவளைப்போல பெண்குழந்தை.

அவளைப்போல அல்லல்படப்போகிற பெண்குழந்தை.

என்னைப் போல இவளுக்கும்...... வரக்கூடாது. வரவே கூடாது. கண்ணீர் இமையை உடைத்தது. அவசரமாய் நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள்.

வாசலில் அமலதாஸ்.

நிமிர்ந்தவனைப் பார்த்தாள். வரச்சொல்லி கண்களை அசைத்தாள். அவன் அருகில் வந்தான். அவனின் இடுப்பைக் கட்டிக்கொண்டு அழத்தொடங்கி விட்டாள். அவளுக்கு அவனும் வேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவோடு செல்லல்



அந்த ஊருக்கு இனி நல்லகாலம்தான். உண்மையாய் அது கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்ட ஊராத்தான் போச்சு. முந்தியெல்லாம் அது கழிக்கப்பட்ட ஊராய் இருந்தது. கடலில் இறால் கண்டுபிடிச்சாப்பிறகு காசாக் கொட்டினது அந்த ஊர். கஸ்ரப்பட்ட குடும்பங்கள் எல்லாம் நல்ல நிலைமைக்கு வர அந்தக் கடல்தான் காரணமாய் இருந்தது.

போரொன்று வந்து அந்த ஊரைப் புலம்பெயர வைச்சு நல்லாக் காயப்படுத்திப்போட்டுத்தான். என்றாலும் தரைமட்டமாய்ப்போன அந்தப் பெரிய கட்டிடம் எல்லாம் ஆரோ ஒருத்தனுடைய ஆதிக்கமும், அதிகாரமும் சேர்ந்து அழிஞ்சு போனது போல உறுத்திக்கொண்டிருந்தது. இடிஞ்சு போன எந்தக் கட்டிடத்தைப் பார்த்தாலும் கூடுதலாக அந்த S.M.A என்ற பெயரைத்தான் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தது.

அந்த ஊருக்கு 'ஆமி' வரக்குமுன்னமே அவர் மண்டையப் போட்டுட்டார்தான். அப்பெல்லாம் அவருடைய ஆணவத்தைச் சொல்லிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுதான் அந்தக் கட்டிடங்கள் நிமிர்ந்து நின்றன. ஆனால் யாருக்குமே பிரயோசனப்படாமல் கிடந்தன. அவை இடிஞ்சு போனதைப்பற்றி ஊர்க்காரர் யாரும் கவலைப்படாயினம். அவருக்கு ஐந்தாறு பிள்ளைகள் இருக்கென்று ஊருக்குள்ள ஒரு கதை இருக்கு. ஒருதரும் குறிச்சுக் காட்டாயினம். அதுபோலத்தான் அதுகளுக்கு உரிமை கொண்டாடுறதுக்கு ஆருமே வருவதில்லை. இப்ப அந்த ஊருக்கே உயிர் கொடுத்த சொந்தக் காரப்பிள்ளைகள் ஆயுதங்களோட ஏராளமா நிமிர்ந்து நடந்து போகிறார்கள் அங்க.

அந்த ஊரை 'ஆமி' பிடிச்சிருக்கேக்க பாவம் பழிபோல S.M.A யின் கல்லறைக் கல்லைக்கூட விடேல்ல. அதையும் பிரட்டி எடுத்துவந்து பங்கருக்கு அணையா வைச்சிருந்தவன் ஆமி. அவரை இப்ப மண்தின்று விட்டது. அவர் கொஞ்சநாளைக்கு முன்னம் இந்த ஊரைத்தின்றவர். காசைக் காட்டியே கனபேரை மடக்கியவர். அவர் சொன்னால் ஊர் செய்யோணும். செய்யவைப்பார். சுளை உத்தியோகத்தரைக் கட்டாக் கருவாட்டாலையே அடிச்சவர். சிஸ்ரர்மார், சுவாமிமார் உத்தமர் என்று புகழுவினம். பொலிஸ்காரரும்தான். ஞாயிறு பூசை தப்பாதவர். நெடுகத் தேவ நற்கருணை எடுப்பவர். 'எலெக்சன்' வந்தால் ஏழைகளின் தொண்டன். S.M.A வாழ்க! அதற்குள்ளும் துலைவான் 'துலைஞ்சிட்டால் அப்பதான் எங்களுக்கு நிம்மதி.' என்று மனதுள் கறுத்துக் கொட்டியவரும் உண்டு.

சூசானம் கிழவி யாருக்கும் பயப்படாத ஆள். எவரும் ஏதேனும் கிழவியோட தனகினாப் போதும். கடற்கரைப்பாஷையில் வாய் மணக்கும். கிழவிக்கு முன்னால கூனிக்குறுகிப் போகவேணும் என்ற பயத்தில் எல்லோரும் ஒரு மரியாதையாய்த்தான் அணுகுவினம். கிழவியை மாதிரித்தான் செல்லம்மாவும். துருதுருத்த பெட்டை. ஒரு இடத்தில நிற்காள். காலையில பனங்கொட்டை பொறுக்கிறது, பாத்தி போடுறது, மீன்தெரியப் போகிறது, கருவாடு கூட்டப்போறது, பின்னேரம் விறகும் கொண்டுவந்து அடுக்கிப்போடுவாள்.

செல்லம்மாவுக்கு பேத்தியைத் தவிர வேறெந்த உதவியும் இல்லை. அம்மா அப்பா யார் என்று தெரியாது. கிடைக்கிற மீனைக்கொண்டுபோய் ஊருக்குள்ள கொடுத்து அரிசி, மிளகாய், மரக்கறி என்று ஏதேனும் கொணர்ந்து சாப்பாடு போடும். கோடைத்தொழிலுக்கு இரண்டுபேரும் நல்ல சந்தோசமாய் இருப்பினம். மாரி வந்தா அழுகையும் பற்கடிப்பும், கருவாடும் தேங்காய்ச்சொட்டுமாய்க் காலம் போகும். கோடை முடிஞ்சு மாரிக்கும் 'ஊருக்குப் போகாம' பங்கு வலையில நிக்கிற யாரும் சாப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டா, சமைச்சுக்கொடுத்து இவையளுக்கும் சாப்பாடு போகும்.

அப்படித்தான் வேதநாயகமும் அவையளோடை சேர்ந்தது. செல்லம்மாவுக்கெண்டாலும் கிழவி சூசானம் இருக்கு. வேதநாயகத்துக்கு அதுவும் இல்லை. எப்படி அந்த ஊருக்கு வந்தான் என்று அவனுக்குத் தெரியாது. கோடைக்கு அவன் கரைவலையைக் கட்டிக்காத்துப் போமிடுவான். மாரிக்கு உழைச்ச காசோடை சூசானம் கிழவி வீட்டை வருவான். தைபிறக்கமுன்னமே காசெல்லாம் முடிஞ்சு போச்சு என்று கிழவி கத்தும். மாரியில அடையல் பார்க்கப்போய் போத்தல்கள், கப்பற் கயிறுகள், பலவகைத்தடி என்று சேர்த்ததெல்லாம் விற்றுப்போட்டு கிழவிக்குக் கடன் கட்டுவான். பழையபடி கரைவலை. அவனுக்கு வேறு ஒருத்தரும் துணையோ வீடோ இல்லாததாலதான் சூசானம் கிழவியை அண்டியிருந்தான். இல்லாட்டி மண்ணாங்கட்டிய நிற்பான்.

கிழவியின்ர சாப்பாடு திறந்தான். கரவலைச் சோறும் திடகாத்திரமா தொழிலாளியாக்கிப் போட்டுது அவனை. சம்மாட்டி என்ன சொன்னாலும் செய்வான். ஒரு மூடி சீனிக்காக அரிசி மூட்டையைத் தூக்கிறது பந்தயம் வைப்பாங்கள். தூக்குவான். ஆனால் எதையாவது தானா யோசிச்சு செய்யிற பழக்கம் கிடையாது. எல்லாத்துக்கும் ஒரு பயம். சண்டை என்றா கிட்ட நிக்கான். அதுதான் கிழவி என்ன பேசினாலும் பேசாம நிற்பான். அவன் உழைக்கிற காசு அவன்ர மாரிச் சாப்பாட்டிற்கு மிச்சம் மிச்சமாய் இருக்கும். ஆனால் கிழவி பேசுமென்றதால உழைச்ச காசொண்டும் தனக்கு வைக்காம குடுத்திடுவான்.

செல்லம்மாவுக்கு இவனைப்பார்க்கப் பாவமாய் இருக்கும். தற்செயலா அவனுக்காகக் கதைச்சிட்டா அவளின்ர கதை முடிஞ்சிடும். ஒரு முறை கடற்கரை நீளம் அடையல் பார்க்கப்போய் ஆம்பல் ஒருதுண்டு எடுத்தவன். இடையில் ஆரோ அவனிடம் ஒரு மோதிரத்தைக் கொடுத்து ஏமாற்றி அதை வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள். சூசானம் கிழவி கேள்விப்பட்டு ஆம்பல் வாங்கினவனை நல்லாப் பேசியும் அவன் குடுக்கேல்ல. 'வேதநாயகம் தந்தவன் நாங்கள் மோதிரம் கொடுத்து வாங்கினாங்கள். எங்களுக்கும் அவனுக்கும்தான் கதை. ஏதோ சொந்தம்போல வந்து கதைக்கிறாய்' என்று அவர்கள் பேச, கிழவியும் பதிலுக்கு 'சொந்தம்தானடா அவனும் என்ர பேரனடா' என்று பேச, வேதநாயகத்துக்கு இல்லாத சந்தோசம். தன்னையும் கிழவி பேரனெண்டு சொல்லிப்போட்டுதென்று அவவிட்டக் கிடந்த மோதிரத்தையும் வாங்கி "உனக்கெதற்கு பெட்டையள் போடுறதை" என்று செல்லம்மாட்டைக் கொடுக்கும் பொழுது அவன் திருப்பிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கல்ல. தன்ர மோதிரத்தைச் செல்லம்மா போடுறாளே என்ற இன்னுமொரு சந்தோசம். செல்லம்மாவும் கிழவி இல்லாத நேரம் பார்த்து அவனுக்குக் கழற்றிக் கொடுப்பாள். அவனுக்கும் அதைப் போடுறது விருப்பம்தான். விடியப்புறம் பனங்காய் புறக்க அவளோட போகேக்கையும் 'நீ வைச்சிரு' என்று கழற்றிக் கொடுத்துவிடுவாள். செல்லம்மாவுக்குப் பாதுகாப்புக்காகத்தான் கிழவி அவனை அனுப்பிறது. ஆனால் செல்லம்மாதான் அவனுக்குப் பாதுகாப்பு.

ஒருமுறை ஆடிக்காத்தோட நாவற்காய்ச் சொறியும் வந்திட்டுது என்று கரவலை வளைக்கிறதைச் சம்மாட்டி நிற்பாட்ட அவன் வீட்டை வந்திட்டான். வீட்டிலை ஆரையுமே காணேல்ல. 'செல்லம்மா' என்று கூப்பிட்டும் பார்த்தான். இரண்டு மூன்று சத்தங்களுக்குப் பிறகுதான் செல்லம்மா உள்ளயிருந்து; 'இருக்கிறன்' என்றாள். தட்டியை அவள் உள்ளே கட்டிப்போட்டிருந்து என்ன செய்யிறாள்? மெல்லிய சிரிப்புத்தான் உள்ளயிருந்து வந்தது.

"அவிள் கெதியா"

" நீ உள்ள வரக்கூடாது" உள்ள இருந்து பதில் சொன்னாள்.

"ஏன்"

"ஆச்சீட்டபோய்க் கேள்"

அவள் தட்டியை அவிழ்த்திட்டு உள்ளேயே போனாள்,

அவள் அவனைக் கண்டு வெட்கப்பட்டாள். புதிதாய் இருந்தது அவனுக்கு. கைகளில் மோதிரத்தைத் தேடினான். அது இல்லை. 'எங்க மோதிரம்?'

"ஆச்சியிட்டகேள்."

"ஆரடா அது" என்று சத்தம் போட்டுக்கொண்டு வந்த சூசானம் கிழவி அவனைக் கண்டதும் கோபத்தைக் குறைச்சுப் போட்டா.

"எங்க அவள் போட்டிருந்த மோதிரம்"
கிழவி பணிவாகத்தான் பதில் சொன்னாள்.

"அதடா தம்பி செல்லம்மா பெரிய பிள்ளையாகிட்டாள்; அதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவு வச்சிட்டன்.''

இப்போது அவனும் வெட்கப்பட்டான்.

மடியில் இருந்தெடுத்த ஐம்பது ரூபாவை செல்லம்மாவிடமே கொடுத்தான். "இந்தா எடுத்து மோதிரத்தைக் கையில் போடு" கிழவிக்கும் மெல்லிய ஒரு சந்தோசம். தங்களுக்கும் ஒரு ஆம்பிளைத்துணை இருக்குதென்று; தான் செத்தாலும் செல்லம்மாவுக்கு ஒரு துணையிருக்கிறதென்று.

கிழவியும் கனகாலம் இருக்கேல்ல. அவன் வலையடியில் ஒருநாள் நிற்கேக்க மறுமொழி வந்தது செல்லம்மா சொல்லிவிட்டதென்று. அஞ்சாறு கஸ்டப்பட்ட சனத்தோடதான் செத்தவீடு முடிஞ்சது. அவன் கரவலையால வந்தவுடனேயே செல்லம்மா ஒரு பேணி நிறையக் காசைக் கொண்டுவந்து கொடுத்தாள் அவனிடம். "இது ஆச்சி எனக்கெண்டு போட்டு வைச்ச உண்டியல். இதுக்குள்ள கிடக்கிறது உங்கட காசுதான். நீங்க கஸ்ரப்பட்டு உழைச்சது" வேதநாயகம் இப்பத்தான் கிழவிக்காக அழுதான். அந்தக்கிழவி இன்னும் கொஞ்சநாள் என்னோட இருந்திருக்கக் கூடாதோ என்று அந்தக் கொட்டிலில் கேட்கிற சத்தம் அத்தோட முடிஞ்சுபோச்சு. செல்லம்மாவைப் பேச, அவள் திரும்பிப்பேச ஆளில்லை. இப்ப அவளுக்கு அவன் மட்டும்தான் இருந்தான். அதுபோல அவனுக்கு அவள் மட்டும்தான் இருந்தாள். அவன் இனி என்ன செய்யப்போறான்? தன்னை விட்டிட்டுப் போய்விடுவானோ என்று அவளும், அவள் என்ன செய்யப்போகிறாள் தன்னை விட்டிட்டுப் போறாளோ என்று அவனும் யோசிச்சு யோசிச்சு, பட்டினியும் கிடந்து இரண்டாம் நாள் பசி வயிற்றைக் கிள்ளிய போதுதான் அவன் அவளிட்டைக் கேட்டான் என்ன செய்யிறதென்று.

இன்னும் அவன் கரவலைக்குப் போகவில்லை. அவளை யாருடன் விட்டிட்டுப் போறதெண்டு முதற்கவலை அவனுக்கு. அன்றன்று ஆரோடும் சூடைக்குப் போவதும் வீச்சு வலைத் தொழில் செய்து சீவியப்பாடு போவதுமாய்... ஒரு முறை இருவருமாய்க் கோயிலுக்கும், ஒருமுறை சினிமாவுக்கும் போய் வந்தாயிற்று. ஊரும் அவர்களைப் பார்த்து புருசன் பொஞ்சாதி ஆக்கிப்போட்டுது.

ஆருடைய கண்பட்டதோ கொஞ்சக்காலம் நல்லாயிருந்த குடும்பம்; அவனுக்குப் பெரியதாய் வருத்தம் வந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்... எண்டு ஒரே அலைச்சல். யாழ்ப்பாணம் கொண்டுபோக வேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிறேசனாம். காசுமாறக் கனபேரிட்டை அவள் திரிந்துவிட்டாள். அவன் தொழிலுக்கு நின்ற முதலாளியிடம் "அவர் சுகப்படத் தொழிலுக்கு வருவார்" என்றும் கேட்டுப்பார்த்தாள். S.M.A சம்மாட்டி இரக்கமான மனிசன். 'கேட்டாத்தருவார்' என்று ஆரோ சொல்லித்தான் அவரிட்டையும் போனாள். காலம போய்ப் பின்னேரம் வரையும் அவருடைய ஐஸ்வாடியில் தூங்கி... பின்னேரம்தான் அவரை அவள் பார்த்தாள். "எவ்வளவு வேணும் எப்ப திருப்பித் தருவாய்" என்று கேட்டு அவளும் "அவர் சுகமாகினவுடன் தொழிலுக்கு வருவார்" என்று உத்தரவாதமாய்ச் சொல்லி, அவர் "காசுக்கு நீதான் பொறுப்பு" என்று கண்டிப்பாய்ச் சொல்லி மூவாயிரம் ரூபாய் கொடுத்தார். உண்மையில் நல்ல மனிசனாய்த்தான் தெரிந்தார் அவர். அவனும் சுகப்பட்டுக்கொண்டுவர காசில்லாமல் திரும்பவும் அவரிட்டப் போய்க் கேட்கப் பின்பும் இரண்டாயிரம் கொடுத்தார். "காசு திருப்பித் தரவேணும் அல்லது தொழிலுக்கு உன்ர மனிசன் வரவேணும். இல்லாட்டி நானுன்னைத்தான் பிடிப்பன்" என்று கண்டிப்பாய்ச் சொல்லித்தான் காசு கொடுத்தார். எப்படியாவது வேதநாயகத்தைச் சுகமாக்கிவிட்டால் அவன் கொஞ்சநாளிலேயே உழைச்சுக் காசைக் கட்டிப்போடுவான் என்ற நம்பிக்கை அவளுக்கிருந்தது. எல்லாக் கண்டிப்புக்களுக்கும் தலையசைத்தாள் செல்லம்மா. அவன் நல்லாச் சுகப்பட்டெழும்பக் கனநாளாப்போச்சு.

கடற்கரைக்குப் போவதும் கடலைப் பார்ப்பதுமாய் இருந்தான் வேதநாயகம்.

ஒருநாள் கடற்கரையில் நின்றவனை மரியதாஸ் சம்மாட்டி கூப்பிட்டு "இண்டைக்குத் தொழிலுக்குப் போக ஆக்கள் இல்லாமல் போச்சு, ஒரு நாளைக்கு போயிட்டு வாறியோ தொழில்ப் பங்கைத் தாறனெ"ன்று கெஞ்சிக் கேட்டதாலதான் வேதநாயகம் ஒத்துக் கொண்டவன். முதலில் தனக்கு ஏலாதென்று சொல்லியும் அந்தாள் கேட்கேல்ல. "நீ வலையொன்றும் இழுக்க வேண்டாம். துணைக்குப் போட்டு வா"வென்று சொல்ல அவனும் வீட்டுக் கஸ்ரத்தைப் பாத்திட்டு ஒருநாளைக்குத்தானே என்று செல்லம்மாவுக்குத் தெரியாமல்தான் தொழிலுக்கு ஏறினவன். அவன்ர நல்ல காலத்துக்கு மீனும் பட்டுப்போச்சு.

காலமை சம்மாட்டியார் 'லான்றோவரை' றோட்டில் விட்டிட்டு இறங்கி அவளின்ர கொட்டிலைத் தேடிவர, செல்லம்மா என்னமோ ஏதோவென்று பயந்துதான் போனாள். வந்தவர்; "என்னடி செல்லம்மா என்னட்டைக் காசை வேண்டிட்டு வேற ஆளோடை தொழிலுக்கு அனுப்பிட்டாய். உன்ர புருசன் ஆ! அதுவும் என்ர எதிரி மரியதாஸின்ர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளத்தில"

செல்லம்மாவிற்கு நடந்ததொன்றும் தெரியாது. வேதநாயகம் நேற்றுப் பின்னேரம் போனவன்! எங்கபோனவன்? என்ற கவலையில் மீளாமல் இருக்க இவன் இப்படிச் செய்து போட்டானே எண்டும் யோசித்தாள்.

"சம்மாட்டியார், இண்டைக்கு ஆள் வர உங்கட கையில கொணர்ந்து தாறன்" சம்மாட்டியாருக்குப் பயந்து பயந்து சொன்னாள்.

"அவனுக்கு நான் காசு கொடுக்கேல்ல செல்லம்மா, உனக்குத்தான் தந்தனான். உனக்கு அந்தப் பயம் இருந்தாச்சரி. பேந்தென்னைக் கோபிக்காதே" சொல்லாமல் கொள்ளாமல் சம்மாட்டியார் போய்விட்டார்.

வேதநாயகம் வந்தவுடனேயே விசயத்தைச் சொன்னாள். உடனடியாகவே தொழிலுக்கு அவனைப் போகச்சொல்லி அனுப்பிவிட்டாள். அடுத்த கிழமை கடன் காசைப்பற்றியும் கேட்காமல் சம்மாட்டி கிழமைக்காசு கொடுத்துவிட்டிருந்தார். சம்மாட்டியார் என்ன இருந்தாலும் அவனுக்கு அவர் வளிச்சல் போட்டில தொழிலுக்குப் போகச் சொன்னது விருப்பமில்லை. ஏனென்றால் இரவு முழுவதும் அவளைத் தனியவிட்டுப்போறது வேதநாயகத்திற்கு பெரிய மனக்கஸ்ரமாக இருந்தது. "என்றாலும் பரவாமில்லை" வளிச்சல் தொழில் பங்குத்தொழில். கெதியாக் கடனைத் தீத்திடலாம். கொஞ்சநாளைக்கு பல்லைக் கடித்துக்கொண்டு போட்டு வாங்கோ என்று அனுப்பி விட்டாள். அவளுக்கும் அவனை விடக் கவலைதான்.

ரோட்டில 'லாண்டோவர்' வந்து நின்றதைப்பற்றி செல்லம்மா பெரிசாக் கணக்கெடுக்கேல்ல. கொட்டிலுக்குள்ள சாப்பிட்டு முடிச்சு, உறியில பானையை வச்சிட்டு தட்டியக் கட்ட கயிறு எடுத்துக்கொண்டு வாசலுக்கு வர, வாசலில சம்மாட்டியார் நிற்கிறார். அவளுக்கு கையும் ஓடவில்லைக் காலும் ஓடவில்லை. சம்மாட்டியார் அவளின்ர கையில இருந்த கயிற்றை வாங்கி உள்ளே வந்து தட்டியைச் சாத்திக் கட்டினார். அவளுக்கு எல்லாமே விளங்கிவிட்டது. 'வேண்டாம் சம்மாட்டியார்' என்று கெஞ்சிக்கேட்டாள். துக்கம் துக்கமாய் தொண்டை அடைத்துக்கொண்டது. காலில விழுந்தவளை சம்மாட்டியார் தூக்கினார். "செல்லம்மா உன்னட்டைக் காசேதும் கேட்டனானே? நீ என்னட்டை என்ன வேணுமானாலும் கேள் தாறன். ஆனா, என்ர மரியாதையைக் கெடுக்க கத்திக் குழறி ஏதும் செய்தா உன்ர புரிசன இனிமேல் காணமாட்டாய்," அவள் புருசனுக்காக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருசனுக்குத் துரோகம் செய்வதாய் உள்ளுக்குள் அழுதுகொண்டிருந்தாள்.

காலையில கறி மீனோட வந்தவனை அவள் வரவேற்கவே இல்லை. வருத்தமோ என்று அவனும் சேர்ந்து அவளுக்கு வேலை செய்து கொடுத்தான். சமைச்சுக்கொடுத்தாள். மத்தியானம் நித்திரை கொள்ளவிட்டு தலை பார்த்தாள். என்னத்திற்காக இவள் இப்படி மாறிப் போனாள் என்று யோசித்தபடியே வழமையாக அவன் தொழிலுக்குப் போய்க்கொண்டிருந்தான்.

அன்றைக்கும் அவன் தொழிலுக்குப் போக மனமில்லாமல்தான் போனான். வழமைபோல அந்த அரைமிருட்டில் சம்மாட்டியாரும் தட்டினார். அன்றைக்கு அவன் வெள்ளனவே வலையை இழுத்துப்போட்டு கரையை வந்துவிட்டான். வள்ளத்தை–நங்கூரத்தை கரையை வச்சுவிட்டு கட்டி, தன்னோடு தொழிலுக்கு வந்தவனை வள்ளத்தில் படுக்கச் சொல்லிவிட்டு வீட்டை வந்திட்டான். கதவு உள்பக்கம்தான் கட்டிக் கிடந்தது. கூப்பிட்டான். செல்லம்மா ஒரு சத்தமும் காட்டவில்லை. கதவை அவுக்கவும் இல்லை. பெலமாய்க் கத்தினான். தட்டி அவிழ்படும் அரவம். அந்த இருட்டில் அதார்? "சம்மாட்டி"

சம்மாட்டி அவனையே கொஞ்சநேரம் பார்த்தார். வேட்டியை மடிச்சுக் கட்டிக்கொண்டு வெளியே போய்விட்டார். "விளக்கைக் கொளுத்து செல்லம்மா" அமைதியாய்த்தான் சொன்னான். வேதநாயகம் விளக்கு வெளிச்சத்தில் அவளின்ர முகத்தைத் தூக்கிப் பார்த்தான். 'செல்லம்மா எனக்கே இப்படிச் செய்து போட்டாய்' என்றது அவனுடைய பார்வை. அவனுடைய நெஞ்சில விழுந்து அழுதாள் செல்லம்மா. அவளின் தலைமயிரைப்பிடித்து விசிறி எறிந்தான் வேதநாயகம். அடித்தான். அழுதாள் செல்லம்மா. அழுது ஒரு முடிவுக்கு வந்தாள். "எனக்கிருக்கிற ஒரேயொரு சொந்தம் நீங்கள்தான். நீங்கள் இல்லாட்டிக்கு நான் என்ன செய்யிறது. என்னை உங்களுக்கு வேணாமென்றால் விடுங்கோ" எழும்பினவளை எட்டிப்பிடித்தான் வேதநாயகம். கட்டிப்பிடித்து அழுதான். "எப்படி என்னாலை சம்மாட்டியாரைத் தடுக்கேலும்" அவளும் அழுதாள். அழுதே அந்த இரவு முடிஞ்சு போச்சு.

காலமை சம்மாட்டியார் அவனைக் கூப்பிட்டு அனுப்பினார். "என்னடா மனிசிக்கு அடிச்சியாம் என்ன" வெருட்டிக்கேட்டார். வேதநாயகம் கதைக்கவேயில்லை. "இனிமேல் அவளுக்கு அடிச்சியெண்டா அவளை நான் இஞ்ச கொண்டுவந்துவிட வேண்டிவரும்" என்று பேசினார். அவன் இல்லாமல் அவள் இருக்க மாட்டாள் என்று அவனுக்குத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவும் பேசாமலே வீட்டவந்திட்டான். திரும்பவும் அவரோடைதான் அவன் தொழிலுக்குப் போனான்.

மீன்பாடு குறைஞ்சு போச்சென்று ரெண்டு மூன்றுநாளா வீட்டிலதானிருந்தான் வேதநாயகம். ஒருநாள் பின்னேரம் சம்மாட்டியார் வீட்டை வந்தார். "வேதநாயகம் இண்டைக்கொருக்காத் தொழிலுக்குப் போட்டுவா"

"இரண்டு மூன்று நாளா ஒருத்தருக்கும் மீன்படல சம்மாட்டியார். போனா வீண் நட்டம். பார்த்துப்போறன் சம்மாட்டியார்," "டேய் நீ இண்டைக்குத் தொழிலுக்குப் போவெண்டாப் போவென்ரா. பேந்தென்னடா திருப்பிக்கதை. கைகால் முறிபடப்போறியா? செல்லம்மா சோத்தைக் கட்டிக்கொடு."

செல்லம்மா சோத்தைக் கட்டிக்கொடுத்து "போங்கோ" என்று அனுப்பி....

விருப்பமில்லாத வாழ்க்கையால வெந்தே போச்சு அந்தக் குடும்பம். ஒருக்கா இரண்டுபேரும் ஊரைவிட்டு ஓட வெளிக்கிட்டு 'காசுகட்டாம ஓடுறான்' என்று பொலிஸ் பிடித்து அவனுக்கு நல்ல அடி. ஏலாமல் கொஞ்சநாள் ஆஸ்பத்திரிலும் கிடந்தவன் வேதநாயகம். அதிற்குப்பிறகு எதைப்பற்றியும் யோசிக்கிறதில்லை அவன். சம்மாட்டி பின்னேரம் வீட்டைவந்தா அவன் வாடிக்குப் போய்விடுவான். இல்லாட்டி ஏதாவது தொழிலுக்குப் போயிடுவான். கஸ்ரப்படுகிற ஒவ்வொரு இரவும் கடவுளைத் திட்டித்திட்டி 'பிள்ளையே வேண்டாம் வேண்டாம்' என்று ஒரு பிள்ளையளும் அவளுக்கு இல்லை. எப்பவோ ஒருநாள் ஆரோ பிச்சைக்கு வந்த மனிசி குடுத்திட்டுப்போன ஒரு பிள்ளையைத்தான் செல்லம்மா தன்ர பிள்ளையாய் வளர்த்தாள்.

ஊர், பெடியளிட்ட பிடிபட்டுப்போக செல்லம்மாக் கிழவியும் தன்னுடைய கடற்கரைக்காணிக்கு குடிவர கிழவனோட வந்திட்டா. இப்ப ஆரும் கிழவியை நிமிர்ந்து கதைக்கக் கூடாது. சூசானம் கிழவியை மிஞ்சின கடற்கரைப்பாசை வாயில் வரும். பயங்கரச் சண்டைக்காறி என்று ஊர் கிழவியோட கதைக்கப் பயம். உடைஞ்ச கட்டிடங்களையெல்லாம் கிழவி நின்று பார்த்துச் சிரிச்சுக் கொண்டுதான் போகும். கிழவிக்கு ஒரு பேரன் இயக்கத்தில் இருக்கிறான். அந்த ஊரைப்பிடிக்கிற சண்டையில அவனும் நிண்டவன் என்று கிழவி பெருமையாய்ச் சொல்லும். ஆமிக்காரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமில்லை, இந்த ஊரிலை இருந்த பழைய அதிகாரமும் ஆணவமும் கூட அழிஞ்சுபோச்சு என்று ஆருக்கும் புரியாத தத்துவங்கள் சொல்லும் கிழவி.

உண்மைதான். அப்ப ஊர்முழுக்க சம்மாட்டியைக் காணாம தேடி மூன்று நாளைக்குப் பிறகு பாழ்ங்கிணற்றில் கண்டதும் பொலிஸ் விசாரணையில ஒன்றும் புலப்படாமல் போனதும், சம்மாட்டியை அடிச்சுக்கொண்டுபோய் கிணத்துக்கை போட்டவரை இன்னும் ஊருக்குத் தெரியாது. வேதநாயகம் கிழவருக்கும், செல்லம்மாக் கிழவிக்கும் மட்டும்தான் அது தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் கொண்ட தீ



'அவளைக் கையை விடுகிறதா? இல்லாட்டி திரும்பச் சேர்க்கிறதா?... அவள் உண்மையாத்தான் கெட்டுக்கிட்டுப் போயிருப்பாளோ!.... சீ .. அவள் அப்பிடி நடக்கக்கூடிய ஆளில்லை.... சந்தர்ப்பம் சூழ்நிலைக்கு, ஆரெண்டாலும் மாறித்தான் ஆகோணும். அவளும் மாறிக்கீறிப் போயிருப்பாளோ?... கடவுளே அப்பிடியொண்டுமே நடந்திருக்கவே கூடாது... நடந்தாப்போல இப்ப என்ன, அவளென்ன குறைஞ்சுபோனாளே...... இல்லாட்டி அசிங்கமாய்த்தான் போனாளோ...... வேண்டாம், வேண்டாம் அவள் எனக்கு.... அவள் என்னை வெறுக்கேல்ல ஒருநாளும். நான் என்னண்டு அவளைக் கைவிடிறது?

கோழி கூவுது. நாளைக்கு வேலைக்குப் போகோணும். இரவில யோசிச்சா எல்லாம் பெரிசாத்தான் தெரியும்; விடிஞ்சால் எல்லாம் சின்னதாய்ப் போயிடும். இருட்டில புகைத்.து புகைவிடிறதுமாதிரி, இருட்டியும் சீனி இனிக்கிறது மாதிரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதன் சொன்னா சரியாத்தான் இருக்கும். அவன் படிச்சவன், எழுதவாசிக்கத் தெரிஞ்சவன். நெடுகலும் பேப்பர் வாசிக்கிறவன். அவனுக்கெல்லாம் தெரிஞ்சிருக்கும். அவன் சில வேளை சும்மாவும் சொல்லியிருக்கலாமெல்லோ?.... என்னடா நித்திரையும் வருகுதில்லை.

இனிமே கள்ளுத்தவறணைக்குப் போகக்கூடாது, வெறிச்சாத்தான் எல்லாம் பிசகுது. போனாத்தான் என்ன, அவனுக்கு வெறிவந்தால் அப்படியே கதைக்கிறது? நானும் சண்டைக்குப் போனது பிழைதான். தேவையில்லாத சண்டை.

என்னமாதிரிப் பேசினவன், எவ்வளவு கேவலமாய். " விட்டு வாங்கி, பெஞ்சாதியை வெளிநாட்டுக்கு அனுப்பிப்போட்டு அவள் அனுப்புற கஞ்சல் காசில குடிச்சுப்போட்டு என்னோட கதைக்கிறாய். டேய் அவள் உடம்பை வித்த காசடா அது. வெளிநாட்டில உன்ரமலிசிய அரபுக்காரன் சும்மா விடுவான் எண்டு நினைச்சியே! டேய் அவளை........ தான்ரா விடுவான்."

'அவனை அடிச்சிருக்கவே கூடாது. அதுவும் ரெத்தம் வாறஅளவுக்கு. காவல்துறைக்கும் போய், அவளின்ர மானத்தை ஒருக்கா வாங்கிப் போட்டுத்தானே வந்திருக்கிறன். ஊருக்கெல்லாம் தெரிஞ்சாப்பிறகு, சே.. என்ன செய்யிறது.

வெளியில நாய்குலைக்குது. வெள்ளி காலிச்சுப்போட்டுது போல. ஆரோ வேலைக்குப் போறாங்களாக்கும்.. விடியட்டும், வெளிச்சத்தில் முடிவெடுப்பம். சே, கண்ணெல்லாம் எரியுது.

என்னோட வாழ்ந்த வாழ்க்கையில அவளின்ர எந்தப்பக்கத்தைப் பார்த்தாலும் எந்தக்குறையையும் நான் காணாம எப்படிக் குறைசொல்லுறது, அவளை? அவளின்ர உழைப்பில, அவள் அனுப்பின காசில சொகுசா வாழ்ந்திட்டு அவளைமட்டும் என்னண்டு வேண்டாமென்று சொல்லுறது.'

மனதைப் பிச்சுப் பிடுங்கி உடலை உளத்தி, கற்பனைகளை கரைச்சுக்கழுவி, அந்த முடிவையெடுப்பதற்கிடையில், கடைசி அந்தரத்தையும் அனுபவிச்சுப் போட்டான் நடராசா.

'இனி வேண்டாம், அவளை உடனடியாக அந்த வேலையை விட்டுட்டு உடன வரச்சொல்லவேணும். அவளுக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை. அவளைக் கூட்டிக்கொண்டு வாறதுதான். எவனெண்டாலும் என்னெண்டாலும் சொல்லட்டும்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைக்கும் கள்ளுக்குப் போனான் நடராசா. நன்றாகக் குடித்தான். எல்லாவற்றையும் மறந்து பாட்டுச் சமா வைத்தான். அடி வாங்கின நாதனிட்டை மன்னிப்புக் கேட்டான். "உன்னுடைய மனிசியைக் கேடு கெட்டதனமாப் பேசினதுக்கு என்னை மன்னிச்சுக் கொள்" என்று நாதனும் மன்னிப்புக் கேட்டான். "மனிசியைக் கூட்டிக்கொண்டு வரப்போறன்" என்றான் நடராசா. "நல்லது மச்சான் " என்றான் நாதன்.

"மச்சான் நீ, சொன்னது மாதிரியும் நடந்திருக்கலாம் என்ன" நன்றாக வெறி ஏறியவுடன் கேட்டான் நாதன்.

"எல்லாருக்கும் அப்படியென்றில்லை மச்சான். உலகத்தில உள்ளமாதிரி., நல்லவங்களும் இருக்கிறாங்கள்தானே. என்றாலும் எல்லோருக்கும் அது வாய்க்கோணும். நாங்கள் ஆருக்கோ எங்கேயோ அதுவும் ஒரு வெளிநாட்டில ஒரு பொம்பிளைய அடிமை வேலை செய்ய அனுப்பினா அது எங்கடை பிழைதானே" ஆறுதலுக்காய்ச் சொன்னான் நாதன்.

"என்ன இருந்தாலும் அவள் எனக்கு வேணும் மச்சான்" கடவுளே அவளுக்கு ஒன்றுமே நடந்திருக்கக்கூடாது. அழுதான், தலையிலடித்தான்.

●●● ●●●

"ஐயே ஒங்கட பேர் சொல்லுங்கோ" அவளின் கொச்சைத்தமிழ் அதிகாரம்.

"ஐடென்டிக்காட்டில பேர் இருக்கு. நடராசா" 'இன்னும் இந்த விசாரிப்புக்களை விடேல்லயே' என்ற எரிச்சல்.

"வயசு சொல்லுங்க"

"சரியாத் தெரியேல்ல. ஒரு முப்பத்திமூன்று போடுங்கோ ஐடென்டிக்காட்டில பிறந்த 'டேற்' இருக்குத்தானே."

"எந்த ஊர்"

எந்த ஊரைச் சொல்லுறது? முதல் இருந்த ஊரையா இப்ப இருக்கிற ஊரையா?

"ஐயே எல்லா விபரம் சொல்லுங்க. மத்த ஆக்கள் போகோணும் தானே"

எல்லாவற்றையுமே சொன்னான்.

"பேர் நடராசா, வயது முப்பத்திமூன்று, ஊர் முல்லைத்தீவு, முல்லைத்தீவில தீயோகு நகர். ஒரு மனுசி" பக்கத்தில் இருந்தவனுக்கு சிரிப்பு வந்துவிட்டது. அவனுக்கென்ன தெரியும், நடராசாவின்ர அவதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தி இப்படித்தான் ஆமி விபரம் கேட்க ஒத்தை ஒத்தையாப் பதில்சொல்லி அடி வேண்டினகதை.

"மூன்று பிள்ளைகள்; மூத்தது பொம்பிளைப்பிள்ளை. மற்ற ரெண்டும் ஆம்பிளைப்பிள்ளை. நானும் பிள்ளையளும் சிலாவத்தை தீயோகு நகரில் இருக்கிறம். மனிசி வெளிநாட்டில" மளமளவென்று சொல்லி முடித்தான், நடராசா. வேண்டுமென்றும்தான்.

"மனிசி எந்தநாட்டில வேலை செய்யிறது" மெல்ல சிரித்தபடியே கேட்டாள் ஆமிப்பெட்டை.

"லெபனான்"

அவன் மெல்ல நிமிர்ந்து அவளைப் பார்த்தான், கடைவாய்க்குள் அவள் சிரித்தது தன்னை கேவலமாய் நினைக்கிறாள் போல் தோன்றியது அவனுக்கு.

"மனிசிய வெளிநாட்டுக்கு அனுப்பிப்போட்டு, நீ இஞ்ச 'லெவல்' அடிச்சுக்கொண்டு திரியிறாய் என்னடா" என்பது போல. என்ன செய்யிறது? பிழை விட்டுட்டன். அவளை உடன் வரச் சொல்லத்தான் போறன். உனக்கு நக்கலாக்கிடக்கு. உங்களாலேயும்தானேயடி என்ர கோமதி வெளிநாடு போகவேண்டி வந்தது.' புறுபுறுத்தான். 'ஐடன்டிக் காட்'டை நீட்டியபடியே "என்ன சொல்றது" என்று கேட்டாள். ஒன்றுமில்லையென்று போய்விட்டான் நடராசா. வழியில் நின்ற ஒரு மொட்டைத்தலையன் மறித்து, "ஐடென்டிக்காட்" கேட்டான். எரிச்சலாய் வந்தது நடராசாவிற்கு. மினிபஸ்காரன் ஒருதன் அந்தப்பக்கமாய் 'வவுனியா' என்று கத்திக்கொண்டு நின்றான்.

"ஏறி... ஒருசீற்றைப்பிடிச்சுக் கொஞ்சநேரம் இருக்கலாம் எண்டால்..." புறுபுறுத்தான் நடராசா.

"கொய்த யண்ணே",

சிங்களத்திலதான் கேட்டான் அவன். நடராசாவுக்கும் சிங்களம் தூள்தான். "வவுனியா" என்றான் ஒத்தையாய்.

"எங்க இருந்து வாறீங்கள்."

"முல்லைத்தீவு"

"முல்லைத்தீவில் என்ன நடக்குது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாடுநடக்குது' என்று சொல்லநினைத்தான். சொல்லவில்லை. இப்படி பகிடிக்கதை சொல்லி கனதடவை மாட்டின ஞாபகம்.

"எங்க போறது, ஆ வவுனியா, வவுனியா என்னத்துக்கு"

'மனிசியோட கதைக்க'

"மனிசி எங்க இருக்கிறது"

கடைசிவரைக்கும் விடமாட்டானாம். அவள் லெபனானுக்கு வேலைக்குப் போனதைச் சொல்ல வேணும் இவனுக்கு. இவன் நக்கலாய்ப் பார்க்கோணும். அவன் நிற்கவில்லை. சீ.ஐ.டீக்கெல்லாம் இப்ப பயமில்லை அவன்.

வவுனியாவில் இறங்கி தனக்குப் பழக்கமான அந்த 'லொட்ஜ்'சை நோக்கி நடந்துகொண்டிருந்தான். கோமதியின் 'போன் நம்பர்' அந்த 'லொட்ஜ்'சின் பதிவில எப்பவும் இருக்கும். அவன் வவுனியாவில் இருக்கும் போது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 'போன்' பண்ணுவாள். அதில் வந்த பழக்கம்.

இடையில் சைக்கிளில் வந்த தாடிக்காரத் தடியனைக்கண்டு, ஒருமுறை திடுக்கிட்டுத்தான் போனான் அவன். 'டேய் இவன் இன்னும் சாகேல்லையா, இவனை யாரும் கொண்டிருக்கக்கூடாதோ?' அவன் சைக்கிளில் போவதையே பார்த்துக்கொண்டிருந்தான் கொஞ்ச நேரம்.

அவனை நடராசாவால் மறக்கவே இயலாது. முன்பு நடராசா வவுனியாவுக்கு வரும்போது, அவனை எப்படியெல்லாம் விசாரிக்க வேணுமோ அப்பிடியெல்லாம் விசாரித்த ஆள். அவனும் தமிழன்தான். ஆனால் தமிழே கதைக்கமாட்டான். சிங்களவன்போல ஒரு நடிப்பு. சமாதானம் வந்தப்பிறகு, இப்ப ரோட்டில திரியிறான். 'இறுக்கவேணும். இவனுக்கு.'

நடராசாவின் பெற்றோருக்குப் பிறப்பிடம் மலையகம்தான். ஒரு இடப்பெயர்வில் வன்னியில் வந்து குடியேறியவர்கள். நடராசாவின் மலையகத்தமிழின் அழகில் மயங்கியவள் கோமதி. கோமதி வன்னியில் சொந்தக்காரனைப் பார்க்கவந்து, நடராசாவுடன் ஓடியொளித்து... இரண்டுபேரினதும் பெற்றோர்களுமே வெறுத்துவிட, மூன்று பிள்ளைகளுக்கு பெற்றோராய், முல்லைத்தீவுப் பக்கம் குடியேறி, சந்தோசமான; பரவாயில்லாத வருமானத்துடனான நல்ல வாழ்க்கை தேடிவிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பெயர்வு இவர்களையும் சேர்த்துக்கொண்டபோது மெல்ல மெல்ல நடராசா தன்பெற்றோருடன் உறவாக கோமதியும் ஒருமுறை தன் பெற்றோரிடம் போய்வந்தது. சந்தோசப்பட்டது அவர்கள் குடும்பம்.

கோமதி தன் பெற்றோருடன் திருகோணமலைக்குப் போவோம் என்று கேட்டதற்கு நடராசா முதலில் மறுத்துவிட்டான். போரின் நெருக்கடிகளும், கஸ்ரங்களும் கூடிப்போக அவன் திருகோணமலைக்குப் போக இணங்கியபோது தாண்டிக்குளம் பாதை மூடப்பட்டுப்போயிற்று.

வேறுபக்கத்தால் பாதைகள் திறக்கிறதும் மூடுறதுமாய் இழுபட சனங்களும் கள்ளப்பாதைகளால் போகவெளிக்கிட, நடராசாவும் வெளிக்கிட்டான்; கோமதியின் கரைச்சல் தாங்கமுடியாமல்தான்.

போகும்போது பெடியள் சொல்லித்தான் விட்டவர்கள். "போறீங்கள் போனப்பிறகுதான் நினைப்பீங்கள் ஏனடா வந்தமென்று சொல்லி"யென்று.

போனவுடன் ஆமி நல்லாத்தான் வரவேற்றான். ஆனால் பின்புதான் தெரிந்தது.

ஒரு ஆமிக்காரன் கேட்டான் "என்ன எல்.ரீ.ரீ.ஈ சாப்பாடு தாறதில்லையா.? அதுதான் இங்கவந்ததா.?" என்று. நடராசா கோமதியை ஒரு பார்வை பார்த்தான்.

"பாத்தியாடி சொல்லச் சொல்ல கேளாம வந்து கடைசியில அவன் என்ன கேள்வி கேக்கிறான் எண்டு". போகப் போக என்ன ஆகுதோ!

கோழிக்கூட்டு முகாமில் பெயர்களைப் பதிவு செய்தபோதுதான் தாங்கள் அடைபட்டுப்போன உண்மை தெரிந்தது. புதிசா வன்னியில இருந்து வந்தவர்களுக்கு விசாரணை என்று அந்தக் குடும்பங்களின் தலைவர்களை எல்லாம், பிரித்தெடுத்தார்கள். நடராசாவையும் கூடத்தான்.

போகும்போது கோமதியைப் பேசிக்கொண்டுதான் போனான் நடராசா. "அடியே, சும்மா ஊரில கிடந்தவன கொணர்ந்து குடுத்திட்டியாடி. நீ நல்லா இரு. சந்தோசமா இரு. என்னை உப்புக்கருவாடு போட்டுத்தாண்டி உன்னட்டைத் தருவாங்க. நான் செத்திட்டா நீ ஒரு ஆமிக்காரன கட்டிக்கிட்டு நல்லா இரு. நல்லா இரு."

அவன் அப்படிக் கதைப்பதைப் பற்றி அவள் கவலைப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அப்படித்தான் வஞ்சகம் இல்லாதவன், அது தெரியும் அவளுக்கு. ஆனா 'இந்தாள் தேவையில்லாமல் ஏதேனும் கதைச்சு அடிவாங்கப் போகுதோ' என்பதுதான் பெரிய கவலை.

பிடிக்கிறதும் அடிக்கிறதும் காணாமல் போறதும் காசுலஞ்சம் கொடுத்து வெளியில எடுப்பதும் அந்த முகாமில் சகஜம். கொஞ்சக்காசு கொடுத்தால் கொழும்புக்கும் போகலாம்; போயுமிருக்கிறார்கள்.

'அடே எல்ரீரீஈ' வருகிறவன் போகிறவன் எல்லோருமே ஒருமுறை அடித்து விட்டோ கிள்ளிவிட்டோதான் போவார்கள். எசகு பிசகா கதைச்சுக் கதைச்சே நல்லா அடிவாங்கிப் போட்டான் நடராசா. சிங்களம் தெரிஞ்சிருந்தும் தமிழில் கதைத்தது பெரிய பிழை. விசாரித்து விசாரித்து அவனிட்ட ஒண்டுமே இல்லையென்று 'விசாரணை வைத்து விசாரித்தது வேலை மினக்கெட்ட'தென்று கலைக்காத குறையாய் கலைத்துவிட்டார்கள், அவனை ஒரு லூசன் என்று. அவர்களுக்கென்ன, ஆரையாவது கொஞ்சப்பேரைப்பிடித்து விசாரிக்கவேணும். அதில் இரண்டுபேரைக் கழுத்துறைக்கு அனுப்பவேண்டும். அவ்வளவுதான். சம்பளத்திற்கு வேலைசெய்ய வேண்டுமே.

கோழிக்கூட்டுக்கு அவன் திரும்பி வரும்போது நேராக நடந்துவரவில்லை. கூனிக்குறுகிப்போய் நோய்வாய்ப்பட்டுத்தான் வந்தான். ஆத்திரம் தீர ஒருமுறை கோமதியைப் பேசினான். குழந்தையைப் போல் "திருகோணமலைக்கெண்டு கூட்டிக்கொணர்ந்து ஆமிக்காரனிட்டை அடியும் வாங்கித்தந்து கோழிக்கூட்டில அடைச்சுப்போட்டாய் என்ன? சுகம் வரட்டும் பார்க்கிறன்டி" என்றான்

சுகம் அவ்வளவு கெதியாய் வந்துவிடவில்லை. கஸ்ரங்களைச் சமாளிக்க கோமதி கூலிவேலைக்குப் போகத் தொடங்கிவிட்டாள். நடராசாவை நினைக்க அழுகையாத்தான் வந்தது அவளுக்கு, ஷெல்லடிக்கும், விமானக்குண்டு வீச்சுக்கும் பயந்து அவனைக் கூட்டிவந்து, படுக்கையிலே போட்டுவிட்டனே என்று. 'உயிரோட இருக்கிறானே' என்ற ஒரு ஆறுதல்.

வேலைக்குப் போய்வந்தாலும், நடராசாவைக் கவனிப்பதிலேயே அரைவாசி நேரம் போகும். "இப்ப தான்ரி உன்ர அன்பு முழுசா எனக்குத் தெரியுது. ஆனா ஆமியிட்ட அடிவாங்கித்தந்திட்டாய்" என்பான். அவன் என்ன பேசினாலும் அதை அவள் கண்டுகொள்வதில்லை. அவள் என்ன செய்வது?

●●● ●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த யோசனையைச் சொன்னது ராசேஸ்வரி அக்காதான். அவ, வெளிநாட்டுக்குப் போய் உழைச்சுப்போட்டு வந்து ரண்டு லட்சம் ரூபாவரை வங்கியில் போட்டுவிட்டு கஸ்ரமில்லாமல் சீவிக்கிறா. நடராசாவிடம் ஒருநாள் கோமதி கேட்டாள் "நானும் வெளிநாடு போய் வேலை செய்யட்டோ" என்று. அதற்கு அவன் சிரித்தான். "வவுனியா கூட்டிக்கொண்டுவந்து ஆமிக்காரனிட்ட கொடுத்து அடிவாங்கித்தந்து என்னைப் படுக்கையில போட்டுவிட்டு நீ கஸ்ரப்படுறாய். நான் என்ன சொல்லுறது. எல்லாம் உன்ர இஸ்ரம்."

தன்னையே கலியாணம் கட்டவேண்டும் என்று தனக்குப் பின்னாலேயே அலைஞ்சு எல்லாற்றை எதிர்ப்பையும் சம்பாரிச்சு தனக்காகவே இருக்கிறவளை வடிவா வச்சு பாக்கமுடியேல்ல என்றுதான் கவலை அவனுக்கு. இருந்த மிச்சமான காசு நகையெல்லாம் அவளோடேயே போய்விட்டது. அரசாங்க நிறுவனம் ஒன்றுதான் அனுப்பினதாம். போய்க் கொஞ்சநாளில் காசு அனுப்பினாள். 'சுகமாயிருக்கிறன்' என்று கடிதம் போட்டாள்.

நடராசா, வீட்டில் சமைப்பதும், பிள்ளைகளைப் பார்ப்பதும், ஆமி 'செக்'பண்ண வந்தால் மொழிபெயர்ப்பு செய்யிறதும், இருந்திட்டு கொஞ்சம் கொஞ்சம் குடிக்கிறதும், கொஞ்சம் உடம்பிலும் உசார் வந்திட்டுது, என்றாலும் வெளியில போனா விசாரணைத் தொல்லையென்று வீட்டிலேயே அடஞ்சுகிடந்திட்டான். அவனுடைய பகிடி சேட்டை பழமொழியெல்லாம் இப்போது இல்லாமலே போய்விட்டது. சந்தோசங்களைத் தொலைத்தவனாய்ப் போய்விட்டான். அவனின் சந்தோசமே அவள்தான்.

ஒரு மழைக்காலத்தில் ஒழுக்குகளுக்குள் நனைந்து தோய்ந்து அவதிப்பட்ட நேரம் ஒருநாள் சமாதானம் வந்தது. நன்றாயிருந்தது அவனுக்கு. ஆமிக்காரர் பார்த்துக்கொண்டு நின்றார்கள். சீ.ஐடியினர் சிரித்துக்கொண்டு போனார்கள். அவன் நல்ல வெறியில் வந்தபோதும் பொலிஸ்காரர்கள் ஒன்றும் கேட்கவில்லை. இரவு சினிமாப்படம் பார்த்தான். சே..... கோமதி வெளிநாட்டுக்குப் போகாமலே இருந்திருக்கலாம்.

பாதை திறந்தது இன்னும் சந்தோசம் அவனுக்கு. ஊருக்குப் போவோம் என்று கோழிக்கூடு வாபஸ் வாங்கப்பட்டது. சனங்கள் தனித்தனியாக குடியேறத்தொடங்க நடராசாவும் விதானையிடம் பதிந்து முல்லைத்தீவுக்கே வந்துவிட்டான்.

●●● ●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குப் பழக்கமான அந்த 'லொட்ஜ்'சிற்குப் போனதும் உடனே 'ரெலிபோன்' எடுத்தான். யாரோ பேசினார்கள்; போனை வைத்துவிட்டு 'ரூமை'ப் பதிவுசெய்து காத்திருந்தான். மனம் இன்னமும் குழப்பத்திலிருந்து மீளவில்லை. 'அவளோடு பேசவேண்டும்; எல்லாவற்றையும் கேட்டுவிடவேண்டும். அப்படி எதுவுமே நடக்கவில்லையென்று அவள் சொல்லவேண்டும்; பொய்யாக என்றாலும்.'

'நாளைக்கு வெள்ளிக்கிழமை சிலவேளை 'லொட்ஜ்'சிற்க்கு போனெடுத்து என்னைக் கேட்கலாம். 'அடுத்தநாளுக்குக் காத்திருந்தான்.' விடிந்ததும் 'ரெலிபோன்' எடுத்தான். அவள் பேசவில்லை. 'அவள் வீட்டில் இல்லையோ எங்காவது போய்விட்டாளோ' காசும் முடிஞ்சு கொண்டு போகிறது.

என்னவோ அவள் கதைப்பாள் என்று நம்பிக்கை இருந்தது. 'நான் நினைப்பது அவளுக்குத் தெரியும். தும்மல் வரும். அவள் கதைத்தவுடன் எல்லாத்தையும் கேட்டுவிடவேணும். அப்படி ஏதும் நடந்திருந்தால் அவள் கொண்டுவாற காசைப் பறிச்சு எங்கையாவது எறிஞ்சுபோடவேணும். இல்லை ஆரும் அனாதைப் பிள்ளைகளுக்கு குடுப்பம். சீ அதுவும் வேண்டாம்.

அது அரிகண்டக் காசு. அதுகளுக்கும் வேண்டாம். நானும் தான் இவ்வளவு நாளும் அவள் அனுப்பின காசில குடிச்சுத்திண்டு.. என்னில எவ்வளவு பிழை? அவளிட்டை ஒண்டுமே கேட்கப்படாது. அவள் கதைச்ச உடனே அவள இஞ்ச வரச்சொல்லிறது; அவ்வளவுதான்'

என்னவோ எல்லாமே தப்புத்தப்பாய் நடப்பதாக கவலைப்பட்டான். அந்தரமாயிருந்தது. 'என்ன செய்யிறது; என்னதான் செய்யிறது விசாராக்கிடக்கு' இன்னுமொருமுறை போனெடுத்துப் பார்த்தான். சரிவரவில்லை.

'லொட்ஜ்'சில போட்டிருந்த 'சன்ரீவி'யைப் பார்த்தபடியே 'மேகமாய் வந்து போகிறேன்' என்ற பாட்டின் அர்த்தத்தில் அயர்ந்து போனான்.

'ஸ்பீக்கரி'ல் "நடராசாவுக்கு கோல் கோமதி கூப்பிடுது" என்ற சத்தம் கேட்டு விழுந்தடித்துக்கொண்டு ஓடினான். 'ரெலிபோன்' அடைப்புக்குள் புகுந்து கதவை வேகமாய் சாத்தி, 'போனை' காதில்வைத்து "கோமதிதானே என்றான்." 'கோமதிதான் கதைக்கிறன்.' கோமதியின் சுரத்தில்லாத குரல் காதில் புகுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோமதி நீ இனிமேல் அங்க வேலைசெய்ய வேண்டாம். இஞ்ச உடனவா" எடுத்த எடுப்பிலே அதைச் சொன்னான்.

"................"

"என்ன கோமதி ஒரு சத்தத்தையும் காணேல்ல"

"................."

"கோமதி"

"நான் நேற்றே வந்திட்டன்" காதுக்கு மெதுவாகவே கேட்டது அது அவனுக்கு.

"எங்கவந்திட்டாய், இலங்கைக்கா? இப்ப எங்கயிருக்கிறாய்? கொழும்பிலயா?"

"இல்ல... வவுனியாவில."

"ஏன் உனக்கேதும் பிரச்சினையோ"

"எனக்கு மட்டுமல்ல என்னோடு வேலைக்குப்போன கனபேருக்கு, வீட்டுக்காறற்ரை தொல்லை தாங்கமுடியாமல் வீட்டை விட்டோடி வெளியில அறையெடுத்துத் தங்கி வேலை செய்து விசாமுடிஞ்சு இலங்கைக்கு வரமுடியாமல்.... ஆக்கினைப்பட்டு...." அழுதாள் கொஞ்சநேரம். "பேப்பர் பாத்திருப்பீங்கள்; பேப்பரில் எல்லாம் வந்திருக்கு"

கொஞ்சநேரம் மௌனமாய்ப் போனது. 'ரெலிபோனி'ல் எந்தப் பேச்சுமில்லை. அவள் பதில் சொல்ல யோசித்துக்கொண்டும், அவன் என்ன பதில் சொல்லப்போகிறான் என்று அவள் யோசித்துக் கொண்டும் நேரம் கரைய "நீ எங்க நிற்கிறாய் கோமதி" என்று கேட்டான் அவசரமாய்த் திடமாய்.

"நீங்க நிக்கிற லொட்ஜ்சிற்கு எதிரில அந்தப் பெரிய மரத்துக்குக்கீழ இருக்கிற கொமினிக்கேசனில."

'லொட்ஜ்'சைவிட்டு வெளியில் வந்தான் நடராசா. காசுகேட்டவனைக் கூட கவனிக்கவில்லை. வாசலில் நின்று பார்த்தான். அந்த மரத்துக்குக் கீழே வாகனங்கள் நின்றுகொண்டிருந்தது. சனங்கள் அங்கும் இங்குமாக போய்வந்து கொண்டிருந்தார்கள். ஒரு பெண்மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டுகைககளிலும் ஏதோ ஒரு பொதியை வைத்துக்கொண்டு நின்றாள். கோமதியைக் காணவில்லை.

"உள்ளே இருப்பாளோ"

வேகமாய் அந்த இடத்திற்கு ஓடினான். அவளை உடன பாக்கோணும் என்ற அவசரம். படியேறி வாசலைத்திறந்து உள்ளேயும் போய்த் தேடினான். அவள் இல்லை.

வெளியேவந்தவனை அந்தப்பொதியோடு நின்ற பெண் பார்த்துக்கொண்டே நின்றாள். 'கோமதியா? காய்ந்து மெலிந்து நோய்க்காரிபோல்....!'

"கோமதி"

கோமதியின் கண்கள் கரைந்து இமையை உடைப்பதுபோல் கண்ணீர்.

"கோமதி உன்னை என்னால மட்டுப்பிடிக்கேல்ல இதென்ன கையில?"

கிட்டப்போய்ப் பொதியைப் பார்த்தான். முகம்மட்டும் துப்பட்டியின் சின்ன இடுக்கில் தெரிய ஒரு குழந்தை. நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"ஆற்றை இது"

அவள் எதுவும் பேசவில்லை.

"இது உன்ரை இல்லைத்தானே..."

கண்களில் பொல பொலவென கண்ணீர் வழிந்தோட மெல்லத் தலைகுனிந்தாள் கோமதி. சிறிது நேரம் மௌனமாய்க் கரைந்து போகப் புரிந்துவிட்டது அவனுக்கு.

"ஏனிப்ப அழுகிறாய், என்னட்ட தா அதை" கையில் வாங்கினான். துக்கமும் சந்தோசமும் தொண்டையை அடைக்க அவன் தோள் மீது சாய்ந்தாள். கதறினாள்.

"அழாதை சனமெல்லாம் பாக்குது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் நிகழ்காலமும்



அப்படி நடக்குமெண்டு ரெண்டு பேருமே எதிர்பாக்கேல்ல. இவ்வளவு நாளிலயும் எவ்வளவு கவனமாய்... தப்பித்தவறிக்கூட அவங்களைச் சந்திக்கேல்ல., ஆனா இண்டைக்கு வானத்தில் ஒருதுளி மேகமும் இல்லை. வெள்ளி பூத்தபடி, கடல் முழுவதும் நெருப்புக் கோளங்கள் பறந்தபடிதான் இருக்கும். இன்னும் அவங்கள் நிக்கிறாங்கள். பெரிசா எரிஞ்சநெருப்பு மங்கிக் கொண்டே போகுது. 'போட்'டு தாளுது போல.

குருசுவெள்ளியைத் தேடினான் செபஸ்தியான். கப்பல் வெள்ளிதான் அகப்பட்டது. எதிரா நிக்கும் குருசு வெள்ளியைப்பார்த்தே நேரத்தைக் கணிச்சுப்போட்டான். நீர்பாடு, வாடைநீரெண்டு வெள்ளனவே தெரியும். 'அப்படியெண்டால் நாங்கள் முள்ளிவாய்க்காலுக்கு நேர இருப்பம்.' தூரத்தில நேவி அடிக்கிற ரவுண்ஸ் வாறவெளிச்சத்தில தெரியுது.திரும்பிப்பார்த்தான் கந்தசாமி. பின்னால வந்துகொண்டுதான் இருக்கிறான் செபஸ்தியான். நின்று கேட்டான் கந்தசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடா பயந்து போனியே"

"இல்லை மச்சான் நீ என்னமாதிரி" செபஸ்தியான் கதைக்கேல்ல. நிண்டு கதைக்கேலாது. கடல் அலைச்சல். ஆளையாளை கிட்ட வரவிடாம அலைச்சுக் கொண்டு ........

காலில உப்பு எரிச்சல். "காயம் பெரிசோ சின்னதோ கரை பிடிச்சிருவனோ? கரை மட்டும் நீந்த பெலம் காணுமோ?" மெல்ல மனசுக்குள்ள பயம் எட்டிப்பார்க்கத் தொடங்கிட்டுது.

"மச்சான் முள்ளிவாய்க்கால் தாண்டியிருப்பம் போல"

"ஓம்"

"நீர்பாடு வாடைநீர்"

"ஓம்" ஒத்தைப்பதில் செபஸ்தியானிட்டையிருந்து.

"பயப்படுறியோ" கந்தன் கேட்டான். அவனுக்கு தெரியும் செபஸ்தியான் சரியாப்பயந்திட்டானென்று. செபஸ்தியான் பயத்தைக்காட்ட விரும்பேல்ல.

கடல்காத்து கதைக்க விடேல்ல. "நான் எத்தின மைலும் நீந்துவன் என்ன செய்யிறது காலும் ஏலாமல்கிடக்குது." கொஞ்சம் பெலமாத்தான் சொன்னான்.

"கந்தசாமி கொஞ்சம் கிட்டவா" நீந்திவந்து சொன்னான் செபஸ்தியான்.

"இல்லமச்சான் கொஞ்சம் இறுக்கி நீந்தாட்டி செம்மலை தாண்டிருவம்." உண்மையெண்டுபட்டது செபஸ்தியானுக்கு.

வெள்ளி வெளிச்சத்தைத்தவிர கடல்முழுவதும் இருட்டு. அலைச்சல் தவிர, அமைதியாய் இருந்தது. பயமுறுத்திறமாதிரி கடல். ஆளையாள் சத்தம் போட்டுத்தான் அடையாளம் காட்டோணும். எங்க கரையிருக்கு? எங்க நீந்திறது? எதுவுமே தெரியேல்ல. இன்னும் தூரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற 'போட்'டுகளுக்கும் அடிவிழுறமாதிரி 'ரவுண்ஸ்' வெளிச்சங்கள். "ஆரார் செத்தாங்களோ? எங்கள மாதிரி எத்தனைபேர் நீந்திறாங்களோ?" திரும்பவும் தங்கட பக்கத்தால 'நேவி' வருவானோ? ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் கவனிச்சு நீந்திக் கொண்டு......... ஞாயமான தூரம் நீந்தி வந்தாச்சு.

'விடியும்மட்டும் சமாளிச்சு நீந்திட்டாப்போதும். தேடி வாறவங்கள் ஆரும் கண்டுடோணும். கடவுளே விடியப்புறம் நேவிக்காரன் திரும்பி வரக்கூடாது. இல்லையெண்டா தேடிவாறவனும் திரும்பிப் போயிடுவாங்கள். செபஸ்தியான் மனதுக்குள்ள கடவுளை மண்டாடிக்கொண்டேயிருந்தான்.'

போனமுறை ஒருக்கா இப்படித்தான் இரவு நேவி அடிக்க எல்லாரும் வலைகளை வெட்டிப்போட்டு ஓடிவந்து விடிய வலைதேடிப்போன 'போட்'டுகளுக்கு அடி விழுந்து, எத்தனை பிரேதங்கள் மாத்தளனிலயும், தீபாப்பிட்டியிலயும், சாலையிலயும் கையில்லாமல் காலில்லாமல் மீன்திண்டு அங்கங்கு ஒதுங்கினது. தேடிவாறவங்களுக்கு அந்தப்பயம் கட்டாயம் இருக்கும்.

கடவுளத்தவிர ஆரும் தங்களைக்காப்பாத்த ஏலாது எண்டு நினைச்சுட்டான் செபஸ்தியான். மனசுக்குள்ள அந்தோனியாருக்கு நேத்திவச்சாச்சு. "அந்தோனியப்பு நாளைக்கு கடலில நேவி வரக்கூடாது. ரெண்டு கிடாரம் இல்லை நாலுகிடாரம் கஞ்சி காச்சிக்கொடுக்கிறன்."

கடலலைச்சல். கண் மண் தெரியேல்லை. ஒருக்கா உப்புத்தண்ணியை நல்லா குடிச்சிட்டான். நெஞ்செல்லாம் எரிஞ்சு கைப்பேறி தொண்டையெல்லாம் வரண்டு சொட்டு உமிழ்நீர்கூட வாயில இல்லை. அவனின்ர தலையுதறல் எதுக்கெண்டு கந்தனுக்கு விளங்கிட்டுது. "பயப்படிறியோ மச்சான்" கந்தன் கேட்டான். "ஏன்ரா நான்பயப்படுவன் என்று நினைக்கிறியே. உன்ர தங்கச்சி,.. பிள்ளையள நினைக்க" செபஸ்தியானுக்கு தான் ஏன் இப்படி சொல்லுறன் என்ற மாதிரியும் இருந்தது. பொறுப்பெல்லாத்தையும் கந்தனிலேயே தூக்கிப்போட்டமாதிரி. என்ர மனிசி பிள்ளையள் எண்டு செபஸ்தியான் சொல்லாமல் விட்டிட்டு "உன்ர தங்கச்சி பிள்ளையள்" எண்டு சொன்னது செபஸ்தியான் தன்னிலேயேதான் நம்பிக்கை இழந்து போனது மாதிரித்தான் கந்தனுக்குத் தெரிந்தது. கந்தனுக்கு தான் கரைய போயிடுவன் என்ற நம்பிக்கை இருந்தது.

அது போலத்தான் செபஸ்தியானுக்கும் கந்தன்கரைய போயிடுவான் எண்டு நம்பிக்கையிருந்தது. அதுதான் அவனும் அப்படிச்சொல்ல வேண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததோ? மத்தியானம் தொழிலுக்கு வெளிக்கிட மனுசி சொன்னது மனசைப்போட்டு உளைச்சது. "இண்டைக்குத்தான் கடைசி. இனிமேல்......." இடையிலேயே அவளின்ர வாயில அடிச்சு அவளைச் சொல்ல விடாமல் செய்துபோட்டான். கண்கலங்கி அவள் மிச்சத்தையும் சொல்ல வெளிக்கிட,

"தொழிலுக்குப்போகேக்க அழுறதோடி! நாளைக்கு மீன் படேல்லையெண்டால் உன்னை..." பயமுறுத்தி போக்காட்டி அழுகையை நிப்பாட்டி, மூத்தவள தூக்கிக் கொஞ்சி, 'அப்பாக்கு மீன் படுமோ' எண்டு கேட்டு, பிள்ளையும் ஓமெண்டு அப்பாவை அவளும் கொஞ்சி, மனிசியையும் "அழாதையடி" என்று கன்னத்தில ஒருதட்டும் தட்டி...... சொன்னா செய்வாள் அவள். நானில்லாட்டி அவளிருக்காள், ஐயோ எண்டு கத்தோணும் போல.........

செபஸ்தியான் கதைக்காமல் வாறது கந்தனுக்குப் பிடிக்கேல்ல.
"மச்சான்"

"என்னடா?" தன்ர பயம் கந்தனுக்குக் தெரியக்கூடாது என்று கோபத்தைக்காட்டினான்.

'நாளைக்கு கடற்கரை கவலையில கிடக்கும். இழவு போல கூடிநின்று குமுறும். சனம் தேடிவர வெளிக்கிடுவாங்கள். ராசாண்ணனும் ரஞ்சனும் கட்டாயம் தேடி வருவாங்கள். தங்கச்சி ஆருக்கெண்டு அழுவாள்?'

"கொத்தானைக் கூட்டிக்கொண்டு போறாய்" தங்கச்சி சொன்னது திரும்பத்திரும்ப ஞாபகத்திற்கு வந்துபோனது. "விட்டுட்டு வரமாட்டனடி" கந்தன் மனசுக்குள் கத்திக்கொண்டான்.

கந்தனுக்கு சும்மா இருக்கிறதெண்டால் சரிவராது?. அவன்தான் வலியவந்து செபஸ்தியானை தொழிலுக்கு இழுத்துக்கொண்டு போறது. செபஸ்தியான் நீச்சல்ல கெட்டிக்காரன். ஏதாவது பிரச்சனையெண்டாலும் தன்னையும்காப்பாத்திக் கூட்டிக்கொண்டு வருவான் எண்ட நம்பிக்கை. இப்ப அவனை; தான் தான் காப்பாத்திக் கூட்டிக்கொண்டு போகோணும் எண்ட நிலை. தனிய நீந்திப்போறதெண்டால் போயிரலாம். எப்படி விட்டுட்டு போறது?

இண்டைக்கு கந்தன் இப்படி ஒரு பெரிய தொழிலாளியா இருக்கிறதெண்டா, நல்லா உழைக்கிறதெண்டா காரணம் செபஸ்தியான்தான். கந்தனை எல்லாரும் காகக்குஞ்சென்றுதான் சொல்லுறது. நிறத்தாலதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு அந்தப் பட்டப்பெயர். கடலையும் கரையையும் தவிர வேறெதுவுமே தெரியாது. சினேகிதம் எண்டால் செபஸ்தியான் ஒராள்தான். பள்ளிக்கூடமே தெரியாது. சின்னவயசிலேயே தகப்பன் கரவலையில சேத்துவிட்டதால கரவலைதான் பள்ளிக்கூடம். அப்பாவுக்குப்பின் அம்பா சொல்லப்பழகி... அவன் அம்பா சொன்னால் அதிலகூட பாடுறபாட்டு ஒண்டிருக்குது. "அம்பாச் சொன்னா இன்பமில்லை அவளைத் தொட்டாப் பாவமில்லை" அம்பாவை மட்டும்தான் தொடுவான். இந்த இருபத்தாறு வயதுவரைக்கும் எவளும் பார்த்ததும் இல்லை; இவனும் பார்த்ததும் இல்லை. இப்பதான் கடற்தொழிலெல்லாம் காலத்துக்குக்காலம் மாற எல்லாத்தொழிலையும் சின்ன வயசிலே பழகிட்டான். மீன் குஞ்சுக்கு நீந்தவா தெரியாது. அடிக்கடி வாயிலவாற வார்த்தை அது அவனுக்கு. கஸ்ரப்பட்டு உழைச்சவன்தான். காசொண்டும் கையில இல்லை. எல்லாம் அம்மாவுக்குத்தான் தெரியும். கூடப்பிறந்ததுகள் மூணையும் கரைசேர்த்திட்டான். கடைசியைத்தான் செபஸ்தியான் கட்டினது. என்னண்டு விட்டுட்டுப்போவான்? தங்கச்சி கத்துவாள்.

"ஒண்டுக்க ஒண்டு, ஒண்டா ஏன்ரா தொழிலுக்குப் போனநீங்கள்? பேந்தேனடா விட்டுட்டு வந்தனி? கடலுக்கு தப்பினாலும் கண்கெடுவாருக்கு தப்பேலாதெண்டு தெரியாதோடா?" அம்மா அடிக்கடி அழுவாள்.

"அண்ணனை ஏன் விட்டுட்டு வந்தனீங்கள்" அவளும் அழுவாள். கந்தன் கடலுக்கு வெளிக்கிடேக்க அவளைக் கண்டுதான் வருவான். ஒருதருக்கும் தெரியாமல் அவன் விடைகேட்க அவளும் அனுமதிப்பாள். அண்டைக்கு வேண்டாம் எண்டுதான் தலையாட்டினவள் விருப்பமில்லாமல் தங்கச்சியோட சண்டைபிடிச்சுத்தான் செபஸ்தியான் வெளிக்கிட்டவன் எண்டு தெரியும். தான் ஏதாவது சொன்னா கோபிப்பாள்; புறுபுறுப்பாள். அவனோட கோவிச்சுப்போட்டு... அவள் படிச்சவள். படிப்பிக்கிறவளும் கூட. வொலண்டியர்சாப்படிப்பிக்கிறனெண்டு அவள்தான் அவனுக்கு சொன்னவள். விளங்கேல்ல அது அவனுக்கு. தமையன் அவளுக்கு கலியாணம்பேசி காசுப்பிரச்சனையால்தான் கலியாணம் குழம்பியது. அதுக்குப்பிறகு ரெண்டு மூன்று இடத்தில பேசிவர அவள் வேண்டாம் எண்டு சொல்லிப்போட்டாள். இவனட்ட அவள் 'நீங்கள் வாசிக்கவாவது பழகோணும். ஆரிட்டையும் கேட்டுப்படியுங்கோ. கணக்கு வழக்கெல்லாம் பாக்கத் தெரியோணும்.' அவளின்ர அந்த எண்ணம்தான் அவனுக்கு. அவன படிக்க வச்சது அவளின்ர உசாரும்தான்; அவனை கஸ்ரப்பட்டு உழைச்சு சேர்க்கப்பண்ணினது.

ஒருநாள் பயந்து பயந்துதான் கேட்டவன் 'என்னமாதிரி ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளியை கலியாணம் முடிக்கலாம் தானே'' எண்டு. பதிலுக்கு அவள் ''என்னை மாதிரிப் படிச்ச ஓராளைப்பார்த்து முடிக்கலாம் தானே'' எண்டு கேட்க........ அதைப்பற்றி அவன் தங்கச்சிக்கோ ஆருக்கோ ஒண்டும் சொல்லேல்லை. ''அண்ணையிட்ட கேளுங்கோ நீங்கள் எனக்கு மச்சான் தானே.'' எண்டு சொல்லியும் கேக்கவே பயம் இவனுக்கு. இண்டைக்கு கடலில தனிய வச்சு கேக்கிறதெண்டுதான் நினைச்சவன். என்னண்டு விட்டிட்டுப்போறது செபஸ்தியானை? நேவிச்சத்தம் கேட்ட போதே தண்ணியில பாஞ்சு வலையிலபிடிச்சு கொஞ்சத்தூரம் நீந்திப்போயிருக்கோணும். கந்தன் அடி விழமுந்தியே தண்ணியில பாஞ்சிட்டான். செபஸ்தியானும் முதலே பாஞ்சிருந்தால் காலில காயப்பட்டிருக்காது. நீந்திவரேக்கையே செபஸ்தியான் சாரத்தை உரிஞ்சு கிழிச்சு காயத்திற்கு கட்டிப்போட்டான். இப்ப அது கழண்டு தண்ணியோட போய்ட்டுது. காலை இழுத்து நீந்திவர கத்தியால கீறினமாதிரி எரிச்சலாய்....... கனக்க ரெத்தம் போய் களைச்சுப் போய்ட்டான். எப்படியாவது நீந்தத்தான் வேணும். கரையை இலக்குவைத்து குறுக்காய் நீரை எதிர்த்து நீந்தோணும். கரையைக்கண்டா எவ்வளவு ஆறுதலாயிருக்கும். இதுக்கு விடியவேணும்.

வெள்ளாப்பிடுகுது, கடல்குளிரும் கொஞ்சம் குறைஞ்சு போட்டுது. கஸ்ரத்தைப் பார்க்காம செபஸ்தியான் கொஞ்சம் வேகமாக நீந்த கந்தனுக்கு சந்தோசம். கடலின்பெரிய உவட்டு வரும்போது. ஆள உயர்த்தும் போது கரையைத் தேடினான் கந்தன். சூரியன் எழும்பத்தான் கரைக் குமுட்டுகள் தெரிய ஆரம்பித்தது. ஊரைத்தேடினான். கரைக்கு முட்டுகளுக்குள்ள சாலை, மாத்தளன், முள்ளிவாய்க்கால்... அஞ்சாறு உவட்டுகள் வந்தபிறகுதான் கரையை உறுதிசெய்தான். நல்ல வெளிச்சம். ஒருஉவட்டு அலைக்கு மேல எழும்பும்போதுதான் அதைக்கண்டான். ஒரு போட்டு. அடுத்த உவட்டு வரும்வரை காத்திருந்தான். கண்டுட்டான். ஒருபோட்டு. அவங்கள் நிக்கிற இடத்துக்கு மேற்கால போறான். இன்னொரு போட்டு; தங்களைப் பார்க்கத்தான் வாறாங்கள். கை காட்டினா காணுவாங்களோ? அணியத்தில் நின்று ஒருத்தன் தேடுறான். கிட்டவரட்டும், கையை அடிச்சு நீந்தினான் கந்தன். செபஸ்தியானும் கண்டிட்டான். கடவுளை இன்னும் மண்டாடிக்கொண்டிருந்தான். வள்ளம் ஒன்றில் தங்களைப்பார்க்கத்தான் வாறாங்கள்; கண்டு போட்டாங்கள் எண்டு சந்தோசம். தாங்கேல்ல இரண்டுபேருக்கும். வந்த போட்டுகள் அப்படியே திரும்பி வந்தவழியே வந்ததைவிடவேகமாக, மிக வேகமாக ஓடுறாங்கள். செபஸ்தியானுக்கு விளங்கிட்டுது. 'நேவி' திரும்பவும் வந்திட்டான், இனி நேவி எப்ப போவான்? கரையை இருந்து திரும்ப எப்ப தேடி வருவாங்கள்? செபஸ்தியான் நல்லாவே பயந்திட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதேறிப்போய் வெயில் சூட்டுக்க கடல் இதமாய் இருந்ததால் பசி ஒருபக்கம், தாகம் ஒருபக்கம், பழங்கஞ்சியிருந்தால் ஒருக்கா குடிச்சிட்டு செத்துப்போனாலும் பரவாயில்லை. களைப்பும் கவலையும் மாறிமாறி....... கந்தனுக்கு. கவலை தொடத் தொடங்கிட்டுது. நீச்சல் குறையக்குறைய நீர் இழுவையோட கொஞ்சத்தூரம் போயிடுவம். நேரம் போகப்போக நீந்திறதூரம் கூடிப்போயிடும். நாயாறு கடக்கிறதுக்கிடையில கரையை போயிடலாமோ? தனிய எண்டா போயிடுவான். அதைநினைக்கிறதே நம்பிக்கைத்துரோகம் மாதிரி மனங்கேக்கல்ல. என்ன இருந்தாலும் எல்லாப்பிழையும் செபஸ்தியானிலதான்.

கரைய வள்ளம் இறக்கேக்க ஈராடி என்று வெளிக்கிட்டு பெட்டைக்கடல் வந்து வள்ளம் தள்ளிப்போட்டு வலையெல்லாம் குழம்பி வள்ளம் இழுத்து... எத்தனைபேர் சொன்னவங்கள் 'நாளைக்குப் போங்கோடா' எண்டு. திரும்பி வலையேத்தி திரும்பி சோறுகட்டி வள்ளமிறக்கி வலைபடுக்கிற கடலுக்கு வர, மற்றவங்கள் வலைபடுத்து பாதைகட்டி சாப்பிட்டும் முடிச்சிருப்பாங்கள். உயரத்தான் மீன்பட்டதெண்டு ஓடோடெண்டு ஓடி, சாலைக்கு நேர பதினொருபாகம். கரைமறைஞ்சு கரைக்கு மட்டும் போனதூரம் கிட்டத்தட்ட எட்டு, ஒன்பது மைல்கள் வரும். தனிவள்ளம். கிட்ட வேறு வள்ளங்களும் இல்லை. நீந்திற காவியெல்லாம் வள்ளம் இறக்கேக்கையே கடலோடபோட்டுது. நேரம் போட்டுது, கரையை வச்சுப்படுப்பம் என்று கந்தன்சொல்ல செபஸ்தியான்தான் கேக்காம உயரஓடினது. கரைய தடைவரேக்கயே கந்தனுக்கு மனமில்லை, தொழிலுக்குவர. வலைபடுத்து பாதைகட்டி சாப்பிட்டு முடியேல்ல. கந்தனுக்கு தெரிஞ்சு போச்சு, வள்ளத்தில காதவச்சு கேட்டு நேவிச்சத்தம் எண்டு கண்டுபிடிச்சிட்டான். உடனேயே அணியத்தில ஏறிட்டான். செபஸ்தியான் அலட்சியமாய் இருந்திட்டான். முதலடியே அவங்களுக்குத்தான். கந்தன் தண்ணியில பாஞ்சிட்டான். பாயப்பிந்தித்தான் செபஸ்தியானுக்கு வெடிமுதலே. தண்ணியில இறங்கி வலைபிடிச்சு நீந்தி வந்திருக்க இவ்வளவு கஸ்ரமேன். கடலலைச்சல் பெரிசா இல்லாட்டிலும் நீர் பாடு நிக்குது. என்னணண்டு இந்த உயரக் கடலிலிருந்து நீந்திறது.

மத்தியானப் பொழுதும் போய் பின்னேரமும் வந்திட்டுது. ஆரும் தேடிவந்ததாய் இல்லை. சிலாவத்தைத்தோட்டம் வெயிலுக்க தெளிவாய் தெரிந்தது. நீர்பாடு இன்னமும் குறையேல்ல. நீந்தின கணக்கெண்டா பத்து மைலுக்கு மேல நீந்தியிருப்பாங்கள் போல; நீர்பாடு இல்லாம கடல்காத்தும் உரமா நிண்டிருக்க இன்னேரம் கரைக்குள்ள போயிருக்கலாம். செபஸ்தியான் நல்லாவே கலங்கிப்போட்டான். உப்புத் தண்ணியில காயிறதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனையிறதும் முகமெல்லாம் வெடிச்சு நாக்கில உப்புக் கரிப்பு; நல்ல தண்ணியில ஒருக்கா நாக்கை நனைச்சா... மெல்லமெல்ல பசிக்குடல் ஏறி.... வாறமாதிரி. மெல்ல மெல்ல பழையபடி இருட்டு மூடி, ஆக்களை கடல் அங்கங்கள் பிரிச்சு சேத்து ஒண்டுமே தெரியேல்ல. கந்தனுக்கு "இப்ப தனிய வெளிக்கிட்டா போயிடுவன்" எண்ட நம்பிக்கை. செபஸ்தியான் நிக்கிறதுமாய் நீந்திறதுமாய்...... கந்தன் கொஞ்சத்தூரம் செபஸ்தியானை விட்டுட்டுப்போறதும் திரும்பிவந்து அவனைப் பாக்கிறதுமாய்..... அவன் மனசைக் கைவிட்டுட்டான் எண்டு கந்தனுக்கு நல்லாவேதெரியும். அவனுக்கே கைகாலெல்லாம் விறைச்சிட்டுது. கால் உதைச்சு நீந்தவும் பெலமில்லை. இப்பமட்டும் ஒருகாவி கிடைச்சா செபஸ்தியான காப்பாத்திப் போடலாம். மாரிவந்தா எத்தினபோத்தல் போயா வெள்ளம் அடைஞ்சுவாறது. ஏதாவது ஒண்டு கையில அம்பிட்டா சுகமாத் தப்பி விடலாம். வேறு ஆரும் எண்டா இந்நேரம் கடலோட தாண்டேபோயிருப்பாங்கள்.

'அளம்பில தாண்டியிருப்பமோ? இனி கரையபோனாலும் ஆமியிட்டத்தான் அம்புடுறதோ' கந்தனுக்கு அரை உயிர் போய்ட்டுது. கடைசிமட்டும் பாப்பம் எண்டு ஒரு நம்பிக்கை.

செபஸ்தியான் இதோட நாலைஞ்சு தடைவை தண்ணி குடிச்சிட்டான். கந்தன் செபஸ்தியானைவிட்டு முன்ன போனவன் திரும்பி செபஸ்தியான் வரும்மட்டும் பார்த்துக்கொண்டு நிண்டான்.

கிட்ட வந்ததும் கந்தனை பெலமா கூப்பிட்டான் செபஸ்தியான். என்னவோ சொல்லப்போறான் போல எண்டு நினைச்சுகிட்டவந்தான். கடல் ரெண்டுபேரையும் அணுகவிடாமல் அலைச்சுக்கொண்டு நிற்க செபஸ்தியான் பெலமா கந்தனிட்ட கேட்டான். "இவன் கோகுலன் நல்லவனோடா".

காதடைத்த குளிர். வாயெல்லாம் புண்ணாய்ப்போய் பசியில காய்ந்த, குடல் நடுக்கடலில் உயிர்போகப்போற பயத்தில நிண்டு கொண்டு கரைய இருக்கிறவனைப்பற்றி கதைகேட்டுக்கொண்டிருக்கிறான்.

"ஏன் மச்சான்" கொஞ்சம் எரிச்சலாயும் பலமாயும்கேட்டான். கந்தன் செபஸ்தியான் கொஞ்சம் பெலமாயும் உவட்டு ஆறி கந்தன்கிட்ட வந்தவுடனையும் சொன்னான். "இல்ல மச்சான் அவனிட்ட ஒருபத்தாயிரம் ரூபா கொடுத்து வச்சனான் மனிசியிட்ட குடுப்பானோ"

கந்தனுக்கு இப்பதான் அவன்கேட்டதின்ர அர்த்தம் விளங்கினது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியா நல்லாகிட்டவந்து சொன்னான் "நான் உன்னைவிட்டுட்டு போகமாட்டன் மச்சான்" அழுகைவந்திடும் போல இருந்தது கந்தனுக்கு.

தங்கச்சி வந்து கேட்பாள் "ஏனண்ணா அவரை விட்டுட்டு வந்தனி? மாமா அப்பா எங்க?" மருமக்கள் ஒருக்கா அழுது போட்டு போச்சுதுகள் என்ன பதில் சொல்லுறது "மச்சான் நான் உன்னை விட்டுட்டுப்போகன்" திரும்பவும் அழுதான். "நீயெண்டாலும் போகத்தான்ரா வேணும்" செபஸ்தியான் பெலமாகக்கத்தினான்.

நிக்கிறதோ நீந்திறதோ? அந்தரத்தில் மிதந்து கொண்டு என்னண்டு செபஸ்தியானுக்கு ஆறுதல் சொல்லுறது என்று தெரியேல்லை கந்தனுக்கு. செபஸ்தியான் நீந்திறதை நிப்பாட்டிப்போட்டான். நீர்பாடு அவனை அடிச்சுக்கொண்டு போகுது. கந்தன் கிட்ட நீந்திப்போய் அவன்ர கையைப்பிடிக்க "கையை விடு நான் மெல்ல மெல்ல வாறன் நீ போ என்றான் செபஸ்தியான்"

"நான் போகேல்ல"

"நீ என்னோட நிண்டு வீணா சாகப்போறாய். நான்வரேலுமெண்டா வருவன் நீ போவன்ரா" செபஸ்தியான் கோபமாய்க் கத்தினான்.

செபஸ்தியான் என்ன கதைக்கிறான் எண்டு கந்தனுக்கு விளங்கும். ஆனால் அவன் காணாமல்போனாலும் கையை விட்டுட்டுப் போகலாம். கண்ணுக்கு முன்னால... "நான்போகமாட்டன் நீ நீந்திவா"

"என்னால கத்திக்கதைக்கேலாதடா கந்தா. நீயெண்டாலும் போடா, போய்ச்சேர். நேரம் போகப்போக நீயும் நீந்தேலாமல் சாகப்போறாய்" கந்தனுக்கு தெரியும், நிண்டா உண்மையா சாவுதானெண்டு. ஆனால் என்னண்டவனை விட்டிட்டுப்போறது?

"கந்தா ஒத்தைக்காலை இழுத்திழுத்து நீந்த மற்றக் காலுக்குள்ளையும் சரணவாயு வந்து வந்து பிடிக்குதடா. நான் வரேலாதெண்டு எனக்குத்தெரியும் ஒருகாவியிருந்தாலும் கையுதவி யாயிருக்கும். ஒரு ஆதரவும் இல்லாமல் சாகப்போறன்போல எந்தக்கரையில ஒதுங்கிறேனோ? பிள்ளையள் காணுமோ?" விட்டுட்டும் சத்தம்போட்டும் அவன் சொல்லுறது அரைகுறையாகக் கேட்டாலும் கந்தன்ர மனம் பரிதவிச்சுக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கந்தா நீ கரைய போவாய் எனக்குத் தெரியும். வீட்டை சொல்லடா"

கந்தன் இன்னமும் எல்லாம் கேட்டுக்கொண்டுதான் நீந்திக்கெண்டிருந்தான். இரண்டுமனம்; போவோமா விடுவோமா என்று. செபஸ்தியான் சாக விடைகேட்டுக்கொண்டு நிக்கிறான்.

அவன் இல்லாமல் போனால்தான் தன்ர உயிரைப்பற்றி யோசிக்கிறது. நடுக்கடல்ல இப்ப இருக்கிற துணை அவன்தான். மனத்தை சமாதானப்படுத்தேலாமல் இருந்தது அவனுக்கு. கடைசியா செபஸ்தியான் சொன்னான். இதுதான் கடைசி – இரண்டுபேரும் நீந்துவம். இனிஇனி ஒருத்தரை ஒருத்தர் பாக்கிறேல்ல. செபஸ்தியான் மனதுக்குள்ள நினைச்சுக்கொண்டான். என்ரதங்கச்சியாவது நல்லாயிருக்கட்டும். அவனுக்கது தெரியும். கந்தன்நினைச்சானெண்டால் தங்கச்சியை கஸ்ரப்படாமையாவது பாப்பான் எண்டு மனத்தை சமாதானப்படுத்திப் போட்டான். கந்தன் நீர்ப்பாட்டை எதிர்த்து நீந்த செபஸ்தியான் நீர்ப்பாட்டோடு போய்க்கெதியிலயே ரெண்டுபேரும் பிரியத்தொடங்கிவிட்டார்கள். "வீட்ட சொல்லடா" தூரத்தில செபஸ்தியான் கத்திறசத்தம் காதோட கேட்டது கந்தனுக்கு.

கடற்தொழில் செய்யிறவங்களுக்கு ஒரு வாய்ப்பாடம். கடலில ஒராள ஒராள் பாக்கக்கூடாதெண்டு. நீந்திறவனையும் நீந்தேலாதவன் சாகிறபயத்தில எப்பிடியும் கட்டிப்பிடிப்பான். கட்டாயம் ரெண்டு உயிர்போகும்.கந்தனுக்கு மனசுக்குள்ள அந்தக்கதையெல்லாம் வந்து போக தன்ர உயிருக்கு பயத்திலதான் செபஸ்தியானை சாகவிட்டுட்டுப்போறனெண்டு வேதனை. "என்ன செய்ய?"

ஒருமுறை இப்படித்தான் மண்டானுக்கு நிண்டு வள்ளம் இறக்கேக்க மேரியோசை ஆறலுக்கு அம்பிட்டு, காப்பாத்தடா கையத்தாடா எண்டு கெஞ்சிக் கேக்கேக்க சின்னத்தம்பி கையைக்குடுத்து காப்பாத்தப்போகாம பாத்துக்கொண்டு நிண்டது கந்தனுக்குத் தெரியும். அவன் தண்ணீல காப்பாத்த இறங்க மற்றவங்கள் அவனைப்பிடிச்சதும் ஞாபகமிருக்கும். சின்னத்தம்பி கரையைவந்து தலையில அடிச்சுக்கத்திக்குழறி, மேரியோசை ஆத்தோட போகேக்க கத்தின சத்தம் அதை மறக்கவே ஏலாது.

செபஸ்தியானுக்கும் அதெல்லாம் தெரியும். அதுதான் அவன் என்னை தனியப் போடா எண்டவனோ? ஆனா அவன் கடைசியாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தினது "வீட்ட சொல்லடா" சாகிறதுக்குத்தானோ? "வீட்ட சொல்லடா" செபஸ்தியான்ர சத்தம் திரும்பத் திரும்ப கேட்கிறமாதிரி இருந்தது அவனுக்கு. தானே தன்ர மச்சானை சாகக் குடுத்திட்டு வாறனே. குற்ற உணர்வு அவனைக்கொண்டு கொண்டேயிருந்தது. ஏதோ மனசைத்திரும்ப சமாதானப்படுத்திக்கொண்டேயிருந்தது. "என்னில பிழையில்லை அவர்தானே வள்ளம் ஓடிவந்தது. அவர் சொல்லித்தான் பாகம் போட்டுப் பார்த்து வலைப்படுத்தது. நேவி வந்து அடிக்கேக்க அவர்தான் பாயப்பிந்தினது. இல்லாட்டி வெடி விழுந்திருக்காது. அவர் ஏலாதெண்டு சொல்லித்தான் விட்டுட்டுவாறன்."

மாறி மாறி அவனுக்கு யோசினை வந்து கொண்டேயிருந்தது. இனி என்ன செய்யிறது? என்ர உயிரைக் காப்பாத்தவேணும். கந்தனுக்கு இருந்த ஒருதுணையும் இல்லாமல் போய், சூனியத்துக்குள்ள நிக்கிறமாதிரி திரும்பிப் போய் ஒருக்காப்பாப்போமா?

திரும்பி கொஞ்சத்தூரம் போய்த் தேடினான். இல்லை. செபஸ்தியான் இல்லை. சத்தம் போட்டான்; பதிலில்லை. எனி செபஸ்தியான் வரான். அவன் செத்துப்போயிருப்பான். அவனுக்குத்தெரியும் கடலெண்டா இப்படித்தான். கரைக்குத் தெரிய ஞாயமில்லை. அழுதான்; ஒருமுறை பேசினான். நாசமாய்ப் போவாங்கள் அவங்கள் மட்டும் வெடி வைக்காமலிருந்தால் கடல் அவனைக் கொண்டிருக்காது. எங்க ஒத்துமோ? எவனெடுத்துப் புதைப்பானோ? பிரேதமாவது பிள்ளைகளுக்கு காணக்கிடைச்சால்... எத்தின பேருக்குப் பதில் சொல்லவேணுமினி? தங்கச்சிக்கு, அம்மாவுக்கு, பிள்ளையளுக்கு....... அவளுக்கு, ஊர் எல்லாத்துக்கும்.

"எங்கயண்ணாச்சி அவரை விட்டுட்டுவந்தனி?"

என்னண்டு சொல்லுறது, நான் விட்டுட்டு வரேக்க வீட்டசொல்லச்சொன்னவரென்று? இனி அதுகளைப் பேக்காட்டி 'எங்களோடதான் நீந்திவந்தவர், என்னை விட்டுட்டு முன்னுக்கே வந்திட்டார். நான் வந்திருப்பார் எண்டுதான் நினைச்சனான். நீர்பாடு உரம். சிலவேளை திருகோணமலைப்பக்கம் கரையேறி...' ஊருக்கும் ஒருக்கா பொய்சொல்லி ஒருக்கா 'லாம்பெண்ண' அடிச்சுத்தேடி அஞ்சாறு நாளைக்குப்பிறகு ஆருக்கும் உண்மை சொல்லி, இழவுவச்சு துக்கம் கொண்டாடி, அழுது குழறி அப்பவும் எப்படிச் சொல்லுறது அப்பா உங்களை கடைசியா கேட்டவரெண்டு? எத்தனை பொய் சொல்லோணும். அம்மாக்கென்னண்டு.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்ர மருமகன விட்டுட்டு வந்திட்டனெண்டு. நீங்களெல்லாம் ஒரு பெரிய தொழிலாளி. பெரிய நீச்சல்காரன். 'என்ர அண்ணாவைவிட்டுப்போட்டு எனக்கு சொல்ல வந்தனீங்களே' அவளும் கேப்பாள். இது எங்கட கடல். இந்தக் கடல் மட்டும் தான் எங்களுக்குத் தெரியும். இஞ்சதான் எங்களுக்கு உழைப்பிருக்கு. இதிலதான் நாங்கள் தொழில் செய்யோணும். எங்கபோறது நாங்கள்? எத்தனைபேர் இந்தக் கடலோட காணாமப் போயிட்டாங்கள். தெரிஞ்சு கொண்டும் திரும்பவும் போறம். இதைஆருக்கு என்னண்டு விளங்கப்படுத்தி சொல்லுறது. அடிச்சுக் கத்தோணும் போல இருந்தது அவனுக்கு.

இப்ப தன்ர நிலைமையை யோசிச்சான் அவன். இப்படியே போனா நான் சாகிறது உறுதி. முதல்ல நீந்துவம்; கரையப்போவம். என்னில பிழையில்லை. நீந்தினான் மூச்சாய். குருசு வெள்ளி தேடினான். பத்துமணியாகமிருக்குமோ. நீர்ப்பாட்டை எதிர்த்து சரிச்சு நீந்தினது சரியான களைப்பு. கடைசியா நேவி அடிக்கேக்க திண்ட சோறு, கடவுளே! கடைசிச் சாப்பாடாப்போயிடப்படாது. நீந்தோணும். ஏலாது ஏலாது எண்டது உடம்பு. ஏலாதுதான். இனி ஏலாது, நிண்டான். நீர் இழுக்கிறது தெரியும். 'கடவுளே' உள்ள கடவுளுக்கெல்லாம் நேத்தி வைச்சான். கைகால் சோர்ந்து வயிறெல்லாம் கார்ந்தது. அந்தக்குளிரிலயும் நாவறண்டு அப்பத்தான் அந்த அலசல் சத்தம் கேட்டுது. உன்னிப்பாக்கேட்டான். சின்ன அலசல் சத்தம். தண்ணியில கையடிக்கிறமாதிரி ஆரும் பக்கத்தில நீந்திவாறாங்களோ அல்லாட்டில் ஏதேனும் போட்டு கட்டுமரம் வலை படுத்துப் பாதை கட்டிப்போட்டு கிடக்கிறானோ?

இருட்டில ஒண்டுமே தெரியேல்லை. முதுகில அது இடிச்சாப்பிறகுதான் பார்த்தான். ஒருபெரியகட்டை. இப்ப அவனுக்கு முழு உயிரும் வந்திட்டுது.வேண்டின கடவுளுக்கு நன்றி சொன்னான். சுத்திப்பாத்தான் பெரிய கட்டைதான். ஏறிக்குப்புறப்படுத்தான். கட்டைதாளேல்ல, தாங்குது. தண்ணீருக்குள்ள இருந்து மேல வந்தவுடனேயே கடல்குளிர் சுள்ளிட்டது. தண்ணிக்கயே கிடக்கலாம்போல விடியக் குளிர் போயிடும். உயிர் காக்க ஒருதுணை கிடைச்சிட்டுது. கட்டையோட கதைச்சான். "என்னை எங்க கொண்டுபோய் சேர்ப்பாய்.?" கடல் தண்ணியும் கதைச்சது மாதிரிக்கிடந்தது. "திருகோணமலைக்கு" என்று. நீர்பாடு சோழக நீராய் போகாதோ? முல்லைத்தீவுப்பக்கம் கொண்டு போய் சேர்க்காதோ? நினைச்சான். கட்ட என்ன செய்யும்? நீரோடையும் அலையோடையும் போகும். கட்டை கடல் உவட்டுக்கும் கரையைப்பாக்க வழிஞ்சு போற மாதிரித்தான் தெரிஞ்சது. அவனுக்கு கரையைப் போற சந்தோசமும் கரைபோன பிறகு வரப்போற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமும் மாறி மாறி அலைக்கழிஞ்சுது. பஞ்சி, சரியான அலுப்பு. கண்ணயரோணும்போல, அப்படியே அரைமயக்கத்தில் ஆழ்ந்து போனான்.

கடல் புள்ளுகளின்ர கீச்சுக்கத்தல். கட்டையோட அடைமிற மீனுக்காய் ஆர்வப்பட்டு கத்துதுகள். கட்டைக்கு மேல ஆள் கிடக்க கலைஞ்சுகத்துதுகள். அரவத்தில முளிச்சுப்பாத்தான் கந்தன். புகை மண்டலம்தான் முதல்ல தெரிஞ்சது. போகப்போக கரை, கரைதான். தப்பிட்டன். கடலிரைச்சல் கரையை அடிக்கிற அலைக்குள்ளயும் தப்பிட்டா குண்டு குண்டா என்ன கரையில காடோ? இல்லாட்டி மலையோ? நாயாறோ? புலிபாஞ்ச கல்லோ? அப்படித்தான் தெரிஞ்சது. ஏலாது, எழும்பிப் பாக்கவும் ஏலாது. திரும்பப்படுத்திட்டான்.

மத்தியான சுள்ளென்ற வெய்யில் முதுகில நெருப்பு மாதிரிப்படுகுது. அலைஅடிக்கிறசத்தம் இன்னும் கேட்டுக்கொண்டிருக்கு. தண்ணீர் காலைமட்டும் நனைச்சும் நனையாமலும், ஒண்டும் விளங்கேல்ல அவனுக்கு. உடம்பு மண்ணிலதான் கிடக்கோ? கரைய வந்திட்டனோ? என்னண்டு கரையவந்தனான்? நினைவில்லை கந்தனுக்கு. ஆரும் வந்து தூக்குவாங்களே! கைகால் தூக்கவேமுடியவில்லை. ஆரோகதைக்கிற சத்தம். கனவில கேட்கிற மாதிரி, கடற்கரை மணல் காலிலபட்டு கிறீச்சிடுகிற சத்தம். அம்மா, தங்கச்சி, அவள், ஊர்ச்சனம் ஓடிவாற மாதிரி... ஆரோ தலையை பிடிச்சு தூக்குகினம். முகத்தில என்ன 'கரண்ட்' அடிச்சமாதிரி குளிருது. 'தண்ணி.... தண்ணி...' முனகினான். மெதுவாக கண்களைத் திறந்தான். என்னகதைக்கினம்? ஒண்டும் விளங்கேல்ல. என்ன பாசை அது, சிங்களமோ? அவசரப்பட்டு கண்களைத் திறந்தான். வெய்யில் கூசி சப்பாத்துக்கால்கள். இராணுவ உடை. தலையைத் தூக்கி வச்சபடியே அவன் சொன்னது மட்டும் கந்தனுக்கு விளங்கிச்சுது.

"கொட்டியாத்தமாய்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைக் கோயில்



அன்றைய இரவு ஒரு இரத்த ஆறு ஓடப்போகிறது. யாருடையதோ எவருடையதோ, உயிர்கள் பிரியப்போகிறது.

தார் சீற்றைக்கொண்டு நீளமாக அமைக்கப்பட்ட அந்தக் குடோன்களில் பத்துக்கு, பதினொன்று என்ற கணக்கில் தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட முன்னூறு அறைகளிலும் தங்கியிருந்தன இருநூற்று எண்பதுக்கு மேற்பட்ட குடும்பங்கள். அனைவருமே தங்களைத் தாக்க வரப்போகும் உத்தமபாளையத்து அடிதடிக்காறர்களை எதிர்த்துத் தாக்குவதற்காய் விறகுக்கட்டைகள், கோடரிகள், கத்திகள் என கைமிற் கிடந்தவைகள் அனைத்தையுமே ஆயுதமாக்கிக் கொண்டு காத்திருந்தார்கள்.

முகாமின் வெளிநடைப்பாதையில் முகாமின் தலைவர் மரியதாசும் அவரோடு கூட ஜீவனும், ஜோசப் அண்ணனும், இன்னும் மூன்றுபேரையும்தவிர வேறொருவரும் அந்த நடைபாதையில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளையும் பெண்களையும் அறைகளில் அடைத்துவிட்டு ஆண்கள் மட்டும் காதுகளையும் கண்களையும் கூர்மையாக்கி வாசலில் நின்று கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

தங்களைத் தாக்க வரப்போகிறவர்கள் எந்தப்பக்கத்தால் வரப்போகிறார்களோ என்ற பயமும் 'முதலில் யார் யாரைத் தாக்கப்போகிறார்களோ, முதலில் யார் யார் கொல்லப்படப் போகிறோமோ...' தொண்டைவரண்டு வியர்த்து விறுவிறுத்து நெஞ்சு பதைபதைக்க சாவிற்குப் பக்கத்தில் நிற்பதாய்த் தவித்து சரி; வருவது வரட்டுமென மனதை ஒருமுறை திடப்படுத்திக் கொண்டு 'சாவு எப்பவாவது ஒருமுறை வந்துதானே ஆகவேண்டும்' என்று சமாளித்து, 'என்னுடைய மனைவி பிள்ளைகளுக்கு ஏதும் நடந்துவிட்டால்' என்று ஒருமுறை அழுகை வந்து.......... அநேகப்பேர் இந்நிலையில் இருந்தார்கள்.

முகாமின் வாசற் கதவை தண்டல்காறன் சாத்திப் பூட்டும்போட்டுப் பூட்டிவிட்டு அவனுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு அறைக்குப் போய்விட்டான்.

தண்டல்காறன் என்பவன் ஒரு அரச உத்தியோகத்தன்தான். அந்த முகாமுக்கு காவலாளியாய் எல்லோருக்கும் பொறுப்பானவனாய் பொறுப்பாயிருப்பவன்.

அந்தமுகாமில் இருப்பவர்கள் அனைவருக்கும் ஒரு சந்தேகம் அவனில் ஏனென்றால் அவனும் ஒரு ஏ.ரி எம் கேக்காரன். அந்த முகாம் இந்தத் தாக்குதலுக்கு ஆளாவதற்கு இவனும் ஒரு காரணம் தான்.

தொண்ணூறில் இலங்கை அகதிகள் இந்தியாவுக்கு அகதியாய்ச் சென்றநேரம் தமிழக ஆட்சியிலிருந்து ஆட்சி முடித்து விலகிய ரீ.எம்.கே (தி.மு.க )கட்சிக்கும், தேர்தலுக்கு எதையாவது செய்து ஆட்சிக்கு வரவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்த ஏ.ரி.எம்.கே கட்சிக்கும் ஏற்பட்ட அரசியல் விளையாட்டில் அகப்பட்டு மாட்டிக்கொண்டது இந்த முகாமும்தான்.

ஏ.ரி.எம்.கே கட்சியின் பிரச்சாரத்துக்கு அவலாகிப் போனவர்கள் இவர்கள். "தி.மு.க காரங்களால தாண்டா காய்கறி ஜாமான் விலையெல்லாம் எச்சாப்போனது. (கூடிப்போனது) ரேசன் சிலோன்காரங்களுக்கு கம்மி விலைல கிடைக்குது. அதுக்குள்ள் பணமும் குடுக்கிறாங்க. சும்மா இருந்து சாப்பிடுறாண்டா இலங்கைக்காறன். இன்னும் எத்தனை பேர கொல்லுறதுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் போட்டிருக்கிறாங்க இவங்க.'' இப்படித்தான் பிரச்சாரம் ஆரம்பமாகி முடிவில், இலங்கை அகதி முகாமை தாக்குவதற்கு திட்டம் தயாரனது.

இதை முதலில் தெரிந்து கொண்டவன் ஜீவன்தான். பின்பு மரியதாசுக்கு தெரிந்தது. ரி.எம்.கேக்காரப் பெடியன் ஒருவன் வந்து "அவர்கள் உங்களைத் தாக்கப்போவது உண்மைதான்'' என்று நிரூபித்து எல்லோருக்கும் தெரிந்தபோது இரவாகிவிட்டது. பொலிசுக்கு சொல்லக்கூட நேரமில்லாமல் போய்விட்டது. இலங்கையில் இராணுவத்துக்கும், பொருளாதாரத் தடைக்கும், சீப்பிளேன், சியாமா செட்டிக்கும் என எல்லாக் குண்டுவீச்சு விமானங்களுக்கும் பெரல் உருட்டிக்கும் ஹெலிக்கும் பயந்துதான் அனேகம் பேர் இந்தியாவுக்கு ஓடினது.

இலங்கை இராணுவத்தைவிட இந்திய இராணுவம் இலங்கையில் எவ்வளவோ அட்டூழியங்கள் செய்தது எல்லோருக்கும் தெரியும்தான். திரும்பவும் இலங்கை அரசாங்கம் சண்டைதொடங்கினவுடன் இந்தியா மனிதாபிமானத்தோட இலங்கை அகதிகளை வரவேற்றது என்று சொன்னதாலதான் சனங்களும் இந்தியாவுக்கு வெளிக்கிட்டது.

அகதியா வந்த இடத்திலதான் சாவென்றால் ஆர் என்ன செய்ய முடியும்?

நிச்சயமாக அந்த ஏ.ரி.எம்.கே அடிதடிக்காரர்கள், இந்த முகாமைத் தாக்கத்தான் போகிறார்கள் என்பது உண்மையாகிவிட்டது.

சாகப்போகிறோமே என்ற கடைசிப்பயம் எல்லோருக்கும். சிறுவர் சிறுமிகள் கூட திருகுவலையோடு கூடிய மீன் வெட்டும் கத்தி, கெரசின், தீப்பெட்டி, மிளகாய்த்தூள் என அகப்பட்ட ஆயுதங்களோடு மூலைக்கு மூலை முடங்கிக்கொண்டு விழித்திருந்தார்கள்.

தங்களைத் தாக்க வரப் போகிற அந்தக் கிராமத்தவரைத் தாக்கிக் கலைத்து அந்த இரவு முழுவதையும் சமாளித்து விட்டால் பகலில் தாக்குவதற்கு அவர்கள் வரமாட்டார்கள் என்பது தெரியும்.

பத்து மணியாகிவிட்டது. பத்து மணிக்கே கலைந்து போய்விடும் ஆள் நடமாட்டம், இன்னும் இருந்து கொண்டே இருந்தது. யாரோ தம்மை இன்னும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற உறுத்தல் இன்னமும் மரியதாசுக்கு இருந்துகொண்டே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிதடிக்காரர்கள் முகாமினுள்ளே வருவதென்றால் வாசற்கதவை உடைத்துக் கொண்டுதான் உள்ளே வரவேண்டும். வேறு பக்கத்தால் வரமுடியாது. சுற்றிவர மதில்கள். வருவதென்றால் மதில்களால் ஏறிப்பாய்ந்துதான் உள்ளே வரவேண்டும். எனவேதான் எல்லோர் கவனமும் வாசற்பக்கம் இருந்தது.

அந்த அகதி முகாம் ஒரு P.W.Dக் கட்டடம். P.W.D அலுவலகத்துக்கும் அந்த முகாமிற்கும் ஒரே வாசல்தான். P.W.D அலுவலர் JE. அப்படித்தான் எல்லோரும் அவனை அழைப்பார்கள். அவனும் தனது அலுவலகத்தில்தான் இரவுவேளைகளிலும் தங்கியிருப்பான். அன்று அவனுடைய குவாட்டசிலும் வெளிச்சம் எரிந்து கொண்டிருந்தது.

"அவனும் இன்னும் ஏன் தூங்கவில்லை?" என்று மரியதாசுக்கு ஒரு சந்தேகம். 'இவனும் சேர்ந்துதான் எங்களைத் தாக்கத் திட்டமிட்டிருக்கிறானோ' தண்டல்க்காரனும் விட்டு விட்டு இவனின் குவாட்டசைப் பார்க்கப் போய் வந்தது இன்னும் சந்தேகத்தை அதிகரிக்கச் செய்தது.

எப்போதும் மரியதாசுவுக்கு JE ஐப் பிடிக்கவே பிடிக்காது. அது போல்தான் JE க்கும் மரியதாசைப் பிடிக்காது. அதுபோல இலங்கை அகதிகள் அத்தனை பேருக்கும் JE ஐப் பிடிப்பதில்லை.

JE க்கு எப்போதுமே இலங்கை அகதிகள் எதிரிகள்தான். அகதிகளில் பெரியவர்களை விட சிறியவர்களை அவனுக்குப் பிடிப்பதில்லை.

P.W.D அலுவலகத்தின் முன்னே புல்டோசர்கள், லாரிகள், வாகனங்கள் என்று எப்போதும் வேலைகள் முடிந்த பின்னும் காலையில் வேலைக்கு போகு முன்னும் நின்று கொண்டிருக்கும். அவைகளில் அகதிச் சிறுவர்கள் தொட்டுப்பார்ப்பதும் சில வேளை ஏறி விளையாடுவதும் உண்டு. அதை JE கண்டுவிட்டால் போதும், 'எச்சக்கல நாய்களே போங்கடா அந்தப்பக்கம். இலங்கையில இருந்து அகதியாவந்திட்டு அத்தனை ளொள்ளா உங்களுக்கு' என்று கத்துவான்.

தலைவர் மரியதாசுக்கு உடனே ஏறும். மரியதாஸ் கத்துவான்; "யார் அது இந்திய நாய் ஒண்ணு கத்துது இலங்கைக்காரன் சும்மா இல்ல சொல்றா அவனுக்கு"

"ஓய்" பெலமாய் கத்துவான் JE.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓய்" அதைவிட பெலமாய் கத்துவான் மரியதாஸ்.

மரியதாசை சமாளிக்க JE யும் வார்த்தைகளை வைத்திருக்கிறான்."ஏ மரியதாசு நீ என்னோடையா போட்டி போடறே? ஏன்யா உங்க ஊரில வேறே தமிழங்களே இல்லையாய்யா? அவங்க இராணுவத்துக்கு பயப்படாம இருக்கேல்லியா? உங்களுக்கென்ன உங்க விடுதலைப்புலிங்க இராணுவத்தோட சண்டை போடுறாங்கதானே! உனக்கேன்யா அந்த யோசினயே வரலையே. நீயெல்லாம் ஒரு ஆம்பிள, உங்க நாட்டுக்காக சண்டைபோட உனக்கே வக்கில்ல. வந்துட்டான்யா பேச. போய்யா"

மரியதாசுக்கு மட்டுமல்ல, அந்த முகாமிலுள்ள அத்தனை பேருக்கும் அவமானமாயிருக்கும். வீட்டுக்கு வந்து மரியதாஸ் மனிசியைப் பேசுவான். "உன்னாலையும் உன்னுடைய பிள்ளையாலையும்தான் எல்லாம். நான் இஞ்ச வந்திருக்க கூடாதடி"

"எனக்கும் திரும்பிப்போக விருப்பம்தான்" மனைவி சொல்லுவாள்.

L.T.T.E தலைமன்னார் பக்கம்–மேற்கால்–இருந்த தலைமன்னார் கிராமத்து இராணுவ முகாமை தாக்கி அழிச்சதுதான் இலங்கை அகதிகள் இந்தியாவுக்கு போக அந்தநேரம் வசதியாய்ப் போனது.

மரியதாசின் பயணமும் ஒரு கஸ்ரமான பயணம்தான். விடத்தல்தீவில் இருந்து மன்னார் பள்ளிமுனைக்கு ஒரு 'பிளாஸ்ரிக் போட்'டில் போய் பள்ளிமுனையில் இரண்டு நாள் தங்கி, மன்னாரில் இருந்து கிராமத்துக்கு போகிற வாகனங்களில போய்; இயக்கம் அடிச்ச 'காம்பு'க்கு கிட்ட இறங்கி, கொண்டு போன உடுப்புக்கள், சாமான்கள், பிள்ளைகள் என்று ஒவ்வொன்றாகக் காவி, தலைமன்னார்க் கிராமத்து வேதக்கோயில்ல கொஞ்சநாள் கிடந்து, இந்தியாவுக்குப் போற போட்டுகளுக்குப் பேரம் பேசிக் கடற்கரைக்குப் போகிறதும் திரும்பி வாறதுமாய் எத்தனை நாட்கள்.

ஒருநாள் 'நேவி' அடிக்க அடிக்கத்தான் இந்தியாவுக்கு வெளிக்கிட்டது. சோளகக் காற்றுக்கு வள்ளம் தாண்டு விடுமோ என்று பயந்து 'குளிரில் நடுங்கி' விறைத்து விடியற்காலையில் இராமேஸ்வரத்தில் கோவில் முகப்பைக் காண என்ன சந்தோஷம் அது. அனுபவித்திருக்க வேண்டும் யாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமேஸ்வரத்தில் ரயிலேறும்போது கொஞ்சம் கவலைதான். இலங்கையைவிட்டு பல நூறுமைல்களுக்கு மேலே போகிறோம் என்று மரியதாசின் ஊர்க்காரர்கள் எல்லோருமாகச் சேர்ந்து "நாங்களெல்லோரும் ஒன்றாக மண்டப முகாமில் இருக்க முடியாதா? நாங்கள் கடற்தொழிலாளிகள்; கடலோடு பழக்கப்பட்டவர்கள், ஏதாவது கடற்தொழில் செய்து சீவிக்க வசதிசெய்யமாட்டீர்களா?" என்று அதிகாரிகளைக் கேட்டுப்பார்த்தார்கள்.

"இல்லை" என்று மறுத்துவிட்டார்கள் அதிகாரிகள்.

மதுரை "கோயம்பத்தூர்" ஈரோடு என்று, வெள்ளைக் கோயிலுக்குப் பக்கத்தில் உத்தமப்பாளையம் என்றொரு கிராமம்.

டில்லி முள்ளு என்று சொல்லப்படும் சின்னக் காட்டுப்பற்றைகள் நிறைந்த வரண்டுபோன பிரதேசம்போன்ற ஊர்.

அந்தப்பற்றைக்காடுகள்தான் இலங்கை அகதிகளின் மானத்தைக் காப்பாற்றிய மறைப்புக்கள்.

மரியதாசுடன் சேர்ந்து இன்னும் இருநூறு குடும்பங்களையும் அந்த அலுவலகத்தோடிருந்த வெட்டைவெளிக் காணியில் தார் சீற்றால் போட்டிருந்த கொட்டகைகளில் அடைத்துத்தான் விட்டார்கள் கொஞ்சக்காலமாய்.

புதுபுதுச் சாப்பாடுகள்—
காலையும் இரவும் ஒரு உப்புமா.
மதியம் ஒரு புளிச்சாதம், சிலவேளை தயிர்ச்சாதம்.
ஒரு மந்திரியின் பிறந்தநாளுக்கு நெய்ச்சாதமும் வந்தது.
வேட்டி கதர் சர்ட்டும் கூட.
மீன், இறைச்சி மறந்தே போனது.

போட்டோ, ரேசன்காட் பலப்பல விதமாய்ப் பதிவுகள்.
குளிக்க குளத்துக்குப் போகமட்டும் முதலில் அனுமதித்து
கேற்றுவாசலில், அடைக்கப்பட்ட மிருகங்களாய்.....
இந்திய மக்கள் வந்து வேடிக்கை பார்த்துவிட்டுப்போய்.....

"ஏன் சார் இலங்கையில இருந்து பஸ்சிலயா வந்தீங்க"
என்ற கேள்விகளுக்கும் பதில் சொல்லி.....
இங்கிருந்து போராடப்பயந்து இந்தியாவுக்கு ஓடிப்போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொகுசாய் இருக்கிறார்கள் என்பதெல்லாம் சுத்தப்பொய்.

அங்கே அடிப்படைத் தேவைக்குக் கூடப் போராட்டங்கள்.

காசைக் கட்டிக்கொண்டு போறவன் மட்டும் தப்பித்து விட்டான். ஒரு பொலிஸ்காரனைக் கூப்பிட்டு கன்னத்தில் அறைந்துவிட்டு ஒரு பத்துரூபாவை நீட்டினால் வாங்கிக் கொண்டு போய்விடுவான். அந்தக் கிராமத்தில் திரும்பவும் அடிவாங்க இன்னும் ஆட்களைக் கூட்டிக்கொண்டு வந்தாலும் வந்துவிடுவான். லஞ்சம் என்ற சொல்லை அதிகமாகத் தெரிந்து வைத்திருப்பவர்கள் இந்தியர்கள்தான். இந்தியாவிற்கு சென்றபிறகுதான் மிச்சம் பிடிப்பது எப்படி என்று கற்றுக்கொண்டவர்கள் இலங்கை அகதிகள்.

பிள்ளைகளின் படிப்புக்கள் நின்றுபோக, நிறம், உருவம், பேச்சு எல்லாமே மாறிப்போய் இந்தியாவின் சாப்பாட்டுக்கே அல்லலாடும் சனங்கள்போல உத்தம பாளயத்தின் நெசவு நூலுக்கு சாயம் போடும் தொழில் பழகி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் ரீசேட், வெனியன்களுக்கு சீக்குன்ஸ் தைத்து நாள் முழுவதும் அந்த முகாமுக்குள்ளும், வேலைத்தளங்களுக்குள்ளும் அடைபட்டுப்போய் தங்கள் வாழ்க்கையையே இழந்து போனார்கள் உத்தமபாளயத்து இலங்கை அகதிகள்.

அந்த உணர்ச்சிக் கவிஞனின் உண்மை வரிகளை அரசியலில் சேர்த்து "ஆண்ட பரம்பரை மீண்டுமொருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை" என்று கைகளில் பிளேட்டுகளால் கீறி இரத்தத் திலகமிட்டுவிட்டு தமிழரைக் காட்டிக்கொடுத்த இலங்கைத் தமிழ்க்கட்சிகளின் சூடான அரசியலையும், அட்டகாசமான தேர்தல் சோடனைகள், கொடிகள், கூட்டங்களையும் எண்பதுக்கு முன்னர் பார்த்துப் பார்த்து மறந்துபோன இலங்கைத் தமிழர்கள் அதைவிட மோசமான இந்தியாவின் அரசியலையும் கூட்டங்கள், கொடிகள், மேடைப்பேச்சுக்கள், போஸ்டர், கலாச்சாரங்களையும் கண்டு அசந்துதான் போனார்கள்.

திரைப்பட நடிகர் நடிகைகளின் ரசிகர் மன்றங்கள் ...... தளபதி ரஜனிக்கொரு கொண்டை, கமலுக்கொரு மொட்டை, குஷ்புவுக்கொரு கோயில் என்று அட்டகாசப்படுத்திய சினிமா எல்லாம் அதிசயமாய்த்தான் இருந்தது.

ரீ.எம்.கே, ஏ.ரி.எம்.கே, காங்கிரஸ் என்று தேர்தல் வரும் நாளில் கொந்தளிக்கும் தமிழக மக்களைக் கண்டு ஆச்சரியம்தான். அகதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற நேரம் தமிழக ஆட்சியில் இருந்தது கருணாநிதி. அவருடைய ஆட்சி முடிந்துபோய் அடுத்ததேர்தல் வந்தநேரம்தான் அகதிகளுக்கு ஆபத்தும் வந்தது. அந்தநேரம்தான் சிறீ பெரம்பத்தூரில் அந்த வெடி வெடித்ததும் ராஜீவ்காந்தி தூள்தூளாகிப் போனதும்.

இந்த விடயத்தை வைத்தே அரசியல் லாபத்துக்காக ஏ.ரி.எம்.கே. கட்சிக்காரர்கள் தேர்தலில் வெல்வதற்காக ஒரு சின்ன விளையாட்டை நடத்தி முடித்தார்கள். வேலூர்ப்பக்கம் ஒரு இலங்கை அகதிமுகாமை அடித்து நொருக்கி தீவைத்து விட்டார்கள்.

அந்தச் சம்பவங்களுக்குப் பின்னர் எல்லா இலங்கை அகதி முகாம்களும் ஒரு பயத்தில் உறைந்துபோய்த்தான் இருந்தன. சிலவேளைகளில் 'நீ இலங்கைக்காரனா?' என்று கேட்டு பஸ்களிலும் வீதிகளிலும் சிலருக்கு அடிவிழும். சில கொண்டக்டர்கள் "ஏன்யா குண்டா கொண்டுவந்திருக்கே" என்று பஸ்சில் ஏறும்போது கேட்டு கிண்டல் செய்வார்கள். அகதிகள் சிலர் சிங்களத்தில் திட்டிவிட்டுப் போவதும்தான்.

யேசுவைப் பேதுறு மூன்றுமுறைதான் மறுதலித்தாராம். "ஏன்யா நீ இலங்கை அகதியா" என்று யாரும் கேட்டால் "யாருய்யா இலங்கைத் தமிழன். நான் தொட்டம்பாளயக்காரனாக்கும்" என்று இந்தியன்போல ஒரு நடிப்பு நடித்து இந்தியனாய்ப்போய். முன்னூறு தடவைக்கு மேலும் தங்களைத்தாங்களே மறுதலித்துத் தப்பி வருவார்கள் இலங்கை அகதிகள்.

தேர்தல் நடந்த நேரத்தில் கொஞ்சக்காலம் பலமுகாம்களில் இலங்கை அகதிகள் அடைபட்டுத்தான் கிடந்தார்கள்.

ஒருமுறை 'ஜெயா அம்மா' உத்தமபாளயத்துப் பக்கமாய் போகிறா என்பதற்காக குளிக்கக் கூட போகமுடியவில்லை. இருந்ததை வைத்து காய்ச்சி சாப்பிட்டுவிட்டு கிடக்கச்சொல்லி முகாமினுள் அடைத்துவைத்து விட்டார்கள் பொலிஸ்காரர்கள். அம்மாவுக்கு இருந்த காவலைவிட அகதிமுகாமுக்குத்தான் அதிக பொலிஸ்காவல். தமிழ் நாட்டில் இவையெல்லாம் சர்வசாதாரணம். எவ்வளவுக்கு எவ்வளவு நாகரிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அங்கு குப்பையும் இருக்கிறது.

நகர்ப்புறங்களில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு வரதட்சனை, லஞ்சம், அரசியல் ஏமாற்று என்று இருப்பதுபோல கிராமப்புறங்களில் பண்ணையார், பஞ்சாயத்து, அடிதடி நாகரிகமற்ற நடவடிக்கைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்போக்குத்தனங்களும் சகஜம் மரியதாஸ் காதைக்கூர்மையாக்கி அந்தச்சத்தத்தைக் கேட்டுக்கொண்டிருந்தான். தூரத்தில் கொஞ்சப்பேர் பேசிக்கொண்டு நடந்துவரும் காலடிச்சத்தம். வாகனங்களின் ரயரிலும், தோலிலுமாகச் செய்த கிராமத்தவரின் செருப்புச்சத்தம். அவர்கள்தான் வருகிறார்கள். பேச்சுக்கள் கேட்டுக்கொண்டே இருந்தது.

"இலங்கைக்காரன் தாய்யா அது"

"உள்ளார பூந்திட்டாய்யா அவன்"

அவர்கள் என்ன திட்டத்தோடு வருகிறார்கள் என்பது எவருக்கும் விளங்கவில்லை. நிச்சயமாகத் தெரிந்தது முகாமிற்குத்தான் வருகிறார்கள் என்று. அத்தனைபேருக்கும் உடல்புல்லரித்து விறைத்துப்போய்விட்டது. யார் யார் இரத்தம் சிந்தப்போகிறார்களோ? யார் யாருடைய உயிர் போகப்போகிறதோ?

ஒவ்வொரு அறையின் வாசலும் திறக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்களும் வெளியில் நின்று கவனித்தார்கள். ஒவ்வொருவர் கையிலும் கோடரிகளும், கத்திகளும். சிலர் பட்டாசுகளையும் வைத்திருந்தார்கள். அந்தக் குண்டு வெடித்ததிலிருந்து இலங்கைக்காரன்கள் குண்டு வைத்திருப்பார்கள் என்ற மனப்பயம் இந்தியர்களுக்கு இருந்தபடியால் இப்படியொரு பட்டாசு கொளுத்திப் போடும் திட்டம். ஐந்தாறு பட்டாசு மருந்துகளை ஒன்றாகச் சேர்த்து பெரிய பெரிய பட்டாசுகளாகச் செய்து வைத்திருந்தான் ஜீவன். சிலவேளை பட்டாசு வெடிக்கு அவர்கள் பயந்து ஓடிவிட்டால் இழப்புக்கள் இல்லாமல் போயிவிடும் என்று.

முகாமின் வாசலுக்கு வந்துவிட்ட அந்தக் கூட்டத்தில் இருபதுபேர்வரை இருக்கும். தடிகளும் கத்திகளும் எல்லோரிடமும் இருப்பது தெரிந்தது. சினிமாப்படங்களில் தேர்தல் ரவுடிகள் வந்து கலகம் செய்வதுபோல காட்டப்படுவது உண்மைதான். உண்மையில், ரவுடிகள் கோஷ்டி அப்படித்தான் உண்மையாகவும் செய்தது. காசுக்காக அடிதடி செய்யும் கோஷ்டிகள் அங்கு இருக்கிறது. அந்தக் கோஷ்டி ஒன்றும் அவர்களுடன் வந்திருக்கவேண்டும். அதில் ஒருவன் கத்தினான் "டேய் திருடன் இதுக்குள்ளாலதான் நுழைஞ்சான், நான் பார்த்தேன்."

இன்னொருவன் கத்தினான்

"ஏய் தண்டல்காரன் வெளியே வாய்யா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியதாசுக்கு உள்ளுக்கு கவலை பெரிதாகிவிட்டது. இப்போது முழுவதுமாக அவர்கள் திட்டம் புரிந்து விட்டது. திருடனைச் சாட்டிக்கொண்டு அவர்கள் உள்ளே வரப்போகிறார்கள். எப்படியும் இவர்களைச் சமாளித்து திருப்பியனுப்பிவிட வேண்டும் என்ற எண்ணங்கள் ஓட தன்னுடன் நின்றவர்களை அங்கேயே நிறுத்திவிட்டு தான்மட்டும் கேற்றடிக்குப் போனான்.

"இவன்தாய்யா முகாம் தலைவன்" யாரோ சொன்னார்கள்.

நேரே வெளிவாசலுக்கு வந்து "ஏன்யா எதுக்கு வந்திங்க" என்று சற்றுக் காட்டமாகவே கேட்டான் மரியதாஸ்.

"உங்க முகாமுக்கு திருடன் புகுந்துட்டாய்யா"
"எங்க முகாமுக்கு யாருமே இரவில் வரமுடியாது"
"யோ உங்க ஊர்க்காரனாய் தான்யா இருக்கும்"

"யோ இங்கே யாருமே வரலை, சரி அப்படி இலங்கைக்காரனா அவனைப் பிடிச்சு எங்கிட்டத்தாங்க. நான் அவனைப் பாத்துக்கிறம் அவனுக்கு நடவடிக்கை எடுக்கிறம்"

"நீ என்னய்யா நடவடிக்கை எடுக்கிறது? நாங்க என்ன நடவடிக்கை எடுக்கப்போறம் என்று எங்களுக்குத்தான்யா தெரியும்"

"சரி நீங்களே என்னன்னாலும் பண்ணிக்குங்க. ஆனா எவரெண்டாலும் ராத்திரிப் பத்துமணிக்கு மேல முகாமுக்குள்ள வரமுடியாது. போயிட்டு நாளைக்கு வாங்க"

"என்னய்யா நீ ஒரு மாதிரியாப் பேசற"

மரியதாசுக்கு ஒருபக்கம் பயம்; மறுபக்கம் இவர்களை எப்படி அனுப்புவது என்ற சிந்தனையும் முகாமுக்கு எதுவுமே நடந்துவிடக்கூடாதென்ற கவலையும். சமாளித்துப் போவோமா அல்லது வெருட்டிக்கதைத்தால் போய்விடுவார்களா? என்று பலமாதிரியும் குழம்பி கடைசியில் இவர்களை வெருட்டாமல் இவர்கள் போகமாட்டார்கள் என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

"ஏன்யா உங்களுக்கு நான் சொல்லுறது புரியவில்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களப்பற்றி உங்களுக்குப் புரியாதுதான். ஆனா உங்க அரசியல் விளையாட்டுக்களை நம்மகிட்ட காட்டாதீங்க. முகாமுக்கு உள்ள வந்தீங்க. உடனேயே பொலிசு வரும்" வெருட்டினான் மரியதாஸ். சொல்லிவிட்டு உடனேயே கேற்றடியைவிட்டு முகாமின் நடைபாதைக்கு வந்துவிட்டான்.

ஏமாந்து போனார்கள் அவர்கள். பொலிஸ் அவர்களைச் சற்றுப் பயமுறுத்திவிட்டது. பொலிஸ் இன்பெக்ஸ்டராய் இருப்பவன் ஒரு ரீ.எம்.கேக்காரன். பிரச்சனை மறுவளமாகி வந்துவிடும் என்று சற்றுப் பயந்தும் போனார்கள். அவர்களின் கோபம் முழுவதும் இப்போது மரியதாசின் மேல் திரும்பிவிட்டது. அரசியலைப்பற்றிப் பேசியதுதான் கோபம் மரியதாசின்மேல். அந்தளவுக்கு அரசியலைப்பற்றி அவன் பேசியதால் அவனுக்குப் பின்னால் யாரோ ரீ.எம்,கேக்காரர் இருக்கிறார்கள் என்றொரு சந்தேகம்.

"யாரோ கத்தினார்கள்"

"யோ உன்னையே அப்புறமாப் பாத்துக்கிறோம்"

மரியதாசுக்கு மனதுக்குள் கொஞ்சம் நிம்மதி. அவர்கள் கேற்றைவிட்டு கொஞ்சம் கொஞ்சமாய் பேசியபடியே விலகிப்போனார்கள். கட்டைச்செருப்புச் சத்தம் தார் றோட்டில் தேய்ந்துகொண்டிருந்தது. ஜீவன் மெல்லப்போய் கேற்றடியில் நின்று பார்த்தான். முகாமுக்கு சற்றுத்தூரமாக இருந்த கடையடியில் சிலர் நின்று முகாமை நோட்டம் விடுவது தெரிந்தது.

முகாமின் அத்தனை குடும்பங்களும் அந்த நடைபாதையில் கூடிவிட்டது. எல்லோர் முகங்களிலும் ஒரு பயத்தின் முடிவின் அமைதி. பெரிய மௌனம் அங்கு நிலவியது.

"இனி அவர்கள் வரமாட்டார்கள் என்று என்ன நிச்சயம் மரியதாஸ்" யோசப் அண்ணர்தான் மௌனத்தைக் உடைத்தார்.

"திரும்பவும் அவர்கள் வரலாம். ஏனென்றால் அந்தக்கடைகளின் வாசல்களில் இன்னும் சிலபேர் நின்று நோட்டம் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்" என்றான் உடனிருந்த ஜீவன்.

"மரியதாஸ் இப்ப அவங்களுக்கு உன்னிலதான் பெரிய கோபம். நீ போய் வீட்டை இரு. மற்றாக்களெல்லாம் மாறி மாறி விடியுமட்டும் காவலிருப்பம், என்னடாப்பா" எல்லோரையும் கேட்டார் யோசப் அண்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வர்ரது வரட்டும். அவங்கள் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி இன்டைக்கு இரவு முழுவதும் முகாமுக்குக் காவலைப் போடுவம். அவர்கள் வந்தால் மரியதாஸ் அண்ணன் கதைக்கட்டும். சரிவராவிட்டால் பாப்பம்" என்றான் ஜீவன்

"இப்ப எங்களில முன்னூறு பேருக்குக் கிட்ட இருக்கிறம். நாங்கள் எல்லாரும் துணிஞ்சு வெளிக்கிட்டாலே அவங்க ஓடிருவாங்கள். இந்த இரவைமட்டும் சமாளிச்சமென்டால் சரி" யோசப் அண்ண எல்லோருக்கும் துணிவு சொன்னார்.

முகாம் முழுக்க காவல் போடப்பட்டு விட்டது. அங்கங்கு ஐந்தாறுபேர்களாய் சண்டைக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒருவருமே தூங்கவில்லை. சிறுவர்கள் கூட. எப்படித் தூக்கம் வரும்?

ஒரு மணியளவிருக்கும். சிறுவர்கள் மெல்ல மெல்ல தூக்கத்திற்குப் போய்விட்டார்கள் பெண்கள் வீட்டு வாசலில் பிள்ளைகட்கு காவலிருக்க, வெளியில் முகாமின் வெளிச்சத்தில் சிலர் 'ரம்மி' விளையாடிக் கொண்டிருக்க, காவலுக்கு அங்கங்கு பலர் நின்று கொண்டிருக்க, கட்டைச் செருப்புகள் தார் வீதியில் ஓடியும் நடந்தும் வரும் சத்தமும் பேசும் குரல்களும் கேட்கத் தொடங்கியது. முன்னர் வந்தவரைவிட இன்னும் அதிகமாக வருகிறார்கள்; அடிதடிக்காரர்கள்.

சிறு சிறு குழுக்களாக ஆட்கள் பிரிக்கப்பட்டுவிட்டது. வீடுகளில் ஸ்டவ் அடுப்புகளுக்கென ரேசனில் தந்த கெரசின் முன்னமே சிறு சிறு வாளிகளில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு ஊற்றுவதற்கென வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் மீது எறிவதற்கென பட்டாசுகள் பெரிதாகச் செய்யப்பட்டு குண்டுகள் வெடிப்பது மாதிரி வெடிக்கும்படி ஆக்கப்பட்டிருந்தது, பயமுறுத்துவதற்கு.

குழந்தைகள் இப்போது பதறி அழ; தாய்மார்கள் அவர்களை வீட்டினுள் வைத்து தேற்றிக்கொண்டிருந்தார்கள். பெரியதொரு பயங்கரமொன்று முகாமைச் சூழ்ந்து கொண்டது. ஆனால் இன்னமும் JE இன் வீட்டில் விளக்கு எரிந்து கொண்டேயிருந்தது. JE ஐக் கவனிக்க ஜீவனுக்கு உத்தரவு போடப்பட்டும் விட்டது. தண்டல்காரனை பிரச்சனை வரும்போது அவனுடைய வீட்டில் அவனை வைத்துப் பூட்டச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியாயிற்று.

இப்போது வாசலுக்கு வந்துவிட்டார்கள் அடிதடிக்காரர்கள். முகாமில் எல்லா ஆயத்தங்களும் முடிந்துவிட்டது.

வாசலில் வந்துநின்றவர்கள் எழுபது பேர்களுக்கு மேலிருக்கும். சலசலப்புகளிற்கு இடையே ஒருவன் மட்டும் பெலமாகக் கத்தினான்.

"ஏன்யா தண்டேல் வெளியில வாய்யா"

இப்போது JE இன் அறையிலிருந்து தண்டல் வெளிப்பட்டான். நேராகக் கேற்றுக்குச் சென்றான். முகாமிலுள்ளவர்கள் பலர் இருட்டு மறைவுகளுக்குள் மறைந்திருந்தார்கள். சிறிது நேரம் அவர்களுடன் பேசிவிட்டு, தண்டல் நேராக மரியதாசிடம் வந்தான்.

"மரியதாஸ், அவர்கள் உன்னோடு ஏதோ பேசவேணுமாம் உன்னை ஒருமுறை வந்துவிட்டுப் போகட்டுமாய்யா" என்று சொல்ல ஜீவன் இடையில் குறுக்கிட்டான்.

"தண்டல் நீ போயிடு. அவங்க என்ன செய்தாலும் செய்யட்டும். மரியதாசண்ண வரமாட்டார்"

தண்டல் அவர்களுடன் சேர்ந்து விட்டான் போலத் தெரிந்தது. அடிதடிக்காரர்கள் தங்களுடைய திட்டத்துக்கு மரியதாசை தூண்டிலாகப் பாவிக்கப்போகிறார்கள் என்று நினைத்தார் யோசப் அண்ணர்.

"மரியதாசண்ணர் நீங்கள் அரசியல் விளையாட்டுக் காட்ட வேண்டாம்" என்று முதலில் பேசியது இப்போது சிக்கலாய் போய்விட்டது. அதை நூலாகப் பிடித்துவிட்டார்கள் ஏ.ரி.எம்.கேக்காரர்கள். அதைவிட ரீ.எம்.கேக்காரர்களுடன் முகாம் அகதிகள் நன்றாகப் புழங்குவதும் ஒரு காரணம் தான் என்று நினைத்தான் ஜீவன்.

திரும்பவும் அவர்களிடம் போய்விட்டு வந்தான் தண்டல். அடுத்தமுறையும் மரியதாசிடம் வந்து;

"ஏய்யா மரியதாஸ்! ஒரு தடவை அவங்களோட பேசிட்டு வாய்யா எல்லாம் சரியாப்போடும். உன்னாலை எனக்கு தொல்லைப்பா."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊர்க்காரங்கள வம்புக்கிழுக்கிறது அப்புறம் பயப்படுறது. என்னய்யா நீங்க" தண்டல் அலுத்துக்கொள்பவன் போல நடிப்பதாய்த் தெரிந்தது ஜீவனுக்கு.

"தண்டல், உனக்கு கடைசியாய் சொல்லுறன், மரியதாஸ் அண்ண வரமாட்டார். அவங்கள என்ன வேணுமென்டாலும் செய்யச் சொல்லு. அப்படி இல்லையெண்டு உங்க ஆக்கள் உள்ளுக்குள்ள வந்தா ஒருத்தருமே உயிரோடை வீட்டை போய்ச் சேரமாட்டாங்க நாங்க சிலோன் காரங்க. எங்களோட விளையாட வேண்டாம் என்று சொல்லு" என்றான் ஜீவன். அப்போதுதான் மரியதாசின் மனைவி வெளியில் வந்தாள். அவள் கையில் மீன்வெட்டும் திருவலைக்கட்டை. "ஏய் தண்டல்" தண்டல்காரரை ஏக வசனத்தில் கூப்பிட்டாள்.

"என் புருசன்தானே அவங்களுக்கு வேணும்? சரி. கூட்டிக்கொண்டு போ. ஆனா அவருக்கேதும் உடம்பில சின்னக் கீறல் விழுந்தாக்கூட முதலில் இல்லாமல் போறது நீதான். அதுக்குப்பிறகு நடக்கிறது வேற. நாளைக்கு நடுறோட்டில இந்த ஊர்க்காரன்ர பிணம் எல்லாம் கிடக்கும். கூட்டிக்கொண்டு போடா நீ, இன்னொருத்தன் JE எண்டு. என்னடா ரெண்டு பேருமாச் சேர்ந்து எங்களக் கொல்லுற திட்டமடா போடுறீங்க." தொண்டைக்கு அழுகை வந்து பேச்சு நின்று போனது அவளுக்கு.

கேற்றைத் தள்ளிக்கொண்டு ஏ.ரி.எம்.கேக்காரர்கள் கத்தினார்கள். ஆவேசமாக "அடியே உம்புருசனை அனுப்படி பார்த்துக்குவம்"

தண்டல்காரன் உண்மையாகவே பயந்து விட்டான். என்ன செய்வது என்றே தெரியவில்லை அவனுக்கு.

அந்த நேரம்தான் JE இன் குவாட்டஸ் வீட்டுக்கதவு திறந்தது. வெளிச்சம் முகாம் நடைபாதைவரை நீண்டு தெரிய, JE வாசலால் இறங்கி வெளிக்கதவை நோக்கி நடந்து கொண்டிருந்தான். இடையில் பேசிக்கொண்டிருந்த தண்டல்காரன், மரியதாஸ், மனைவி, ஜீவன் எல்லோரையும் தாண்டிக் கேற்றடிக்குப் போய்க்கொண்டிருந்தான்.

அடுத்து நடக்கப்போகும் விடயத்திற்காய் எல்லோருமே காத்திருந்தார்கள். ஆயுதங்கள் மீண்டும் ஒருமுறை சரிபார்க்கப்பட்டுவிட்டது. மரியதாஸ் மனைவியை வீட்டுக்குள் போகச் சொல்லி விட்டார்.

JE வாசல் கதவடியில் போய்நின்றதும் சலசலப்பு நின்றுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டல்காரரும் பின்னால் போய்க்கொண்டிருந்தார்.

மீண்டும் ஒரு பயங்கரம் நிகழப்போகிறது என்ற பயம் வந்துவிட்டது. அழுத சிறுவர்களது சத்தமெல்லாம் அடங்கிப்போய்விட்டது. ஜீவன் தண்டல்காரனுக்கும், JEக்கும் கூட குறிவைத்து விட்டான். மரியதாசும் அப்படித்தான். அவர்கள் அந்த இடத்தை விட்டு நகரவில்லை. வாசற்கதவு உடைக்கப்பட்டால் அடிதடிக்காரர்கள் மரியதாசை நோக்கியே வருவார்கள். இடைமிலே அவர்களுக்கு மண்ணெண்ணெய் ஊற்றலும், அடியும் விழும். எடுத்த எடுப்பிலேயே JE பெரிதாகச் சத்தம் போட்டே வந்தவர்களைக் கேட்டான்.

"என்னய்யா முகாமைத் தாக்க வந்தீங்களா"

அந்தக் கேள்வியிலேயே அரண்டு விட்டார்கள் அடிதடிக்காரர்கள். ஏனென்றால் JE ஒரு பழைய 'மில்ரிக்'காரன் என்பதால் அந்தக் கிராமத்தவருக்குப் பயம். AK 47ஐ நன்றாகத் தெரிந்தவன் மில்ரிக்காரன். எதிரி மனிதர்களைச் சுடுபவன். பயமில்லாதவன். அதைவிட அந்தக்கிராமத்தில் பலபேர் அவனுக்கு கீழே ரோட்டுப் போடும் வேலை செய்பவர்கள். இலங்கை அகதிகளும் கூட JE க்கு கொஞ்சம் கட்டுப்பட்டவர்கள்தான். ஊரில் அவனுக்கு 'இறுக்கன்' என்ட பட்டப் பேரும் உண்டு.

JE உண்மையைச் சொன்னானோ பொய்யைச் சொன்னானோ அது அவனுக்குத்தான் தெரியும். சொன்னான், இல்லைப் பேசினான்.

"டேய், சிலோன் தமிழனைப் பற்றி உங்களுக்கு என்னடா தெரியும். உங்களப்போல அவங்க தேவடியாப் பசலுகளாடா? நீங்க இன்னைக்கு அவுங்களை அடிச்சிட்டு போயிடலாம். நாளைக்கு இந்த ஊரிலை நீங்க இருப்பீங்க என்று என்னடா நிச்சயம்! துப்பாக்கி தெரியுமாடா? ஏகே பாட்டி செவன் தெரியுமாடா? அவங்களுக்குத் தெரியுமடா அதெல்லாம். டேய் நானும் எல்.ரீ.ரீ.ஈ பிடிக்கப்போன ஆளுதான்டா டேய். இப்ப இந்தக் கதவை நான் ஓப்பன் பண்ணிறன். நீங்க என்ன பண்ணிப்பூடுவீங்கெண்ணு பாக்கலாமா?

டேய் நான் இப்ப நினைச்சா உங்களை உள்ள போட முடியும்டா. நான் பொலிசுக்கு போன் பண்றதுக்கிடையில ஓடிப்போயிடுங்கோ போங்கடா.... போங்க."

பெரிய பிரசங்கம் அது. JE பேசிக்கொண்டு இருக்கும்போதே ஒரு பெரு மழையும் கொட்டத் தொடங்கிவிட்டது. JE அந்த இடத்தைவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரவில்லை. மழை பெய்துகொண்டேயிருந்தது பெரிதாய்.

அடிதடிக்காரர்கள் ஒவ்வொருவராக துண்டுகளைப்போட்டு மழையை மறைத்தபடி மெல்ல மெல்ல கழன்றுகொண்டிருந்தனர். கொஞ்சப்பேர் மட்டும் கொஞ்ச நேரம் நின்று பார்த்துவிட்டுப் போய்விட்டார்கள். முகாமினுள் அகதிகள் அனைவரும் அவர்கள் போவதைப் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். JE யும் அவருடைய அறைக்குப் போய்விட்டார். போகும்போது இடையில் நின்று அவரையே பார்த்துக் கொண்டு நின்ற மரியதாசுக்கு கிட்ட வந்ததும் சற்று நின்று பார்த்துவிட்டு

"ஏன்யா மரியதாஸ் இவ்வளவும் நடந்து ஏன்யா எங்கிட்ட வார்த்தைகூட யாரும் சொல்லலை"

மரியதாசால் அவருக்கு என்ன பதிலைச் சொல்வதென்றே தெரியவில்லை. அவருக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று வாயெடுக்க;

"நீயா எங்கிட்ட பேசமாட்டாய் என்ன"
கேட்டுக் கொண்டே அவர் போய்விட்டார்.

முகாமில் அன்று இரவே எல்லோரும் முடிவெடுத்தார்கள்; காலையில் எல்லோருமாக ஈரோடு கலக்டர் ஆபீசில் போய் நடந்ததைச் சொல்வதென்று.

ஆனால் இரவோடிரவாக தண்டல்காரன் வெள்ளைக்கோவில் தாசில்தார் ஆபீசுக்கு போய்ச் சொல்லிவிட்டான். ஏனென்றால் தனக்கு வேலை போய்விடும் என்ற பயம் தண்டலுக்கு. சிலவேளை கலக்டர் வந்து முன்னமே விடயத்தைத் தெரிந்து கொண்டால் தாசில்தாருக்கும் வேலை போய்விடும். இந்த விடயங்கள் தமிழ்நாட்டின் பிற்படுத்தப்பட்ட சனங்களுக்குத் தெரியாது. எதைச் செய்தாலும் காசு கொடுத்துத்தான் செய்யவேண்டும் என்ற விதிக்குள் தள்ளப்பட்டுப் போனவர்கள்.

தாசில்தாரைக்கூட நேரில் போய் சந்திக்கப் பயந்தவர்கள் தங்கள் பிரச்சினைகளை மனுவாக எழுதிக் கொடுத்து விட்டு பலநாட்கள் காத்திருப்பவர்கள். மனு எழுதுவதற்கும் கூட, காசுதான். இலங்கை அகதிகள் நேரடியாகவே கலக்டரைச் சந்திக்கத் துணிந்தவர்கள். சில தண்டல்காரர்களுக்கும், பொலிஸ்காரர்களுக்கும் இலங்கைத் தமிழரால் வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் போன கதைகளும் உண்டு. பாவம் அவர்கள். தமிழக அரசியலின் சித்து விளையாட்டிற்குள் அகப்பட்டுப்போய் முகாமைத் தாக்க வந்திருக்கிறார்கள். மன்னிக்கலாம் அவர்களை.

அடுத்தநாட் காலையிலே ஒரு புல்லட்டில் ஒரு இன்ஸ்பெக்ரரும் ஒரு ஏட்டும் வந்திறங்கினார்கள். சினிமாப்பட வில்லன்களைப்போல ஒரு மீசைக்காரத் தடியனான இன்ஸ்பெக்ரர்?

"யாரைய்யா முகாம் தலைவர் மரியதாஸ்" என்று கேட்டான் கேள்வியே பயமாயிருந்தது.

"நான்தான் மரியதாஸ்"

"என்னையா நடந்தது"

மரியதாஸ் எல்லா விபரத்தையும் சொன்னார்.

"சரி பயப்படாதீங்கப்பா. நான் எல்லாத்தையும் பாத்துக்கறேன்" அன்றிலிருந்து முகாம் பக்கம் யாருமே எட்டிப்பார்ப்பதில்லை.

அந்த இன்ஸ்பெக்டர் அந்தக் கிராமத்து சனங்களை வீடு வீடாகச் சென்று சந்தித்தார்.

"ஏன்யா சிலோன்காரன சிம்பிளா நினைச்சிட்டீங்களாய்யா? நீங்க உங்க பொஞ்சாதி புள்ளங்களையும் விட்டு உழைச்சு சினிமா பாக்கிறதும் தண்ணியடிக்கிறதும் மாதிரியாய்யா அவுங்க. டில்லி முள்ளா வெட்டி வெறகாக்கி வித்து சாப்பிடுகிறான்யா. வெக்கமான சூடு, சுரணை அவங்களுக்கிருக்கையா. உங்க வூட்டுக்கு அவுங்க ஏன்யா திருட வரவேணும்? ஏய் தேவடியாப் பசங்களா. இனிமே அவுங்க முகாமுக்கு யாரும் போனா உள்ள தள்ளிருவன். யாக்கிறுதை" பேச்சு வாங்காத ஊர்க்காறர் எவருமே இல்லை.

ஜெயாம்மா ஆட்சிக்கு வந்தவுடனேயே அந்த இன்ஸ்பெக்டர் ஒரு ரி.எம்.கே காறன் என்று வீரப்பனைப் பிடிக்கிறதுக்கென்று சத்தியமங்கலத்துக்கு மாத்திப் போட்டாவாம்.

ஒரு நாள் மரியதாசின் வீட்டிற்கு வந்தான்; மரியதாஸ், நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்பு கொடுத்தான்.

"மரியதாசு நீ எல்லாம் இந்த காம்ல இருக்கிறது நல்லாவே எனக்குப் படல்ல. ஊர்க்காறங்க ஏதாச்சும் வம்பு பண்ணுவாங்க. எங்காச்சும் வேற காம்ல நீ போயிருக்க சிபாரிசு பண்ணிவிட்டா" என்றார்.

'மரியதாஸ் யோசிச்சுச் சொல்லுறன்' என்று மறுத்துவிட்டார். தெண்ணூற்று இரண்டு முற்பகுதியில் இந்திய அரசு அகதிகளை இலங்கைக்கு அனுப்பிய நேரம், மரியதாஸ் குடும்பமும் இலங்கை போவதற்குப் பதிந்து விட்டது.

மரியதாஸ் பஸ்ஸில் ஏறும் போது ஊர்க்காறர் சிலர் வந்து மரியதாசை வழியனுப்பி வைத்தார்கள்.

"மரியதாஸ் ஊருக்குப் போறீங்களா கடதாசி போடுங்க"

"அது அரசியல் பிரச்சினைப்பா ஏதோ நடந்து போச்சு மனசில போட்டுக்காதீங்க"

"உங்களை கஸ்டப்படுத்திட்டமா?"

JE உம் வந்து கைகுலுக்கி வழியனுப்பி வைத்தார். மரியதாஸ் போறது ஜீவனுக்குச் சரியான கவலை. அவனும் இலங்கைக்குப் போக வெளிக்கிட்டவன்தான். ஆனால் இந்தியாவில் நிறையக் கடனாளியாகிப் போய்விட்டான். கடனையடைக்க கனகாலம் செல்லும்.

மரியதாஸ் J.E க்கு கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். 'ஓயாத அலை' அடிச்சு இப்ப எங்கட ஊர் மீண்டிட்டுது. மகன் ஒருத்தர் வீரச்சாவடைந்திட்டார். அதில இரண்டாவதும் இப்ப இயக்கத்தில தான் இருக்கிறான்.

சின்னவள் இந்த வருசம் O/l பரீட்சை எடுக்கிறாள். நானும் இப்ப எங்கட ஊருக்காக போராடுற பெடியளோட சேந்திட்டன். எனக்கும் AK பாட்டி செவிண் தெரியும். இப்ப நானொரு எல்லைப் படைக்காறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பரம் சொன்ன சேதி



கே.கே.எஸ் பொலிஸ் ஸ்ரேசனில் இருந்து வாகனங்கள் மாதகலுக்கு போகிறதும் வருகிறதுமாய் பெரிய அமளி. லோறன்ஸ் அண்ணருக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை.

'இரவுக்கு கடற்கரை நீளம் கட்டாயம் ஆமி ரோந்திலவருவான். கடலில நிக்கிறவங்களுக்கு என்னண்டு தகவல் சொல்லுவது? கட்டுமரம் ஒன்றை தயாராக வைத்திருந்தார் அவர். வள்ளச்சத்தம் கேட்டால், உடனே மரத்தை இறுக்கிக்கொண்டுபோய் சொல்லிப்போடோணும், வள்ளக்காரன் 'சிக்னல்' தரமுந்தி நாங்கள் கரையை இருந்து 'சிக்னல்' குடுக்கோணும்.' பதறிக்கொண்டிருந்தார் லோரன்ஸ் அண்ணர்.

லோரன்ஸ் அண்ணர் மட்டுமல்ல; யாழ்ப்பாணம் முழுவதுமே அப்படித்தான் இருந்தது, கடற்கரையோரப்பகுதிகள் அதைவிடமோசம். வீதிகளில் ஒருவரையுமே காணக்கிடைக்காமல் இருந்தது. வீடுகளுக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்துகொண்டு "வால்வுரேடியோ"க்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தி கேட்டுக்கொண்டு 'அது சரிதான்' என்று சொல்லிக் கொண்டும், சந்தோசப்பட்டுக்கொண்டும் சனம்.

"துரையப்பாவை சுட்டுப்போட்டாங்களாம்" ஆர் சுட்டது எவர் சுட்டது என்று ஒருவருக்குமேதெரியாது. கரையில் ஆமி, பொலிஸ் ரோந்தைவிட கடலிலேயும் 'நேவி' ரோந்து கூடிப்போச்சு.

மாதகலில் அல்லது மாரீசன் கூடல் கடற்கரையில் இல்லையென்றால் சேந்தாங்குளத்தில்தான், சாமான்களை இறக்குவது என்று திட்டம். ஆனால் இப்ப தப்பித்தவறி மாதகலில் சாமான்களை இறக்கினால் அவ்வளவுதான், சிதம்பரத்தார் மூளைசாலிதான். எங்ககொண்டுபோய் இறக்கப்போறாரோ? என்று பயந்து கொண்டிருந்தார் லோரன்ஸ் அண்ணர்.

அன்று இரவு முழுவதும் லோரன்ஸ் அண்ணர் காவல் காத்ததுதான் மிச்சம்; போட் வரவில்லை. பதற்றம் அவருக்குக் கூடிப்போய்விட்டது. பகல் தன்னுடைய ஆட்களை சிதம்பரத்தார் சாமான் இறக்கக்கூடிய எல்லாக் கடற்கரைக்கும் அனுப்பியும் பதில் ஒன்றும் நல்லதாக வரவில்லை.

மச்சான் சிதம்பரத்தை அவனுடைய எண்ணத்துக்கு அனுப்பினது பிழைச்சுப்போச்சு. "அவன் ஒரு சிறுக்குப்பிடிச்ச ஆள். பயமென்ற சாமானே இல்லை. இன்னமும் என்ன செய்யிறானோ" பேசிக்கொண்டேயிருந்தார்.

"வள்ளத்தில் சாப்பாட்டுப்பிரச்சனை இல்லை. எஞ்சின் பழுதாய்ப்போக வாய்ப்பில்லை, இன்னும் ஏன் வரேல்லை? இந்திய வள்ளக்காரன் சாமான் கொண்டு வரேல்லையோ? இல்லாட்டி நேவியிட்டை மாட்டுப்பட்டுப் போச்சோ? சீ நேவிபிடிக்கேலாது. பிடிச்சாலும் தங்குகடல், வந்தநாங்கள் என்று சொல்லி தப்பிறதுக்கு வள்ளத்தில திருக்கைவலையும் ஏத்திக்கிடக்கு."

இம்முறை லோரன்ஸ் அண்ணர்தான் போகிறது என்றிருந்தது. ஆனால் இந்தமுறை வெடிமருந்துச்சாமான்கள் கூடுதலாக ஏத்தவேணும் என்றபடியால் சிதம்பரத்தாரை அனுப்பினது. "அவர் ஆரையும் பேக்காட்டிப்போட்டு வரக்கூடிய ஆள்."

வெடிமருந்துச்சாமான்கள் ஏற்றுவது லோறன்ஸ்அண்ணனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பமில்லை. சிதம்பரத்தார்தான் அந்த ஓடர்கள் எல்லாம் எடுக்கிறது. வேண்டாம் என்றாலும் கேட்கமாட்டார். நான் நல்லதுக்குத்தான் இதைச் செய்யிறன் என்பார். முன்னெல்லாம் தனியே வள்ளங்கள் வைத்து கடத்தல் தொழில் செய்தவர். இப்போது இதையெல்லாம் கைவிட்டு விட்டார். காசு இல்லாதவர் என்றில்லை – ஆனால் பிள்ளைகள் இல்லை. சொத்தெல்லாம் தங்கச்சியினுடைய பிள்ளைகளுக்கு – லோரன்சருடைய பிள்ளைகளுக்கு எழுதிப்போட்டார் . பின்பு ஏன் கடத்தலுக்கு ஓட்டியாகப் போகவேணும். லோரன்ஸ் அண்ணருக்கு சந்தேகம். ஒரு கறுவல்பெடியன் இடைக்கிடை வருவான். அவன் வந்தால் வெடிமருந்துகளுக்குத்தான் – அன்றைக்கு அவர்தான் கடத்தலுக்கு வெளிக்கிடுவார்.

அந்தக் கறுவலுக்கு வெடிமருந்து ஏத்திக்குடுக்கிறதில் எந்தலாபமும் இல்லை, பீடியிலையோ அல்லது சாறமோ ஏற்றினால் நல்லவருமானம். முன்பெல்லாம் வெடிமருந்து கொணர்ந்தால், கிணற்று வெடிகாரருக்கும் மீன் வெடிகாறருக்கும் நல்ல விலைக்குக் கொடுக்கலாம். ஆனால் இப்போ அவர்களுக்கு சிதம்பரத்தார் வெடிமருந்து விற்கிறதில்லை.

இப்போ வெடிமருந்து ஏற்றுவதும் விற்பதும் சிதம்பரத்தார்தான். "ஆர் அந்தக்கறுவல்" என்று கேட்டால் தெரியாதென்பார். உண்மையில் அவருக்குத் தெரியாதுதான். ஆனால் அதுக்கு ஏன்தான் மினக்கெட்டு ஏற்றிக்கொடுக்க வேண்டும் என்றும் தெரியவில்லை லோரன்சுக்கு.

துரையப்பாவைச் சுட்டுப்போட்டீங்கள் என்று சொன்னால் சந்தோசப்படுவார் சிதம்பரத்தார். கொஞ்ச நாட்களுக்கு முன்பு சொன்னவர் "உவன் துலையப்போறான்" என்று. அந்நாள் சொன்னால் உண்மையாக நடக்கிறது.

முன்பு சிதம்பரத்தார் ஒரு கெட்ட ஆள். யாழ்ப்பாணத்துப் பெரிய சண்டியன். எவனையும் வெட்டினால் ஒரு வெட்டுத்தான். இரண்டு மூன்று பேர்கள் வந்தால் தாறுமாறுதான். ஒரு வெட்டு வெட்டினால் கோபத்தில் செய்தது, கனபேருக்கு வெட்டினால் தற்பாதுகாப்புக்கு செய்தது. சட்டங்களுக்குள்ளேயும் லஞ்சங்களுக்குள்ளேயும் நுளைந்து வந்தவர்.

முன்பெல்லாம் அவர் கட்சி, கொடி என்றும் அலைந்த ஆள்தான். "அவரை ஆர் முதல் கூப்பிடுறானோ அவனுக்குத்தான் எல்லா உதவியும். அரசாங்கத்திற்கும் வால்பிடிச்ச ஆள்தான். ஒருதடவை யாருடையதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தநாளுக்கு நல்ல தண்ணியில் எம்.எஸ் பெர்னாண்டோவின் "லக்சன் றோசமல் லக்சன்" என்ற பாட்டுக்கு டான்ஸ் ஆட்டிக்கொண்டிருக்கும் போதுதான் துரையருடைய காருக்குள்ள குண்டு வெடிச்சது. அதோடுதான் கொஞ்சம் யோசிக்கத்தொடங்கினவர். தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அவரும் போனவர். அப்போதுதான் அரசியல்வாதிகள் என்றாலே வெறுத்தது. அத்தோடு மெல்ல மெல்ல மாறினவர்தான்.

சிதம்பரத்தார் அப்போ கார்வைச்சிருந்தவர். காரில்லை, ரைக்சி மேல் கூட்டுக்கு மஞ்சள் பெயின்ற் அடிச்ச மொறிஸ் மைனர்க்கார் மீற்றர் பூட்டியது.

ஒன்று சிறி, இருபத்து மூன்று பத்து என்றால் எல்லாப்பொலிசுக்கும் தெரியும்; அது கடத்தல் சாமான் ஏற்றுகிற கார்என்று. அது சிலவேளைகளில் நம்பர் பிளேட்டையும் மாற்றிக்கொண்டு போகும். மாறி மாறி வருகிற ஒவ்வொரு பொலீஸ் இன்ஸ்பெக்டர்களும் சிதம்பரத்தாரை பிடிக்கத்திட்டம் போடுறதுதான். எல்லாம் கூடுதலான லஞ்சம் வாங்கலாம் என்றுதான்.

சிதம்பரத்தாரோ மனைவியிடம் கொஞ்சம் பீடி இலையை கொடுத்துவிட்டு கஸ்டம்சுக்கு அறிவிப்பார். கஸ்ரம்ஸ்காரன் வந்து பிடிப்பான். குற்றம் கட்டி வெளியிலெடுப்பார். அந்த 'றிசீற்'றை வைத்துக்கொண்டே நாலைந்து தடவை கொழும்புக்கு கடத்தின சாமான்களை ஏற்றிப்போடுவார்.

லோரன்ஸ் அண்ணனுக்கு சரியான கோபம். மனைவிக்கு பேசிக்கொண்டிருந்தார்.

"கொண்ணனுக்கு சாமான் ஏத்திறது சரிவராட்டி விட்டுட்டு வாறதுதானே, பேந்தென்ன கடனுக்கு கிடக்கிறான் பேயன்" அவ முறைக்க இவர் பேசாமல் இருந்திட்டார்.

காலையிலதான் இரண்டு பொலிஸ்காரர்கள் சிதம்பரத்தாரை விசாரித்துவிட்டுப் போனார்கள். லோரன்ஸ் "அவர் கொழும்புக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டார்'' என்று சொல்ல வந்தவுடன் ஸ்ரேசனுக்கு வரச்சொல்லிவிட்டு போனார்கள்.செபஸ்திசொன்னான். "யேசுராசாவுக்கும் யோசப்புக்கும் நல்ல அடியாம். அடைச்சுவைச்சிருக்கிறாங்களாம்." அவர்களும் பழைய கடத்தல்காரர்கள்தான். இந்தநேரம் சிதம்பரத்தார் அகப்பட்டால் அவ்வளவுதான்.

இரவிரவா நித்திரை விழித்துவிட்டு விடியற்காலையில அக்காவிடம் போய் விடையத்தை சொல்லுவம் என்று சிதம்பரத்தார் வீட்டுக்குப் போனால் அங்கே சிதம்பரத்தார் கட்டிலில் படுத்திருக்கிறார்.

சிதம்பரத்தாரை லோரன்ஸ் எழுப்பி "என்ன மச்சான் என்னநடந்தது" என்று பதட்டப்பட்டார். "இப்ப ஏன்ரா அந்தரப்படுறாய் சாமான் எல்லாம் கொழும்புத்துறையில இறக்கிட்டன். அதுபோய் சேரவேண்டிய இடத்திலயும் சேந்திட்டுது"

"அதென்னண்டு கரையில நடக்கிறதெல்லாம் உனக்கு கடல்ல தெரியும்"

"ஏனடா என்ன நடந்தது" ஆச்சரியமாகக் கேட்டார் சிதம்பரத்தார்.

"துரையை சுட்டாச்சு. மாதகல் ரோட்டைப் பாக்கமாட்டாய். அவ்வளவு பொலிஸ்"

"துரையை சுட்டுட்டாங்களோ?" அவர் எதிர்பார்த்ததுதான்.

"ஆராம் சுட்டது"

"என்னட்டை கேக்கிறாய;"

"சுடுவாங்கள் எண்டு எனக்கு தெரியும்"

லோரன்ஸ் ஆர்வமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

இலங்கையை குடியரசா பிரகடனப்படுத்தேக்க இந்த எம்பிமாரெல்லாம் அந்த அரசமைப்புக்கு சார்பாக கையெழுத்துப்போட்டவங்களெல்லே அப்பவே தமிழ்ச் சனத்தின்ர துரோகியாய்ப் போயிற்றாங்கள் அவங்கள்.

சின்னப் பெடியள் கொஞ்சப்பேர் சேர்ந்து பஸ்சுகளை கொளுத்தியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.பிமாருடைய வீடுகளுக்கு குண்டெறிஞ்சு பயமுறுத்தியும் எதிர்ப்புக் காட்டியும் அவங்கள் திருந்தேல்லப்பார்.

துரையரும் ஒரு துரோகிதான். அவரையும் அவங்கள் பயமுறுத்திப் பாத்தவங்கள். அவரும் திருந்தேல்ல. அதுக்குப்பிறகும் எத்தினைய நடத்திப்போட்டார். தமிழராய்ச்சி மாநாட்டுக்கு பார்க்கவந்து பயந்து ஓடினவனுக்கு தெரியும், அந்தப்பயங்கரம். எத்தினை சனங்களை சாகவிட்டவங்கள்.

இப்பவெல்லாம் தமிழ்த்துரோகிகளை அழிக்கிறதுக்கு தமிழனாகப் பட்டவங்கள் எல்லோருமே மனதுக்குள்ள அங்கீகாரம் கொடுத்திட்டாங்கள். ஒருத்தருக்கு ஒருத்தர் தெரியாமல் அந்தப் பெடியளுக்கு ஆதரவும் கொடுக்கத்தொடங்கிவிட்டார்கள். "நீயும் தானே" என்றார் லோரன்ஸ் அண்ணர். இடைமறித்து சிதம்பரத்தார் "நானும் இப்ப இளந்தாரியாய் இல்லையென்றுதான் கவலை" என்றார்.

"சிதம்பரம், செய்மிறது ஒன்றும் நல்லாயில்லை. நேற்று பொலிஸ் காரர் ரெண்டுபேர் உன்னைவந்து விசாரிச்சுக் கொண்டு போறாங்கள். உன்ன ஸ்ரேசனுக்கு வரட்டாம். பழைய கடத்தல்காரர் எல்லாரையும் பிடிச்சு விசாரிக்கிறாங்களாம். நீ நாளைக்கு கொழும்புக்குப் போயிடு. நான் உன்னை கொழும்பில எண்டுதான் சொன்னான்." என்றார் லோரன்ஸ் அண்ணர்.

"டேய் நிலவுக்குப்பயந்து பரதேசம் போறதில்லையடா. பாப்பம். நான் ஒருக்கா அவங்களப்போய் பார்க்கிறதுதான்"

வாசலில் அந்தக் கறுவல் பெடியன் காசோடு நின்று கூப்பிட்டான். சிதம்பரத்தார் பொலிஸ்ரேசனுக்குள் நுளையும் போதே அடிவிழுகிற சத்தமும் கத்துகின்ற சத்தமும் கேட்டுக்கொண்டேயிருந்தது. உள்ளே யோசப்பை ஒருவாங்கினில் குப்புறப்படுக்கவைத்து கால் பாதத்தின் முன்பகுதியை வாங்கின் விளிம்பில் தடையாக வைத்து விட்டு குதிக்காலில் அடித்துக்கொண்டிருந்தான் ஒருபொலிஸ்காரன். உயிர்போகும் வலியில் கத்திக்கொண்டிருந்தான் யோசப்பு.

வெளியில் வந்த இன்ஸ்பெக்டர் சிதம்பரத்தாரைக்கண்டு அவரையே கொஞ்சநேரம் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு "என்னை தெரியுமா" என்று கேட்டான். "அர்னோலிஸ்தானே நீ" தலையாட்டினார் சிதம்பரத்தார். சிதம்பரத்தாரை அர்னோலிஸ் சந்தித்தது தற்செயலாகத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்னோலிஸ் கான்ஸ்டபிளாய் இருந்தபோது நடந்த சந்திப்பு.

இரவே, 'போட்'டில் வருகிற சாமானை இறக்குவதற்கு சிதம்பரத்தார் யோசப்பையும் ஏற்றிக்கொண்டு முதலே புறப்பட்டு விட்டார்; பின்னால் லொறியை வரச் சொல்லிவிட்டு. அந்தநேரம் நாச்சிக்குடா வலைப்பாட்டு பக்கம்தான் சாமான் இறக்க வசதி.

பூனகரி ரோட்டில எந்தவாகனமும் இல்லாமல் ரோட்டு வெளித்துக் கிடந்தது. வாகனத்தை அந்தக்காட்டு ரோட்டில் நிறுத்திவிட்டு கொஞ்சநேரம் நின்றார்கள்; நேரம் போகட்டுமென்று. அந்தநேரம்தான் அந்தப் பொலிஸ் ஜீப் வந்தது. வந்த ஜீப் காரைக்கண்டவுடன் நிறுத்திவிட்டது. பொலிஸ்காரர்கள் இறங்கிவந்து காருக்குள் எட்டிப்பார்த்தார்கள். சாராயப்போத்தல்களும், பியர்ப்போத்தல்களுமாய் நிரம்பியிருந்தது கார்.

"எங்க போறீங்கள்" இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"வாடிக்குப் போறோம்" யோசப் சொன்னான். "பொய் சொல்லவேண்டாம் நீங்கள் எங்கபோறீங்கள் என்று எனக்குத்தெரியும் கடத்தல் சாமான் இறக்கத்தானே" "இல்லை"யென்றான் யோசப் அவசரமாய். அந்தநேரம்தான் லொறியும் பின்னால் வந்துகொண்டிருந்தது. அர்னோலிஸ் ஓடிப்போய் கொஞ்சத்தூரம் முன்னுக்கே லொறியை மறித்தான். சிறிது நேரம் அவர்களுடன் ஏதோ பேசினான். திரும்ப வந்து இன்ஸ்பெக்ரருடன் தனியே கதைத்தான்.

இன்ஸ்பெக்டர் சிதம்பரத்தாரிடம் வந்து "லொறிக்காரர் உங்கட ஆக்கள்தானாம். எல்லா விசயமும் சொல்லிப்போட்டாங்கள். என்ன சாமான் இறக்கப்போறீங்கள் எங்க இறக்கப்போறீங்கள்" சாதாரணமாகத்தான் கேட்டான். யோசப் உடனடியாக மறுத்துச் சொன்னான். "எங்களுக்கு லொறிக்காரரைத் தெரியாது, நாங்கள் வாடிக்குப்போறம்". இன்ஸ்பெக்டர் ஏழனமாய் சிரித்தான். "நாங்கள் இப்ப என்ன கேக்கிறம் எங்களையும் கவனியுங்கோ" என்றுதானே.

சிதம்பரத்தாருக்கு நன்றாய் விளங்கிவிட்டது. எங்களை மடக்கிப்போட்டாங்கள் என்று. யோசப்புக்குச் சொன்னார் "எவ்வளவு வேணுமெண்டு கேள்" என்று. "ஒரு இலட்சம்" இன்ஸ்பெக்டர் சொன்னான்.

"என்ன விளையாடுறிங்களே" சிதம்பரத்தார் ஒரு சாராயப்போத்தல் எடுத்து உடைத்து கிளாசில் ஊற்றிக் குடித்துவிட்டு யோசப்பிடம் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு ஐம்பது" இன்ஸ்பெக்ஸ்டர் சொன்னான்."என்னடா சாமானே இறக்கேல்ல இதுக்குள்ள பேரம்பேசிறீங்கள்? இருபத்தைந்து தரலாமென்று சொல்லடா. காசு பெரிசில்லை. ஆனால் ஆரண்டாலும் ஒரு பொலீஸ் லொறியில மதவாச்சிகரைக்கும் போய் சாமானை அனுப்பிப்போட்டு வரோணும். சாராயத்தை குடடா யோசப்" இன்ஸ்பெக்டர் தலையாட்ட வாகனத்துள் இருந்தும் சாராயம் எடுக்கப்பட்டது.

ஒருமுறை, லோரன்ஸ் அண்ணரின் இரண்டாவது தங்கச்சியின் கல்யாண வீட்டுநேரம். கூறை, வேட்டி, சோடனையெல்லாம் இந்தியாவில் இருந்துகொண்டுவர, சிதம்பரமண்ணர் சொல்லிவிட்டார். அந்தச்செலவுக்கு கொஞ்ச 'பீடி' இலையும் போட்டுக்கொண்டு வாறது என்று முடிவு.

லோரன்ஸ் அண்ணர்தான் இந்தமுறை போனது. ஆனால் அவர் குறிப்பிட்ட அந்த இடத்துக்கு போகமுன்னமே இந்தியக் 'கஸ்ரம்ஸ்' அவரின்ர வள்ளத்தைப் பிடிச்சுப்போட்டுது. கொண்டுபோன வள்ளம் தங்கச்சியாருக்கு சீதனம் கொடுக்கவென்று புதுசாய் எடுத்த 'யன்மார் எஞ்சின்' வள்ளம். இதை திருப்பி எடுக்கிறதுக்கு வள்ளத்தினுடைய காசைவிட கூடுதலாய் லஞ்சம் தாறன் என்று சொல்லியும் கஸ்ரம்ஸ்காரன் விடவில்லை.

அந்தநேரம்தான் அர்னோலிசும் சிதம்பரத்தாரிடம் தன்னுடைய தங்கச்சியினுடைய கல்யாண வீட்டுக்கென்று காசுகேட்டவன். "இந்த முறை சாமான் இறக்கிற லஞ்சக்காசு முழுவதையும் உனக்குத்தாறன். மற்றப் பொலிஸ்காரருக்கு நான் ஏதும் குடுத்துச் சமாளிக்கிறன்" என்றும் சொல்லிப்போட்டார்.

வள்ளம் வரவில்லை. சிதம்பரத்தாரோடு அர்னோலிசும் சேர்ந்து காத்திருந்தார்கள். வள்ளம் வரவில்லை. லோரன்ஸ் அண்ணர் மட்டும் வேறு ஒரு வள்ளத்தில் வந்திருந்தார். 'வள்ளத்தை கஸ்டம்ஸ்காரர் பிடித்துவிட்டார்கள்' என்றார்.

"டேய் அது கலியாண வீட்டிலண்டு கடலில நிக்கோணுமடா. சீதனவள்ளமெல்லோடா. ஏன்ரா அதைவிட்டுட்டு வந்தனி?" சிதம்பரத்தாருக்கு சரியானகோபம். "நானும் எவ்வளவு காசு எண்டாலும் தாறன் எண்டு கேட்டுப்பாத்திட்டன். கஸ்டம்ஸ் பெரியவன் ஆரோ வந்து பிடிச்சதாம். வழக்குப் பதிவு செய்தாச்சாம். வேற வள்ளத்தை கட்டிப்போட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைக்கொண்டு போகட்டோ என்று கேட்டுப்பாத்திட்டன் சரிவரேல்ல''

''லோரன்ஸ் நாளைக்கு இந்தக் கரையில் வள்ளம் நிக்கோணும். ஒரு போட்டுக்கு டீசல்அடி. சாப்பாடு எடுத்துவை இரண்டுபோட்டுக்கு. சாமான் எடுத்து கரையில வைக்கச்சொல்லி எங்கட தூத்துக்குடிக்காரருக்கு அறிவி'' கட்டளையிட்டார்.

லோரன்ஸ் அண்ணர் போய்விட்டார். அர்லோனிஸ் மட்டும் நின்று கொண்டிருந்தான். சிதம்பரத்தார் கையில் கட்டியிருந்த றோமர் மணிக்கூட்டைக் கழற்றி அர்னோலிசிடம் கொடுத்தார். ''இதைக்கொண்டுபோய் என்ர மனிசியிட்ட குடுத்திட்டு இருபத்தையாயிரம் வேண்டிக்கொண்டு நீபோ. இந்தக்காசை திருப்பித்தரவேண்டாம்.'' அர்னோலிசுக்கு என்ன நன்றி சொல்வதென்றே தெரியவில்லை. 'இதைச் சாகும்வரை மறக்கமாட்டேன்' என்றான் அர்னோலிஸ்.

இரவிரவாக தூத்துக்குடி துறைமுகத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது வள்ளம். லோரன்ஸ் அண்ணரிடம் சிதம்பரத்தார் சொன்னார். ''நீ போய் இந்த வள்ளத்தில கல்யாணவீட்டு சாமானெல்லாத்தையும் ஏத்திக்கொண்டுபோ. இன்னொரு வள்ளத்துக்கு சாமான் எடுத்து வைக்கச்சொல்லு. உன்ர சாரத்தை தா'' ''நீ என்னசெய்யப்போறாய்'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் லோரன்ஸ் அண்ணர். சிதம்பரத்தார் சாரத்தை தலையில கட்டிக்கொண்டு வள்ளத்தை விட்டு தண்ணீரில் இறங்கும்போது லோரன்சர் புரிந்து கொண்டார்.

அந்தத்துறையில் கட்டியிருந்த வள்ளங்களை நீந்தியபடியே பார்த்துக் கொண்டு போனார் சிதம்பரத்தார். தூரத்தில் அவருடைய வள்ளம் தெளிவாகத் தெரிந்தது. இரவிலும் வெளிப்பாகத் தெரியக்கூடிய நிறம் அதற்கு. மெதுவாய் வள்ளத்தில் ஏறி நங்கூரத்தைதூக்கி விட்டு சாரங்களை இரண்டாக கிழித்து ஒரு தாங்குகம்பில் பாயாக கட்டிவிட்டார். இப்போது வள்ளம் அடயத்தொடங்க சுக்கானை ஒருபக்கம் முழுதாக திருப்பிட்டார். வள்ளம் வழியத்தெடங்கிவிட்டது. அர்னோலிசை ஒருநாள் சிதம்பரத்தார் சந்தித்தார். அர்னோலிஸ் மரியாதையாக நின்று நன்றி சொன்னான். ''பரவாயில்லை அர்னோலிஸ் உனக்கு தந்தகாசுக்கு மேலேயே எனக்கு வந்துவிட்டுது'' என்றார் தனக்குள்.

''உங்களை மறக்கஏலுமோ சிதம்பரண்ணை'' என்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்னோலிஸ் இன்ஸ்பெக்டர். "கதிரையில இருங்கோ அண்ண"

"நான் இருக்கமாட்டன் என்று தெரியும்தானே? ஏன் கூப்பிட்டனி என்று சொல்லு"

"நீங்கள் நல்லா இருக்கோணும் என்றுதான் நினைக்கிறன்." சிரித்தார் சிதம்பரத்தார்.

"அதுதான் இந்தக்கடத்தல்வேலையைவிட்டுட்டு"

"நான் கடத்தல் செய்தால நீயும் பயனடைஞ்சிருக்கிறாய்" "நீங்க முந்தி நல்ல ஆள்தான். இப்ப அப்படியில்லை. நேற்றும் நீங்கள் வெடிமருந்துச் சாமான்கள் இறக்கிக் குடுத்திருக்கிறீங்கள். நீங்கள் வேற எதைஇறக்கினாலும் எனக்கு கவலையில்லை" "ஆரும் ஓடர் தாறாங்கள் நான் கொணர்ந்து கொடுக்கிறேன்" "இல்ல நீங்கள் எல்லாம் தெரிஞ்சு கொண்டுதான் செய்யிறியள். அதை நீங்கள் கொணர்ந்து குடுக்கிறஆக்களை உங்களுக்கு நல்லாத்தெரியும்" "எனக்குத் தெரியாது." சிதம்பரத்தார் அழுத்தமா சொன்னார்.

"சரி பரவாயில்லை. நீங்கள் வெடிமருந்துகளைக் குடுக்கிற ஆக்கள் குண்டடிக்கிறது, பஸ்சைக் கொழுத்துறது, அரசாங்கத்தின்ர ஆக்களை கொல்லுறதெல்லாம் செய்யிறாங்கள். அதாவது உங்களுக்கு தெரியுமோ?"

"தெரியும்" சிதம்பரத்தாரின் ஒற்றைப்பதில்.

"அப்ப அவங்கள் அப்படிச்செய்யிறாங்கள் என்று தெரிஞ்சும் ஏத்திக் கொடுக்கிறீங்கள்தானே"

"துரோகியளை கொல்லுறது பாவமில்லை"

"இதால உங்களுக்கொண்டும் வரப்போறதில்லை" கத்தினான் அர்னோலிஸ்.

"எனக்கொன்றும் வராதுதான். தமிழன் அத்தனை பேருக்கும் ஒரு ஆறுதலாவது வரும்" "நான் அரசாங்க உத்தியோகஸ்தன். அரசாங்கத்திற்கு விசுவாசமா வேலை செய்யோணும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“செய், எனக்கு அதைப்பற்றி பிரச்சனை இல்லை. நானும் என்னால செய்ய முடிஞ்சதை அவங்களுக்கு செய்யத்தான் வேணும்”

“அப்ப தொடர்ந்தும் அதைச்செய்யத்தான் போறீங்களோ”

“ஓம்” ஒற்றைப்பதிலில் அழுத்தமாகச் சொன்னார் சிதம்பரத்தார்.

“அப்ப நீங்கள் சிறையில இருக்கப்போறதாய் முடிவுசெய்திட்டீங்கள்” சிரித்தார் சிதம்பரத்தார் ஏளனமாய். “என்னை உன்னால பிடிக்க முடியாதென்று உனக்கே நல்லாத்தெரியும்.” சிரித்தான் அர்னோலிஸ் “அதையும் பார்ப்பம்”

“அர்னோலிஸ் உன்னில எனக்கெந்தக்கோபமும் இல்லை உன்னில. அனுதாபம்தான்வருது எனக்கு. பேசாமல் உன்ரவேலையை ஊரோட மாத்திக்கொண்டு போய் நீ சந்தோசமாயிரு. நாங்களும் எங்கபாட்டில சந்தோசமாயிருப்பம். ஏன் வீணா இங்க கிடந்து சாகிறாய்”

“சரி நீங்க போகலாம். ஆனால் நாளைக்கு நீங்கள் கடலுக்குபோனா கட்டாயம் என்னட்ட பிடிபடவேண்டி வரும்.”

“சரி நாளைக்கு காலமை நான் சாமானோட வருவன். உன்னால பிடிக்கமுடிஞ்சால் பிடி” சிதம்பரத்தார் போய்க்கொண்டே இருந்தார். அவன் பேசவில்லை.

சிதம்பரத்தார் பின்னேரம் புறப்பட்டுப்போய் விடியற்காலையில் சாமான்களை இறக்கி அனுப்ப வேண்டிய இடங்களுக்கு அனுப்பி வைத்துவிட்டு வீட்டிற்கு வரும்வரை அவரைப்பிடிக்க அர்னோலிஸ் இன்ஸ்பெக்டர் அந்தப்பக்கமே வரவில்லை.

லோறன்ஸ் அண்ணர் வந்து சொன்னார், “அர்னோலிஸ்” இன்ஸ்பெக்டரின் ஜீப்புக்கு ஆரோ குண்டடிச்சிட்டாங்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனத்தின் கண்கள்



அன்றைக்கு காலையில் எவருமே முகம்கழுவவில்லை, அந்தமுகாமில். சிறுவர்களைப் பெண்களும் ஆண்களும் அடித்து விரட்டினார்கள் ஆற்றுப்பக்கமே போக வேண்டாம் என்று காலைக்கடன்முடிக்க எந்த ஆண்களும் உடைந்தபடிக்கட்டுக்களின் இடைவெளிகளுக்கும் பற்றை மறைவுகளுக்கும் போகவில்லை.

சிலர் "பைப்"பில் தண்ணீர் எடுத்து முகம் கழுவிக் கொண்டிருந்தார்கள். தண்ணீரும் தட்டுப்பாடாகிவிட்டது. கசமுசா என்று முகாமின் மதில் ஓரங்களில் பெண்கள் ஆற்றை எட்டிப் பார்த்தபடியே நின்றார்கள். துணிச்சலுள்ள ஆண்கள் சிலர் தண்ணீரில் இறங்கி கிட்டப்போய் அதைப்பார்த்தார்கள்; அருமைநாயகமும் கூடத்தான்.

ஆற்றோரமாய் இருந்த அந்த முருகன் கோவில் படிக்கட்டுகள் தண்ணீரைத் தொடும். அதற்குச் சற்று முன்னால் ஒரு பெரியபாறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப்பாறையில் மோதியபடிதான் அந்தப் பெண்ணின் சடலம் கிடந்தது. ஊதிப்பருத்து சிதைந்து தலைமயிர் சிக்கியபடி முகத்தில் பெரியகாயம்; அடையாளம் தெரியாமல்.

அருமைநாயகம் பக்கத்தில் நான்காவது கட்டிடத்தில் இருந்த பொலிசுக்குப் போய்ச் சொன்னான். பிணம் ஒன்று கிடப்பதாய் 'ஏட்டு' பேசிக்கலைத்து விட்டான்.

"அடேயப்பா இதுக்குப்போய் அலட்டிக்கிறாயே. அது எப்படியாச்சும் போகட்டும். நீங்க உங்க வேலையைப் பாருங்க" என்று.

என்ன செய்வதென்று அருமைக்குத் தெரியவில்லை. தண்டல்காரன் ஒருவன் ஒருதடியுடன் ஆற்றில் இறங்கி அந்தப் பெண்ணின் பிணத்தைத் தள்ளிவிட்டான். அது ஆற்றோடு போகத் தொடங்கிவிட்டது. அதற்குப் பிறகும் ஆரும் ஆற்றில் இறங்கவில்லை.

"ஜனகராஜ்" தூரத்தில் அந்தக்குரல் அவனைக் கூப்பிட்டது. ஆரவள் கூப்பிடுகிறது.? ஓ! அது அவளின்ர குரல்தான். அவள் வந்திட்டாள். உள்ளுக்குள் ஒரு வண்ணாத்திப்பூச்சி சிறகடிக்க தூக்கிய பலகைகளைச் சுவரில் சாத்திவிட்டு, நெஞ்சு தடதடக்க, வேலைப்பழுவும் கஸ்ரமும் பஞ்சாய்ப்போக, 'கனநாளுக்குப்பிறகு, எங்கட மேஸ்திரியோட வேலைக்கு வருகிறாள். இவ்வளவு நாளும் சோகமாகப் போன இந்தக் கட்டிடவேலைக்கு ஒரு வசந்தம் வந்து கொண்டிருக்கிறது.' துள்ளிக்குதித்தான் அருமைநாயகம்.

அருமைநாயகத்திற்கு, "ஜனகராஜ்" என்று பட்டம் வைத்ததே அவள்தான். அவளோடு வரும் மற்ற வேலைசெய்கிற பெட்டையளும் அவனை அப்படித்தான் கூப்பிடுகிறது. அருமை விடும் 'ஜொள்ளு'த்தான் அவள் அந்தப் பேரை வைக்கக் காரணமாகியது.

அருமை அவளைக் "கருப்ஸ்" என்றுதான் கூப்பிடுவான். கருப்பாயிதான் அவளுக்குப் பெயர். பெயர் போல அவளும் கறுப்புத்தான். அருமைக்கு அவளைக் கருப்பாயி என்று அழைப்பதோ விருப்பமில்லாதது, அந்தக் கறுப்பழகு, அவனைமட்டுமல்ல பல பேரைக் கிறங்கவைத்தது.

"என்ன ஜனகராஜாசார் சந்தோசமா இருக்கிறாயா சார்" அவள்தான்.
"நீ போனப்புறம் எப்படிச் சந்தோசம் வரும் கறுப்ஸ்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதான் வந்துட்டேன் சார்"

"மதியத்துக்கு என்ன கொண்ணந்தே"

"உம்... மொச்சுக் கொட்ட கொழம்புதான், நீ என்ன மீன் கொழம்பாய்யா".

"நான் எப்பவும் மீன் கொழம்புதான், நீ வருவாயென்று"

"சரி லஞ்சுக்கு ஒரு பிடி பிடிச்சிடலாம்" சிமிட்டிக்கொண்டே போனாள்.

"ஏன் அருமைச்சாமி, கருப்பாமிசாமி என்ன வேலை ஆரம்பிக்கிற நேரம் பார்த்து ளொள்ளு பண்ணிக்கிட்டிருக்கீங்க, வேலைய ஆரம்பிங்க சாமி" கோபமாய்ச் சொன்னார் மேஸ்திரி பெருமாள்.

மேஸ்திரி கோபத்தில் கதைக்கிறான் என்று எல்லோருக்கும் தெரியும். கோபம் வந்தால் அவனொரு உதவாத ஆள்தான். ஆனால் அவன் ஐயப்பசாமிக்கு மாலைபோட்டுவிட்டான். அதனால் கடைசி வரைக்கும் யாரையுமே திட்டமாட்டான். ஆம்பிளையோ பொம்பிளையோ யாராக இருந்தாலும் வாங்கசாமி, போங்கசாமி, அதை எடுங்கசாமி என்று எல்லோரையுமே சாமிபோட்டுத்தான் அழைப்பான் என்று எல்லோருக்குமே தெரியும். மற்றவர்களும் அவனைச் சாமிபோட்டுத்தான் கதைப்பார்கள். இல்லையென்றால் இன்னேரம் "ஏய்யா அருமைநாயகம் அங்க பொண்ணுங்களோட என்னா பண்ணிக்கிட்டிருக்கிறா, ஏண்டி கருப்பாமி என்ன அங்க அவன்கிட்ட பேச்சு வேண்டிக்கிடக்கு, கம்மநாட்டிங்க, கழுதைங்க, கேனக்கூதிங்க," மிச்சமெல்லாம் கெட்ட வார்த்தைகளாய்த் தானிருக்கும்.

ஐயப்பசாமிக்கு மாலை போட்டுவிட்டால் அவன் சாதுவாகி விடுவான். அந்த மாலைக்கு அப்படியொரு சக்தியா? அல்லது அந்த மாலை போடும் சம்பிரதாயம்தான் அவனை மாற்றிவிடுகிறதா?

மாலை போட்ட எவனும் எந்தப் பெண்ணையும், மனைவியைக்கூட நிமிர்ந்து பார்க்கமாட்டான். தண்ணியடிக்கமாட்டான், பொய் சொல்லான். கோபமே வராது, வீட்டுக்கே போகமாட்டார்கள். ஒருமாதம் முழுவதும் இரண்டு மூன்று பேராகச் சேர்ந்து ஒரு கோவிலிலே சமைத்துச் சாப்பிட்டு, உறங்கிவிடுவார்கள். விடிகாலையில் பனிக்குளிரில் கூட நெஞ்சளவு தண்ணீரில் நின்று "சாமியே சரணம் ஐயப்பா"என்று பெரிதாகச் சத்தமிட்டுக் கொண்டிருப்பார்கள்.

ஆரம்பத்தில் அருமை 'யாரோ 'லூசு'கள் தண்ணீரில் நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ கத்துகிறார்கள்' என்றுதான் நினைத்தான். போகப் போக அது ஒரு பெரிய விடயமாகத் தெரிந்தது அவனுக்கு. பாவங்களைச் செய்துவிட்டுப் பாவமன்னிப்புக் கேட்க கடவுளிடம் போவதை விட கடவுளுக்காகப் பாவமே செய்யாமல் இருப்பதென்பது..... இந்து மதத்தின் மீதும் இந்திய மக்களின் மீதும் ஒரு மரியாதையே வந்தது. என்றாலும் ஆற்றில் மிதந்த அந்தப் பெண்ணின் பிணம் அவனை ஏதோ செய்து கொண்டிருந்தது.

மேஸ்திரி சாமிக்கு மாலை போட்டது கருப்பாயிக்கும் நல்லதாய் விட்டது. இல்லாவிட்டால் இப்பொழுது அவளுக்கும் மேஸ்திரிக்கும் ஒரு இழுபறி நடந்திருக்கும். கருப்பாயி மேஸ்திரியை எப்பவுமே மதிப்பதில்லை. ஏனென்றால் அவன் கருப்பாயியின் அக்காவைத்தான் கலியாணம் கட்டியிருந்தான். அக்காவுடன் அவன் நல்ல மாதிரியே இருப்பதில்லை. எந்தநாளும் ஒய்வில்லாமல் குடித்துவிட்டு வருவான். கண்டபாட்டில் விளாசுவான், சந்தேகக் கேள்விகள் கேட்பான், படுத்து விடுவான். கறுப்பாயியின் அக்காவும் சித்தாள் வேலைக்குப் போறவள்தான். ஆனால் அவள் தன் கணவன் வேலை செய்யும் வேலைத்தளங்களுக்கு போவதில்லை. பெரியமேஸ்திரியே இருவரையும் வேறு வேறு இடத்துக்கு அனுப்பி வைத்திருந்தார். அதுவும் அவர்களின் சண்டைக்குக் காரணமாய் அமைந்துவிட்டது. அதோடு கறுப்பாயியின் அக்காவுக்கு குழந்தைகளும் இல்லை. அதுவும் ஒரு காரணம்தான். ஒவ்வொருநாளும் இதைவைத்தே யாரையாவது ஒருவனைச் சாட்டி சந்தேகப்படுவான். இதெல்லாம் அருமைக்குக் கருப்பாயி சொல்லித்தான் தெரியும்.

பெருமாள் மேஸ்திரிக்கு கம்பி கட்டுறவேலை. கருப்பாயி மேசன் சித்தாள் வேலை செய்பவள். அவளுக்கு வேறு மேஸ்திரி. பெருமாள் மேஸ்திரி இடையில் அவளிடம் பேசினாலோ, வேலை சொன்னாலோ எடுத்தெறிந்து பேசுவாள், பயப்படாள் அவனுக்கு.

பொம்பிளைகள் சித்தாள் வேலை செய்வது அருமைக்கு முதலில் பெரிய ஆச்சரியமாகத்தான் இருந்தது. இலங்கையில் பெண்கள் 'முட்டாள்' வேலை செய்வதை அவன் கண்டதே இல்லை. உத்தியோகம் பார்க்கும் பெண்களைப் பாத்திருக்கிறான். புருசனோடு சேர்ந்து வயல் வேலை செய்யும் பெண்களை, கடற்கரையில் மீன் தெரியும் மென்மையான பெண்களைப் பாத்திருக்கிறான். ஆனால், இப்படி இடுப்பு முறிய கடுமையாகச் சீமெந்துக் கல்சுமக்கும் பெண்களை இந்தியாவில்தான் பார்க்கிறான். பாவமாயிருக்கும் அவனுக்கு.

வேலைக்குச் சேர்ந்த புதிதில் அருமை கோபிச்செட்டிபாளையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமில்தான் இருந்தான். கொஞ்சநாளிலே பவானிக்கு மாறிவிட்டார்கள். இப்பவெல்லாம் காலமை ஆறுமணிக்கு பஸ்பிடித்து வேலைக்கு வர ஏழுமணியாகிவிடும். வேலை முடிந்து வீட்டிற்குப் போக இரவு ஏழு மணியாகிவிடும். முகாமில் தங்கியிருக்கும் நாளே குறைவு. ஒருவருடத்தில் ஐம்பத்து ரெண்டு நாட்கள் மட்டும் மனைவி, பிள்ளைகளை இரவில் மட்டுமே பார்க்கலாம். மனைவியிடம் கடன்பிரச்சனைகள் கதைத்து முடிக்கவே நேரம் போய்விடும். பிள்ளைகளோடு எதைக்கதைக்கிறது? ஒருசெவ்வாய் மட்டும் லீவு. அன்றைக்குக் காலமை போய் சம்பளம் வாங்கிவந்து, கிழமைச் சாமான் வாங்கி இரண்டு 'பாக்கட்' அடித்து, உடம்பாத்தி வீடுவந்தால் பொழுதுபட்டுப் போவதே தெரியாது. அதோடு விசாரணைகள், செக்கிங்குகள், தண்ணீர்ப்பிர்சசனைகள், காலைக்கடன் முடிக்கக் கியூ. மத்தியானங்களில் காலை வேலை முடித்து சாப்பிட்டு ஒரு மணித்தியால இடைவெளியில் ஒரு லீவு. அந்த ஓய்வு மட்டும்தான் ஓய்வு.

கருப்பாயியும் பவானியில் இருந்து பஸ்சில்தான் வருவாள். மத்தியானத்தில் அவளும் அவளுடைய சினேகிதியும் அருமையோடு இருந்துதான் சாப்பிடுவார்கள். கொஞ்சநேரம் மணல் கும்பிகளில் தூங்குவார்கள்.

சாப்பிடும் நேரங்களில் கதை நீளும். அவளுடைய வாழ்க்கையை இவன் தெரிந்து கொள்வதும், தன்னுடைய நிலமையை இவன் சொல்வதும்,.... "சிலோன் எவ்வளவு தூரம்" என்று கேட்பாள். "அங்கே ஏன் சண்டை வந்தது. உங்களை யார் கலைச்சாங்க?" அவளின் கேள்விகளும் நீளும்.எல்லாவற்றிற்கும் பதில் சொல்வான் அருமை.

"நீங்க எல்லாம் பாவங்க" என்பாள்.

கருப்பாயிக்கு பன்னிரண்டு ரூபா சம்பளம். வேலை முடிஞ்சு போய் சமையல் செய்து விட்டு இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்து.... ரஜனிகாந்த்தான் அவளுக்குப் பிடிச்ச நடிகர். 'கமலகாசன் கேணயன்' என்பாள். காலையில் பழைய சாதத்துடன் மொச்சக் கொட்டைக் குழம்புடன், அதுதான் 'லஞ்' என்பாள். இவன் அந்த மொச்சைக் கொட்டைக் குழம்பில் ஆசைப்பட அவள் மீன்குழம்புக்கு ஆசைப்பட சாப்பாடு கைமாறும். 'மீன் குழம்பு வைச்சுச் சாப்பிடக் கட்டுதா' என்பாள்.

தகப்பனும் தாயும் கல்லுடைக்கப் போய் 'பாக்கட்' குடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்து, அவர்களுக்கே அவர்களின் உழைப்புப் போதாது, சாப்பாட்டிற்கு உழைப்பது அவள்தான்.

"உழைப்புக்காகத்தான் அப்பன் ஆத்தா எனக்குக் கல்யாணம் பண்ணி வக்கல" என்பாள் சிரித்தபடி. அவளின் வெளிப்பேச்சு அவனுக்குப் பிடித்திருக்கும்.

வெட்கமில்லாமல் அந்த மணல்கும்பிக்குமேல் படுத்துறங்குவாள். மதிய இடைவெளியில் அவளைப் பார்த்தபடியே படுத்திருப்பான் அருமை. அவளைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்போல் தோன்றும் அவனுக்கு.

"என்ன ஜனகராஜூ சைட் அடிக்கிறியா, அந்தப்பக்கமாய் படுத்துத் தூங்கு" பயமுறுத்துவாள். சிலவேளை அவனுக்குள் இருக்கும் அது. நினைப்பதை அவனால் சொல்ல முடியாது போகும். அவனின் குழப்பம் அவளுக்குத் தெரியும். திரும்பிப் படுத்துவிடுவாள்.

இந்தியாவிற்குப் படகேறி கோபிச்செட்டிபாளயத்தில் வந்திறங்கும் போது சந்தோசமாய்த்தான் இருந்தது அருமைக்கு. மஞ்சள் தெருவிளக்குகளில் அந்தநகரம் அழகேதான். காலையில் அதைவிட அழகு. அந்த அகதிகள் தங்கிய தொழுநோய் ஆஸ்பத்திரிக்கு டோனுக்குப் பக்கத்தில் ஒரு ஆறு ஓட அந்தக் கோவில் படிக்கட்டுக் குளத்தில் இறங்க, அழகோ அழகு.

அகதிகளைப் பார்க்க வந்த ஆச்சி, அருமை தன்னுடைய ஓடிப்போன மகனைப்போல் இருக்கிறான் என்று ஐந்து ரூபா தந்தார். நெகிழ்ந்து போனான். கலக்டர், தாசில்தார், ரெவினியூ இன்ஸ்பெக்டர், பொலிஸ்கூடவந்து பார்த்தார்கள். படம் பிடித்தார்கள். பானை சட்டி குக்கர் தந்தார்கள். மூன்று ரூபாவுக்கு கரசின். காலை உப்புமா, மதியம் தயிர்ச்சாதம், இரவு உப்புமா, பால், சாப்பாடு. அந்தமாதிரி சொர்க்கம்போல.

அந்த விருந்தை நீள இடம்பிடித்து, இரவிலும் நல்லபகல் வெளிச்சம். புதுக்குடும்பங்களான ஜீவனும், செல்வனும் மட்டும் 'அந்த இடம் சரியில்லை, எங்களை வேறு இடத்திற்கு மாற்றவேண்டும்' என்று தாசில்தாரைக் கேட்ட போது அருமைக்குச் சரியான கோபமே வந்தது.

ஒருநாள் அருமைக்கு முன்னால் படுத்திருந்த பெட்டையின் கால்களுக்குமேல் கால் போட்டுப் படுத்திருந்தது என்று சொல்லி, நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிஞ்சு அப்படிப்படுத்திருந்தனீங்கள் என்று மனைவி சந்தேகப்பட்டு...

இருநூறு பேர்கொண்ட அந்த அகதிச்சனத்துக்கு ஆறு கக்கூசு தாங்காமல் போனதும், கோவில் குளமென்றில்லாமல் காலைக்கடனை முடித்துவைக்கும் ஊரவரின் அசிங்கம். போனால் போகட்டும் ஏன்று வெட்கம் மறந்து ஆணும் பெண்ணுமாய்க் குளிக்கும் ஆற்றில், அடைந்து போகும் பிணங்களும், அரிகண்டம் அவதி எரிச்சலுக்குள் அந்த நகரத்தின் அழகு மனத்தைவிட்டு மறைந்து போனது.

பல இரவுகளில் மனிசியிடம், பேச்சுவாங்கிச் சமையல் புகைக்குள் மூச்சுமுட்ட அந்தச்சின்ன விறாந்தைகளில் அடைபட்டுக்கிடந்து, இப்போது தான் இந்தக்கட்டிடத்தில் இருக்கமாட்டோம் என்று ஜீவனும் செல்வனும் அலுத்துக்கொண்டது பிந்திப்போய் விளங்கியது அருமைக்கு.

ஒரு படம் பார்க்கப்பட்டபாடு, அடுத்த ஊரிலிருந்த சகோதரத்தைப் போய்ப்பார்க்கப்பட்டபாடு, மனிசியோட கொஞ்சநேரம் ஆசையாய் கதைக்க, ஒரு வேலை தேட, ஏன் வந்தவுடன் ஒரு தேத்தண்ணிகூட கிடைச்சிருக்காது.

அருமை கருப்பாயியை சந்தித்தது முதலில் ஒரு தேத்தண்ணிக்கடையில்தான். கருப்பாயி பிளேன்ரி குடிச்சுக் கொண்டிருந்தது தான் ஆச்சரியம். அந்தப் பிளேன்ரீ கேட்டு, எத்தனை கடையில முழுசிக்கொண்டு நின்றிருக்கிறான்.

"இஞ்சேருங்கோ நீங்கள் குடிக்கிற என்ன சாமான்"
பிளேன்ரீக் கிளாசைக் காட்டித்தான் கேட்டான்.
"ஏங்க நீங்க இலங்கைக்காரரா" என்றாள் அவள்.
"ஓம்"என்றான் அருமை. மெதுவாய் சிரித்தபடி "வரட்டீங்க" என்றாள். பெரியார் மாவட்டப்பக்கங்களில் பிளேன்ரீயை அப்படித்தான் சொல்வார்கள்.

"வரட்டீ என்று கேட்டால் தருவாங்களோ"
"ஏய்யா ஒரு வரட்டீ கொடு" என்றாள். முப்பது பைசா அவளே கொடுத்தாள்.

"உங்க ஊரில் வரட்டீக்கு எப்பிடி சொல்வாங்க" என்று கேட்டாள். சொன்னான் அவ்ன். அப்படித்தான் அவளின் சந்திப்புத் தொடங்கியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமையோடு.

எண்பத்தி மூன்றாம் ஆண்டு இந்தியாவுக்கு அகதியாய் வந்து திரும்பிப்போன திரியாய்ப் பொடியன் கணேஸ். ஒருவருக்கும் தெரியாமலே பொலீசை சமாளித்து வேலைக்குப் போய்வந்து கொண்டிருந்தான். அவன் கைகளில் ஒட்டியிருக்கும் சீமெந்தை வைத்தே அவன் வேலைக்குப் போகிறதைத் தெரிந்து அருமையும் அவளிடம் விசாரித்து தனக்கு உதவிசெய்யக் கேட்டு எப்பவும் நீ ரீ.எம் கேக் கட்சிக்கு சார்பாய் கதைக்கவேணும் என்று ஐடியாவும் சொல்லி ஒரு ரீ எம் கேக்கட்சிக்கு ஆதரவான மேஸ்திரியிடம் வேலைக்குச் சேர்த்துவிட்டான்.

அந்த மேஸ்திரிக்குக் கீழ்தான் பெருமாள் மேஸ்திரியும் வேலை செய்தவன். அந்த மேஸ்திரியின் கீழ்தான் மேசன், சித்தாள் வேலைக்கு, கருப்பாயியும் சேந்திருந்தவள். அந்த ஐந்துமாடிக் கட்டிட வேலையில்தான் 'என்ன இலங்கைக்காரரே பிளேன்ரீ குடிப்பமா' என்று கேட்டு மீண்டும் அறிமுகமானாள் கருப்பாயி. ஞாபகம் வைத்திருக்கிறாள்.

தமிழ் நாட்டின் பெரியார் மாவட்டப் பேச்சுப் பழகவே அருமை பெருங்கஸ்ரப்பட்டுப் போனான். பெருமாள் மேஸ்திரி கத்துவான். "ஏம்மா அருமைநாயகம், அந்தக் கேப்பில சுத்தி இருக்கு கொண்டுவாப்பா" கேப் என்றால் என்ன? எதுக்குள்ள சுத்திவைச்சிருக்கிறான். தடுமாறிக் கொண்டிருந்த அருமை, சீமெந்து சுமந்து போகும் கருப்பாயியிடம் கேட்க, அதோ அந்த சந்தில சுத்தியிருக்கய்யா சுத்தி. சுவர் இடைவெளியில் ஒரு சுட்டியல் இருந்தது. மெல்ல மெல்லக் கருப்பாயியிடம் திருப்புளி, ஆமார், றிங், பவுன்டேசர், கூடு, பில்லர் அத்தனை கட்டிடப் பொருட்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டான். பேரிக்காயை புதினாக்கீரையை, அஸ்க்காவை, சால்ட்டை றைசை ரீத்தூளைப்போல பெருமாள் பேசும், கேனயன் கம்மனாங்கட்டி எச்சக்கலநாயே எல்லாத்துக்கும் கருப்பாயியிடமே கேட்டுத் தெரிந்து கொண்டான் தமிழை.

அதுபோலவே மட்டுப்பட்ட பேச்சுக்களும் இருக்கும். கோயம்புத்தூர் எவ்வளவு தூரம் இருக்கும் என்று கேட்டால் பக்கத்தால என்பாள். அறுபது கிலோ மீட்டர் இருக்கும். தமிழ்நாடு தான். பலவற்றைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை அருமையால். அந்தக்கிராமத்தில் அந்த மக்களின் பழக்கவழக்கங்களையும் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் மதியச்சாப்பாட்டுவேளை கருப்பாயிமிடம் சாப்பிடும் போது அவளை உறுத்திக் கொண்டிருக்கும் அந்த விடயத்தைக் கேட்டான் அருமை. "ஏன் கருப்பாயி எங்கமுகாம் பக்கத்து ஆத்தில அனேகமா பொம்பளைங்க பாடிகளா மெதந்துகிட்டு வருதே, யாருமே ஏன் கண்டுக்கிறதில்லை."

"அதுக்கு நீயேன் ஜனகராஜ் பினாத்திக்கிறா, இங்கெல்லாம் அது சாதாப்பிரச்சனைய்யா, எவனாச்சும் ஒரு பெண்ணைக் கெடுத்துட்டு ஆத்தில போட்டிருப்பான், எவளாச்சும் வரதட்சனை கொடுக்க வசதியில்லாமல் போனா அவபுருசனே கொண்ணுட்டு ஆத்துல வீசியிருப்பாள். விடுய்யா அதை."

"உனக்கிது பாவமா தோணலை" கவலையாய்க் கேட்டான் அருமை.

"ஏன் ஜனகராஜ் உங்க ஊரில இப்பிடியெல்லாம் நடக்கிறதில்லையா?"

மறுப்புத் தெரிவிக்கவில்லை அருமைநாயகம். அவளை மறுத்து ஏதாவது சொல்ல வேணும் என்பதற்காய்ச் சொன்னான். "எங்க ஊரில பொண்ணுங்களை கொன்று போடமாட்டாங்க, துரத்திவுடுவாங்க, அவ்வளவுதான். ஆனா உங்க இராணுவம் நம்மநாட்டுக்கு வந்தபோது நிறைய பொண்ணுங்களைக் கெடுத்துக் கொண்டுமிருக்கு ஆனா இப்பெல்லாம் அப்படி நடக்காது. ஏன்னா இப்ப நம்ம பொண்ணுங்களெல்லாம் இலங்கை இராணுவத்தை எதிர்த்தெல்லாம் சண்டைபோடுங்கள்" என்றான் பெருமையாக.

"பெண்ணுங்களா" ஆச்சரியமாகக் கேட்டாள்.

"நமக்கெல்லாம் அதுக்குத் தைரியம் இல்லப்பா " என்றாள்.

"அப்போ உனக்கெல்லாம் சண்டை பிடிக்கத்தெரியாதா?" அவர்கள் மொழியில் செருப்பால் அடித்த கேள்வி அது. அவளின் கேள்விகளில் வெட்கிப்போனான் அருமை. "எனக்கு புள்ளைங்க சம்சாரம் இருக்கிறாங்க. அதுதான் ஓடியந்திட்டன்" சமாளித்தான்.

"எந்தமாதிரிப் பார்த்தாலும், உங்கநாட்டிலும் சரி எங்கநாட்டிலும் சரி அதிகம் கஸ்ரம் அனுபவிக்கிறதே பொண்ணுங்கதான்" என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமை பேசவில்லை.

ஒரு லீவு நாளில் முகாமுக்கு வந்தாள். அருமையும் வீட்டில்தான் நின்றான். அருமையின் மனைவி போட்டிருந்த சோட்டியைப் பார்த்துவிட்டு "உங்க ஊரில இப்படியெல்லாம் உடுத்துவாங்களா" என்று கேட்டாள். "கொடுத்து வைச்சவன்யா, கிளிமாதிரிப் பொண்டாட்டியைக் கட்டிக்கிட்டிருக்கிறாய்" என்றாள். மனதுக்குள் மிகுதி அவனை அடித்தது.

"நீங்க வசதியானவங்களா" என்று கேட்டாள். அருமையின் மனைவி கொடுத்த சாரிப்பளவுசை வாங்கமறுத்துவிட்டாள். வில்லங்கமாகவே மனைவி அதைக்கொடுத்தாள். ஒரு இலங்கை 'லக்சு'ம் சேர்த்து.

மதியம் மாட்டுக்கறியுடன் சாப்பிட்டுவிட்டு நீங்க என்ன ஜாதி என்று கேட்டாள். 'நாங்கள் விவசாயம் செய்யிறது' என்று மனைவி சொல்ல மறுத்துவிட்டாள். கவுண்டர் ஜாதிக்காரங்கள் மாட்டுக்கறி சாப்பிட மாட்டாங்க என்று. நீ என்னோடு பேசினா உன் சம்சாரம் சந்தேகப்படாதா என்று கேட்டாள்.அவளில் அவன் கவரப்படுவதும் அவளுக்குத் தெரிந்துதான் இருந்தது. போகும்போது "பொண்ணுங்களைத் தப்பா எல்லாம் இனிமே பார்க்காதை ஜனகராஜ்" என்று சொல்லிவிட்டுப் போனாள்.

ஒரு மதியச்சாப்பாட்டு நேரம், மனதுக்குள் ஏதோ சரியில்லைப்போல சோகமாயிருந்தாள் கருப்பாயி. எதுவுமே அருமையுடன் பேசவில்லை. என்ன கொணர்ந்தாய் என்றுகூடக் கேட்கவில்லை.

"என்ன பிரச்சனை" மெதுவாகத்தான் கேட்டான் அருமை

"எனக்குக் கல்யாணம்" சாப்பிட்டபடியே சொன்னாள் கருப்பாயி.

"சந்தோசமாய்ச் சொல்லேன்"

"நான் கல்யாணம் பண்ணிக்கிறது உனக்குச் சந்தோசமாயிருக்கா" திரும்பிக்கேட்டாள்.தனக்கும் அடிக்கிறாள் என்று நினைத்துக் கொண்டான் அருமை.

"என்ன இருந்தாலும் நீ கல்யாணம் பண்ணிக்கத்தானே வேணும்" மனதுக்குள் எதையோ இழக்கப்போகிற தவிப்பு அவனுக்கு.

"கட்டிக்கப்போறவன் யாரெண்டு கேட்க மாட்டியா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ கட்டிக்கப்போறவனை எனக்கெப்படித் தெரியும் சரி சொல்லு"

"உங்க மேஸ்திரி பெருமாள்" நம்பவில்லை அருமை.

"உண்மையாத்தான் சொல்றன்"

"ஏய் என்ன வெளையாடுறியா? அவன் உன் அக்காவைக் கட்டிக்கிட்டு இருக்கிறான் இல்லையா?"

"ஆமா... அவன் அக்காவுக்குக் குழந்தைகள் கிடைக்கல என்று வேறுபொண்ணு பாத்திட்டான். அவனுக்கு வாரிசு வேணுமாம்"

"அதுக்காக"

"அவனை நீ கட்டிக்கொள் என்று அப்பா ஆத்தா சொல்லிருச்சு"

"ஏய் நீ கல்யாணம் பண்ணிக்க வேற ஆள் கிடைக்கல்லயா"

"நீ வரதட்சனை கொடுப்பியா? எம்மச்சினன் ஒருதன் இருக்கிறான் ஐஞ்சாயிரம் கேட்கிறான். இங்கெல்லாம் இரண்டு சம்சாரம் வச்சிருக்கிறது ஒண்ணும் பெரிசில்லை"

மௌனமாய்ப் போனான் அருமை.

"என்ன சோகமா, அப்போ நீ என்ன கட்டிக்கிறியா"

"என்ன வெளையாடுறியா எங்க ஊரில அப்படியெல்லாம் இல்லை"

"அப்ப வச்சுப்பாங்களா"

அவளின் சிறுபிள்ளைத்தனமான கேள்விகள் அந்த நாட்டின் கிராமத்து மரத்துப்போன பழக்க வழக்கங்களில் ஊறியிருந்தது. 'கருப்பாயி நான் அப்பிடி இல்ல, மனசுக்குள்ள இருந்தாலும் வெளியில பேசமாட்டன். எங்க ஊரு பொண்ணுங்களும் அப்பிடித்தான். இப்படியெல்லாம் நீ பேசறது உன் வாழ்க்கைக்கு பிழையென்று தோணலியா உனக்கு'

சிரித்தான் அவளைக் குழப்பிவிட்டதாய். கொஞ்ச நேர மௌனத்திற்குப் பின் கேட்டாள் "ஏன்யா என்ன உங்க ஊருக்குக் கூட்டிப்போக முடியாதா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையென்று மெதுவாகத் தலையாட்டினான், அவனின் பார்வை அவளிலேயே நின்றுவிட்டது. எவ்வளவு பாவம் இவள்.

“என்னய்யா ஜனகராஜூ என்னயே உத்துப்பாக்கிறே”கண்சிமிட்டிச் சிரித்தாள். அவன் சாப்பிடாமலே எழுந்து போனான்.

“அட சாப்பிட்டுப் போய்யா சும்மா தமாசுக்கு சொன்னா”

“பொண்ணுங்க ஆம்புளைக்கு அடிமை மாதிரித்தான்யா. ஊரில உலகத்தில எந்தப்பொண்ணுதான் உண்மையா சந்தோசமா இருக்கிறா. ஏன் உன் சம்சாரம் கூட, உன்னவுடக் கூடுதலா உழைக்கிறா. அது புரியாதா உனக்கு, விதிய யாராலும் வெல்லமுடியாதுய்யா, சாப்பிடு” அவன் கையைக் கழுவிக் கொண்டான்.

கல்யாணம் சுமாராக நடந்தது. கருப்பாயியின் அக்காவுக்கு மட்டும் முகமே சரியில்லை. தன்னுடைய தங்கச்சியும் நாசமாகப் போகப்போகிறாள் என்ற துக்கமிருக்கலாம். அந்தச் சின்ன முருகன் கோவிலில் மஞ்சள் கயிற்றால் மஞ்சள் சேர்த்து தாலி கட்டினான் பெருமாள். றெஜிஸ்டர் நடந்திருக்காது. நூறு ரூபா நாதஸ்வரக் கோஸ்டி ஒன்று சினிமாப்பாட்டு வாசித்தது. அருமை ஐந்து ரூபா கொடுத்தது. “மண்ணில் இந்தக் காதலின்றி”வாசிக்கச் சொன்னான். மூச்சுவிடாமல் வாசித்தார்கள். பிச்சைக்காரக் கலைஞர்கள். அருமையும் ‘மொய்’ எழுதினான். “அருமைநாயகம் ஐநூறு ரூபா” மாப்பிளைத் தோழன் பெரிதாகக் கத்தினான். கல்யாணத்திற்கு வந்த அந்த இருபது பேரும் அருமைநாயகத்தையே பெருமையாகப் பார்த்தார்கள். கருப்பாயியும் பெருமாளும்கூட. பின்னேரமே மாப்பிளைத் தோழனும் மாப்பிளையும் சாராயக்கடையில் நின்று கொண்டிருந்தார்கள், தள்ளாடிக்கொண்டு.

மூன்று நாட்களின் பின் கருப்பாயி வேலைக்கு வந்திருந்தாள். மேஸ்திரி பெருமாள் வரவில்லை. வந்திருந்தால் அவளோடு பேசியிருக்க மாட்டான்.

“கருப்பாயி உன்னோடு பேசலாமா”

மெதுவாய்ச் சிரித்தாள் கருப்பாயி.

“என்ன கல்யாணம் முடிஞ்சு மூணே நாளாகல்ல, அதுக்குள்ள வேலைக்கு வந்திட்டே”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகமாய்ச் சிரித்தாள் "எங்கக்காவில எந்தப்பிழையும் இல்லை ஜனகராஜ்" என்றாள்.

அன்றைக்குஅந்த முகாமில் யாரும் குளத்துக்குப் போகவில்லை. வழமைபோல "பொடி" ஒதுங்கிக்கிடக்கு என்றார்கள். அருமைக்கு இப்போது அதொன்றும் பெரிய பிரச்சனையாய்த் தெரியவில்லை. யாராவது கெடுத்து கொண்ணுட்டு வீசியிருப்பான். அல்லது வரதட்சணைக் கொடுமையால் செத்திருப்பாள், அவ்வளவுதான். முகம் கழுவிவிட்டு நிமிர்ந்தவன் திகைத்துப் போனான். அந்தப் பெண்ணின் பொடி உடுத்திருந்த சேலை; தன் மனைவிக்கு அவன் வாங்கிக் கொடுத்து கருப்பாயிக்கு மனைவி கொடுத்தது. சற்றுத் தூரத்தில் இன்னொரு ஆணின் சடலம் தலை சிதைந்துபோய்........ மேஸ்திரியோ? மனைவிக்குப் போய்ச் சொன்னான். உடனே வேலைத்தளத்திற்கு பஸ்ஏறிப் போனான். கருப்பாயி வேலைக்கு வந்திருந்தாள். நிம்மதி அவனுக்கு.

"கருப்பாயி உனக்கு எம்சம்சாரம் கொடுத்த சேலை எங்கே?"

"ஏன் அதைத் திருப்பித் தரணுமா"

"வேணாம் அதை நீ வச்சிருக்கிறியா"

"இல்ல அக்காவுக்குக் கொடுத்திட்டன்."

"உங்கக்கா ஆத்தில பொடியாக் கிடக்கிறா கருப்பாயி"சோகமாய்ச் சொன்னான். நிமிர்ந்தாள். கண்கள் குளமாகிக்கொண்டு வந்தது.

"நான் நெனச்சது சரிதான். அக்காவையும் மேஸ்திரியையும் ரெண்டு நாளா காணேல்ல"வேறு எங்கோ பார்த்துக்கொண்டு சொன்னாள்."சரி வா பொடியைப் போய் எடுத்திட்டு வருவம்."

"வேணாம் ஜனகராஜ். நீயேன் இதுக்கெல்லாம் போய் பின்னாத்திக்கிறாய் அப்புறம் போலீஸ் உன்னிலேயே கேஸ்போட்டு உள்ள தள்ளினாலும் தள்ளிடும்."

"சரி இதையாராச்சும் செஞ்சிருப்பாங்க என்று உனக்குத் தோணுதா"

"எங்கக்காவை மேஸ்திரிதான் கொன்று ஆத்தில வீசிப்புட்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– அதுக்கு அவனுக்குத் தண்டனை கிடைச்சிருக்கு ஜனகராஜ்" ரகசியமாய்ச் சொன்னாள்

பயந்தபடி அருமை அவளைச் சந்தேகமாய்ப் பார்த்தான்.

"அப்பிடிப் பார்க்காத ஜனகராஜ். நான் இனிமே உன்னையே பாக்க வேணாமின்னா ஆத்துல பொணமா மிதக்கணுமின்னா பொலிசுக்குப்போய் சொல்லு."

அருமை மௌனமாகிப் போனான். கொஞ்சநேரம் மௌனமாய் அழுதாள் கருப்பாயி.

"ஏன் ஜனகராஜ் உங்க ஊருக்கு போகும்போது என்னையும் கூட்டிக்கிட்டுப் போறியா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசம் தந்த சொந்தம்



மாசி மாதத்தின் வாடைக்காற்றோட, அந்த விடியற்காலைக் குளிரோட, வள்ளம் இறக்கும் அம்பாச்சத்தம் கடற்கரைக் குடியிருப்பையும் தாண்டி உண்ணாப்புலவு குளக்கட்டுவரை கேக்குதெண்டா அது, அந்தோனியின்ர குரலாய்த்தானிருக்கும். அப்படியென்றால் குணம் சம்மாட்டிக்குத்தான் இண்டைக்கு காலமைப்பாடு. அந்தோனி மண்டாடி வலை வளைக்கிறார் எண்டால் இழுப்புக்காரருக்கு, மீன் பரவாயில்லாமல் கிடைக்கும். அந்தோனி மண்டாடி இருக்கும் வரைக்கும் குணம் சம்மாட்டிக்கு அவர்தான் மண்டாடி. அவரைவிட்டா முல்லைத்தீவில ஆர்தான் திறமையான மண்டாடி.

முதல்பாடு கரைவலை வளைச்சிட்டா கறிமீன் எடுத்துக் கொண்டு போய் மனுசிக்கு சமைச்சுவச்சு மனுசியும் சாப்பிட்ட பிறகுதான் மற்றக்கதை. சம்மாட்டி அவருக்கு வேலை சொல்லுறதுமில்லை வெள்ளனவாங்கோ எண்டு சொல்லுறதுமில்லை. விரும்பினா வலையடிக்கு வருவார். இல்லாட்டா வரார். அந்தாளுக்கென்ன கவலை இல்லாத ஆள் எண்டு ஊர் சொல்லும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையோ குட்டியோ கவலைப்படுறதுக்கு. அவரும் அப்படித்தான் கவலைப்படாம திரியுறது.

பிள்ளை குட்டி இல்லாட்டிக்கும் அவருக்கு கனக்கச் சகோதரங்கள். இப்ப ஒருத்தருமே இல்ல. 'தொண்ணூறுப்' பிரச்சினையோட இந்தியாவுக்குப் போனதுகள், போனதுதான். படிப்பு, வெளிநாடெண்டு ஒண்டு மாறி ஒண்டாய்... அவரும் அதுகளோட போகாததாலதான் தனிச்சுவர். இப்ப பிள்ள குட்டி, சொந்தம், பந்தம் எல்லாம் அவற்ற மனிசி அருள்மலர்தான். அட மனிசியின்ர சொந்தங்கள் உதவுமெண்டா அதுவும் வவுனியாவுக்கு அங்காலதான். அதுகளும் இந்நேரம் மறந்திடுங்கள்.

அந்த நேரம் கடையெண்டு, கல்வீடெண்டு... அட ஆமிக்காரன் அந்த இடத்திலேயே பண்டடிச்சு, சென்றி போட வேணும். எல்லாம் அழிஞ்சு போக மண் மூடுப்பட்ட கிணறு ஒண்டுதான் இப்ப அடையாளத்துக்கு கிடக்கு. என்ன போனாலும் ஊருக்குள்ள இருந்த மதிப்பும் மரியாதையும் அழிஞ்சு போகேல்ல.

ஆருக்காக உழைக்கோணும்? இருக்கிறது இன்னொரு சீவன். அவள் எனக்கு முந்திப் போமிடோணும். அதுக்குப்பிறகு நான் எப்பிடிப் போனா என்ன? இது அடிக்கடி அவர் சொல்லுறதுதான். மனிசியில இனி இல்லையெண்டு நேசம், ஆனா காட்டமாட்டார். இடைக்கிடை ரெண்டு பேருக்கும் கொழுவல்வரும். துவங்கிறது அவதான்.

"நான் சொல்லுறது ஒண்டும் உங்களுக்கு ஏறுறதில்லை" அவகோபிப்பா.

"என்ன ஒரு பிள்ளையை எடுத்து வளக்கேல்ல, அதுதானே. போடி விசரி" கணக்கே எடுக்க மாட்டார்.

"நான் தொடர்ச்சியா படுக்கையில போமிட்டா"

"நான் இப்போதைக்குச் சாகமாட்டன்ரி, பிள்ளையள் இருந்தா செய்யுதோ இல்லையோ நான் உன்னை வடிவாப்பாத்து, செத்தா சிலாவத்தை மண்ணுக்க தாட்டுவிடுறன் சரிதானே."

"நான் அதையே சொல்லுறன். உங்களை ஆர் பாக்கப்போகினம்."

"நீ செத்தபிறகு நான் எங்கயடி இருக்கப்போறன். உனக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்திலயே ஒரு கிடங்க வெட்டி வைக்கிறது. சாகப்போறனெண்டு தெரிஞ்சா மெல்ல மெல்ல நடந்துபோய் அதுக்குள்ள படுக்கிறது. ஏனடியாத்தை என்னை ஆரும்பாக்கோணும்."

அவர் கதை சொன்னாப்போல அவவும் விட்டுடுவா எண்டில்லை.

"கிடங்க மூடாட்டா நாய், நரி இழுத்துக்கொண்டுபோய் திண்டுடும் ஓ."

"நாய், நரி என்னைத் தின்னட்டும் நீ சோத்தைத்தின். நான் வலையடிக்குப் போகோணும்."

அண்டைக்கும் காலைப்பாடு கறிகாச்சி, மனுசிக்கும் சாப்பாடு குடுத்துட்டு நிக்க, மோட்டச்சயிக்கிள் ஒண்டு வாசல்ல வந்து நிக்குது. மனுசிதான் மட்டை இடுக்கால எட்டிப்பாத்துவிட்டு "ஆரோ இயக்கப்பெடியள்" எண்டு சொல்ல "அது உவங்கள் கடற் புலிப்பெடியள். என்னட்டை ஏதும் அலுவலுக்கு வந்திருப்பாங்கள்." வாசலுக்கு வந்து ஆரெண்டு பாத்தாத் தெரிஞ்ச பெடியள்.

"என்னடா தம்பி ஏதும் அலுவலே"

வந்தவங்கள் தயங்கித்தயங்கி.

"ஐயா உங்கட மகன்.... இண்டைக்கு உங்கட வீட்ட வாறார்." அவருக்குச் சிரிப்புத்தான் வந்தது. என்றாலும் வந்தது இயக்கப் பெடியள். வீடு மாறி வந்து விசாரிக்கிறாங்கள் எண்டு நினைச்சிட்டார்.

"தம்பி வீடு மாறி வந்திட்டீங்கள் போல கிடக்கு"

"இல்லை ஐயா நீங்கள் அந்தோனிப்பிள்ளைதானே."

"ஓம்"

"நீங்கள் மண்டாடி தானே"

"ஓம்"

"கடற்தொழிலாளர் சங்கத்துக்குத் தலைவர்தானே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமடாப்பா"

"அப்ப உங்கட மகன்தானய்யா; அவர் வீரச்சாவு. இண்டைக்குப் பின்னேரம் வித்துடல் கொண்டு வருவம்"

அவருக்கு வீரச்சாவு எண்டதுமே, மனசெல்லாம் பதறியது. எங்கோ தவறு நடந்துவிட்டது.

"என்னடா தம்பி எனக்கு உண்மையிலேயே ஒரு பிள்ளை இருக்குமெண்டா எவ்வளவு சந்தோசப்படுவன், என்ர பிள்ளைதானெண்டு சொல்லுறியள், வீரச்சாவெண்டு சொல்லுறியள்... அந்தப் பெடிக்கு என்ன பேரப்பா?"

"மேஜர் கஜன்"

"சொந்தப் பேர்"

"பிரான்சிஸ் சேவியர்"

அவருக்கு எங்கயோ பொறி தட்டினது மாதிரிக்கிடந்தது.

'பிரான்சிஸ் சேவியர்' ஆரோ சின்னப் பெடியன் அந்தப் பேரைச் சொன்னதாய் ஞாபகம். அது அவன் தான்.... அவன்தான். சந்தோசம் துக்கம் சந்தோசம் துக்கமெண்டு மாறிப் பெரிய செல்வம் ஒண்டு கைக்குக் கிடைச்சு அது இல்லாமப் போய்...

தன்னைச் சுத்திக் கனக்கப் பிள்ளையள் நிக்கிறது போல. மணிக்கூடு வாங்கித் தரச்சொல்லிக் கேக்கிறது போலயும், பள்ளிக்கூடம் போகமாட்டன் எண்டு அடம் பிடிக்கிறது போலயும், கோபத்தில் சாப்பாட்டுப் பீங்கானைத் தள்ளிவிடுகிறது மாதிரியும், மனிசி புறுபுறுக்கிறது போலயும், கரச்சல் தாங்கேலாமல் இருக்கிறது மாதிரியும், ஏதோ கனக்கப்பிள்ளைகளின் தகப்பனாய் ஆகிப் போனார். விளாங்காய் திண்டு தொண்டையெல்லாம் கட்டிப்போனது போல நெஞ்செல்லாம் அவருக்கு அடைச்சுப்போச்சுது.

எண்பத்தி ஒன்பதோ எண்பத்தி மூண்டோ என்னமோ, ஞாபகமில்லை, வருசக்கடைசி, கச்சானுக்குள்ள காத்து கடல் சொல்வழி கேளாமக்கிடக்கு. எந்தத்திறமைசாலியும் நெருங்கேலாது. கருக்கலோடயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாறத்தால போர்த்து மூடிக்கொண்டு "இப்ப வெள்ளம் வடுவுக்கு ஒரு சின்ன ஈராடிபோட்டுதெண்டா ஒருக்கா வள்ளத்தை இறக்கிப் பாக்கலாம்" எண்டு வந்து கடற்கரையில கெட்டித்தனம் கதைக்கிற கோஸ்டி ஒண்டு, கடற்கரையில நிண்டு, கடலையே பார்த்துக்கொண்டு நிக்க, பெரியவள்ளமொண்டு திருகோணமலையில இருந்து அகதிச் சனத்தை ஏத்திக்கொண்டு வந்தது. துறையில கனக்க வள்ளங்கள் நிக்கிறதையும், ஆக்கள் கனக்க நிக்கிறதையும் கண்டு அதிலேயே கட்டிப்போட்டான். அவனும் கெட்டிக்கார ஓட்டிபோல. இல்லாட்டி இந்த இடத்திலதான் கடலடி குறைவு. ஈராடி விழும் எண்டு அவனுக்கென்னண்டு தெரியும்.

அகதிச்சனம் கையைக் காட்டி வெள்ளை போட்டு அவதிப்பட்டுக் கொண்டு நிக்குதுகள். உதவிக்கு ஒரு வள்ளம் கொண்டுபோய் சனத்தை இறக்குவம் எண்டு ஆருக்குத் துணிவு வரும்?

கனநேரமாப் போயிட்டுது. ஒருதரும் கடல்ல இறங்கேல்ல. கடற்கரைக்கு வந்த அந்தோனியும் கனபேரிட்டை கெஞ்சிப்போட்டுது.

"என்னடா பயந்து சாகிறியள்? இதுக்குள்ள ஒருதனும் கோவணம் கட்டினவன் இல்லையே? நான் தனியப்போய் ஆக்களை இறக்குறன் இந்த மரத்தையாவது இறக்கித் தாங்கோடா."

நிண்டவை எல்லாரையும் அந்தோனியர் கண்டபாட்டில் பேசிப்போட்டார். குட்டிக்கும், ஜெயத்துக்கும் சரியான கோபம்.

"அந்தோனியண்ணை கடலுக்கு வீரங்கூறாதையுங்கோ நாங்க போறம், பிரண்டாயென்ன உறுண்டா என்ன செத்தா என்ன நீங்களே பொறுப்பெடுங்கோ"

அவங்கள் கோபத்தில வள்ளமிறக்க ஒண்டைப் பாத்து ஒண்டா நாலு வள்ளம் இறங்கியாச்சு. அந்தோனியர் ஈராடி பாக்க எல்லாவள்ளமும் உயத்தி சனத்தை இறக்கி, அந்தோனி வெள்ளைபோட ஒவ்வொண்டா கரையை விட்டு, கடைசி வள்ளம் ஜெயம் கொணந்து கவுட்டுக் கொட்டிப் போட்டான்.

கரையில நிண்டவங்கள் ஆளுக்காள் தண்ணீல இறங்கிச் சனத்தைக் கரை சேத்துட்டாங்கள். அதுக்குள்ள ஒரு சின்னப்பெடியன் சாகப்போறவன் போல கடல்ல இறங்கிட்டான். அந்தோனியர் பாஞ்சு போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளப்பிடிச்சு என்னடா எண்டு கேட்டா 'காசு காசு' எண்டு சொல்ல ஆறல்ல போன அந்த காசுப்பெட்டியை கஸ்டப்பட்டு எடுத்துத் துறந்து பாத்தா சில்லறையும் தாளுமா ஒரு நூற்றைம்பது ரூபா வரும்.

அந்தோனியருக்கு நல்லா ஏறிவிட்டுது; ஆளைப்பிடிச்சுப் பிடரியில ரெண்டு போட்டு 'நூறு நூற்றைம்பது ரூபா காசுக்காக சாகப்போறியோடா பேயா' எண்டு பேசிப்போட்டார். அவன் ஒண்டுக்கும் பயப்பிட்டவன் மாதிரித் தெரியேல்ல. 'இவருக்கு என்னதான் தெரியும்' எண்டது மாதிரிப் பாத்திட்டுப் போய்ட்டான்.

காசுக்குப் போளை அடிக்கிற பெடியளெண்டா அந்தோனியருக்கு கண்ணில காட்டேலாது. அண்டைக்கொருநாள் ஒரு 'செற்' அம்பிட்டுப் போச்சு.

அந்தாளும் சந்தியால திரும்ப, இவையளும் ஆளுக்காள் காசு வேண்ட, அந்தாளும் கணக்கா வந்து 'பிரேக்' அடிச்சு நிண்டுட்டுது. எல்லாரும் வரிசையா நிண்டு முழுச "என்னடா காசுக்கே அடிக்கிறியள்"

"இல்லை இல்லை, இல்லை"

ஒருதன் மட்டும் கதைக்கவே இல்லை.

"டேய் ஆர்ரமோன்ரா நீ, என்ன பேர்ரா"

பயந்தபடியே மெதுவாக தலையை நிமிர்த்தி–

"பிரான்சிஸ் சேவியர்" என்றான் அவன்.

"டேய் நீதானே நூற்றி ஐம்பது ரூவா காசுக்காக கடல்ல இறங்கின நீ. காசே அடிக்கிறாய், எடடா போளக்காசெல்லாம்"

அவன் எல்லாத்தையும் அவரிட்டைக் குடுத்திட்டான். மற்றவங்களிட்டைக் கேட்க.

"எங்கட காசெல்லாம் பிரான்சிஸ்தான் வெற்றியெடுத்திட்டான்."

"ஓடுங்கோடா எல்லாரும்"

பிரான்சிஸ் சேவியர் காசைத் திருப்பித்தருவார் எண்டுதான் பாத்துக்கொண்டு நிண்டான், அவர் குடுக்கேல்ல. "நீ ஏன் நிக்கிறாய்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசு ஒண்டும் தரமாட்டன்; வீட்டநட; கொப்பர் கோத்தையை ஒருக்கா சந்திக்கோணும்''

அவன் போகேல்ல.

"நடவடா வீட்டை"

கோபத்தில பிடரியில அடிச்சுப்போட்டார். அவன் அடியை வேண்டிக்கொண்டும் போகேல்ல. நிதானமாக அவரை நிமிர்ந்துபாத்து,

"எனக்கு அப்பா அம்மா இல்லை..."

அந்தப்பெடியனுக்கு அடிச்சது அவருக்கு வேதனையாப் போச்சு. கண்கள் கலங்கின.

கடற்கரையில அவனைப்பற்றி விசாரிச்சுப் பாத்தார். உண்மையா அவனுக்கு தாய் தகப்பன் இல்லைத்தான். அவனுடைய பேரன்காரனோடதான் இருக்கிறவன். காலமை மீன் தெரிக்கப் போனா மீனக்கொணந்து சந்தையில வித்துப்போட்டுச் சாமான் வேண்டிக் கிழவனுக்குச் சமைச்சுச் சாப்பாடு குடுத்துப்போட்டுப் போளை அடிக்க வருவான். போளை அடிக்கிறதில அவன் கெட்டிக்காரன். எல்லாற்றை போளையையும் வெற்றியெடுத்துப் போட்டுத் திரும்ப ஒரு ரூபா போளைய அவியளுக்கே ஐம்பது சதத்துக்கு விப்பான். பின்னேரம் பத்து பதினைஞ்சு ரூபா வீட்டகொண்டுபோனா இரவுப் பிரச்சினையைத் தீர்த்துப்போடுவான். அவருக்குத் தான் செய்தது பிழையோ சரியோ எண்டு தெரியேல்லை. மனுசிக்குப்போய்ச் சொல்ல அவ, அவருக்கு நல்ல பேச்சு. தன்னைப் 'பிள்ளைப் பாசமில்லாதவன்' எண்டு பேசிப்போட்டாளெண்டு இரா முழுவதும் சண்டை, சாப்பிடவுமில்லை.

அண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை. தொழில் இல்லை; விடியக்காலமை.

குறை நித்திரையில ஆரோ சின்னப்பெடியன் ஒண்டு கூப்பிடுறமாதிரி. முழிச்செழும்பிக் கேட்டா உண்மையா ஆரோ கூப்பிடுகுதுகள்.

"ஆர்ரா அது" கொஞ்சம் கோபமாய்த்தான் கேட்டார்.

"அது நான் பிரான்சிஸ்" தயங்கிய மெதுவானகுரல்.

அவர் மனுசியைக்கூட எழுப்பேல்ல, தானே எழும்பிப் படலையடிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். தன்னுடைய குரலைக் குறைக்காமலே "என்னடா விடியக்காத்தால வந்து எழுப்புறாய்"

"எங்கட அப்பு செத்துப் போச்சு" மெதுவாய்ச் சொன்னான்.

"அதுக்கேனடா எனக்கு வந்து சொல்லுறாய்?" அவருக்கும் மனம் இளகிப்போச்சு.

"உங்களைத்தான் எனக்கு நல்லாத் தெரியும்" அவன் சொன்னது அவரை நல்லா இறக்கிப் போட்டுது.

"தாய் தகப்பன் தான் பிள்ளையள அடிச்சுத் திருத்திறதெண்டு அப்பு சொல்லுறவர்."

தோளில் கைபட திரும்பிப் பார்த்தார். அருள்மலர். அவளின் பார்வை அது தன்னுடைய பிள்ளை எண்டு சொல்லுவதைப் போல இருந்தது.

"எப்படா செத்தவர்"

"நேற்றுப் பின்னேரம்"

"உடன ஏன்ரா வந்து சொல்லேல்ல"

அந்தச் சின்னப்பெடியனும் கண்கலங்கிப்போனான். தனக்கும் ஒரு ஆதரவு கிடைச்சுட்டுது என்பதைப்போல.

அவர் சொல்லவேண்டியதுதான். மிச்சமெல்லாம் தானா நடக்கும். கோயில்மணி, தூம்பை, குருசு, ஒரு வேதக்காரனுக்குச் செய்யவேண்டிய அத்தனை மரியாதையோடையும் அந்தச் சாவீடு முடிஞ்சிற்றுது.

எட்டுச்செலவை மூண்டுக்கே முடிச்சுடுவம் எண்டு அவருக்கு யோசின! "பெடியன் வீட்ட வா அங்க சாப்பிடுவம்" எண்டு அவர் கேக்க அவன் "கிழவரின்ர எட்டுச் செலவு முடியுமட்டும் நான் கொட்டிலவிட்டு வரமாட்டன்" எண்டுட்டான்.

அருள்மலர் "அவன வீட்ட கூட்டியாங்கோ நாங்கள் வச்சிருப்பம்" எண்டு கேட்டதுக்கு அந்தோனியர் "வேண்டாம் எட்டுச் செலவு முடியட்டும். அவன்ர துக்கமெல்லாம் ஆறிக் கொஞ்சம் சந்தோசம் வரட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்பம். அவன்ர முடிவு என்ன மாதிரியோ? எங்களைத் தாய், தகப்பன் ஆக ஏற்றுக்கொள்ளுறானோ, வாறநேரம் எல்லாம் தானா வரும். கடவுளிட்டை மண்டாடு'' என்றுவிட்டார்.

எட்டுச் செலவை எட்டுக்கே செய்வம் எண்டு ரெண்டு பேரும் முடிவெடுத்து ஒவ்வொரு நாளும் அவர்மாறி அவா மாறிச் சாப்பாடு கொண்டுபோய் குடுக்கிறதும், பாக்கிறதுமாய்... ஒரு நாள் மத்தியானம் அவர் சாப்பாடு கொண்டுபோய்ப் பாக்க அவனில்லை.

ஆரோ போட்டில வந்த இயக்கப் பெடியளுக்கு இளனி புடுங்கிக் குடுத்தவனாம்...

மனிசியிட்டைச் சொல்லேக்க அவருக்கும் அழுகை வந்திட்டுது. "ஏனிப்ப அழுகிறியள்? அது நீங்க பெத்த பிள்ளையே இப்ப என்ன வந்திட்டுது. உங்கட சகோதரங்களின்ர பிள்ளையொண்டை எடுத்து வளக்கிறது'' ஆளை ஆள் தேற்றிக் கொண்டார்கள்..

"தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப்பேழைகளே''

பாடல் முடிஞ்சும் அந்த மாவீரர் துயிலுமில்லத்தில எல்லாமனங்களும் சோகத்தில கல்லாய் உறைஞ்சுபோய்...

அந்தோனிக்கும் அப்பிடித்தான். தானே தன்ர பிள்ளையை விடுதலைப்போருக் கெண்டு அனுப்பி அவன்ரை வீரச்சாவைச் சந்திப்பவராய்.... பெருமையும் இழப்பின் துயரமுமாய் மனசுக்குள்ள அழுது கொண்டிருந்தார். அவனை மண்போட்டு மூடி அவனுடைய தலைப்பக்கம் நட்டு வச்ச பலகையில...

"மேஜர் சுஜன்''

"அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர்.''

"என்னைத்தகப்பனெண்டு கௌரவமா அடையாளம் தந்து விட்டுப்போன என்ர மகனே'' துக்கம் அடக்கமுடியாமல் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லை யேசுதாசன்

பழகிய கடலும் கரையும் மனிதர்களும்
முல்லை யேசுதாசன் கதைகளில்
முன் மிதந்து வருகின்றன ; வருகிறார்கள்.
கடலோடும் வாழ்வும் கரை நடந்த நாட்களும்
யேசுதாசனின் மொழிதலில் புதுமுகம் கொள்கின்றன.
காயங்களோடும் குருதியோடும்
போர் நாட்களின் கடலாகிப்போன
நீர் மீதும் அலை மீதும்
தத்தளித்த நிகழ்காலத்தையும் வாழ்வையும் சொல்கிறார் யேசுதாசன்.
யேசுதாசன் முல்லைத்தீவு வாசி. சில காலம் அகதி.
ஆனால் எப்போதும் ஒரு கடலோடி.
கடலோடும் கலங்களைக் கட்டும் கலைஞன்.
இன்னும், கரைநீளம் அரங்காடும் கூத்தன்.
பின்னாளில் **உயிர்ப்பூ, கடலோரக்காற்று, நதிமூலம், உப்பில் உறைந்த உதிரங்கள்** என்று
தமிழீழத்தில் உருவான பல
முழுநீளப்படங்களிலும் குறும்படங்களிலும்
யதார்த்தமாய் நடித்தவர்.
இப்போது நிதர்சனம் நிறுவனத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்.
**செவ்வரத்தம்பூ** என்ற படத்தின் இயக்குநர்.
யேசுதாசன் விவரணப்பட முயற்சிகளிலும்
ஈடுபாட்டுடன் முயலும் ஒரு ஓயாத சுழல்.
இங்கே கடலோர வாழ்க்கையின் ஞாபகங்களும்
நிகழ்காலமுமாக முல்லை யேசுதாசன் கதைகள்.

நிதர்சனம் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org